# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் -11



அழகியல் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கர்நாடக சங்கீதம்
# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 11

அழகியல் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**கர்நாடக சங்கீதம்**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் - 11**

முதலாம் பதிப்பு : 2008
மீள் பதிப்பு : 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

© தேசிய கல்வி நிறுவகம்

**ISBN - 978-955-654-116-8**

அழகியல் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில்காக, சென்வின் தனியார் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் ல்ால் பெரேரா**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப 2008 ஆம் ஆண்டிலிருந்து. நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனின் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காண முடிகின்றது. இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு அமையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாற்றுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கின்போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்/ இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை

வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது ஈடுபெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை, புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
'இசுருபாய'
பத்தரமுல்ல

# ஆலோசகர் குழுவும் எழுத்தாளர் குழுவும்

**ஆலோசனை** : **பேராசிரியர் ஜே.டப்ளியு. விக்ரமசிங்க**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

**திரு. விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**மேற்பார்வை** : திரு. சுதத் சமரசிங்ஹ
பணிப்பாளர் - அழகியல் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**ஒருங்கிணைப்பு** : திருமதி. சுனேத்ரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி
செயற்றிட்ட அதிகாரி
செயற்றிட்டத் தலைவர் - கர்நாடக சங்கீதம்
அழகியல் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு** :
- திருமதி. சுனேத்ரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி
  செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்
- திருமதி. தேவிகாராணி முருகுப்பிள்ளை
  பிரதிக் கல்விப் பணிப்பாளர் (இளைப்பாறிய)
  திருகோணமலை
- திருமதி. ய. பாலேஸ்வரன்
  ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு
- திருமதி. ச.வ. மகேந்திரஜோதி
  ஆசிரிய ஆலோசகர் - திருகோணமலை
- திரு. வை. கணேசலிங்கம்
  ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு
- திருமதி. வினித்தா யேசுரட்ணம்
  ஆசிரியை, புனித அன்னம்மாள் ம.ம.வி - வத்தளை
- திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன்
  ஆசிரியை, புனித அந்தோனியார் மகாவித்தியாலயம்
  கொழும்பு 13
- திருமதி. இ. சர்வேஸ்வரன்
  ஆசிரியை, இராமனாதன் இந்துக்கல்லூரி-கொழும்பு 04

- திருமதி. ஜெயதாம்பிகை கிருபானந்த மூர்த்தி
  ஆசிரியை இந்துக் கல்லூரி - கொழும்பு 04
- செல்வி ஜெயதேவி நவரட்ணம்
  ஆசிரியை, நுகேகொட த.ம.வித்தியாலயம், நுகேகொட

**மொழிமேற்பார்வை :** திரு. து. இராஜேந்திரம்
சிரேஷ்ட விரிவுரையாளர் - கல்விப்பீடம்
திறந்த பல்கலைக்கழகம்

**பதிப்பாசிரியர்** : திருமதி. சுனேத்ரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி
செயற்றிட்ட அதிகாரி
செயற்றிட்டத் தலைவர் - கர்நாடக சங்கீதம்
அழகியல் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

**கணினி கோர்ப்பும் வடிவமைப்பும்**
: திருமதி. எப்.ஏ.எப். நிஸ்மியா

# உள்ளடக்கம்


பக்கம்

## பகுதி I

11.1.0 விரிவான பாடத்திட்டம்

| | | |
|---|---|---|
| 11.1.1 | பாட அறிமுகம் | 01 |
| 11.1.2 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | 02 |
| 11.1.3 | வகுப்புக்குரிய தேர்ச்சிகள் - தரம் 11 | 03 |
| 11.1.4 | பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் | 04-05 |
| 11.1.5 | தர உள்ளீடு | 06 |
| 11.1.6 | கற்றல் கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு | 07 |
| 11.1.7 | பாடத்திட்டம் | 08-13 |
| | தேர்ச்சி | |
| | தேர்ச்சி மட்டங்கள் | |
| | பாட உள்ளடக்கம் | |

## பகுதி II

11.2.0 செயற்பாடுகளின் தொடர்

| | | |
|---|---|---|
| 11.2.1 | கற்றல் - கற்பித்தல் முறை அறிமுகம் | 16-19 |
| 11.2.2 | பொருளடக்கம் - செயற்பாடுகள் | 20-22 |
| 11.2.3 | செயற்பாடுகளின் தொடர் | 23-275 |

## பகுதி III

11.3.0 கணிப்பீடும் மதிப்பீடும்

| | | |
|---|---|---|
| 11.3.1 | கணிப்பீடும் மதிப்பீடும் அறிமுகம் | 287-289 |
| 11.3.2 | கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள் | 290-295 |

# பகுதி I

# விரிவான பாடத்திட்டம்

## 11.1.1 அறிமுகம்

சமூகமாற்றத்தோடு கலைத்திட்டமாற்றம் ஏற்படுவது இன்றியமையாததொன்றாகும். சமூகத்தேவைகள் மாறுவதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றங்கள் காலத்திற்குக் காலம் செய்யப்படுவதுண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டமானது தற்காலத் தேவைகட்கமைய அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

''நாதமே பிரம்மம்", இறைவன் நாதவடிவினன்" 'நாதோபாசனை செய்தால்' இறைவனை அடையலாம் என்பது முன்னோர் கூற்று. இக்கூற்றுக்கமைய சங்கீதமும்மூர்த்திகள் கர்நாடக இசைக்கும், தேவாரமுதலிகள் பண்ணிசைக்கும் சாதனையில் செய்து காட்டியுள்ளனர். இசையைக் கற்பதன் மூலம் நன்மனப்பாங்கு விருத்தி பெற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

மாணவர் விருப்பத்தோடு கற்றலில் ஈடுபடுவதற்கும் இரசித்தல், ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப்பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கனிஷ்ட இடைநிலை பாடத்திட்டத்தின் மூலம் மாணவர் பெற்றுக்கொண்ட அடிப்படை அறிவை நிலைநிறுத்துவதோடு சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கற்கவேண்டிய கற்றல் தேர்ச்சிகளை வளர்ப்பதற்குரிய வகுப்பாகவும் 11ஆம் தரம் அமைகிறது. கர்நாடக சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று உயர்தர வகுப்புக்களில் இப்பாடத்தினைக் கற்பதற்குத் தயார்படுத்தக்கூடிய முறையில் இச்சிரேஷ்ட இடைநிலைப் பாடத்திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

இத்தேர்ச்சி மட்டப் பாடத்திட்டமானது மாணவர்கள் விடயங்களைக் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கும், கற்றலானது கூடியளவு மாணவர் மையமாக்கப் படுவதற்கும் கற்றல் - கற்பித்தல் குறிக்கோள்களை மிகத்தெளிவாகவும், மாணவர்கள் கற்றலுக்கு விருப்பத்தோடு ஈடுபடுவதற்கும் ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் பாடவிடயங்கள் தொடர்பாகத் தம்மை தற்காலப்படுத்துவதோடு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பனவற்றை விளங்கிக்கொண்டு மாணவர்களிடம் இயல்பாகவுள்ள திறன்களை உபயோகித்து தாமே தொழிற்பட்டு முன்னேறும் வகையில் அவர்களுக்கு கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் திட்டங்களை வகுக்கக்கூடிய திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 11.1.2 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. கர்நாடக சங்கீதத்தின் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதன் மூலம் பாடும் திறன், இரசனை, விமர்சிக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்தல்.

02. கர்நாடக சங்கீதத்தின் செய்ம்முறைத்திறனை விருத்தி செய்வதன் மூலம் ஆற்றுகைத் திறன், உருப்படிகளைப் பாடுதல், இசையமைத்தல் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

03. கர்நாடக இசையை இரசித்து அனுபவிக்கும் திறனை விருத்தி செய்தலும், ஏனைய இசை வகைகளை மதித்தலும் இரசித்தலும்.

04. கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி, அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர் என்பவற்றை அறிந்து, சமூக கலாசார விழுமியங்களைப் பேணவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்.

05. அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் என்பன அமையப்பெற்று சமநிலை ஆளுமையை விருத்தி செய்தல்.

06. இசை மூலம் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தல்.

## 11.1.3 வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

1.0 இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். (சாஸ்திரிய இசை, வாத்திய இசை, பிறதேச இசைகள்)

2.0 பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத் திறனைப் வெளிப்படுத்துவார்.

3.0 இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

4.0 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

5.0 கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

6.0 கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்.

## 11.1.4 பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும்

கர்நாடகசங்கீத பாடங்களை வகுப்பறையில் கற்பிப்பதுடன் வகுப்பறைக்கு வெளியேயும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்துக் கொள்ளல் விரும்பத்தக்கதாகும். குறிப்பாகக் கர்நாடகசங்கீதத்திற்கு வாரத்திற்கு 03 பாடவேளைகளே ஒதுக்கப்பட்டிருப்பதால் இத்தகைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட குறிக்கோள்களையும் தேர்ச்சிகளையும் அடையக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு பாடசாலைக்கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் திட்டமிடும்பொழுது பாடசாலையில் உள்ள வளங்களும், மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளும் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## நேரசூசி

கர்நாடகசங்கீதம் அறிமுறையும், செய்ம்முறையும் இணைந்த ஒரு பாடமாகும். அறிமுறை அறிவில் மட்டும் தேர்ச்சி பெறல் பயனளிக்காது. மாணவர் செய்ம்முறையில் உயர் தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதால் நேரசூசியில் அதிக பாடவேளைகள் செய்ம்முறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வசதிக்கேற்ப செய்ம்முறைப் பயிற்சிக்காக இரு பாடவேளைகள் தொடர்ச்சியாகவும் வழங்கப்படலாம்.

## ஆசிரியர் தகைமைகள்

கர்நாடகசங்கீதப் பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்துறையில் முறைப்படி பயிற்சி பெற்றவர்களே பொருத்தமானவர்களாவர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கர்நாடகசங்கீதத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மற்றொரு ஆசிரியரது உதவியைப் பெறல் இன்றியமையாததாகும்.

## அதிபரின் கற்பித்தல் தலைமைத்துவப்பங்கு

பாடசாலை அதிபர் ஒருவர் முகாமைத்துவத் தலைமைத்துவத்தோடு கற்பித்தல் தலைமைத்துவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். எனவே கர்நாடக சங்கீதத்தினைக் கற்பிப்பதற்கு பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கென தனியான ஓர் அறையை ஒழுங்கு செய்தல், தேவைப்படும் தரஉள்ளீடுகள், பாடத்திட்டம், வழிகாட்டி நூல்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்தல் அவருடைய கடமையாகும்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்.

இவை தொடர்பான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

01. பாடசாலை நாளாந்த செயற்பாடுகளுடன் பொறுத்தமான இடங்களில் இசையையும் சேர்த்துக் கொள்வதற்கான செயற்றிட்டங்கள் அதிபரால் உருவாக்கப்படுதல்.
    உதாரணமாகப் பாடசாலை கீதம், தேசிய கீதம், தமிழ்மொழி வாழ்த்து, பிரார்த்தனைப் பாடல்கள்.

02. பாடல்களைக் கற்பிக்கும்போது ஒன்றிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதால் சங்கீத ஆசிரியருக்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் இடையே தொடர்பிருப்பது இன்றியமையாதது ஆகும். இதற்கான ஏற்பாடுகள் அதிபரின் ஊடாக செய்யப்படுதல் வேண்டும். உதாரணம்: தமிழ்மொழி ஆசிரியர் செய்யுள் கற்பிப்பதற்கு இசை ஆசிரியரின் உதவியைப் பெறலாம். இதுபோன்று ஏனைய பாட ஆசிரியர்களின் உதவியை இசை ஆசிரியர் பெறலாம்.

03. வருடத்தொடக்கத்திலேயே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப்படல், இலக்கிய மன்றங்கள், வகுப்பறை மாணவர் மன்றங்கள், இசை மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி இசை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.

04. இவை தவிர வருடாந்த பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழா, கலைவிழா, தமிழ்மொழித்தினவிழா, இலக்கியவிழா, சமயவிழாக்கள், இசை மன்றத்தின் இசைப்போட்டிகள் முதலானவற்றில் மாணவர் பங்குபற்றுவதற்கு மட்டு மன்றி தாமே சுயமாக இசை நிகழ்ச்சிகளை ஆக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.

05. சமுதாயத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கும் பாடசாலையை சமுதாயத்திற்குள் கொண்டு செல்வதற்கும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஊடக மாகக் கருதப்படுகின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் மாணவர் பங்களிப்புச் செய்வதற்கு வசதியும் வாய்ப்புகளும் வழங்கப்படுதல்.

06. இசை தொடர்பான கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுதல் மாணவர்களுடைய ஆக்கத்திறன் விருத்திக்கும் நயக்கும் திறனுக்கும் துணைபுரியும்.

07. நாடக இசை, நாட்டார் இசை போன்றவற்றை கற்பிக்கும்போது பாடசாலைச் சூழலில் உள்ள இசைக்கலைஞர்களின் உதவியை நாடுதல்.

08. சங்கீத வாக்கேயகாரர்களின் தினத்தைக் கொண்டாடுதல்.

09. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாணவர் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல்.

## 11.1.5 தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

கர்நாடக சங்கீதப் பாட கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவதும் விரும்பத்தக்கதாகும்.

- சுருதிப்பெட்டி அல்லது தம்புரா
- ஹார்மோனியம் அல்லது ஆர்கன் (Organ)
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா (அழகியற்கலை, இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, வாத்திய இசை, இசைக்கச்சேரி, இசை உருப்படிகள், வெவ்வேறு சமயப் பாடல்கள், இசைநாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து)
- வானொலி
- இசைக்கருவிகள் (தோல், துளை, நரம்பு, கஞ்சக் கருவிகள்)
- இசை வெளியீடுகள் (நூல்கள், சஞ்சிகைகள்)
- பிரிஸ்டல் அட்டைகள் (விளக்கப்படங்கள், விளக்க அட்டைகள் தயாரித்தல்)
- டிமை தாள்கள்
- நிறப்பேனைகள்
- தட்டச்சுக் கடதாசி (Typing Sheet)
- அச்சுப் பிரதிக் கடதாசி (Phtocopy paper)
- கத்தரிக்கோல்
- பெயர்ப்பலகை
- மேல்தலை எறியி (OHP)
- ஒளி ஊடுகடத்தும் கடதாசி
- தொலைக்காட்சிப்பெட்டி
- ஒளிப்பதிவுக்கருவி
- ஒளிப்பதிவு நாடா (அழகியற்கலை, இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, வாத்திய இசை, இசைக்கச்சேரி, இசை உருப்படிகள், வெவ்வேறு சமயப்பாடல்கள், இசை நாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து)
- கணினி
- இணையம்

## 11.1.6 கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு

### தரம் - 11
### பாடத்திட்டம்

| பிரதான தேர்ச்சிகள் | பாடவேளைகள் |
|---|---|
| 1. தேர்ச்சி 1.0 - (இரசித்தல்) | 07 |
| 2. தேர்ச்சி 2.0 - (ஆக்கத்திறன்) | 06 |
| 3. தேர்ச்சி 3.0 - (செய்ம்முறை) | 42 |
| 4. தேர்ச்சி 4.0 - (அறிமுறை) | 28 |
| 5. தேர்ச்சி 5.0 - (கலாசாரப்பின்னணி) | 07 |
| **மொத்தம்** | 90 |

## 11.1.7 பாடத்திட்டம் - தரம் 11

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 1.0<br>இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப் படுத்துவார். | 1.1<br>வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்து வமான அம்சங்களை இனங்கண்டு வெளிப் படுத்துவார். | • சாஸ்திரிய இசை<br>* இராகமாலிகை<br>* சௌககாலகீர்த்தனை<br>* வர்ணம்<br>- உருப்படிகளை இனங்காணல்<br>- அங்க வேறுபாடுகள்<br>- வெளிப்படுத்தப்படும் உணர்வு<br>- இயற்றியமகான்கள்<br>- இராகம், தாளம்<br><br>• வாத்திய இசை<br>* பல்லியம்<br>- நாதத்தைக் கேட்டு வாத்தியங்களை இனங்காணல்<br>- பல்லியத்தில் அடங்கும் வாத்தியங்கள்<br>- வாத்திய இசையில் தாளவாத்தியம், சுருதிவாத்தியம், ஸ்வரவாத்தியம் என்ப வற்றை இனங்காணல்.<br><br>• பிறதேச இசைகள்<br>* மேலைத்தேய இசை<br>* ஹிந்துஸ்தானி இசை<br>- இசை வேறுபாடு<br>- பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்<br>- கச்சேரி அமைப்பு முறை | 01<br><br>01<br><br>01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 2.0<br>பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத்திறனை வெளிப்படுத்துவார். | 1.2<br>இசை நிகழ்ச்சிகளில் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார். | • சாஸ்திரிய இசை (இராகமாலிகை, சௌககால கீர்த்தனை, வர்ணம்)<br>• வாத்திய இசை (பல்லியம்)<br>• வெகுசனத்தொடர்பு ஊடகங்கள் மூலம் ஒளி, ஒலி பரப்பப்படும் சாஸ்திரிய சங்கீத சம்பந்தமான நிகழ்ச்சிகள்.<br>உ-ம்: • கலை அரங்கம்<br>• இராகபாவம்<br>• இசைக்கச்சேரிகள்<br>• சுருதிலயம்<br>• சப்தஸ்வரங்கள்<br>• பிறதேச இசைகள் (மேலைத் தேய இசை, ஹிந்துஸ்தானி இசை)<br>* கலை நிகழ்ச்சிகள்<br>* பார்த்த அல்லது கேட்ட நிகழ்ச்சிகள் சம்பந்தமான அனுபவப்பகிர்வு (நிகழ்ச்சியின் தன்மை, தரம், வெளிப்பாடு, ஒத்திசைவு, நிகழ்ச்சியின் குறை, நிறை,...)<br>* விமர்சனக் கட்டுரை | 04 |
| | 2.1<br>இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பார். | • இசை நாடகம்<br>* கருப்பொருள்<br>* அமைப்பு<br>* பிரதியை எழுதுதல்<br>* எழுதிய பிரதிக்குப் பொருத்தமான பாடல்கள்<br>* பாடல்களுக்குப் பொருத்தமான இசை அமைத்தல்.<br>* இசை நாடகம் தயாரித்தல் | 03 |
| | 2.2<br>நிகழ்ச்சிகளைக் கூட்டாகத் தயாரிப்பதன் மூலம் கூட்டுமனப் பாங்கினை வெளிப் படுத்துவார். | • வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகள்.<br>- நிகழ்ச்சிகள்<br>உ-ம்: தனி இசை, குழுஇசை, பல்லியம், நாடகம், வில்லுப்பாட்டுபோன்ற நிகழ்ச்சிகள்<br>* திட்டமிடல்<br>* பயிற்சி<br>* மேடையேற்றல் | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 3.0<br>இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். | 3.1<br>இராகங்களின் ஆரோகண அவரோகணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார். | • பின்வரும் இராகங்களின் ஆரோகண அவரோகணம்.<br>* ஆரபி<br>* கல்யாணி<br>* பந்துவராளி<br>* ஸிம்ஹேந்திரமத்திமம்<br>* கமாஸ்<br>* ரேவதி<br>* சுத்தசாவேரி<br>* மோகனம்<br>* சங்கராபரணம்<br>* மாயாமாளவகௌளை<br>* கானடா<br>- ஸ்வரஸ்தான சுத்தம் | 03 |
| | 3.2<br>அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். | • ஸ்வரவரிசைகள் (01-12)<br>• ஜண்டை வரிசைகள் (01-04)<br>• மேல்ஸ்தாயி வரிசைகள்(01-04)<br>• தாட்டு வரிசைகள் (01- 02)<br>• இலட்சண கீதம்<br>- ரேவதி இராகம்<br>• தானவர்ணம்<br>* அன்னமே - ஆரபி அல்லது<br>* வனஜாஷி - கல்யாணி<br>- அப்பியாசவரிசைகள் - இராக, தாளத்துடன் முன்று காலத்திலும் பாடுதல்<br>- இலட்சண கீதம், தான வர்ணம் - இராக, தாள, ஸ்வர, சாகித்யத்துடன் பாடுதல் | 04<br>01<br>06 |
| | 3.3<br>இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். | • கீர்த்தனை<br>* நின்னருள் - பந்துவராளி<br>* உன்னையல்லால் - ஸிம்ஹேந்திரமத்திமம்<br>* ஸ்ரீசரஸ்வதி - ஆரபி அல்லது<br>காலஹரண - சுத்தசாவேரி<br>* மயில்வாகனா - மோகனம் அல்லது<br>தேவதேவ - மாயாமாளவகௌளை<br>- இராகம்<br>- தாளம் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | | • சௌககாலக் கீர்த்தனை<br>* கபாலி - மோகனம் அல்லது<br>* அகிலாண்டநாயகி - சங்கராபரணம்<br>- இராகம்<br>- தாளம்<br>- ஸ்வரம்<br>- சாகித்யம் | 04 |
| | | • இராகமாலிகை<br>* சின்னஞ்சிறு கிளியே<br>- இராகம்<br>- தாளம் | 03 |
| | | • பதம்<br>* அலை பாயுதே அல்லது<br>* தெருவில்வாரானோ<br>- இயற்றியவர்<br>- இராகம்<br>- தாளம் | 03 |
| | | • தேவாரம்<br>* பண்ணும் பதமேழும்<br>* எந்தை ஈசன்<br>* பூத்தேர்ந்தாயன<br>- பண்<br>- இராகம்<br>- தாளம்<br>- அருளியவர்<br>- பாடப்பட்ட தலம்<br>- சந்தர்ப்பம்<br>- பொழிப்பு | 03 |
| | | • திருப்புகழ்<br>* அபகாரநிந்தை<br>* ஏறுமயில்<br>* காலனிடத்தணுகாதே<br>- இராகம்<br>- தாளம்<br>- சந்த அமைப்பு<br>- அருளியவர்<br>- பாடப்பட்ட தலம் | 03 |
| | 3.4<br>தாளத்திலமைந்த ஸ்வரசஞ்சாரங்களைப் பார்த்துப்பாடுவார். | * சங்கராபரணம்<br>* பிலஹரி<br>- இராகங்களில் ஸ்வரக் கோர்வைகள்<br>- இராகம்<br>- தாளம்<br>- ஸ்வரஸ்தானசுத்தம் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 4.0<br>கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். | 4.1<br>கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். | • கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்கள்<br>* க்ரஹம்<br>* பூர்வாங்கம்<br>* உத்தராங்கம்<br>* அப்பியாசகானம்<br>* சபாகானம்<br>* இசைக்குறியீடுகள்<br>* 12 ஸ்வரஸ்தானங்களும், 16 ஸ்வரப் பெயர்களும்<br>* சாபுதாள வகைகள்<br>* சர்வதேச இசைவகைகள் | 05 |
| | 4.2<br>72 மேளகர்த்தா அமைப்பை விளக்குவார். | • 72 மேளகர்த்தா விபரம்<br>- வரலாறு, அமைப்பு | 05 |
| | 4.3<br>இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார். | • இராக இலட்சணம்<br>* ஹரிகாம்போதி<br>* ஸிம்ஹேந்திரமத்திமம்<br>* பந்துவராளி<br>* ஆரபி<br>* மத்தியமாவதி<br>- மேளஎண், தாய்ராகம்<br>- ஆரோகண, அவரோகணம்<br>- ஸ்வரஸ்தானம்<br>- முக்கிய அம்சங்கள்<br>- ஸ்வர சஞ்சாரங்கள்<br>- உருப்படிகள் | 05 |
| | 4.4<br>இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார். | • இசைக்கருவிகள்<br>* வயலின்<br>* மிருதங்கம்<br>* தவில்<br>- அமைப்பு<br>- சுருதி கூட்டும்முறை<br>- வாசிக்கும் முறை<br>- பயன்பாடு, சிறப்பம்சங்கள்<br>- படத்தை வரைந்து பாகங்களைக் குறித்தல்.<br>- வாசித்து பிரபல்யம் பெற்ற கலைஞர்கள் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 4.5<br>உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார். | * தில்லானா<br>* இராகமாலிகை<br>- இலட்சணம்<br>- உதாரணங்கள்<br>- இயற்றியோர் | 02 |
| | 4.6<br>கற்றபாடல்களை ஸ்வரதாளக் குறியீட்டுடன் எழுதுவார். | * கற்றபாடல்கள்<br>உ-ம்: கீர்த்தனை<br>வர்ணம்<br>- இராகத்தின் ஆரோகண, அவரோகணம், மேள எண் தாளம், இயற்றியவர் பெயர், அங்க வேறுபாடுகளுடன் ஸ்வர சாகித்யமாக எழுதுதல் | 02 |
| 5.0<br>கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார். | 5.1<br>வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத்தொண்டினையும் விளக்குவார். | * தியாகராஜஸ்வாமிகள்<br>* முத்துஸ்வாமிதீக்ஷிதர்<br>* சியாமாசாஸ்திரிகள்<br>* அருணாசலக்கவிராயர்<br>- வாழ்க்கைக்காலம்<br>- பெற்றோர்<br>- ஆரம்பக்கல்வி<br>- வாழ்க்கை வரலாறு<br>- இசைப்பணி<br>(பட்டங்கள், நூல்கள், இசை உருப்படிகள், முத்திரை...) | 05 |
| 6.0<br>கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார். | 6.1<br>கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார். | * இந்தியாவின் 17ஆம், 18ஆம், 20ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி<br>* இலங்கையின் இசை வளர்ச்சி | 07 |

| | 1ம் தவணை | | 2ம் தவணை | | 3ம் தவணை | |
|---|---|---|---|---|---|---|
| இரசித்தல் | 11.1.1<br>வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்தல் (இராகமாலிகை, சௌக காலக்கீர்த்தனை, வர்ணம்)<br><br>11.1.2<br>சாஸ்திரிய இசையில் இராக மாலிகை, சௌககாலக் கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சித்தல் | 01<br><br>01 | 11.1.1<br>பல்லிய இசையில் தனித்துவமான அம்சங்களை இனங் கண்டு வெளிப்படுத்தல்<br><br>11.1.2<br>பல்லிய இசையை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சித்தல்<br><br>11.1.2<br>வெகுசனத் தொடர்பு ஊடகங் களின் மூலம் சாஸ்திரிய சங்கீத சம்பந்தமான நிகழ்ச்சி களை இரசித்தல் | 01<br><br>01<br><br>01 | 11.1.1<br>பிறதேச இசைகளில் மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளின் தனித்துவ மான அம்சங்களை இனங்கண்டு வெளிப் படுத்தல்<br><br>11.1.2<br>மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ் தானி இசை நிகழ்ச்சிக ளை இரசித்து அனுபவித் தவற்றை விமர்சித்தல் | 01<br><br>01 |
| ஆக்கத்திறன்களை வளர்த்தல் | 11.2.1<br>இசை நாடகம் தயாரித்தல் | 01 | 11.2.1<br>இசை நாடகத்தை ஆற்றுகைப் படுத்தல் | 02 | 11.2.2<br>மாணவர்களின் ஆக்கங் களைக் கொண்டு வருட இறுதியில் நிகழ்ச்சிக ளைத் தயாரித்தல் | 03 |
| செய்முறை | 11.3.1<br>இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடுதல் (பந்துவராளி,ஆரபி, கல்யாணி)<br><br>11.3.2<br>தானவர்ணம் (அன்னமே அல்லது வனஜாஷி)<br><br>11.3.3<br>மத்திம காலக்கீர்த்தனை (நின்னருள்)<br><br>தேவாரம் (பண்ணும் பதமேழும்)<br>திருப்புகழ் (அபகார நிந்தை) | 01<br><br>06<br><br>03<br><br>01<br>01 | 11.3.1<br>இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடுதல் (ஸிம்ஹேந்திரமத்திமம், மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம்)<br><br>11.3.2<br>ஸ்வராவளி, மேல்ஸ்தாயி, ஜண்டை வரிசைகளை மூன்று காலங்களிலும் அப்பியாசம் செய்தல்<br><br>11.3.3<br>மத்திமகாலக்கீர்த்தனை (உன்னையல்லால், மயில்வாகனா அல்லது தேவதேவ<br><br>சௌககாலக்கீர்த்தனை கபாலி (மோகனம்)அல்லது அகிலாண்ட நாயகி (சங்கராபரணம்)<br><br>இராகமாலிகை சின்னஞ்சிறு கிளியே<br><br>தேவாரம் - எந்தையீசன்<br>திருப்புகழ் - ஏறுமயில் | 01<br><br>02<br><br>03<br>01<br><br>04<br><br>03<br><br>01<br>01 | 11.3.1<br>இராகங்களின் ஆரோஹண,அவரோஹ ணங்களைப் பாடுதல் (ரேவதி, சுத்தஸாவேரி, கமாஸ், கானடா)<br><br>11.3.2<br>தாட்டு வரிசையை மூன்று காலங்களிலும் அப்பியாசம் செய்தல்<br><br>11.3.2<br>இலட்சணகீதம் - ரேவதி இராகம்<br><br>11.3.3<br>மத்திமகாலக் கீர்த்தனை (ஸ்ரீ சரஸ்வதி அல்லது காலஹரண)<br><br>பதம் - (அலைபாயுதே அல்லது தெருவில் வாரானோ)<br><br>தேவாரம் - பூத்தேர்ந்தாயன<br><br>திருப்புகழ் - காலனிடத்தணுகாதே<br><br>11.3.4<br>தாளத்திலமைந்த ஸ்வரக்கோர்வைகளைப் பார்த்துப் பாடல் (சங்கராபரணம்,பிலஹரி) | 01<br><br>02<br><br>01<br><br>03<br><br>03<br><br>01<br><br>01<br><br>02 |

# பகுதி II

# செயற்பாடுகளின் தொடர்

## 11.2.1 கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

### அறிமுகம்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உரு வாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படு கின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர் களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர் களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக் கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாட லாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்ப வற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங் களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு 'உருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத் தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்க. இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டுபிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டுபிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப் படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாட லுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக் களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறா யினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற் றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரதேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்கு வதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கர்நாடகசங்கீத பாடத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.

- கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமையவேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே தான் கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படல்.

- பெறத்தக்க வளங்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளல்.

- ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்கள் அடைந்துள்ள அடைவை இனங்கண்டு தேவையான இடங்களில் மீளவூட்டல்.

- மாணவரது சுய ஆக்கங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து, மாணவரை உற்சாகப்படுத்தி அவற்றை மேடையேற்றவும் வழிவகுத்துக் கொடுத்தல்.

- கற்றல் - கற்பித்தலில் குழுச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

- கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல்.

- வகுப்பறைக் கற்பித்தலின்போது கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்துதல்.

- கலை நிகழ்ச்சிகளையும், கலாசார வைபவங்களையும் பார்க்கவும், பங்குபற்றவும் களம் அமைத்துக்கொடுத்தல்.

- இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களைக் கூடுதலாக ஈடுபடுத்திக் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தலாம்.

- பாடசாலை நேரங்களுக்குப் புறம்பாக இல்லம், ஆலயம்... ஆகிய இடங்களிலும் மாணவர்கள் கற்றவற்றை அப்பியாசம் செய்விக்க வழிநடத்துதல்.

- பொருத்தமான சந்தர்ப்பங்களில் வெகுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.

- செயற்பாடுகளின்போது மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவரே செயற்படு வதற்கு நெறிப்படுத்துதல்.

## 11.2.2 பொருளடக்கம் (செயற்பாடுகள்)


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | சாஸ்திரிய இசையில் இராகமாலிகை, சௌககாலக் கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம். | 23 |
| 02. | சாஸ்திரிய இசையின் இராகமாலிகை, சௌககாலக் கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம். | 27 |
| 03. | இசை நாடகத்தை பிரதியாக்கம் செய்வோம். | 30 |
| 04. | பந்துவராளி, கல்யாணி, ஆரபி இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 32 |
| 05. | தானவர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம். (அன்னமே - ஆரபி அல்லது வனஜாஷி - கல்யாணி) | 35 |
| 06. | தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம். (அன்னமே - ஆரபி அல்லது வனஜாஷி - கல்யாணி) | 41 |
| 07. | ''நின்னருள் இயம்பலாகுமோ" என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். | 44 |
| 08. | ''பண்ணும் பதமேழும்" என்னும் தேவாரத்தை பண்முறைக்கேற்ப பாடுவோம். | 47 |
| 09. | ''அபகாரநிந்தைபட்டுழலாதே" என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். | 50 |
| 10. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் க்ரஹம், பூர்வாங்கம், உத்தராங்கம், அப்பியாசகானம், சபாகானம் என்பன பற்றிய விளக்கத்தைப் பெறுவோம். | 53 |
| 11. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் 12 ஸ்வரஸ் தானங்கள் 16 ஸ்வரப் பெயர்கள் என்பன பற்றிய விளக்கத்தைப் பெறுவோம். | 60 |
| 12. | 72 மேளகர்த்தா அமைப்பின் வரலாறு பற்றிய விளக்கத்தைப் பெறுவோம். | 66 |
| 13. | 72 மேளகர்த்தா அமைப்பின் விளக்கத்தைப் பெறுவோம். | 71 |
| 14. | ஹரிகாம்போஜி இராக இலட்சணத்தை அறிந்து கொள்வோம். | 81 |
| 15. | இசைக்கருவிகளுள் வயலின் வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம். | 85 |
| 16. | தியாகராஜசுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம். | 92 |
| 17. | இந்தியாவின் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி அறிவோம். | 102 |
| 18. | பல்லிய இசையின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம். | 109 |

| | | |
|---|---|---|
| 19. | இசை நிகழ்ச்சிகளில் பல்லிய இசையை இரசித்து அனுபவித்த வற்றை விமர்சிப்போம். | 112 |
| 20. | வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் ஒலி, ஒளி பரப்பப்படும் சாஸ்திரிய சங்கீத சம்பந்தமான நிகழ்ச்சிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம். | 115 |
| 21. | இசைநாடகத்தை ஆற்றுகைப்படுத்துவோம். | 118 |
| 22. | மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம், ஸிம்ஹேந்திர மத்திமம் ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 120 |
| 23. | ஸ்வரவரிசை, மேல் ஸ்தாயி வரிசை, ஜண்டை வரிசைகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடுவோம். | 123 |
| 24. | ''உன்னையல்லால்'' என்னும் மத்திமகாலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். | 128 |
| 25. | மத்திம காலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். (மயில்வாஹனா - மோகனம் அல்லது தேவதேவ - மாயாமாளவகௌளை) | 131 |
| 26. | சௌககாலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். (கபாலி - மோஹனம் அல்லது அகிலாண்ட நாயகி - சங்கராபரணம்) | 137 |
| 27. | ''சின்னஞ் சிறுகிளியே'' என்னும் இராகமாலிகையை இராக, தாளத்துடன் பாடுவோம். | 143 |
| 28. | ''எந்தை ஈசன்'' என்னும் தேவாரத்தினை பண்முறைக்கமைய தாளத்துடன் பாடுவோம். | 147 |
| 29. | ''ஏறுமயில்'' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். | 150 |
| 30. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் இசைக்குறியீடுகள் பற்றிய முழு விபரங்களையும் அறிந்துகொள்வோம். | 153 |
| 31. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் சாபுதாள வகைகள் பற்றி அறிந்து கொள்வோம். | 160 |
| 32. | சர்வதேச இசை வகைகளையும், கர்நாடக சங்கீதத்திற்கும் உள்ள தொடர்புகளையும் அறிந்து கொள்வோம். | 164 |
| 33. | ஸிம்ஹேந்திரமத்திம இராக இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 168 |
| 34. | பந்துவராளி இராக இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 172 |
| 35. | மிருதங்க வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம். | 176 |
| 36. | தில்லானா என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 182 |
| 37. | முத்துஸ்வாமிதீக்ஷிதரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம். | 186 |

| | | |
|---|---|---|
| 38. | இந்தியாவின் 20ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணியை அறிவோம். | 192 |
| 39. | பிறதேச இசைகளில் மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப் படுத்துவோம். | 199 |
| 40. | பிறதேச இசைகளில் மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம். | 202 |
| 41. | வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம். | 205 |
| 42. | ரேவதி, சுத்தஸாவேரி, கமாஸ், கானடா ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 208 |
| 43. | தாட்டு வரிசைகளை (01, 02) சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 212 |
| 44. | ''ரேவதி ராகம்" என்னும் இலட்சண கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். | 215 |
| 45. | மத்திமகாலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். (ஸ்ரீசரஸ்வதி - ஆரபி /காலஹரண - சுத்தஸாவேரி) | 218 |
| 46. | பதத்தினை இராக, தாளத்துடன் பாடுவோம். (அலைபாயுதே - கானடா ராகம்/ தெருவில்வாரானோ - கமாஸ் ராகம்) | 223 |
| 47. | ''பூத்தேர்ந்தாயன" என்னும் தேவாரத்தினை பண்முறைக்கமைய தாளத்துடன் பாடுவோம். | 230 |
| 48. | ''காலனிடத்தணுகாதே" என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். | 233 |
| 49. | சங்கராபரணம், பிலஹரி ஆகிய இராகங்களில் அமைந்த ஸ்வரக் கோர்வைகளை இராக, தாள,ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 236 |
| 50. | ஆரபி இராக இலட்சணத்தை அறிந்து கொள்வோம். | 239 |
| 51. | மத்தியமாவதி இராக இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 244 |
| 52. | தவில் வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம். | 249 |
| 53. | இசை உருப்படிகளுள் இராகமாலிகை என்னும் உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம். | 254 |
| 54. | கற்ற பாடல்களை ஸ்வர, தாளக் குறிப்புடன் எழுதப் பழகுவோம். | 260 |
| 55. | சியாமாசாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம். | 263 |
| 56. | அருணாசலக்கவிராயரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்துகொள்வோம். | 269 |
| 57. | இலங்கையின் இசை வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வோம். | 275 |

## 11.2.3 செயற்பாடுகளின் தொடர்

**தேர்ச்சி** **1.0 :** இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.1 :** வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** **1.1.1 :** சாஸ்திரிய இசையில் இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி
- இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒலிநாடாக்கள்/ஒலிப்பதிவுக்கருவி
- இணைப்பு
- செயற்பத்திரம் 1.1.2.1

### கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 1.1.1** **:**

- ஆசிரியர் இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளைப் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க.

- செவிமடுப்பதன் மூலம் மேற்கூறிய உருப்படிகளை இனங்காண வழிப்படுத்துக.

- இனங்கண்ட விடயங்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுக.

| |
|---|
| • இராகமாலிகை என்னும் சொல்லுக்குப்பல இராகங்களால் தொகுக்கப்பட்ட மாலை என்று பொருள்படும்.<br>• சிட்டைஸ்வரம், மகுடஸ்வரம், மகுட ஸாகித்யம், விலோமசிட்டைஸ்வரம் என்பன இராகமாலிகையின் விசேட அம்சங்கள்.<br>• சௌககாலக்கீர்த்தனை விளம்ப காலத்தில் பாடப்படும். இரண்டு களையாகத் தாளம் போடப்படும்.<br>• வர்ணம் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படி எனினும் விறுவிறுப்பான உருப்படி என்பதனால் சபாகானத்திலும் பாடப்படும்.<br>• இராகமாலிகை, சௌகாலகீர்த்தனை ஆகிய உருப்படிகளுக்கு பல்லவி, அனுபல்லவி சரணம் என்னும் அங்கங்கள் உண்டு.<br>• வர்ணத்திற்கு பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரங்கள் என்னும் அங்கங்கள் உண்டு. |

**(10 நிமிடங்கள்)**

**படி 1.1.2** : • வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப, மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து சகல மாணவர்களுக்கும் செயற்பத்திரத்தையும், உருப்படிகள் பதிவு செய்த ஒலிநாடாக்களையும், இணைப்பையும் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 1.1.3** : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும்போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

- இராகமாலிகை பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படியாகும்.
- இவ்வுருப்படியில் குறைந்தது நான்கு இராகங்களாவது இருக்க வேண்டும்.
- இராகமாலிகையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்கள் உண்டு.
- ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் இருக்கலாம்.
- இராகமாலிகையின் அனுபல்லவியின் முடிவிலும் சரணங்களின் முடிவிலும் அந்தந்த இராகங்களில் பொருத்தமான சிட்டைஸ்வரம் அமைக்கப்பட்டிருக்கும்.
- சிட்டைஸ்வரத்தின் முடிவில் பல்லவி அமைந்துள்ள இராகத்தின் ஒரு சிறு ஸ்வரத்தொகுதி பாடப்படும். இது மகுட ஸ்வரம் என அழைக்கப்படும்.
- இவ்வுருப்படியின் முடிவில் விலோமகிரமத்தில் எல்லா இராகங்களிலும் ஒரு ஆவர்த்தமோ அல்லது அரை ஆவர்த்தமோ ஸ்வரங்கள் பாடப்பட்டு முடிக்கப்படுகிறது. இது இராகமாலிகையின் அழகுக்கு மகுடம் போல் விளங்குகிறது.
- இராகமாலிகையின் சாகித்யம் பக்தி ரஸம் உள்ளதாகவோ, சிருங்காரரசம் உள்ளதாகவோ இருக்கும்.
- இராகமாலிகைக்கு உதாரணங்கள் சில
  - பாவயாமி - ரூபகதாளம்
  - நித்யகல்யாணி - ரூபகதாளம்
  - ஆரபிமானம் - ஆதிதாளம்
- சௌககாலக்கீர்த்தனை விளம்ப காலத்தில் பாடப்படும்.

- சௌககாலக்கீர்த்தனை பாடும்போது தாளம் இரண்டு களையாகப் போடப்படும்.
- இவ்வுருப்படியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்கள் உண்டு.
- சௌககாலக்கீர்த்தனைகளுக்கு சில உதாரணங்கள்:
  மால்மருகனை - பிலகரி - ஆதி
  அகிலாண்டநாயகி - சங்கராபரணம் - ஆதி
- வர்ணம் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படிவகை.
- விறுவிறுப்பான உருப்படி என்பதால் கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடப்படும்.
- வர்ணத்தின் அங்கங்களானவை பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரங்கள்.
- வர்ணங்களுக்கு சில உதாரணங்கள்
  (1) நின்னுகோரி - ஆதி - மோகனம்
  (2) அன்னமே - ஆதி - ஆரபி
  (3) சாமிநின்னே - ஆதி - சங்கராபரணம்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளின் அங்கங்களைக் கூறுவர்.
- இவ்வுருப்படிகளை வரைவிலக்கணப்படுத்துவர்.
- இவ்வுருப்படிகளைக் கேட்பதனால் மகிழ்ச்சி, அமைதி, பக்தி போன்ற உணர்வுகள் ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 1.1.2.1

### குழு 1

நீங்கள் செவிமடுத்த இராகமாலிகையின் தனித்துவமான அம்சங்களை பட்டியற்படுத்துக.

### குழு 2

நீங்கள் செவிமடுத்த சௌககாலக்கீர்த்தனையின் தனித்துவமான அம்சங்களைப் பட்டியற்படுத்துக.

### குழு 3

நீங்கள் செவிமடுத்த வர்ணத்தின் தனித்துவமான அம்சங்களைப் பட்டியற்படுத்துக.

## இராகமாலிகை

இராகமாலிகை பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி வகை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களைக் கொண்டது. இவ்வுருப்படியில் குறைந்தது நான்கு இராகங்களாவது இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் இருக்கலாம். பல்லவி, அனுபல்லவி இரண்டும் ஒரு இராகத்திலோ அல்லது வெவ்வேறு இராகங்களிலோ அமைந்திருக்கலாம். சில இராகமாலிகைகளில் அனுபல்லவி இல்லாமலேயே இருக்கும். சரணத்தின் அங்கங்கள் வெவ்வேறு இராகங்களில் அமைந்திருக்கும். இதன் ஸாஹித்யம் பக்திரஸம் உள்ளதாகவோ, சிருங்கார ரஸம் உள்ளதாகவோ அமைந்திருக்கும். இராகமாலிகையை இயற்றிய சில மகான்கள் இராமஸ்வாமி தீட்சிதர், மஹா வைத்திய நாத ஐயர், ஸ்வாதித்திருநாள் மகாராஜா

***உதாரணம்:***

பாவயாமி - ரூபகம், ஆரபிமானம் - ஆதி, நித்யகல்யாணி - ரூபகம்

## சௌககாலக்கீர்த்தனை

சௌககாலக்கீர்த்தனை விளம்பகாலத்தில் பாடப்படும் உருப்படியாகும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக்கொண்டது. இக்கீர்த்தனையைப் பாடும் போது இரண்டு களையாகத் தாளம் போடப்படவேண்டும். இவ்வுருப்படியின் ஸாகித்யம் பக்திரஸம் கொண்டதாக அமைந்திருக்கும். இவ்வுருப்படியை இயற்றிய சில மகான்கள்: இராமஸ்வாமி சிவன், பாபநாசன் சிவன் ஆகியோர்

***உதாரணம்:***

1. மால்மருகனை - பிலகரி - ஆதி
2. அகிலாண்டநாயகி - சங்கராபரணம் - ஆதி

## வர்ணம்

வர்ணம் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படி எனினும் அதன் விறுவிறுப்பு காரணமாக சபாகானத்திலும் பாடப்படும். பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரங்கள் என்னும் அங்க வித்தியாசங்களைக் கொண்டது. இதன் ஸாஹித்யம் பக்திரஸம் கொண்டதாகவோ சிருங்கார ரஸம் கொண்டதாகவோ அமைந்திருக்கும். இவ்வுருப்படியை இயற்றிய சில மகான்கள் வீணைகுப்பய்யர், டைகர்வரதாச்சாரியார்.

**தேர்ச்சி** **1.0 :** இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.2 :** இசை நிகழ்ச்சிகளில் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார்.

**செயற்பாடு** **1.2.1 :** சாஸ்திரிய இசையில் இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி
- இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒலிநாடாக்கள்/ஒளிநாடாக்கள்,
- ஒலிப்பதிவு கருவி
- தொலைக்காட்சிப்பெட்டி
- செயற்பத்திரம் 1.2.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.2.1** **:**
- ஆசிரியர் இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒளி / ஒலி நாடாக்களைப் போட்டுக்காட்டியோ, ஆசிரியர் பாடிக்காட்டியோ மாணவர் களைச் செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்த / அவதானித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • பாடகரின் குரல்வளம்<br>• அனுசரணையாக ஒலித்த வாத்தியங்கள்.<br>• வாத்தியங்களின் அணிசேர் தன்மை<br>• செவிமடுத்த உருப்படிகளின் தரம், தன்மை பற்றிய மாணவரின் சுயமான இரசனை, அனுபவப்பகிர்வு<br>• விசேட அம்சங்கள் |

(10 நிமிடங்கள்)

**படி 1.2.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப்பிரித்து இராகமாலிகை , சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒலி நாடாக்களையும் செயற் பத்திரத்தினையும் வழங்குக.

- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்கிறார்களா என்பதை அவதானிக்க.

**(15 நிமிடங்கள்)**

படி 1.2.3 : • குழுக்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளை கீழ்வரும் அம்சங்களின் அடிப்படையில் இரசிக்க முடியும்.
- உருப்படியின் தரம்
- பாடகரின் குரல்வளம்
- அணிசேர் வாத்தியங்களின் ஒத்திசைவு
- இராகபாவம், லயம்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகிய உருப்படிகளின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுவர்.
- இவ்வுருப்படிகளைக் கேட்டு இரசிப்பதன் மூலம் பிறரது ஆற்றுகைத்திறனை மதிப்பர்.
- இராகமாலிகை, சௌககாலக்கீர்த்தனை, வர்ணம் ஆகியவற்றை இரசித்து அனுபவித்த வற்றை விமர்சிப்பர்.
- இசை நிகழ்ச்சிகளில் இவ்வகையான உருப்படிகளைக் கேட்டுப் பொருத்தமாக விமர்சிப்பர்.

## செயற்பத்திரம் 1.2.2.1

### குழு 1

- தரப்பட்ட ஒலிநாடாவில் இராகமாலிகை என்னும் உருப்படியை நன்கு செவிமடுத்து இரசித்து, விமர்சனக்கட்டுரை ஒன்றை வரைக.

- பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக எழுதுக.
  - உருப்படியின் தரம்
  - பாடகரின் குரல்வளம்
  - வாத்தியங்களின் ஒத்திசைவு
  - இராக பாவம், தாளம்
  - பாடலின் சாகித்யம்
  - பாடலைக்கேட்கும்போது ஏற்படும் உணர்வு

### குழு 2

- தரப்பட்ட ஒலிநாடாவில் சௌககாலக்கீர்த்தனையைக் கேட்டு இரசித்து பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி விமர்சனக்கட்டுரை ஒன்று எழுதுக.
  - உருப்படியின் தரம்
  - பாடகரின் குரல்வளம்
  - வாத்தியங்களின் ஒத்திசைவு
  - இராக பாவம், தாளம்
  - சாகித்ய சுத்தம்
  - பாடலைக்கேட்கும்போது ஏற்படும் உணர்வு

### குழு 3

- தரப்பட்ட ஒலிநாடாவில் இராகமாலிகை என்னும் உருப்படியை நன்கு செவிமடுத்து இரசித்து, விமர்சனக்கட்டுரை ஒன்றை வரைக.

- பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக எழுதுக.
  - உருப்படியின் தரம்
  - பாடகரின் குரல்வளம்
  - வாத்தியங்களின் ஒத்திசைவு
  - இராகம், தாளம்
  - சாகித்ய சுத்தம்

**தேர்ச்சி** **2.0 :** பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பார்.

**செயற்பாடு 2.1.1 :** இசை நாடகத்தை பிரதியாக்கம் செய்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- மாதிரி இசைநாடகப் பிரதிகள்
- செயற்பத்திரம் 2.1.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.1.1** **:**
- மாணவர்கள் பார்த்து, கேட்டறிந்த இசை நாடகங்கள் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகம் செய்க.
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

  - இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நாடகமே இசைநாடகம்.
  - இசை நாடகத்திற்குப் பொருத்தமான கதைகள் உதாரணம்:
    - புராண இதிகாச வரலாற்றுக் கதைகளில் இடம்பெறும் சிறு சம்பவங்கள்.
      - மகாபாரதத்தில் சூதாட்ட நிகழ்வு
      - இராமன் வில் உடைக்கும் சம்பவம்
      - கண்ணகி மதுரையை எரித்த சம்பவம்
      - இயேசுவின் பாடுகள்
      - இயேசுவின் பிறப்பு
    - வாக்கேயகாரர்களின் வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்கள்.
    - அறநெறிக் கருத்துக்களைக் கூறும் கதைகள்.
    - மாதிரி இசைநாடகப் பிரதிகளின் உதவியுடன் இசைநாடகப் பிரதியொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான விடயங்கள்.

**(10 நிமிடங்கள்)**

**படி 2.1.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 2.1.3 : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நாடகமே 'இசைநாடகம்' ஆகும்.
- இசை நாடகத்திற்குப் பொருத்தமான கதைகள்.
  ***உதாரணம்:***
  - புராண இதிகாச வரலாறு
  - வாக்கேயகாரர் வரலாறு
  - அறநெறிக் கருத்துக்களை வெளிப்படுத்தும் கதைகள்.
- இசைநாடகப் பிரதியொன்றில் இடம்பெற வேண்டிய
  - அம்சங்கள்
  - கதாபாத்திரங்கள்
  - உரையாடல்கள்
  - பாடல்கள்
  - காட்சி/சம்பவ விளக்கம்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இசைநாடகம் என்னும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துவர்.
- இசைநாடகம் தயாரிப்பதற்குப் பொருத்தமான கதைகளைக் குறிப்பிடுவர்.
- இசைநாடகத்தைப் பிரதியாக்கம் செய்யும் திறனை வெளிப்படுத்துவர்.
- குழுவாகச் செயற்படும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 2.1.2.1

• சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தினை வழங்குக.

- இசைநாடகம் ஒன்றிற்குப் பொருத்தமான கதையைத் தெரிவுசெய்து தலைப்பிடுக.
- இசைநாடகம் ஒன்றினைப் பிரதியாக்கம் செய்வதற்கு திட்டமிட்டு, அதன் அறிக்கையை சமர்ப்பிக்க.
- குறிப்பிட்ட தினத்தில் இசைநாடகப் பிரதியை ஆசிரியரிடம் ஒப்படைக்க ஆவனசெய்க.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.1.1 :** பந்துவராளி, கல்யாணி, ஆரபி இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி, வயலின்/ஹார்மோனியம்
- ஆரோஹண, அவரோஹண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம்
- செயற்பத்திரம் 3.1.2.1
- இணைப்பு

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 3.1.1** **:**
- பந்துவராளி, கல்யாணி, ஆரபி ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஒவ்வொரு இராகமாகப் பாடிக் காட்டியும், வாத்தியத்தில் வாசித்தும் செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்த ஆரோஹண, அவரோஹணங்களின் இராகங்களை இனங்காணச் செய்க.

- இனங்காணப்பட்ட இராகங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • வரைபடங்களைக் காட்சிப்படுத்தி குறிப்பிட்ட இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தையும் அவற்றின் ஸ்வரஸ் தானங்களையும் கூறுவதற்கு இடமளிக்க.<br>• இவ் இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தையும், ஸ்வரஸ்தானங்களின் ஒலிநிலைகளையும் பாடிக்காட்டி மாணவர் தொடர்ந்து அதனைக் கேட்டுப்பாடுவதற்கு வழிப் படுத்துக.<br>• ஒவ்வொரு இராகத்தினதும் ஆரோஹண, அவரோஹணத் தையும் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.<br>• மாணவர்களைக் குழுக்களாகவோ, எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவோ பாடச்செய்க.<br>• குறிப்பிட்ட இராகங்களில் சிறு சஞ்சாரங்களை அமைத்துக் கொடுத்து மாணவர் அதனைப் பாடுவதற்கு வழிப்படுத்துக. |

**(10 நிமிடங்கள்)**

படி 3.1.2 : • வகுப்பிலுள்ள மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 3.1.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனையவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.

• மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

• பின்வரும் விடயங்கள் மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- பந்துவராளி - ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ } 51வது மேளகர்த்தாராகம்
  ஸ்வரஸ்தானங்கள்: ஸட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம்.
- கல்யாணி - ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ } 65வது மேளகர்த்தாராகம்
  ஸ்வரஸ்தானங்கள்: ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்
- ஆரபி - ஸரிமபதஸ் ஸ்நிதபமகரிஸ } 29வது மேளமாகிய சங்கராபரணத்தின் ஜன்னிய இராகம்
  ஸ்வரஸ்தானங்கள்: ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்
- ஒவ்வொரு இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தையும் மாணவருடன் சேர்ந்து பாடுக.
- குறிப்பிட்ட இராகங்களில் சிறுசஞ்சாரங்களைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- பந்துவராளி, கல்யாணி, ஆரபி இராகங்களின் ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிடுவர்.
- பந்துவராளி, கல்யாணி, ஆரபி இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவர்.
- பந்துவராளி, கல்யாணி, ஆரபி ஆகிய இராகங்களில் சிறு சஞ்சாரங்களை விரும்பிப் பாடுவர்.

# செயற்பத்திரம் 3.1.2.1

- ஒவ்வொரு மாணவருக்கும் செயற்பத்திரத்தையும் இணைப்பினையும் வழங்குக.

- பந்துவராளி, கல்யாணி, ஆரபி ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் குழுநிலையிலும், தனியாகவும் பாடிப்பயிற்சி செய்க.
- குறித்த இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.

**இணைப்பு**

| | இராகம் | ஆரோஹண, அவரோஹணம் | ஸ்வரஸ்தானம் |
|---|---|---|---|
| (1) | பந்துவராளி | ஆ - ஸரிகமபதநிஸ்<br>அ - ஸ்நிதபமகரிஸ } 51வது மேளகர்த்தாராகம் | ஸட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம் |
| (2) | கல்யாணி | ஆ - ஸரிகமபதநிஸ்<br>அ - ஸ்நிதபமகரிஸ } 65வது மேளகர்த்தாராகம் | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம் |
| (2) | ஆரபி | ஆ - ஸரிமபதஸ்<br>அ - ஸ்நிதபமகரிஸ } 29வது மேளமாகிய சங்கராபரணத்தின் ஜன்னிய இராகம் | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம் |

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.2.1 :** தான வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம்.
(அன்னமே - ஆரபி அல்லது வனஜாட்சி - கல்யாணி)

**நேரம்** **:** 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி, ஹார்மோனியம்
- தான வர்ணம் ஸ்வர சாகித்தியமாக எழுதப்பட்ட அட்டை
- ஆரபி, கல்யாணி இராகங்களின் ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- செயற்பத்திரம் 3.2.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.2.1** **:**
- எடுத்துக்கொண்ட வர்ணத்தை முழுமையாகப் பாடிக் காட்டியோ ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

- மாணவர் செவிமடுத்த வர்ணத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

  - எடுத்துக்கொண்ட வர்ணத்தினைக் காட்சிப்படுத்தி தான வர்ணத்தின் அமைப்பு, பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ் வரம், சரணம், சரணஸ்வரங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.
  - தற்போது எடுத்துக்கொண்ட தானவர்ணத்தின் பகுதியானது பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வங்களைக் கொண்ட பூர்வாங்கப் பகுதியாகும் என்பதைக் கூறுக.
  - எடுத்துக்கொண்ட வர்ணத்தின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் கூறி ஆரோஹண, அவரோஹணத்தைப் பாட வழிப்படுத்துக.
  - எடுத்துக்கொண்ட வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர சாகித்தியமாக பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.
  - பூர்வாங்கப் பகுதியைத் தாளத்தோடு பாடித் தொடர்ந்து மாணவர் பாடும்படி செய்க.
  - பூர்வாங்க பகுதியை இரண்டாம் காலத்தில் பாட நெறிப் படுத்துக.
  - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து இராக, தாளத்துடன் பூர்வாங்கப் பகுதியை இரு காலங்களிலும் பாடுக.
  - மாணவர்களைக் குழுக்களாகவும், தனியாகவும் பாடும்படி செய்க.

**(45 நிமிடங்கள்)**

**படி 3.2.2** : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ, தனித்தனியாகவோ செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும்/மாணவரும் தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.2.3** : • மாணவர் தனியாகவோ, குழுவாகவோ பூர்வாங்கப் பகுதியைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் / மாணவரும் இரண்டு காலங்களிலும் பாட இடமளிக்க.

• தனியாகவோ, குழுவாகவோ பாடும்போது ஏனைய மாணவர் களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க. தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமை பெறச் செய்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • எடுத்துக்கொண்ட வர்ணத்தின் இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பவற்றைக் கூறி வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து முதலாம், இரண்டாம் காலங்களில் மீண்டும் பாடி நிறைவு செய்க. |

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரங்களைக் கொண்ட பகுதி பூர்வாங்கப்பகுதி என்பதனை வலியுறுத்துவர்.
- வர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் கூறுவர்.
- வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாளத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில் பாடுவர்.
- வர்ணம் கச்சேரியின் ஆரம்பத்தில் பாட உகந்த உருப்படி என்பதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 3.2.2.1

- வகுப்பிலுள்ள சகல மாணவருக்கும் / குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.

| |
|---|
| • நீர் கற்றுக்கொண்ட தான வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர, சாகித்தியமாக 1ம், 2ம் காலங்களில் இராக, தாளத்துடன் குழு நிலையிலும், தனியாகவும் பாடிப்பயிற்சி செய்க.<br>• தானவர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியை ஸ்வர, ஸாகித்தியமாக 1ம், 2ம் காலங்களில் இராக, தாளத்துடன் பாடுக. |

**இணைப்பு I**

## தான வர்ணம்

இவ்வர்ணத்தைப் பயிற்சிசெய்யத் தொடங்குமுன் வர்ணம் அமைந்த இராகம், தாளம், இயற்றியவர் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். பின் வர்ணம் அமைந்த ஆரபி இராக, ஆரோஹண, அவரோஹணத்தை மூன்று காலமும் பாடிப்பழகுதல் வேண்டும். இதன்பின் ஸ்வரமாயும், சாகித்தியமாயும் வர்ணத்தைப் பாடிப் பயிற்சி செய்தல் வேண்டும்.

இராகம் : ஆரபி
தாளம் : ஆதி
ஆ : ஸ்ரிமபதஸ்
அ : ஸ்நிதபமகரிஸ } 29ஆவது மேளத்தின் ஜன்னியம்
இயற்றியவர் : டைகர் வரதாச்சாரியார்
ப : அன்னமே அரவாபரணனை //
அழைத்துவாவேகமதாய் //
அப : பொன்னம்பலத்தே காளியுடன்//
நடமிடும் சிவகாமி நேசனை //
சரணம் : என்ன சோதனையோ அறியேன் //

## பல்லவி

| /4 | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| பாமா | பா; | பமபம | ,கரிரி | ரிரிமக | ரிரிஸஸ | ஸ்நித்ரி | ,ஸரிம // |
| அன்ன | மே | அ....ர | ..... | வா... | ப.... | ர.....ண | ....னை // |
| பமபம | கரித | தபமப | ஸ்நிதத | ரிஸ்ரிஸ் | ,நிதத | பாமகரி | ஸரிம // |
| அ.... | ழைத்து | ..... | வா... | வே. . க..... | | மதா | .....ய் // |

## அனுபல்லவி

| ஸ்நிதத | பபமப | தஸ்தப | மகரிரி | ஸரிமக | ரிபமப | ஸ்நிதரி | ரீ ; // |
|---|---|---|---|---|---|---|---|
| பொன்னம் | ப.... | ல த் .. | தே..... | கா ... | ளி... | யு.. | டன் // |
| ஸ்நிதரி | ரிஸ்மக் | ரிஸ்ரி | ஸ்நிதத | தரிரித | ஸ்ஸ்மப | தஸ்தப | மகரிம// |
| ந.. ட | ...மி.. | டும்... | சி.வ. | கா... | .. மி.. | நே.... | சனை// |

## முத்தாயிஸ்வரம்

| பாதம | பதரிம | பததப | மகரிரி | ஸாரிஸ | நிதஸரி | மபமக | ரிஸநித// |
|---|---|---|---|---|---|---|---|
| ரிஸரிரி | ,மகரி | ரிபாம | தபமப | தபமப | மகரிரி | மகரிம | பா.; // |
| பாதப | மகரிஸ | நிதரிஸ | ரிபமப | தாபரி | மபதத | ரிஸ்நித | ரிஸ்ரீ // |
| ஸ்நிதரி | ,மபத | ஸ்ரீம் | க்ரிஸ்ரி | தரிதஸ் | ,.பதம | பாமக | ரிஸரிம // |

## சரணம்

| | தா ,ரி | ஸ்நிதத | பபமக | ரிஸரிம | பா,ம | பதமா | மகரிஸ | ரீமப // |
|---|---|---|---|---|---|---|---|---|
| | என்ன | .... சோ | ....த | னை... | யோ.அ | ..... | றி..... | யேன் // |
| 1. | தா; | ; பா | ;மா | ;கா | ரீ; | ஸா ; | ;ரீ | ,மாப // |
| 2. | தாஸ்நி | தபம | பததப | மகரிஸ | தாஸநி | தரிரிஸ | மகரிஸ | ரிபமப // |
| 3. | தஸ்தப | மபதப | மபமக | ரிஸநித | தஸதரி | ஸரிமக | ரிஸரிம | பதமப // |
| | தபமப | தஸ்தரி | ஸ்ரிதஸ் | ரிம்கரி | ஸ்நித்ரி | ஸ்ாதத | பாமக | ரிபமப // |
| 4. | ஸ்ா,நி | தரிஸ்நி | ததபப | மகரிம | பா,ஸ் | தாரிஸ் | ,ஸ்நித | பமபத // |
| | ரிஸ்நித | ,பமப | தரிஸ்நி | ததபப | மகரிரி | ,ததப | மகரிஸ | ரிமபத // |
| | ஸ்தபம | ,கரிரி | பமபத | ,தபத | ஸ்நித்ரி | ,ரிஸ்ரீ | ஸ்நிதரி | ரீ; // |
| | ர்ரீ | ஸ்ரிம்க் | ரிஸ்ரி | ஸ்நிதரி | ஸ்ாஸ்ஸ் | தபபா | பமகரி | ஸரிமப // |

## தான வர்ணம்

வனஜாஷி வர்ணத்தைப் பயிலத் தொடங்குமுன், இதன் இராகம், தாளம், இயற்றியவர் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். பின் வர்ணம் அமைந்த கல்யாணி இராக ஆரோஹண, அவரோஹணத்தை மூன்று காலமும் பாடிப்பழகுதல் வேண்டும். இதன் பின் ஸ்வரமாயும் சாகித்தியமாகவும் வர்ணத்தைப் பாடிப் பயிற்சி செய்தல் வேண்டும்.

இராகம் : கல்யாணி
தாளம் : ஆதி
ஆ : ஸ்ரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ } 65வது மேளகர்த்தா ராகம்
ப : வனஜாஷி ரோஹவிரஹ மோர்வனே வாஸ தேவுனி தோடி தேவே//
அ.ப : வினவே நாகபுரமுன வெலயு ஸௌந்தரராஜனி //
ச : நிலுபரானி மோஹமாயே //

## பல்லவி

| | /4 | | | | 0 | | 0 |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ஸ்ரிஸ் | நிதரீஸ் | நிநிதத | பமகம | பதநித | ,ரிஸ்நி | தபமக | மபதநி // |
| வ ன ஜா | .. ஷ ... | ..ரோ.. | ..ஈ..... | வி...ர | ஹ.. | மோ..ர் | வ..னே |
| ஸ்ரிக்ரி | ஸ்நிஸ்ரி | ஸ்நிரிஸ் | நிதநித | நீ ; | ;ஸ்நி | தபமக | மபதநி // |
| வா..... | .....ஸ... | ...தே.... | ...வு.... | னி .. | தோ | டி தே | ..வே... |

## அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ாமக | நிதாக | தபாம | கரிஸநி | ஸரிகம | ;கம | பகாம | நிதநிப // |
| வி... | ன. . . | வே | நா.க | பு... | ர மு, | .ன | .. |
| தநிஸ்ரி | ,ஸ்ரிக் | ஸ்ரிக்ரி | ஸ்நிதநி | தக்ரிஸ் | நிதபநி | தபமக | மபதநி // |
| வெ ல.. | யு .... | ஸௌ | ந்த | ர... | ..ரா | ...ஜ | ....னி |

## முத்தாயிஸ்வரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீநி | ஸ்நிதநி | ,ஸ்நித | பமகரி | ஸரிஸப | ாமதா | பநிதரிஸ்நிதநி // | |
| தக்ரீநி | ,ரிநீ | ஸ்தாநி | பதநிஸ் | க்ரிஸ்ா | நிதபா | மகரிக | மபதநி // |

## சரணம்

**14** **0** **0**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நீ ; | ;ஸ்த | ஸ்நிதப | மகமா | பா ; | ;மப | தநிபத | நிதரிஸ்// |
| நி | லு | ..ப. | ரா. | னி | மோ | ஹ..மா | ..யே// |
| 1. பா ; | மாகா | ரீதா | மாகா | ரீநீ | ஸாரீ | காமா | பாதா // (நிலுப) |
| 2. பாதப, | மகம | பாமக | ,ரிஸநி | ஸாரிநி | ,ஸதநி | ஸாரிக | ,மபத // (நிலுப) |
| 3. நீ; | ;ஸ்ரீ | நிஸ்நித | நிதபம | பா,த | நிதபத | பமபம | கமபத // |
| நிஸ்நிக் | ரிக்ஸ்ரி | நிஸ்ரி | ஸ்ரிநிஸ் | தநீஸ் | நிதபம | கமபத | , நிக்ரி// (நிலுப) |
| 4. ரீ; | ;தக் | ரிஸ்நிப | தநிஸ்ரி | ஸ்ரா; | ;ஸ்நி | தபமக | ,மபத // |
| மாபத | நிபாத | நிஸ்ரீ | ஸ்நிதநி | ஸ்நீத | பமகம | பதபநி | தா ; // |
| தநிஸ்ரி | ரிக்கம் | க்ரிஸ்நி | ஸ்ரிஸ்நி | தஸ்நித | பநிதப | மகாம | ,பாத // (நிலுப) |

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.2 :** அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.2.2 :** தான வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம்.
(அன்னமே - ஆரபி அல்லது வனஜாட்சி - கல்யாணி)

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி, ஹார்மோனியம்
- தான வர்ணம் ஸ்வர சாகித்தியமாக எழுதப்பட்ட அட்டை
- ஆரபி, கல்யாணி இராகங்களின் ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- செயற்பத்திரம் 3.2.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.2.1** :

- எடுத்துக்கொண்ட வர்ணத்தை முழுமையாகப் பாடிக் காட்டியோ ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

- செவிமடுப்பதன் மூலம் வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இனங்காணச் செய்க.

- உத்தராங்கப்பகுதி தொடர்பாகக் கலந்துரையாடலொன்றினை மேற்கொள்க.

- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • எடுத்துக்கொண்ட தானவர்ணம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.<br>• வர்ணத்தில் ஏற்கனவே கற்றுக்கொண்ட பூர்வாங்கப் பகுதியைப்பாடி தொடர்ந்து அதன் உத்தராங்கப் பகுதி யினைப் பாட வேண்டும் என்பதைக் கூறுக.<br>• உத்தராங்கப்பகுதியானது சரணம், சரணஸ்வரங்களைக் கொண்ட பகுதியாகும்.<br>• எடுத்துக்கொண்ட வர்ணம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோஹணத்தை மாணவர் பாடுவதற்கு இடமளிக்க.<br>• தானவர்ணத்தின் சரணம், சரணஸ்வரங்களை இராக, தாளத்துடன் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.<br>• தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இரண்டாம் காலத்தில் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு நெறிப் படுத்துக. |

- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து இராக, தாளத்துடன் உத்தராங்கப் பகுதியைப் பாடுக.
- மாணவரைக் குழுவாகவும், எழுமாற்றாகவும் தெரிவுசெய்து தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

**(45 நிமிடங்கள்)**

**படி 3.2.2** : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ, தனித்தனியாகவோ செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும்/மாணவரும் தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

**படி 3.2.3** : • தனியாகவோ, குழுவாகவோ உத்தராங்கப் பகுதியைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒவ்வொரு மாணவனும் / குழுவும் 1ம், 2ம் காலங்களில் உத்தராங்கப் பகுதியைப் பாட இடமளிக்க.

• ஏனையவர்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

• தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமை பெறச் செய்க.

• பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

- எடுத்துக்கொண்ட வர்ணத்தின் ஏற்கனவே கற்றுக்கொண்ட பூர்வாங்கப்பகுதியைப் பாடி தொடர்ந்து உத்தராங்கப் பகுதியைப் பாடச் செய்க.
- மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் உத்தராங்கப் பகுதியைப் பாடுக.
- மாணவருடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட தானவர்ணத்தை ஸ்வர ஸாகித்தியமாக இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக. (பூர்வாங்கம், உத்தராங்கம்)
- முதலாம் காலத்தில் பாடியபின் மாணவருடன் சேர்ந்து வர்ணத்தை முழுமையாக இரண்டாம் காலத்தில் பாடுக.

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- எடுத்துக்கொண்ட தானவர்ணத்தின் உத்தராங்கப்பகுதியின் அங்கங்களைக் குறிப்பிடுவர்.
- வர்ணத்தின் உத்தராங்கப்பகுதியை இராக, தாளத்துடன் 1ம், 2ம் காலங்களில் பாடுவர்.
- தானவர்ணத்தை முழுமையாக 1ம், 2ம் காலங்களில் இராக, தாளத்துடன் பாடுவர்.
- இசை நிகழ்ச்சிகளில் வர்ணத்தை இனங்காணும் திறனை வெளிப்படுத்துவர்.
- இவ்வுருப்படியை நிகழ்ச்சிகளில்ப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.2

- வகுப்பிலுள்ள சகல மாணவருக்கும் / குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.

- நீர் கற்றுக்கொண்ட தான வர்ணத்தை முழுமையாக ஸ்வர, ஸாகித்தியத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில் இராக, தாளத்துடன் குழுநிலையிலும், தனியாகவும் பாடிப்பயிற்சி செய்க.

- கற்றுக்கொண்ட தாள வர்ணத்தை முழுமையாக ஸ்வர ஸாகித்தியத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில் இராக, தாளத்துடன் பாடுக.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.1 :** நின்னருள் இயம்பலாகுமோ என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி, ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி, பாடல் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**
- நின்னருள் இயம்பலாகுமோ என்ற கீர்த்தனையை ஆசிரியர் பாடியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ பாடலை செவிமடுக்கச் செய்க.

- மாணவர் செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • செவிமடுத்த பாடல் கீர்த்தனை என்பதைக் கூறுக.<br>• நின்னருள் இயம்பலாகுமோ என்ற கீர்த்தனை பந்துவராளி இராகத்திலும் ரூபக தாளத்திலும் அமைந்துள்ளமை பற்றிக் குறிப்பிடுக.<br>• பந்துவராளி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தை பாடி மாணவர் பாடுவதற்கு வழிப்படுத்துக.<br>• கீர்த்தனையைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் பகுதி, பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குக.<br>• தாளத்தோடு கீர்த்தனையைப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்துக.<br>• மாணவரைக் குழுவாகவோ, எழுமாற்றாகவோ தெரிந்து தனித்தனியாகவோ பாடச் செய்க. |

**(45 நிமிடங்கள்)**

**படி 3.3.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுவாகப் பிரித்தோ, தனியாகவோ செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

- சகல மாணவரும்/குழுக்களும் கீர்த்தனையைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

படி 3.3.3 : • தனியாகவோ, குழுவாகவோ பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• தனியாகவோ, குழுவாகவோ பாடும்போது ஏனையமாணவர் களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • நின்னருள் இயம்பலாகுமோ என்ற கீர்த்தனைகள் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் கூறி கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக. |

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் கூறுவர்.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவர்.
- பாடசாலை நிகழ்ச்சிகளில் கீர்த்தனையைப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.1

- ஒவ்வொருவருக்கும் / குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.

| |
|---|
| • நின்னருள் இயம்பலாகுமோ என்ற கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.<br><br>• குறித்த கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக. |

## மத்திமகாலக்கீர்த்தனை

நின்னருள் இயம்பலாகுமோ என்ற இக்கீர்த்தனையைப் பயிலும் முன்பாக, இக்கீர்த்தனை அமைந்த இராகம், தாளம், இயற்றியவர் ஸ்வரஸ்தானங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பின் பந்துவராளி இராக ஆரோஹண, அவரோஹணத்தை மூன்று காலமும் பாடிப் பயிற்சி செய்தல் வேண்டும். இதன் பின்பாக இக்கீர்த்தனையை ஸ்வரசாகித்திய ரூபமாகப் பாடிப் பயிலுதல் வேண்டும். சாகித்திய அட்சரங்களைத் தெளிவாகப் பாடவேண்டும்.

இராகம் : பந்துவராளி
தாளம் : ரூபகம்
ஆ : ஸரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ } 51ஆவது மேளராகம்
இயற்றியவர் : பாபநாசம்சிவன்
ஸ்வரஸ்தானங்கள் : ஸ, ப தவிர இதில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சுத்த ரிஷபம். அந்தர காந்தாரம், பிரதிமத்திமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம் என்பவையாகும்.

### பல்லவி

1. ;ஸ்ாஸ்ாஸ்நிதாபம //கா; பமகா ;ரீ// ஸா ; ; ; ஸாநீ// தநிஸ்ரி ஸ்நிதஸ் - நிதபம //
நின்அருள் இ... ..... யம்ப.லாகு// மோ.. ஓ // தே.. வாதே .....வா

2. ;பதஸ்ரிஸ்ரி ; ; // கமபதபமகா ;ரீ// ஸா ; ; ; க்ரிஸ்நி //தநிஸ்ரி ஸ்நிதஸ்- நிதபம//
நின்... அருள் இயம்ப லா கு// மோ ஓ..... // தே... வ... தே.... வா

### அனுபல்லவி

; பகமா பா; தா // ரிஸ்ரிதா நிஸ்ா ; ஸ்ா //
பொன்னி நாதன் // பூவில் வந்தோ ... ன் //
; க்க்ாரிஸ்ாஸ்ா ஸ்ா // தநிஸ்ரி ஸ்நிதஸ் நிதபா //
; போற்று .. க ம ல // பூங்கழ லோய் ..... //
; ஸ்ாஸ்நிஸ்க்ாரிஸ்ர் // ஸ்ாஸ்நி தாநிஸ்ர ,ஸ்ா //
மன்னு .. மாகம // மறை கள் பு கழ //
; ஸ்நிரீஸ்ர்ஸ்நிதாபம // கமபத நிஸரிஸ நிதபம //
; மாட்டா அழல் // நாட்டமுடையோய்.... //

### சரணங்கள்

1. ; இனனல் கூட்டி இன்பமுட்டி
; இந்த்ரஜால வித்தை காட்டி
; தன்னை நம்பினோரை வீட்டில்
; ஸதானந்த முழுக் காட்டும்

2. அருளில்லாமல் ராமநாசன் துயருறாமல் மகிழ்வதேது
; அருளில்லாமல் புகழ்சிறந்து அகிலமீது வாழ்வ தேது.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.2 :** பண்ணும் பதமேழும் என்னும் தேவாரத்தை பண்முறைக்கேற்ப பாடுவோம்.

**நேரம்** **:** 40 நிமிடம் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி, ஹார்மோனியம்
- தேவாரம் எழுதப்பட்ட அட்டை
- திருஞானசம்பந்தரின் படம்
- செயற்பத்திரம் 3.3.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**
- பண்ணும் பதமேழும் என்னும் தேவாரத்தினை முழுமையாகப் பாடிக்காட்டியோ ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- மாணவர் செவிமடுத்த தேவாரத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

  - பண்ணும் பதமேழும் என்னும் தேவாரத்தின் பண், பண்ணிற்கு வழங்கும இராகம், தாளம், அருளியவர், பாடப்பட்ட தலம் என்பவற்றைக் கூறுக.
  - தேவாரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி பகுதி பகுதியாகப்பாடி மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு வழிப் படுத்துக.
  - தேவாரத்தினைத் தாளத்தோடு பாடி மாணவர தொடர்ந்து பாட நெறிப்படுத்துக.
  - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பண்முறைக்கேற்ப தாளத்தோடு பாடுக.
  - மாணவர்களைக் குழுவாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடச் செய்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.3.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ, தனித்தனியாகவோ செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும்/மாணவரும் தேவாரத்தினை சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 3.3.3 : • மாணவர் தனியாகவோ, குழுவாகவோ தேவாரத்தினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• தனியாகவோ, குழுவாகவோ பாடும்போது ஏனைய மாணவர் களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க. தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமை பெறச் செய்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- பண்ணும் பதமேழும் என்னும் தேவாரத்தின் பண் - நட்டபாடை, இராகம் - கம்பீரநாட்டை, தாளம் - ரூபகம், தலம் - திருவீழிமிலை, பா: அருளியவர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.
- தேவாரத்தை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பண் முறைக்கேற்ப தாளத்தோடு பாடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- தேவாரத்தின் பண், பண்ணிற்குரிய இராகம், தாளம், அருளியவர், தலம் என்பவற்றைக் கூறுவர்.
- தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்தோடு பாடுவர்.
- நிகழ்ச்சிகளில் தேவாரத்தினை பண்ணோடு பாடுவர்.
- சமய நிகழ்ச்சிகளில் தேவாரத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 3.3.2.2

- வகுப்பிலுள்ள சகல மாணவருக்கும் / குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.

- பண்ணும் பதமேழும் என்னும் தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்தோடு குழுநிலையிலும், தனியாகவும், பாடிப் பயிற்சி செய்க.
- குறித்த தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்தோடு பாடுக.

# தேவாரம்

''பண்ணும் பதம் ஏழும்'' என்ற இத்தேவாரத்தைப் பயிலத் தொடங்கு முன்பாக இத்தேவாரம் அமைந்த பண், இராகம், தாளம் அருளியவர் பாடப்பட்ட தலம் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். பின்தேவாரத்தைப் பண்முறைக்கு அமையப் பொருள் விளங்கும் வண்ணம் சொற்தெளிவுடன் குறித்த இராக தாளத்துடன் பாடிப்பழகுதல் வேண்டும்.

பண் : நட்டபாடை
இராகம்: கம்பீரநாட்டை
தலம் : திருவீழிம்மிழலை

தாளம் : ரூபகம்
அருளியவர் : திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

1. கமபா ; மா பா; // கமபா ; மா பா ;//
பண்ணும் ப தம் ஏழும் ப ல
கமபம கமகா ஸா ; // கமபம பா; ; ; //
வோ.சை .த்த மிழ் அ.வை. யும்

2. கமபா ; மா பா ; // கமபா ;மா பா ; //
பண்ணும் ப தம் // ஏ.ழும் ப ல //
கமபம கமகா ஸா ; // கமபநி ஸ்நிபம கமகஸ //
வோ.சை .த் த மிழ் // அ.வை. யும் ..... .....

3. கமபா ; மா பா; // ஸ்நிபா ; மா பா ; //
பண்ணும் ப தம் ஏ.ழும் ப ல
கமபம கமகா ஸா ; // கமபநி ஸ்நிபம கமகஸ //
வோ.சை .த்த மிழ் // அ.வை. யும் ..... ..... .....

கமபநி பாநீ ஸ்ா; // ஸ்நிக்ஸ் நீ ; ; ; //
உண்நின் ற தோர் சு.வை. யும்
கமபநி பாநீ ஸ்ா ; // ஸ்நிக்ஸ் நீ; ஸ்ாஸ்ா //
உண்நின ற தோர் // சு.வை. யும் உறு //
நிஸ்நிப ;பா மா ; // கமபநி ஸ்நிபம கமகஸ //
தா.ளத் தொ லி ப.ல. வும்..... ..... //

இதைப்போன்று பின்வரும் அடிகளையும் பாடவும்.

மண்ணும் புனல் உயிரும் வரு
காற்றுஞ் சுடர் மூன்றும்
விண்ணும் முழு தானானிடம்
வீழிம் மிழலையே.

**பொருள் :** **திருவீழிமிழலை**

பண்ணாகவும், ஏழு சுரங்களாகவும் பலவகை ஓசை வேறுபாடுடைய தமிழ்ப் பாடல்களாகவும் அப்பாடல்களால் உள்ளத்து உண்டாகும் சுவையாகவும், பலவகை தாள ஒலிகளாகவும், ஐம்பூதங்களும் இரு சுடர்களும் ஆன்மாவுமாகிய அட்டமூர்த்திகளாகவும், எல்லாமாகவும் எங்கும் நிறைந்துள்ள இறைவன் திருவீழிமிழலையை விரும்பி உறைகின்றான்.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு 3.3.3 :** அபகாரநிந்தைபட்டுழலாதே என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 40 நிமிடம் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி, ஹார்மோனியம்
- தேவாரம் எழுதப்பட்ட அட்டை
- திருஞானசம்பந்தரின் படம்
- செயற்பத்திரம் 3.3.2.3
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** :
- அபகாரநிநதைபட்டுழலாதே என்னும் திருப்புகழைப் பாடிக் காட்டியோ ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- மாணவர் செவிமடுத்த திருப்புகழில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

| |
|---|
| • அபகாரநிந்தைபட்டுழலாதே என்னும் திருப்புகழின் இராகம், தாளம், அருளியவர், தலம், சந்தரம் என்பவற்றைக் கூறுக.<br>• திருப்புகழ் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி திருப்புகழைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்துக.<br>• திருப்புகழைப் பகுதி பகுதியாகத் தாளத்தோடு பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.<br>• சொற்தெளிவுடன் பாட வழிப்படுத்துக.<br>• ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து திருப்புகழை இராக, தாளத்தோடு பாடுக.<br>• மாணவர்களைக் குழுவாகவும், தனியாகவும் எழுமாற்றாகத் தெரிவுசெய்து பாடச் செய்க. |

(15 நிமிடங்கள்)

**படி 3.3.2** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ, தனியாகவோ செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும்/மாணவரும் திருப்புகழைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 3.3.3 : • மாணவர் தனியாகவோ, குழுவாகவோ திருப்புகழைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• தனியாகவோ, குழுவாகவோ பாடும்போது ஏனைய மாணவர் களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க. தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமைப்படுத்துக.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • திருப்புகழின் இராகம் - சக்கரவாகம், தாளம் கண்டஜம்பை, தலம் - திரு ஆவிநன்குடி, அருளியவர் - அருணகிரிநாதர், சந்தம் - தனதான தனதான தன தான<br>• திருப்புகழை ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து இராக, தாளத்தோடு பாடுக.<br>• பொருள் விளங்க சொற் தெளிவுடன் பாட மாணவரை நெறிப்படுத்துக. |

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- திருப்புகழின் இராகம், தாளம், அருளியவர், தலம் என்பவற்றைக் கூறுவர்.
- திருப்புகழ் அமைந்துள்ள சந்தத்தைப் பாடுவர்.
- திருப்புகழை இராக, தாளத்தோடு பாடுவர்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் திருப்புழைப்பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.3

- வகுப்பிலுள்ள சகல மாணவருக்கும் / குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.

| |
|---|
| • அபகார நிந்தைபட்டுழலாதே என்னும் திருப்புகழை இராக, தாளத் தோடு குழுநிலையிலும் தனியாகவும் பாடிப் பயிற்சி செய்க.<br><br>• குறித்த திருப்புகழை இராக, தாளத்தோடு பாடுக. |

# திருப்புகழ்

''அபகாரநிந்தைப்பட்டுழலாதே'' ... என்ற இத்திருப்புகழைப் பயிலத் தொடங்கும் முன்பாக இத்திருப்புகழ் அமைந்த இராகம், தாளம், பாடியவர், ஆரோகண, அவரோகணம் ஸ்வரஸ்தானங்கள் பற்றித் தெரிந்துகொள்ளல் அவசியமாகும். பின் சந்த அமைப்பைக் கருத்திற்கொண்டு திருப்புகழைப் பயில வேண்டும். பயிலுகையில் பொருள் விளங்கச் சொற் தெளிவுடன் குறித்த இராக தாளத்துடன் திருப்புகழைப் பாடிப் பழகுதல் வேண்டும்.

இராகம்: சக்கரவாகம்

ஆ : ஸரிகமபதநிஸ்
அவ : ஸ்நிதபமகரிஸ் } 16வது மேளம்

தாளம் : கண்டஜம்பை
பாடியவர் : அருணகிரிநாதர்
ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்.

தனதான தனதான தனதான

அபகார நிந்தைப் பட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருட் பெறுவேனோ
இபமாமுகன் தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.1 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.1.1 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் க்ரஹம், பூர்வாங்கம், உத்தராங்கம், அப்பியாச கானம், சபா கானம் என்பன பற்றிய விளக்கத்தைப் பெறுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- பாட விளக்க அட்டைகள்
- செயற்பத்திரம் 4.1.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.1.1** :
- க்ரஹம் - க்ரஹகத்தின் வகைகள் எழுதப்பட்ட விளக்க அட்டையைக் காட்சிப்படுத்தி அவற்றைச் செயன்முறையாகப் பாடிக் காட்டுக.
- பூர்வாங்கம், உத்தராங்கம், அப்பியாசகானம், சபாகானம் பற்றிய விளக்க அட்டையைக் காட்சிப்படுத்துக.
- மாணவர் இனங்கண்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • க்ரஹத்தின் வரைவிலக்கணம், உதாரணம்<br>• க்ரஹம் பற்றிய செயன்முறை விளக்கமும் வகைகளும்<br>• பூர்வாங்கம், உத்தராங்கம் பற்றிய விளக்கம்<br>• அப்பியாசகானம், சபாகானம் பற்றிய விளக்கமும் உதாரணமும் |

**(10 நிமிடங்கள்)**

**படி 4.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப 3 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக.
- அறிவுறுத்தலுக்கேற்ப மாணவர் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 4.1.3** : • ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- தாளத்தில் பாட்டு ஆரம்பிக்கும் இடம் க்ரஹம் எனப்படும். இதனை எடுப்பு என்றும் அழைப்பர்.
- க்ரஹம் மூன்று வகைப்படும் அவை;
  - சம க்ரஹம் (சம எடுப்பு)
  - அனாகத க்ரஹம் (அனாகத எடுப்பு)
  - அதீத க்ரஹம் (அதீத எடுப்பு)
- அனாகத எடுப்பு, அதீத எடுப்பு ஆகிய இரண்டு எடுப்புகளும் விசம எடுப்புகளாகும்.
- தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல் சம எடுப்பு எனப்படும்.
  ***உதாரணம்:*** மயில்வாகனா - மோகனம் - ஆதி
- தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பித்தல் அனாகத எடுப்பு எனப்படும்.
  ***உதாரணம்:***
  நின்னருள் இயம்பலாகுமோ - பந்துவராளி - ரூபகம்
- தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பித்தல் அதாவது முன்னைய ஆவர்த்தனத்தின் கடைசியில் பாட்டு ஆரம்பித்தல் அதீத எடுப்பு எனப்படும்.
  ***உதாரணம்:*** சிவகாமசுந்தரி - முகாரி - ஆதி
- பூர்வாங்கம் என்றால் முற்பகுதி என்று பொருள்படும். முன்னர்பாகம் என்றும் அழைப்பர்.
  - ஸரிகமபதநிஸ் என்னும் அஷ்டகத்தில் ஸரிகம என்னும் முற்பகுதி பூர்வாங்கம் எனப்படும்.
  - ஒரு வர்ணத்தின் பல்லவி, அனுப்பல்லவி, முக்தாயிஸ்வரம் என்னும் அங்கங்கள் சேர்ந்த பகுதி பூர்வாங்கம் எனப்படும்.
  - 72 மேளகர்த்தா இராகச் சக்கரத்தில் 1 - 6 வரையிலான சக்கரங்கள் பூர்வாங்கம் எனப்படும்.
  - இந்த ஆறு சக்கரங்களிலுமுள்ள 1 - 36 வரையிலான இராகங்கள் பூர்வமேளகர்த்தாக்கள் என அழைக்கப்படும்.
- உத்தராங்கம் என்பது பிற்பகுதியைக் குறிக்கும். இதனை பின்னர்பாகம் என்றும் அழைப்பர்.
  - ஸரிகம்பதநிஸ் என்னும் அஷ்டகத்தில் பதநிஸ் என்னும் பிற்பகுதி உத்தராங்கம் எனப்படும்.

- ஒரு வர்ணத்தின் சரணத்தையும், அதனை அடுத்துள்ள எத்துக்கடைஸ்வரங்களையும் உத்தராங்கம் என அழைப்பர்.
- 72 மேளகர்த்தா சக்கரத்தில் 7 - 12 வரையிலான சக்கரங்கள் உத்தராங்கம் என்றும் 37 - 72 வரையிலான இராகங்கள் உத்தரமேளகர்த்த சதாக்கள் என்றும் அழைக்கப்படும்.
- ஹிந்துஸ்தானி இசையில் பூர்வாங்கம் பூர்வாங்க் என்றும் உத்தராங்கம் உத்தராங்க் என்றும் அழைக்கப்படும்.
- மேலைத்தேய இசையில் இவ்வகைகள் கிடையா.
- சங்கீதத்தில் ஆரம்ப அப்பியாசத்திற்காக ஏற்பட்ட ஸ்வராவளி வரிசைகள், ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள், வர்ணங்கள் போன்ற உருப்படிகள் அப்பியாசகான வரிசைகள் எனப்படும்.
- இசைக்கச்சேரிகளிற் பாடுவதற்காக ஏற்பட்ட உருப்படிகள் சபாகானத்தினுள் அடங்கும்.

  *உதாரணம்:*

  வர்ணம், கிருதி, கீர்த்தனை, பதம், இராகமாலிகை, தில்லானா, ஜாவளி போன்றவையாகும்.
- இந்த உருப்படிகளில் வர்ணமானது அப்பியாசகானத்தினுள்ளும், சபாகானத்தினுள்ளும் அடங்கும். கச்சேரிகளைகட்டுவதற்காக சபாகானத்தின் ஆரம்பத்தில் பாடப்படுகின்றது.
- அப்பியாச வரிசைகளை நன்கு பயிற்சி செய்வதன் மூலம் சபாகான உருப்படிகளை மெருகுடனும் கமகத்துடனும் பாடமுடியும்.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- க்ரஹம் என்றால் என்ன என்பதையும் அதன் வகைகளையும் உதாரணத்துடன் விளக்குவர்.
- தாம் கற்ற உருப்படிகளில் இருந்து க்ரஹத்தின் வகைகளைத் தாளத்துடன் பாடிக் காட்டுவர்.
- அப்பியாசகான உருப்படி மூலம் தமது குரல் பயிற்சியையும், விரற்பயிற்சியையும் மேம்படுத்தலாம் என்பதை வெளிப்படுத்துவர்.
- பூர்வாங்கம், உத்தராங்கம் என்ற எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துவர்.
- இசைக்கச்சேரிகளில் சபாகான உருப்படிகளை இனங்காணபர்.

## செயற்பத்திரம் 4.1.2.1

- இணைப்பினை சகல மாணவருக்கும் வழங்குக. வெவ்வேறு வகையான செயற்பத்திரங்களை மூன்று குழுவுக்கும் வழங்குக.

### குழு 1

- க்ரஹம் என்றால் என்ன?
- சம எடுப்பில் அமைந்த பாடல் ஒன்றின் முதல் வரியைத் தாளத்துடன் பாடிக்காட்டுக?
- ''பூர்வாங்கம் என்றால் முற்பகுதி என்று பொருள்படும்.'' இக்கூற்றினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- கீழே தரப்பட்டுள்ள உருப்படிகளுள் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படிகளை வேறுபடுத்துக?
  கீதம், க்ருதி, ஜதீஸ்வரம், ஸ்வராவளி வரிசைகள், இராகமாலிகை, அலங்காரம், பதம், வர்ணம்.

### குழு 2

- க்ரஹத்தின் மறுபெயர் என்ன?
- அநாகத எடுப்பில் அமைந்த பாடலொன்றின் முதல் வரியை தாளத்துடன் பாடிக்காட்டுக?
- ''உத்தராங்கம் என்றால் பிற்பகுதி என்று பொருள்படும்.'' இக்கூற்றினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- கீழே தரப்பட்டுள்ள உருப்படிகளுள் சபாகானத்தைச் சேர்ந்த உருப்படிகளை வேறுபடுத்துக?
  கீதம், இராகமாலிகை, ஸ்வரஜதி, ஜதீஸ்வரம், பதம், க்ருதி, கீர்த்தனை, தில்லானா

### குழு 3

- க்ரஹம் எத்தனை வகைப்படும்?
- அதீத எடுப்பை செய்கைமுறையில் (தாளம்) போட்டுக்காட்டுக?
- ''சபாகானத்தைப்பாடுவதற்கு அப்பியாசகானம் இன்றியமையாதது.'' இக்கூற்றினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- ஒரு வர்ணத்தின் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் ஆகிய அங்கங்கள் சேர்ந்த பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?

## க்ரஹம்

தாளத்தில் பாட்டு எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றதோ அந்த இடத்திற்கு க்ரஹம் அல்லது எடுப்பு என்று பெயர் க்ரஹம் மூன்று வகைப்படும். அவையாவன:

1. சம எடுப்பு (சம் க்ரஹம்)
2. அனாகத எடுப்பு (அனாகத க்ரஹம்)
3. அதீத எடுப்பு (அதீத க்ரஹம்)

இதில் அனாகத எடுப்பு அதீத எடுப்பு ஆகிய இரண்டும் விஷம் எடுப்புகளாகும்.

**1. சம எடுப்பு:**

தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல் சம எடுப்பு என்பபடும்.

**உதாரணம்:** (1) மயில்வாகனா - மோகனம் - ஆதி

(2) ஆடுங்கலாபமயில் - கல்யாணி - ஆதி




**2. அனாகத எடுப்பு:**

தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பத்தில் அனாகத எடுப்பு எனப்படும்.

**உதாரணம்:** (1) நின்னருள் இயம்பலாகுமோ - பந்துவராளி - ரூபகம்

(2) உன்னையல்லால் - ஸிம்ஹேந்திரமத்திமம் - ஆதி



3. **அதீத எடுப்பு:**

தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பித்தல் அதாவது முன்னைய ஆவர்த்தனத்தின் இறுதியில் பாட்டு ஆரம்பத்தில் அதீத எடுப்பு என்பபடும்.

**உதாரணம்:** சிவகாமசுந்தரி - முகாரி - ஆதி




மிக அபூர்வமாக இவ் எடுப்பு கையாளப்படுகின்றது.

ஹிந்துஸ்தானி இசையில் க்ரஹ வேறுபாடு கிடையாது. எல்லா உருப்படிகளும் சம க்ரஹத்திலேயே ஆரம்பிக்கும்.

மேலைத்தேய இசையில் சமம், அதீதம், அனாகதம் முறையே On the beat, Before the beat, After the beat என அழைக்கப்படும்.

## பூர்வாங்கம்

பூர்வாங்கம் என்பது முற்பகுதி என்று பொருள்படும். இது முன்னர் பாகம் என்றும் அழைக்கப்படும்.

(1) ஸரிகமபதநிஸ் என்னும் அஷ்டகத்தில் ஸரிகம என்னும் முற்பகுதி பூர்வாங்கம் என அழைக்கப்படும்.
(2) வர்ணத்தில் முற்பகுதியாகிய பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் என்னும் அங்கங்கள் சேர்ந்த பகுதி பூர்வாங்கம் எனப்படும்.
(3) 72 மேளகர்த்தா இராகச் சக்கரத்தில் முதலாவது சக்கரத்தில் இருந்து ஆறாவது சக்கரம் வரை பூர்வாங்கம் என்றும் இந்த ஆறு சக்கரங்களிலும் உள்ள 36 இராகங்கள் பூர்வமேளகர்த்தாக்கள் என்றும் அழைக்கப்படும். (1 - 36 வரை)

## உத்தராங்கம்

உத்தராங்கம் என்பது பிற்பகுதி என்று பொருள்படும். இது பின்னர் பாகம் என்றும் அழைக்கப்படும்.

(1) ஸரிகமபதநிஸ் என்னும் அஷ்டகத்தில் பதநிஸ் என்னும் பகுதி உத்தராங்கம் என அழைக்கப்படும்.
(2) உத்தராங்கம் என்பது வர்ணத்தின் சரணத்தையும் அதனை அடுத்துள்ள எத்துக்கடை ஸ்வரங்களையும் குறிக்கும்.
(3) 72 மேளகர்த்தா இராகச் சக்கரத்தில் ஏழாவது சக்கரத்தில் இருந்து பன்னிரண்டாவது சக்கரம் வரை உத்தராங்கம் என்றும் இந்த ஆறு சக்கரங்களிலும் உள்ள 36 இராகங்கள் உத்தரமேளகர்த்தாக்கள் என்றும் அழைக்கப்படும். (37ஆவது இராகத்தில் இருந்து 72 ஆவது இராகம் வரை)

## அப்பியாசகானம்

சங்கீதத்தில் ஆரம்ப அப்பியாசத்திற்காக ஏற்பட்ட ஸ்வராவளி வரிசைகள், ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள், வர்ணங்கள் போன்ற உருப்படி வகைகள் யாவும் அப்பியாசகானத்துள் அடங்கும். அப்பியாச வரிசைகளை நன்கு பயிற்சி செய்வதன் மூலம் சபாகான உருப்படிகளான கீர்த்தனை, க்ருதி, பதம், இராகமாலிகை, ஜாவளி, தில்லானா போன்றவற்றை மெருகுடனும் கமகத்துடனும் பாடமுடியும்.

## சபாகானம்

இசைக்கச்சேரிகளிற் பாடுவதற்காக ஏற்பட்ட உருப்படிகள் சபாகானத்துள் அடங்கும். அவையாவன: வர்ணம், க்ருதி, கீர்த்தனை, பதம், இராகமாலிகை, தில்லானா, ஜாவளி போன்றவையாகும்.

அப்பியாச வரிசைகளை நன்கு பயிற்சிசெய்தால் சபாகான உருப்படிகளை அழகுடன் மெருகுபடுத்திப் பாட முடியும்.

**குறிப்பு:** வர்ணம் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படியாயினும் கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடக் கச்சேரி சீக்கிரம் களைகட்டுவதனால் இவ்வுருப்படி சபாகானத்தைச் சேர்ந்த உருப்படியாகவும் கருதப்படுகிறது.

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.1.2 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் 12 ஸ்வரஸ் தானங்கள், 16 ஸ்வரப் பெயர்கள் என்பன பற்றிய விளக்கத்தைப் பெறுவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- 12 ஸ்வரஸ்தானங்களும் 16 ஸ்வரப் பெயர்களும் எழுதிய அட்டவணை
- ஹார்மோனியம் அல்லது வீணை, சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.1.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.1.1** **:**
- அட்டவணையைக் காட்சிப்படுத்துக.
- வீணை அல்லது ஹார்மோனியத்தில் ஸ்வரஸ்தானங்களை வாசித்துக்காட்டியும், பாடிக்காட்டியும் மாணவர் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்தவற்றை மாணவர் இனங்காண வழிப்படுத்துக.
- இனங்கண்ட ஒலி வேறுபாடு பற்றிக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • ஏற்கனவே கற்ற ப்ரக்ருதி, விக்ருதி ஸ்வரங்கள்<br>• கோமள தீவிர பேதங்கள் மீட்டல்<br>• இவற்றினால் ஏற்படும் 12 ஸ்தானங்களும் ஒலி வேறுபாடுகளும்<br>• அதே ஸ்வர இடைவெளிகளில் இடம்பெறும் 16 ஸ்வரப் பெயர்கள் |

(10 நிமிடங்கள்)

**படி 4.1.2** **:**
- வகுப்பில் இருக்கும் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பையும் செயற் பத்திரத்தையும் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக.
- அறிவுறுத்தலுக்கேற்ப மாணவர் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.1.3 : • ஒவ்வொரு குழுவுக்கும் தத்தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணமும், விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாட லொன்றை மேற்கொள்க.

- சப்தஸ்வரங்களில் பேதமடையாதவை பிரக்ருதி ஸ்வரங்கள் என்றும், பேதமடைவன விக்ருதிஸ்வரங்கள் என்றும் அழைக்கப்படும்.
- ஸ, ப இரண்டும் பேதமற்ற ஸ்வரங்கள்
  ரி க ம த நி ஐந்தும் பேதமடையும் ஸ்வரங்கள்
- விக்ருதி ஸ்வரங்களான ரி, க, ம, த, நி ஐந்தும் கோமளம், தீவிரம் என இவ்விரண்டாக பேதமடையும்.
- எனவே $5 \times 2 = 10 + 2 = 12$ ஸ்வரஸ்தானங்கள் உண்டாகும்.
- இவை பண்டைய தமிழிசையில் பன்னிரு வீடு அல்லது பன்னிரு நிலம் எனப்பட்டன.
- ஒரு ஸ்தாயியில் இந்த 12 ஸ்வரஸ்தானங்களுக்கான 12 இடைவெளிகள் உள.
- இந்த இடைவெளிகளில் மேலும் 4 ஸ்வரங்கள் ஒலிக்கின்றன.
- இவை விவாதிஸ்வரங்கள் என அழைக்கப்படும் (ஷட்சுருதி ரிஷபம், சுத்தகாந்தாரம், ஷட்சுருதி தைவம், சுத்தநிஷாதம்)
- தமிழிசையில் இவை பகை ஸ்வரங்கள் எனப்படும்.
- எனவே $12 + 4 = 16$ ஸ்வரப் பெயர்கள் உண்டாயின.
- ஸ்தானமற்றஸ்வரங்கள் சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சதுஸ்ருதி தைவதம், கைநிகி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களில் ஒலிப்பதால் இவை இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- விவாதி ஸ்வரங்களும் அவை ஒலிக்கும் ஸ்வரஸ் தானங்களும்

| **விவாதி ஸ்வரம்** | | **ஒலிக்கும் ஸ்வரஸ்தானம்** |
|---|---|---|
| ஷட்சுருதி ரிஷபம் | - | சாதாரண காந்தாரம் |
| சுத்தகாந்தாரம் | - | சதுஸ்ருதி ரிஷபம் |
| ஷட்சுருதிதைவதம் | - | கைசிகி நிஷாதம் |
| சுத்தநிஷாதம் | - | சதுஸ்ருதி தைவதம் |

- 16 ஸ்வரப் பெயர்களும் - ஸ்வர சங்கேதங்களும்

| | |
|---|---|
| 1. ஸட்ஜம் | ஸ |
| 2. சுத்தரிஷபம் | ர |
| 3. சதுஸ்ருதி ரிஷபம் | ரி |
| 4. ஷட்சுருதி ரிஷபம் | ரு |

| | |
|---|---|
| 5. சுத்தகாந்தாரம் | க |
| 6. சாதாரண காந்தாரம் | கி |
| 7. அந்தரகாந்தாரம் | கு |
| 8. சுத்தமத்திமம் | ம |
| 9. பிரதி மத்திமம் | மி |
| 10. பஞ்சமம் | ப |
| 11. சுத்ததைவதம் | த |
| 12. சதுஸ்ருதி தைவதம் | தி |
| 13. ஷட்சுருதி தைவதம் | து |
| 14. சுத்த நிஷாதம் | ந |
| 15. கைசிகி நிஷாதம் | நி |
| 16. காகலி நிஷாதம் | நு |

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 12 ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துவர்.
- ஷட்சுருதி ரிஷபம் எந்த ஸ்வரஸ்தானத்தில் ஒலிக்கிறது என்பதையும் எத்தனையாவது ஸ்வரப் பெயர் என்பதையும் குறிப்பிடுவர்.
- இரட்டைப் பெயருடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்களின் பெயர்களையும், அப்பெயர் உண்டாவதற்கான காரணத்தையும் கூறுவர்.
- தாம் கற்ற ஸ்வரஸ்தானங்களை சங்கேதாட்சரத்தில் குறித்துக்காட்டுவர்.
- இசையில் உள்ள நுட்பமான ஒலிவேறுபாடுகளை இனங்காண்பர்.
- தாம் கேட்கும் ஏனைய இசையில் என்ன ஸ்வரஸ்தானம் ஒலிக்கிறது என இனங்காண முயற்சிக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 4.1.2.2

- சகல மாணவருக்கும் செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

### குழு 1

1) சாதாரண காந்தாரம் எத்தனையாவது ஸ்வரஸ்தானம்?
2) 6வது ஸ்வரஸ்தானம் எது?
3) சுத்தகாந்தரம் எந்த ஸ்தானத்தில் ஒலிக்கிறது?

### குழு 2

1) பிரதி மத்திமம் எத்தனையாவது ஸ்வரஸ்தானம்?
2) 9வது ஸ்வரஸ்தானம் எது?
3) ஷட்சுருதி ரிஷபம் எந்த ஸ்தானத்தில் ஒலிக்கிறது?

### குழு 3

1) சுத்த தைவதம் எத்தனையாவது ஸ்வரஸ்தானம்?
2) 5வது ஸ்வரஸ்தானம் எது?
3) சுத்தநிஷாதம் எந்த ஸ்தானத்தில் ஒலிக்கிறது?

### குழு 4

1) காகலி நிஷாதம் எத்தனையாவது ஸ்வரஸ்தானம்?
2) 4வது ஸ்வரஸ்தானம் எது?
3) ஷட்சுருதி தைவதம் எந்த ஸ்தானத்தில் ஒலிக்கிறது?

## 12 ஸ்வரஸ்தானங்களும் 16 ஸ்வரப் பெயர்களும்

ஸ்வரஸ்தானம் என்பதை இசை ஒலிநிலை என்று குறிப்பிடலாம். சப்த ஸ்வரங்களாகிய ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் ஆகியவற்றுள் விக்ருதி ஸ்வரங்களாகிய ரிஷபம், காந்தாரம், மத்திமம், தைவதம், நிஷாதம் ஆகிய 5 ஸ்வரங்களும் கோமள, தீவர (குறை, நிறை) பேதத்தினால் (5 x 2 = 10) 10 ஸ்வரஸ்தானங்கள் ஆகின்றன. இவை ப்ரக்ருதி ஸ்வரங்களாகிய ஸட்ஜம், பஞ்சமம் ஆகியவற்றுடன் சேர்ந்து (10 + 2 =12) 12 ஸ்வரஸ்தானங்கள் உருவாகின்றன. 12 ஸ்வரஸ்தானங்களைப் பண்டையோர் பன்னிரு வீடு என்றும் பன்னிரு நிலம் என்றும் அழைத்தனர்.

| இலக்கம் | ஸ்வரஸ்தானங்கள் | ஸ்வரக் குறியீடு | பேதம் |
|---|---|---|---|
| 01 | ஸட்ஜம் | ஸ | -- |
| 02 | சுத்தரிஷபம் | ரி 1 | கோமள |
| 03 | சதுஸ்ருதி ரிஷபம் | ரி 2 | தீவிரம் |
| 04 | சாதாரண காந்தாரம் | க 1 | கோமளம் |
| 05 | அந்தர காந்தாரம் | க 2 | தீவிரம் |
| 06 | சுத்த மத்திமம் | ம 1 | கோமளம் |
| 07 | பிரதி மத்திமம் | ம 2 | தீவிரம் |
| 08 | பஞ்சமம் | ப | -- |
| 09 | சுத்த தைவதம் | த 1 | கோமளம் |
| 10 | சதுஸ்ருதி தைவதம் | த 2 | தீவிரம் |
| 11 | கைசிகி நிஷாதம் | நி 1 | கோமளம் |
| 12 | காகலி நிஷாதம் | நி 2 | தீவிரம் |

இவற்றில் சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்கள் இரட்டைப் பெயர்களுடன் விளங்குகின்ற காரணத்தால் 16 ஸ்வரப் பெயர்கள் உருவாகின.

இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்கள்

1. சதுஸ்ருதி ரிஷபம் - சுத்தகாந்தாரம்
2. சாதாரண காந்தாரம் - ஷட்சுருதி ரிஷபம்
3. சதுஸ்ருதி தைவதம் - சுத்தநிஷாதம்
4. கைசிகி நிஷாதம் - ஷட்சுருதிதைவதம்

இந்த இரட்டைப் பெயருக்குக் காரணமாக நான்கு ஸ்வரங்களும் விவாதிஸ்வரங்கள் அல்லது பகைஸ்வரங்கள் எனப்படும்.

# 16 ஸ்வரப் பெயர்களும்

| | பெயர்கள் | சங்கேதாட்சரங்கள் |
|---|---|---|
| 01 | ஸட்ஜம் | ஸ |
| 02 | சுத்தரிஷபம் | ர |
| 03 | சதுஸ்ருதி ரிஷபம் | ரி |
| 04 | ஷட்சுருதி ரிஷபம் | ரு |
| 05 | சுத்த காந்தாரம் | க |
| 06 | சாதாரண காந்தாரம் | கி |
| 07 | அந்தர காந்தாரம் | கு |
| 08 | சுத்த மத்திமம் | ம |
| 09 | பிரதி மத்திமம் | மி |
| 10 | பஞ்சமம் | ப |
| 11 | சுத்த தைவதம் | த |
| 12 | சதுஸ்ருதி தைவதம் | தி |
| 13 | ஷட்சுருதி தைவதம் | து |
| 14 | சுத்த நிஷாதம் | ந |
| 15 | கைசிகி நிஷாதம் | நி |
| 16 | காகலி நிஷாதம் | நு |

இந்த முறை வேங்கடமகியினால் ஏற்படுத்தப்பட்டது. இதனாலேயே 72 மேளகர்த்தா ராகங்கள் உருவாகின.

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** 72 மேளகர்த்தா அமைப்பை விளக்குவார்.

**செயற்பாடு** **4.2.1 :** 72 மேளகர்த்தா அமைப்பின் வரலாறு பற்றிய விளக்கத்தைப் பெறுவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- ஒலிப்பதிவுக்கருவி, மேளராகத்தில் அமைந்த இசைப்பாடல் கொண்ட ஒலிநாடா
- 72 மேளகர்த்தாவின் வரலாற்று விளக்க அட்டை
- செயற்பத்திரம் 4.2.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.2.1** **:**
- மாணவர் அறிந்த இலகுவான மேளராகத்தில் அமைந்த இசைப்பாடல்களைப் பாடி/ஒலிப்பதிவுக் கருவியிற் போட்டுக் காட்டியும், பாடவிளக்க அட்டையைக் காட்டி 72 மேளகர்த்தா இராகங்களின் வரலாற்றை அறிமுகம் செய்க.

- மாணவர் இனங்கண்டு கொண்ட விடயங்கள் தொடர்பாகவும், கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

| |
|---|
| • 72 மேள இராகங்களின் முக்கியத்துவம்<br>• வேங்கட மகியின் 72 மேளகர்த்தா அமைப்பு<br>• துளஜா மகாராஜாவின் 72 மேளகர்த்தா விபரம்<br>• கோவிந்தாச்சாரியாரின் 72 மேளகர்த்தா அட்டவணை விபரம்<br>• அசம்பூர்ண மேளபத்ததி<br>• தற்கால இசைவாணர் பயன்படுத்தும் 72 மேளகர்த்தா அமைப்பு |

(10 நிமிடங்கள்)

**படி 4.2.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

படி 4.2.3 : • குழுக்களின் பேறுகைளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலிற் கீழ்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- 72 மேளகர்த்தாச் சக்கர அமைப்பானது கர்நாடக சங்கீத இலட்சண - இலட்சிய (அறிமுறை - செய்முறை) இரண்டிற்கும் மிக இன்றியமையாததாகும்.
- 72 மேளகர்த்தாச் சக்கர அமைப்பின் மூலம் 72 தாய் இராகங்களின் இலக்கங்களையும் இராகப் பெயர்களையும் ஸ்வரஸ்தானங்களையும் நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம்.
- இத்தகைய புகழ்வாய்ந்த 72 மேளகர்த்தா பற்றிய விளக்கங்களைக் காலத்திற்குக் காலம் இசைவாணர்கள் விளக்கியுள்ளனர்.
- 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேங்கடமகி என்பவர், தமது 'சதுர்தண்டிப் பிரகாசிகை' எனும் நூலில் 72 மேளகர்த்தா அமைப்பு பற்றி முதன் முதலாக விளக்கியுள்ளார்.
  - ஆனால் இவர் எல்லா மேளங்களுக்கும் பெயர் குறிப்பிட வில்லை.
  - இவற்றில் சில மேளங்கள் வர்ஜ இராகமாகவும் சில சம்பூர்ண ஆரோஹண, அவரோஹணமின்றியும் காணப் படுகின்றன.
- 18ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட துளஜா மகாராசாவின் 'சங்கீத சாராம்ருதம்' என்ற சமஸ்கிருத நூலில், 72 மேளகர்த்தா அமைப்புக் குறிப்பிடப்பட்ட போதும், அவற்றிற்கு அவர் பெயர் குறிப்பிடவில்லை.
- 18ஆம் நூற்றாண்டில் தஞ்சை சமஸ்தான வித்வானாக விளங்கிய கோவிந்தாசாரியார், தமது நூலாகிய 'சங்கிரக சூடாமணி'யில் முதன் முதலாகக் கிரம சம்பூர்ண ஆரோஹண, அவரோஹண முறையுடன் கூடிய 72 மேளகர்த்தாக்களைக் குறிக்கும் 'கனகாங்கி - இரத்தினாங்கிப்' பெயர்ப்பட்டியலைக் குறிப்பிட்டுள்ளார்.
- கடபயாதி சங்கையைக்கு ஏற்ற முறையிலும் ஒவ்வொரு மேளத்திற்கும் இலக்கங்களாகக் குறிக்கும் வகையிலும் இவரது இராகப் பெயர்கள் அமைந்துள்ளமை சிறப்பம் சமாகும்.
- இதனைவிட கடபயாதி திட்டத்திற்கு ஏற்புடைய 'கனகாங்கி - பேனத்யுதி' என்ற மற்றுமொரு பெயர்ப்பட்டியலும் பயன்படுத்தப்பட்டது.

- இதுவே 'அசம்பூர்ண மேளபத்ததி' என அழைக்கப் பட்டது.
- இதில் பல ஜன்ய இராகங்கள் காணப்பட்டன.
- முத்துஸ்வாமி தீட்சிதர் இதனையே பின் பற்றினார் என்பர்.

- புகழ் வாய்ந்த தியாகராஜர் முதலாய வாக்கேயகாரரும், பின்வந்த இசைவானர்களும், சம்பூர்ண மேளங்கள் கொண்ட 'கனகாங்கி, இரத்னாங்கி' மேளகர்த்தா அமைப்பையே பயன்படுத்தினர்.
- தொடர்ந்து இன்று வரையும் இவ்வமைப்பே பயன்படுத்தப் படுவது சிறப்பம்சமாகும்.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- 72 மேளகர்த்தா இராகங்களின் முக்கியத்துவத்தை விளக்குவர்.
- 17ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக 72 மேளகர்த்தா பற்றிக் குறிப்பிட்டவரின் பெயரைக் கூறுவர்.
- 18ஆம் நூற்றாண்டில் 72 மேளகர்த்தா பற்றிக் குறிப்பிட்ட இருவரைக் குறிப்பிடுவர்.
- அசம்பூர்ண மேளபத்ததியின் பொருத்தப்பாட்டை எடுத்துக்காட்டுவர்.
- தற்போதைய இசைவாணர் பயன்படுத்தும் 72 மேளகர்த்தா அமைப்பையும், முன்னைய 72 மேளகர்த்தா அமைப்புகளையும் விமர்சனத்துடன் ஆராய்வர்.

## செயற்பத்திரம் 4.2.2.1

- ஒவ்வொரு குழுவுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

- 72 மேளகர்த்தா அமைப்பின் வரலாற்றை சுருக்கமாக விபரிக்க.

# 72 மேளகர்த்தா அமைப்பின் வரலாறு

கர்நாடக இசை வரலாற்றில் காலத்திற்குக் காலம் பல சங்கீத விற்பன்னர்கள் மேள இராகங்களைக் கையாண்டிருந்தபோதும் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேங்கடமகி என்பவரே தமது 'சதுர்தண்டிப் பிரகாசிகை' என்னும் நூலில் முதன் முதலாக 72 மேளகர்த்தாக்களின் அமைப்பைப் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். இவர் தமது காலத்திற் பிரசித்தமாக இருந்த 19 மேளகர்த்தாக்களைக் கல்பித மேளகர்த்தாக்கள் என்றும் மிகுதி 53 மேளங்களில் விரைவில் பிரசித்திக்கு வரக்கூடியவை எனத் தாம் கணித்த இராகங்களைக் கல்ப்யமான மேளகர்த்தாக்கள் என்றும் பிற்காலத்திற் பிரசித்தி பெற இருப்பவை எனத்தாம் கணிப்பிட்ட மேளகர்த்தாக்களைக் கல்பயிஷ்யமான மேளகர்த்தாக்கள் என்றும் வகைப்படுத்தி யுள்ளார். இவ்வாறு வகைப்படுத்தியபோதும் இவர் எல்லா மேளகர்த்தாக்களுக்கும் பெயர்களைக் கொடுக்கவில்லை. மேலும் இவரது பல மேளகர்த்தாக்கள் கிரம சம்பூர்ண ஆரோஹண, அவரோஹணமின்றியும் காணப்படுகின்றன. இவற்றில் சிலவகை வர்ஜ இராகங்களை மேளகர்த்தா இராகங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின் சுமார் 100 வருடங்களுக்குப் பின்னர் தஞ்சை துளஜாமகாராஜா (1729 - 1735) தாம் எழுதிய 'சங்கீத சாராம்ருதம்' என்னும் சமஸ்கிருத இசை நூலில் வேங்கட மகியவர்களின் 72 மேளகர்த்தா அமைப்பு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதிலும் 72 மேளங்களுக்குப் பெயர்கள் கொடுக்கப்படவில்லை.

இதே நூற்றாண்டில் வாழ்ந்த ஜோதிட பண்டிதரும், தஞ்சை சமஸ்தான வித்வானுமாகிய கோவிந்தாசாரியார் என்பவர் 'சங்கிரக சூடாமணி' என்னும் தனது நூலில் 72 மேளகர்த்தா அமைப்பைப் பற்றி விளக்கிக் கூறியுள்ளார். ஒழுங்கான முறையில் ஏழு ஸ்வரங்களையும், ஆரோஹண, அவரோஹணத்திற் கொண்டவையே தாய் இராகங்கள் என்ற வரையறையை இவர் உணர்ந்து முதன் முதலாகக் கிரம சம்பூர்ண ஆரோஹண, அவரோஹண முறையுடன் கூடிய 72 மேள இராகங்களைக் குறிப்பிடும் 'கனகாங்கி - ரத்னாங்கி' 72 மேளகர்த்தாப் பட்டியலை உருவாக்கியுள்ளார். கடபயாதித் திட்டத்திற்கு ஏற்றவாறு 72 மேள இராகங்களின் முன் எழுத்துப் பகுதியானது ஒவ்வொரு மேள இராகத்தினதும், மேள எண்ணைக் குறிப்பிடும் வகையிலும், அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

மேலும் இவை தவிர 'கனகாம்பரி - பேனத்யுதி' என்ற பிறிதோர் மேளகர்த்தாப் பட்டியலும் பிற்காலத்தில் வழங்கில் இருந்ததாக இசை ஆய்வாளர் கூறியுள்ளனர். இப்பட்டியலும் கடபயாதி திட்டத்திற்கு ஏற்புடையதாக விளங்கியது. இதில் தற்காலத்திற் பிரசித்தி வாய்ந்த பல ஜன்யராகங்கள், மேள இராகங்களைக் குறிப்பிடப்பட்டு

உள்ளன. எனினும் ஔடவ - ஷாடவ பேதங்கள் கொண்ட இராகங்கள் மேள ராகங்கள் அல்ல என்பதால் 72 மேளகர்த்தா எனும் பொருத்தப்பாட்டுடன் இவை திகழவில்லை எனலாம். இவ் அமைப்பே 'அசம்பூர்ண மேளபத்ததி' என் அழைக்கப்பட்டது. 'கனகாம்பரி - பேனத்யுதி' எனும் இம்மேளப் பெயர்களை முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கர்நாடக இசையுலகில் நிகரில்லாச் சிறப்பு வாய்ந்த நாதயோகியான தியாகராஜரும், அவருக்குப் பின் வந்த இசைவாணர்களும் 'கனகாங்கி - ரத்னாங்கி' மேளகர்த்தாப் பட்டியலையே போற்றிப் பின்பற்றியுள்ளனர். தற்காலம் வரை இச் சிறப்பான 72 மேளகர்த்தாப் பட்டியலே கர்நாடக இசை உலகின் மேலான இசை நுட்பங்களை விளக்கும் பெறுமதி வாய்ந்த அமைப்பாக யாவராலும் கையாளப்பட்டு வருகின்றது.

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.2 :** 72 மேளகர்த்தா அமைப்பை விளக்குவார்.

**செயற்பாடு** **4.2.2 :** 72 மேளகர்த்தா அமைப்பின் விளக்கத்தைப் பெறுவோம்.

**நேரம்** **:** 02 மணி, 40 நிமிடங்கள் (04 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- 72 மேளகர்த்தா அட்டவணை, ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி, சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.2.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.2.1** **:**
- மாணவர் ஏற்கனவே கற்ற 72 மேளகர்த்தா அமைப்பின் வரலாற்று விடயங்களை நினைவுபடுத்தியும், 72 மேளகர்த்தா அட்டவணையைக் காட்சிப்படுத்தியும், ஒலிப்பதிவு நாடாவில் இராகங்களை ஒலிக்கச் செய்தோ/ பாடிக்காட்டியோ 72 மேளகர்த்தா இராகங்களை அறிமுகம் செய்க.

- மாணவர் இனங்கண்டு கொண்ட விடயங்கள் தொடர்பாகவும், கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

72 மேளகர்த்தா அமைப்பில்,
- பூர்வ மேளகர்த்தாக்கள், உத்தர மேளகர்த்தாக்கள்
- சுத்த மத்திம - பிரதி மத்திம இராகங்கள்
- 12 சக்கரங்கள்
- சக்கரத்திற்குரிய இராகங்கள்
- 12 ஸ்வரப் பெயர்களும் அவற்றிற்குரிய சங்கேதங்களும்
- ரி, க, த, நி ஸ்வரப் பெயர்கள்
- விவாதி மேளங்கள்

**(40 நிமிடங்கள்)**

**படி 4.2.2** **:**
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.

- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

**(60 நிமிடங்கள்)**

**படி 4.2.3** **:**
- குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஒவ்வொரு குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

- **குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்தரையாடல் ஒன்றை மீளவும் மேற்கொள்க.**

- **கலந்துரையாடலிற் கீழ்வரும் விடயங்களை வெளிக் கொணர்க.**

- 72 மேளகர்த்தா அமைப்பில்,
  - இல 1 - இல 36 வரையான இராகங்கள் பூர்வாங்க மேளங்கள். (இவை சுத்த மத்திம இராகங்கள்)
  - இல 37 - இல 72 வரையான இராகங்கள் உத்தர மேளங்கள் (இவை பிரதி மத்திம இராகங்கள்)
- 72 மேளங்களும் 12 சக்கரங்களாப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சக்கரமும் 6 இராகங்களைக் கொண்டுள்ளன. 12 சக்கரங்கள்:

| | | |
|---|---|---|
| 1. இந்து | 5. பாண | 9. ப்ரஹ்ம |
| 2. நேத்ர | 6. ருது | 10. திசி |
| 3. அக்னி | 7. ரிஷி | 11. ருத்ர |
| 4. வேத | 8. வஸு | 12. ஆதித்ய |

- 16 ஸ்வரப் பெயர்களில் 3 ரிஷபங்கள்
  3 காந்தாரங்கள்
  3 தைவதங்கள்
  3 நிஷாதங்கள் உள்ளன.
- 16 ஸ்வரப் பெயர்களுக்குரிய சங்கேதமான சுருக்கெழுத்துக்கள் பின்வருமாறு:

| ஸ்வரம் | ஸ்வரப் பெயர் | சங்கேதம் |
|---|---|---|
| ரிஷபம் | சுத்த ரிஷபம் | ர |
| | சதுஸ்ருதி ரிஷபம் | ரி |
| | ஷட்சுருதி ரிஷபம் | ரு |
| தைவதம் | சுத்த தைவதம் | த |
| | சதுஸ்ருதி தைவதம் | தி |
| | ஷட்சுருதி தைவதம் | து |
| காந்தாரம் | சுத்த காந்தாரம் | க |
| | சாதாரண காந்தாரம் | கி |
| | அந்தர காந்தாரம் | கு |
| நிஷாதம் | சுத்த நிஷாதம் | ந |
| | கைஷிகி நிஷாதம் | நி |
| | காகலி நிஷாதம் | நு |

- ஸட்ஜ - பஞ்சமம் எதுவித வேறுபாட்டையும் அடைவதில்லை.

- சக்கரங்கள் 12 இலும் ரிஷபமும் காந்தாரமும் பின்வரும் ஒழுங்கில் அமைந்திருக்கும்.

| சக்கர இலக்கம் | ஸ்வரப் பெயர்கள் | சங்கேதம் |
|---|---|---|
| 1வது, 7வது | சுத்தரிஷபம், சுத்த காந்தாரம் | ர-க |
| 2வது, 8வது | சுத்தரிஷபம், சாதாரண காந்தாரம் | ர-கி |
| 3வது, 9வது | சுத்தரிஷபம், அந்தர காந்தாரம் | ர-கு |
| 4வது, 10வது | சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம் | ரி-கி |
| 5வது, 11வது | சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம் | ரி-கு |
| 6வது, 12வது | ஷட்சுருதி ரிஷபம், அந்தர காந்தாரம் | ரு-கு |

- ஒவ்வொரு சக்கரத்திலும் கீழ்வரும் ஒழுங்கிலேயே தைவதமும் நிஷாதமும் அமைந்திருக்கும்.
- முதல் சக்கரத்தில் உள்ள 6 மேளங்களும் அடையும் நிஷாத, தைவத பேதம் ஏனைய சக்கரங்கள் 11 இற்கும் பொருந்தும்.

| மேளராக இலக்கம் | ஸ்வரப் பெயர்கள் | சங்கேதம் |
|---|---|---|
| 1 | சுத்த தைவதம், சுத்த நிஷாதம் | த-ந |
| 2 | சுத்த தைவதம், கைஷிகி நிஷாதம் | த-நி |
| 3 | சுத்த தைவதம், காகலி நிஷாதம் | த-நு |
| 4 | சதுஸ்ருதி தைவதம், கைஷிகி நிஷாதம் | தி-நி |
| 5 | சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் | தி-நு |
| 6 | ஷட்சுருதி தைவதம், காகலி நிஷாதம் | து-நு |

- சக்கரத்திலுள்ள 1, 2, 3, 4, 5, 6 இராகங்களும் முறையே பா, ஸ்ரீ, கோ, பூ, மா, ஷா என்னும் ஆறு சங்கேத எழுத்துக்களால் சுட்டப்படும்.

- விவாதி மேளங்கள்:
விவாதி ஸ்வரங்களைக் கொண்ட மேளங்கள் விவாதி மேளங்கள் ஆகும். விவாதி ஸ்வரங்களாவன சுத்த காந்தாரம், ஷட்சுருதி ரிஷபம், சுத்த நிஷாதம், ஷட்சுருதி தைவதம் எனும் நான்குமாகும். இவற்றுள் ஒன்று அல்லது இரண்டு மட்டுமே ஒரு மேளராகத்தில் வரும். விவாதி ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் மேளங்களின் தொகை 40 ஆகும். விவாதி தோஷமற்ற மேளங்களின் தொகை 32 ஆகும்.

(60 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- 72 மேளகர்த்தா இராகங்களின் பூர்வமேள இலக்கங்களையும் உத்தர மேள இலக்கங்களையும் குறிப்பிடுவர்.
- 12 சக்கரங்களின் பெயரைக் குறிப்பிடுவர்.
- 16 ஸ்வரப்பெயர்கட்குரிய சங்கேதாட்சரங்களைப் பிரயோகிப்பர்.
- 72 மேளகர்த்தா இராகங்களின் ரி, க ஸ்வரங்களினதும் த, நி ஸ்வரங்களினதும் அமைப்பு ஒழுங்கைக் கூறுவர்.
- விவாதி மேளங்களையும், விவாதி தோஷம் அற்ற மேளங்களையும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்வர்.

## செயற்பத்திரம் 4.2.2.2

### குழு 1

(01) 72 மேளகர்த்தா அமைப்பில் பூர்வ மேளங்களின் எண்ணிக்கை ..... ஆகும்.
(02) இல. 37 ..... இல. 72 வரையான இராகங்களின் மத்திமம் ..... ஆகும்.
(03) விவாதி மேளங்களின் தொகை ..... ஆகும்.
(04) 6வது, 8வது, 11வது சக்கரப் பெயர்களைத் தருக.
(05) 4வது சக்கரத்திலுள்ள இராகங்களின் மேள இலக்கங்கள், இராகப் பெயர்கள், ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துக.

### குழு 2

(01) 72 மேளகர்த்தா அமைப்பில் உத்தர மேளங்களின் எண்ணிக்கை ..... ஆகும்.
(02) இல. 1 ..... இல. 36 வரையான இராகங்களின் மத்திமம் ..... ஆகும்.
(03) விவாதி தோஷம் அற்ற மேளங்களின் தொகை ..... ஆகும்.
(04) 4வது, 9வது, 12வது சக்கரப் பெயர்களைத் தருக.
(05) 5வது சக்கரத்திலுள்ள இராகங்களின் மேள இலக்கங்கள், இராகப் பெயர்கள், ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துக.

# 72 மேளகர்த்தா விபரம்

## 72 மேளகர்த்தாக்களின் அமைப்பு

72 மேள கர்த்தா சக்கரத்தின் விஷேசம் என்னவெனில் அதன் அமைப்பைத் தெரிந்து கொண்ட பின்னர் எந்த இலக்கமுள்ள மேளகர்த்தா இராகத்தின் லட்சணத்தையும் எளிதில் சொல்லிவிடலாம். கர்நாடக சங்கீதத்திற்கு கிரீடத்தைப் போலுள்ளது. இந்த மேளகர்த்தா சக்கரம். இந்த விடயம் வெங்கடமகியவர்கள் இயற்றிய சதுர்தண்டிப்பிரகாசிகா என்னும் கிரந்தத்தின்றும், கோவிந்தாச்சாரியார் இயற்றிய ஸங்கிரக சூடாமணி என்னும் கிரந்தத்தினின்றும் விளங்கும்.

ஒரு ஸ்தாயிலுள்ள பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் எல்லா தேச சங்கீதத்திற்கும் உரித்தானதால் இந்த பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களைக்கொண்டு பிரஸ்தரிக்கப் பட்டிருக்கும் 72 மேளகர்த்தாக்கள் இதர தேச சங்கீத வித்துவான்களும் போற்றக் கூடியதோர் விஷயமாகும்.

## மேளகர்த்தா அமைப்பு விவரம்

- 72 மேளகர்த்தா சக்கரம் இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கபட்டிருக்கிறது.
- முதல் பாகத்தில் வரும் 36 மேளகர்த்தாக்களுக்கு பூர்வ மேளகர்த்தாக்களென்றும் இரண்டாம் பாகத்தில் வரும் 36 மேளகர்த்தாக்களுக்கு உத்தர மேளகர்த்தாக்க ளென்றும் பெயர்.
- 1 - 36 மேளகர்த்தாக்களில் சுத்தமத்யமஸ்வரமும் 37 - 72 மேளகர்த்தாக்களில் பிரதிமத்யமஸ்வரமும் வருவதனால் பூர்வ மேள கர்த்தாக்கள் சுத்தமத்யம மேள கர்த்தாக்களென்றும், உத்தர மேளகர்த்தாக்கள் பிரதி மத்யம மேளகர்த்தாக்க ளென்றும் அழைக்கப்படும்.
- 72 மேளகர்த்தாக்கள் பன்னிரெண்டு சிறிய சக்கரங்களின் கீழ் வகுக்கப்பட்டிருக் கின்றன. சக்கரங்களின் பெயர்களும், அவற்றின் மேள இராக இலக்கங்களும் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்து | - | 01 - 06 |
| 2. | நேத்ர | - | 07 - 12 |
| 3. | அக்கினி | - | 13 - 18 |
| 4. | வேத | - | 19 - 24 |
| 5. | பாண | - | 25 - 30 |
| 6. | ருது | - | 31 - 36 |
| 7. | ரிஷி | - | 37 - 42 |
| 8. | வஸு | - | 43 - 48 |
| 9. | ப்ரஹ்ம | - | 49 - 54 |
| 10. | திசி | - | 55 - 60 |
| 11. | ருத்ர | - | 61 - 66 |
| 12. | ஆதித்ய | - | 67 - 72 |

- இவற்றுள் ஆறு சக்கரங்களும் சுத்தமத்யம மேள கர்த்தாக்களையும், பின் ஆறு சக்கரங்கள் பிரதிமத்யம மேளகர்த்தாக்களையும் உடையதாய் இருக்கின்றன. ஆகவே 1 - 6 வரை உள்ள சக்கரங்களை சுத்த மத்யம சக்கரங்களென்றும், 7 - 12 வரையுள்ள சக்கரங்களை பிரதிமத்யம சக்கரங்கள் என்றும் கூறலாம்.

| சக்கர இலக்கம் | ஸ்வரப் பெயர்கள் | சங்கேதம் |
|---|---|---|
| 1வது, 7வது சக்கரங்களில் | சுத்தரிஷபம், சுத்த காந்தாரம் | ர.க |
| 2வது, 8வது சக்கரங்களில் | சுத்தரிஷபம், சாதாரண காந்தாரம் | ர.கி |
| 3வது, 9வது சக்கரங்களில் | சுத்தரிஷபம், அந்தர காந்தாரம் | ர.கு |
| 4வது, 10வது சக்கரங்களில் | சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம் | ரி.கி |
| 5வது, 11வது சக்கரங்களில் | சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம் | ரி.கு |
| 6வது, 12வது சக்கரங்களில் வருகின்றன. | ஷட்சுருதி ரிஷபம், அந்தர காந்தாரம் | ரு.கு |

- ஒவ்வொரு சக்கரத்திலுமுள்ள ஆறு மேளகர்த்தா இராகங்களின் பூர்வாங்க ஸ்வரங்களாகிய ரிஷபமும், காந்தாரமும் மாறுதலடைவதில்லை.

- முதல் சக்கரத்திலுள்ள 6 மேளகர்த்தாக்களில் தைவத, நிஷாத ஸ்வரங்கள் எந்த வரிசைக் கிரமமாகப் பேதங்களை அடைந்துகொண்டு வருகின்றனவோ அதே வரிசைக் கிரமமாகத்தான் மற்றச் சக்கரங்களிலும் அந்தஸ்வரங்கள், பேதங்களை அடைந்து கொண்டு வருகின்றன. அதாவது ஒவ்வொரு சக்கரத்திலும்.

| மேளராகமும் இலக்கமும் | ஸ்வரப் பெயர்கள் | சங்கேதம் |
|---|---|---|
| முதல் கர்த்தா இராகத்தில் | சுத்த தைவதம், சுத்த நிஷாதம் | த-ந |
| 2ஆம் கர்த்தா இராகத்தில் | சுத்த தைவதம், கைஷிகி நிஷாதம் | த-நி |
| 3ஆம் கர்த்தா இராகத்தில் | சுத்த தைவதம், காகலி நிஷாதம் | த-நு |
| 4ஆம் கர்த்தா இராகத்தில் | சதுஸ்ருதி தைவதம்,கைஷிகி நிஷாதம் | தி-நி |
| 5ஆம் கர்த்தா இராகத்தில் | சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் | தி-நு |
| 6ஆம் கர்த்தா இராகத்தில் வருகின்றன. | ஷட்சுருதி தைவதம், காகலி நிஷாதம் | து-நு |

- மேளகர்த்தா இராகங்களில் 16 ஸ்வரப் பெயர்களும் காணப்படுகின்றன. 16 ஸ்வரப் பெயர்களில் ரிஷப, காந்தார, தைவத, நிஷாத ஸ்வரங்கள் 3 பேதங்களைக் கொண்டுள்ளன. அவற்றின் பெயர்களும் சங்கேதாட்சரங்களும் பின்வருமாறு:

| ஸ்வரம் | ஸ்வரப் பெயர் | சங்கேதம் |
|---|---|---|
| ரிஷபம் | சுத்த ரிஷபம்<br>சதுஸ்ருதி ரிஷபம்<br>ஷட்சுருதி ரிஷபம் | ர<br>ரி<br>ரு |
| தைவதம் | சுத்த தைவதம்<br>சதுஸ்ருதி தைவதம்<br>ஷட்சுருதி தைவதம் | த<br>தி<br>து |

| | | |
|---|---|---|
| காந்தாரம் | சுத்த காந்தாரம்<br>சாதாரண காந்தாரம்<br>அந்தர காந்தாரம் | க<br>கி<br>கு |
| நிஷாதம் | சுத்த நிஷாதம்<br>கைஷிகி நிஷாதம்<br>காகலி நிஷாதம் | ந<br>நி<br>நு |

- ஒவ்வொரு சக்கரத்திலுமுள்ள ஆறு மேளங்களும் முறையே பா, ஸ்ரீ, கோ, பூ, மா, ஷா என்னும் சங்கேத அட்சரங்களால் குறிக்கப்படுகின்றன.

- இவற்றிலிருந்து ரிஷபமும், காந்தாரமும் சக்கரத்திற்கு சக்கரம் மாறுபடுவதையும் தைவதமும், நிஷாதமும் இராகத்திற்கு இராகம் மாறுபடுவதையும் அவதானிக்கலாம்.

## விவாதி மேளங்கள்

- விவாதி மேளங்கள் என்பவை, விவாதி ஸ்வரங்களை உடைய மேளங்களாகும். அவை விவாதி தோஷத்திற்கு உட்பட்டவை. அவற்றில் சுத்த காந்தாரமும், ஷட்சுருதி ரிஷபமும், சுத்தநிஷாதம், ஷட்சுருதி தைவதமும் ஆகிய நான்கு விவாதி ஸ்வரங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ஸ்வரங்கள் வரும். இரண்டு விவாதிஸ்வரங்களுக்கு மேல் ஒரு மேளத்தில் வராது. இரண்டு விவாதிஸ்வரங்கள் வரினும், அவற்றில் ஒன்று பூர்வாங்கத்தைச் சேர்ந்ததாகவும், மற்றொன்று உத்தராங்கத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கும்.

- இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்தக்கொள்ளும் மேளங்களின் எண்கள் 1, 6, 31, 36, 37, 42, 67, 72

- விவாதி தோஷத்திற்குட்பட்ட மேளங்களின் இலக்கங்கள்
  1 - 6 வரை - 1 ஆவது சக்கரம்
  31 - 36 வரை - 6 ஆவது சக்கரம்
  37 - 42 வரை - 7 ஆவது சக்கரம்
  67 - 72 வரை - 8 ஆவது சக்கரம்

  இந்த நான்கு சக்கரங்களிலும் வரும் 24 விவாதி மேளங்களைத் தவிர மீதி எட்டுச் சக்கரங்களில் ஒவ்வொரு சக்கரத்திலும் ஆரம்ப மேளமும் (சங்கேதாட்சரம் பா) கடைசி மேளமும் (சங்கேதாட்சரம் ஷா) விவாதி தோஷத்திற்கு உட்பட்டவை. ஆகவே விவாதி மேளங்களின் தொகை 40, விவாதி தோஷமற்ற மேளங்களின் தொகை 32.

# எழுபத்திரண்டு மேளகர்த்தா சக்கரம்

| பூர்வ மேளகர்த்தாக்கள் : அல்லது சுத்த மத்யம மேளகர்த்தாக்கள் | | | ரிஷப, காந்தார, உத்தர தைவத, நிஷாத பேதங்கள் | | | | உத்தர மேளகர்த்தாக்கள் : அல்லது பிரதி மத்யம மேளகர்த்தாக்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சக்கரத்தின் நம். பெயர் | தொடர்ச்சி நம்பர் | மேளகர்த்தா ராகங்களின் பெயர்கள் | ரி | க | த | நி | மேளகர்த்தா ராகங்களின் பெயர்கள் | தொடர்ச்சி நம்பர் | சக்கரத்தின் நம்.பெயர் |
| I இந்து | 1 | கனகாங்கி | சுத்த | சுத்த | சுத்த | சுத்த | ஸாலகம் | 37 | VII ரிஷி |
| | 2 | ரத்னாங்கி | சுத்த | சுத்த | சுத்த | கைசிகி | ஜலார்ணவம் | 38 | |
| | 3 | கானமூர்த்தி | சுத்த | சுத்த | சுத்த | காகலி | ஜாலவராளி | 39 | |
| | 4 | வனஸ்பதி | சுத்த | சுத்த | சதுச்ருதி | கைசிலி | நவனீதம் | 40 | |
| | 5 | மானவதி | சுத்த | சுத்த | சதுச்ருதி | காகலி | பாவனி | 41 | |
| | 6 | தாரூபி | சுத்த | சுத்த | ஷட்ச்ருதி | காகலி | ரகுப்ரியா | 42 | |
| II நேத்ர | 7 | ஹனுமதோடி | சுத்த | ஸாதாரண | சுத்த | சுத்த | கவாம்போதி | 43 | V III வஸு |
| | 8 | ஸேனாவதி | சுத்த | ஸாதாரண | சுத்த | கைசிகி | பவப்ரியா | 44 | |
| | 9 | தேனுக | சுத்த | ஸாதாரண | சுத்த | காகலி | சுபபந்துவராளி | 45 | |
| | 10 | நாடகப்ரியா | சுத்த | ஸாதாரண | சதுச்ருதி | கைசிகி | ஷட்விதமார்க்கினி | 46 | |
| | 11 | கோகிலப்ரியா | சுத்த | ஸாதாரண | சதுச்ருதி | காகலி | ஸுவர்ணாங்கி | 47 | |
| | 12 | ரூபவதி | சுத்த | ஸாதாரண | ஷட்ச்ருதி | காகலி | திவ்யமணி | 48 | |
| III அக்னி | 13 | காயகப்ரியா | சுத்த | அந்தர | சுத்த | சுத்த | தவளாம்பரி | 49 | IX பிரம்ம |
| | 14 | வகுளாபரணம் | சுத்த | அந்தர | சுத்த | கைசிகி | நாமநாராயணி | 50 | |
| | 15 | மாயாமாளவகௌளை | சுத்த | அந்தர | சுத்த | காகலி | காமவர்த்தனி | 51 | |
| | 16 | சக்ரவாகம் | சுத்த | அந்தர | சதுச்ருதி | கைசிகி | ராமப்ரியா | 52 | |
| | 17 | ஸூர்யகாந்தம் | சுத்த | அந்தர | சதுச்ருதி | காகலி | கமனச்ரம | 53 | |
| | 18 | ஹடகாம்பரி | சுத்த | அந்தர | ஷட்ச்ருதி | காகலி | விச்வம்பரி | 54 | |

# எழுபத்திரண்டு மேளகர்த்தா சக்கரம்

| பூர்வ மேளகர்த்தாக்கள் : அல்லது சுத்த மத்யம மேளகர்த்தாக்கள் | | | ரிஷப, காந்தார, உத்தர தைவத, நிஷாத பேதங்கள் | | | | உத்தர மேளகர்த்தாக்கள் : அல்லது பிரதி மத்யம மேளகர்த்தாக்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சக்கரத்தின் நம். பெயர் | தொடர்ச்சி நம்பர் | மேளகர்த்தா ராகங்களின் பெயர்கள் | ரி | க | த | நி | மேளகர்த்தா ராகங்களின் பெயர்கள் | தொடர்ச்சி நம்பர் | சக்கரத்தின் நம். பெயர் |
| VI வேத | 19 | ஜங்காரத்வனி | சதுச்ருதி | சாதாரண | சுத்த | சுத்த | ச்யாமளாங்கி | 55 | X திசி |
| | 20 | நடபைரவி | சதுச்ருதி | சாதாரண | சுத்த | கைசிகி | ஷண்முகப்ரியா | 56 | |
| | 21 | கீரவாணி | சதுச்ருதி | சாதாரண | சுத்த | காகலி | ஸிம்ஹேந்த்ர மத்யமம் | 57 | |
| | 22 | கரஹரப்ரியா | சதுச்ருதி | சாதாரண | சதுச்ருதி | கைசிலி | ஹேமவதி | 58 | |
| | 23 | கௌரிமனோஹரி | சதுச்ருதி | சாதாரண | சதுச்ருதி | காகலி | தர்மவதி | 59 | |
| | 24 | வருணப்ரியா | சதுச்ருதி | சாதாரண | ஷட்ச்ருதி | காகலி | நீதிமதி | 60 | |
| V பாண | 25 | மாரரஞ்ஜனி | சதுச்ருதி | அந்தர | சுத்த | சுத்த | காந்தாமணி | 61 | XI ருத்ர |
| | 26 | சாருகேசி | சதுச்ருதி | அந்தர | சுத்த | கைசிகி | ரிஷபப்ரியா | 62 | |
| | 27 | ஸரஸாங்கி | சதுச்ருதி | அந்தர | சுத்த | காகலி | லதாங்கி | 63 | |
| | 28 | ஹரிகாம்போஜி | சதுச்ருதி | அந்தர | சதுச்ருதி | கைசிகி | வாசஸ்பதி | 64 | |
| | 29 | தீரசங்கராபரணம் | சதுச்ருதி | அந்தர | சதுச்ருதி | காகலி | மேசகல்யாணி | 65 | |
| | 30 | நாகானந்தினி | சதுச்ருதி | அந்தர | ஷட்ச்ருதி | காகலி | சித்ராம்பரி | 66 | |
| VI ருது | 31 | யாகப்ரியா | ஷட்ச்ருதி | அந்தர | சுத்த | சுத்த | ஸ°சரித்ர | 67 | XII ஆதித்ய |
| | 32 | ராகவர்த்தனி | ஷட்ச்ருதி | அந்தர | சுத்த | கைசிகி | ஜ்யோதி ஸ்வரூபிணி | 68 | |
| | 33 | காங்கேயபூஷணி | ஷட்ச்ருதி | அந்தர | சுத்த | காகலி | தாதுவர்த்தனி | 69 | |
| | 34 | வாகதீச்வரி | ஷட்ச்ருதி | அந்தர | சதுச்ருதி | கைசிகி | நாஸிகாபூஷணி | 70 | |
| | 35 | சூலினி | ஷட்ச்ருதி | அந்தர | சதுச்ருதி | காகலி | கோஸலம் | 71 | |
| | 36 | சலநாட | ஷட்ச்ருதி | அந்தர | ஷட்ச்ருதி | காகலி | ரஸிகப்ரியா | 72 | |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.3 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.3.1 : ஹரிகாம்போஜி இராகலட்சணத்தை அறிந்துகொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடுகள் :
- ஹரிகாம்போஜி இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்
- ஹார்மோனியம், சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.3.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 4.3.1 :
- ஹரிகாம்போதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடத்தைக் காட்சிப்படுத்தி அதனைப் பாடிக்காட்டியும், ஸ்வரஸ்தான வரைபடத்தைக் காண்பித்து, அதனை ஹார்மோனியத்தில் வாசித்தும் குறிப்பிட்ட இராகத்தினை மாணவர் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த இராகத்தில் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

ஹரிகாம்போதி இராகத்தின்,
- மேள எண்
- ஆரோஹண, அவரோஹணம்
- ஸ்வரஸ்தானங்கள்
- விசேட அம்சங்கள்
- ஜீவஸ்வரம், நியாசஸ்வரம், கிரகஸ்வரம்
- மூர்ச்சனாகாரக மேளம்
- சஞ்சாரம்
- இசை உருப்படிகள்

**(10 நிமிடங்கள்)**

படி 4.3.2 :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒரே மாதிரியான செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.3.3 :
- குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- ஹரிகாம்போஜி ஒரு தாய் ராகமாகும்.
- ஹரிகாம்போஜி இராகத்தின்
  ஆ: ஸரிகமபதநிஸ்
  அ: ஸ்நிதபமகரிஸ
- ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  அந்தர காந்தாரம்
  சுத்தமத்திமம்
  சதுஸ்ருதி தைவதம்
  கைசிகி நிஷாதம்
- ஹரிகாம்போதி இராகத்தின் விசேட அம்சங்கள்
  1. சம்பூர்ண இராகம்
  2. திருத்தாண்டகம் பாடப்படும் இராகம்
  3. இந்துஸ்தானி இசையில் இது கமாஜ்தாட் எனப்படும்
- யாழ் இவ்விராகத்திலேயே சுருதி கூட்டப்பட்டது.
- பல ஜன்ய ராகங்களைக்கொண்ட மேளராகம்
- பிரக்தியாகத கமகம் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கும்.
- ஜீவஸ்வரங்கள் - க, ம, நி
- நியாசஸ்வரங்கள் - ப
- கிரகஸ்வரங்கள் - ப, நி
- சுத்தமேளம் என அழைக்கப்படும் இராகம்
- மூர்ச்சனாகாரக மேளம்
  ஹரிகாம்போஜியின் ரி, ம, ப, த, நி ஸ்வரங்களைக் கிரக பேதம் செய்தால் முறையே, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்ரியா, தோடி, கல்யாணி ஆகிய மேளங்கள் தோன்றும்.
- சஞ்சாரம் :
  ஸரிகமபதநிஸ் - பதநிஸ்ரி - க்ம்க்க
  ரிரிஸ்ா - ஸ்நிதரிஸ்ா - நிதபம - கரி - மகரிஸா
- இசை உருப்படிகள்
  கீதம் - வாசரவணனே - ஆதி - பொன்னையாபிள்ளை
  கிருதி - ராமநன்னு - ரூபகம் - தியாகராஜர்
  கிருதி - சம்போசங்கர - ஆதி - முத்துத்தாண்டவர்
  கீர்த்தனை - எங்கே தேடுகிறாய் - பெரியசாமிதூரன்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஹரிகாம்போஜி இராகம் 28வது மேளராகம் என்பதைக் குறிப்பிடுவர்.
- ஹரிகாம்போஜி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைக் கூறுவர்.
- ஸ்வரஸ்தானங்களை கூறுவர்.
- ஆரோஹண, அவரோஹண ஸ்வரஸ்தான வரைபடத்தை வரைவர்.
- ஹரிகாம்போதி இராகத்தில் அமைந்த உருப்படிகளை கூறுவர்.
- இந்த இராகத்தில் சிறு சஞ்சாரம் அமைத்துப்பாடும் ஆர்வத்தை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 4.3.2.1

- சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

- ஹரிகாம்போஜி இராகத்தின் மேள எண் யாது?
- இவ் இராகத்தின் ஆரோஹண, அவரோஹணம் யாது?
- இவ் இராகத்திற்குரிய பண் யாது?
- இவ் இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் எவை?
- இவ் இராகத்தில் வரும் ஜீவஸ்வரம், நியாசஸ்வரம், கிரகஸ்வரம் என்பவற்றை எழுதுக?
- இவ் இராகத்தில் சஞ்சாரம் எழுதுக?
- இவ் இராகத்தில் அமைந்த உருப்படிகளை எழுதுக?

# இராகலட்சணம்
# ஹரிகாம்போஜி

இது 28ஆவது மேளகர்த்தா ராகம் 5ஆவது (பாண) சக்கரத்தில் 4ஆவது ராகம் (பாண - பூ)

ஆ: ஸரிகமபதநிஸ்
அ: ஸ்நிதபமகரிஸ

இவ்விராகத்தில் வரும் ஸ்வரங்களாவன ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவம், கைசிகி நிஷாதம்.

சம்பூர்ண ராகம், ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம். க, ம, நி ராகச்சாயா சுரங்கள், நியாசசுரமும், அம்சசுரமும் ஆகும். ரி, ம, நி கம்பித சுரங்கள். த்ரிஸ்தாயி ராகம். உருப்படிகள் ப, நி சுரங்களில் ஆரம்பிக்கின்றன. பிரத்தியாகத கமகம் ராகத்தின் களையை நன்கு விளக்கிக் காட்டும். எப்பொழுதும் பாடலாம். பல ஜன்ய ராகங்களைக் கொண்ட ஜனக ராகங்களில் இது ஒன்று.

மூர்ச்சனாகாரக மேள ராகம், ஹரிகாம்போஜியில் ரி, ம, ப, த, நி சுரங்களைக் கிரகபேதம் செய்ய முறையே நடைபரவி, சங்கராபரணம், கரகரப்பிரிய, தோடி, கல்யாணி மேளங்கள் ஒலிக்கும்.

திருத்தாண்டகம் பாட உகந்த இராகமாகும். பண்டைத் தமிழிசையில் சுத்தமேளம் ஹரிகாம்போஜி இராகமே. இது செம்பாலைப்பண் என்று அழைக்கப்பட்டது. குறிஞ்சிப் பண்ணும் இவ் இராகத்தைக் குறிக்கும் ஹிந்துஸ்தானி இசையில் இதற்கு கமாஜ்தாட் என்று பெயர். அநேக ஜன்ய இராகங்களை உடைய ஜனக இராகம் பிரக்தியாகத கமகம் இந்த இராகத்திற்கு அழகைக்கொடுக்கும்.

**சஞ்சாரம்:**

| | | | |
|---|---|---|---|
| ஸரிகமபதநிஸ்ா | - கமபதநிஸ்ா | - ஸ்நிதபமக | - ரிகமகரிஸ |
| ஸ்நிதபநிஸ்ர் | - ஸரிகமபா | - பதநிஸ்ரிகம்க்ரிஸ் | |
| ஸ்ரிஸ்நிதபம | - பதநிஸாமகரி | - ஸ்நிதபமகரிஸ | - ஸநிதபதநிஸா |

**உருப்படிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. கீதம் | - வாசரவணனே | - ஆதி | - பொன்னையாபிள்ளை |
| 2. க்ருதி | - ராமநன்னு | - ரூபகம் | - தியாகராஜ சுவாமிகள் |
| 3. க்ருதி | - ஒகமாட | - ரூபகம் | - தியாகராஜசுவாமிகள் |
| 4. க்ருதி | - பாமாலைக்கினை | - ஆதி | - பாபநாசம் சிவன் |
| 5. க்ருதி | - பார்க்கப் பார்க்க | - மிஸ்ரசாபு | - கோபாலகிருஷ்ண பாரதியார் |
| 6. கீர்த்தனை | - எங்கே தேடுகின்றாய் | - ஆதி | - பெரியசாமி தூரன் |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.4 : இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார்.

செயற்பாடு 4.4.1 : இசைக் கருவிகளுள் 'வயலின்' வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்துகொள்வோம்.

நேரம் : 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடுகள் :
- வயலின் வாத்தியம்
- பாகங்கள் குறிக்கப்பட்ட வயலின் வாத்தியத்தின் படம்
- வயலினிசை அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 4.4.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 4.4.1 :
- வயலினிசை அடங்கிய ஒலிநாடாவை ஒலிக்கச் செய்தோ அல்லது வாசித்துக் காட்டியோ மாணவரை செவிமடுக்கச் செய்க.
- வயலின் வாத்தியம் வரையப்பட்ட படத்தினைக் காட்சிப் படுத்துக.
- செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடலொன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • வயலின் தோன்றியது பற்றிய வரலாற்றுப் பின்னணி<br>• வயலினின் அமைப்பு, படம் வரைந்து பாகங்கள் குறித்தல்<br>• சுருதி சேர்க்கும் முறை, வாசிக்கும் முறை<br>• வயலினின் சிறப்பம்சங்கள்<br>• வயலினிசையில் பிரபல்யம் பெற்ற இலங்கை, இந்திய கலைஞர்கள் |

(20 நிமிடங்கள்)

படி 4.4.2 :
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(30 நிமிடங்கள்)**

படி 4.4.3 :
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

**தோற்றம்**

- இராவணன் இசைத்த வாத்தியமாதலால் ''இராவணாஸ்திரம்'' எனும் பெயருடன் வழங்கி வந்தது.
- தற்போது வழக்கிலுள்ள வயலின் அமைப்பானது ஐரோப்பாவில் முதன் முதலில் ஸ்ட்ராடி வேரி என்பவரால் உருவாக்கப்பட்டது.
- மேலைத்தேய வாத்தியமான இவ் வாத்தியத்தின் அழகான தோற்றத்தால் கவரப்பட்டு முதன் முதலாக பாலுஸ்வாமி தீஷிதர் மேலைத்தேய இசையைக் கற்றார். பின்னர் இவ்வாத்தியத்தில் கர்நாடக இசையை சீராக வாசித்துக் காட்டினார்.
- தற்போது வயலின் வாத்தியம் பிரதான வாத்தியமாகவும், பக்கவாத்தியமாகவும் இடம்பெறுகிறது.

**அமைப்பு**

- வயலினின் உடல் மேற்பலகை, கீழ்ப்பலகை என ஆறு விலாப்பலகைகளைக் கொண்டவை.
- உடற்பாகம் பைன், மேப்பிள் சிகமூர் போன்ற மரங்களாற் செய்யப்படும்.
- வயலின் விரற்பலகை, பிரடைகள், தந்தித்தாங்கி (வாற்பலகை) போன்ற பாகங்கள் கருங்காலி மரத்தில் செய்யப்பட்டிருக்கும்.
- வயலின் வாத்தியத்தில் 4 தந்திகள் உள. இவை தலைப் பாகத்திலுள்ள 4 பிரடைகளிற் சுற்றப்பட்டிருக்கும். இத்தந்திகள் பாலத்தின் மேலாகச் சென்று நுண்ணிய திருகுகளிற் பொருத்தப்படும்.
- பாலத்தின் கீழ் உட்பாகத்திலுள்ள நாதக்குச்சி முலமே இனிமையான நாதம் எழுகின்றது.
- உடல் மேற்பாகத்தில் இரு பக்கங்களிலும் F வடிவ நாதத்துளைகள் 2 உள.
- வில்லானது குதிரை உரோமத்தால் கட்டப்பட்டது.

**சுருதி சேர்க்கும் முறை**

- வயலின் 3 1/2 ஸ்தாயி முதல் 4 ஸ்தாயி வரை வாசிக்கலாம்.
- தந்திகளைச் சுருதி சேர்க்கும் முறை (பஸபஸ) ஆகும்.

**வாசிக்கும் முறை**

- ஸ்வரஸ்தானங்கட்கு இடதுகை விரல்களும், வில் போட வலது கை ஆட்காட்டிவிரலையும், கட்டை விரலையும் பயன்படுத்துவர்.
- வயலினின் விரற் பலகைக்கும், பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்திலுள்ள தந்திகளின் மேல், வில் போட்டு வாசிப்பர்.

**வயலின் வாத்தியத்தின் சிறப்பம்சங்கள்**

- நான்கு ஸ்தாயிகளிலும் இலகுவில் வாசிக்கும் வசதி கொண்டது.
- வில் போட்டு வாசிக்கப்படுவதால் எழும் கார்வையான நாதத்தைக் கொண்டிருக்கும்.
- மிகத் துரித காலங்களில் இலகுவில் வாசிக்கலாம்.
- சுலபமாக எடுத்துக் செல்லக்கூடியதான வசதி கொண்டது.

**வயலினிசையில் பிரபல்யம் பெற்ற இலங்கை, இந்திய கலைஞர்கள்**

- லால்குடி ஜெயராமன்
- டி.என். கிருஷ்ணன்
- குன்றக்குடி வைத்தியநாதன்
- கன்னியாகுமரி
- இலங்கையைச் சேர்ந்த புத்துவாட்டி சோமு, ஜீ.சண்முகானந்தம், கலாசூரி T.V. பிச்சையப்பா ஆகியோர்.

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- வயலின் வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறித்துக் காட்டுவர்.
- கர்நாடக இசைக்கச்சேரிகளில் வயலின் முக்கிய பங்கு வகிக்கின்றதென்பதை ஏற்றுக் கொள்வர்.
- வயலினிசையில் பிரபல்யம் பெற்ற இலங்கை, இந்தியக் கலைஞர்கள் பெயரினைக் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.4.2.1

### குழு 1

(1) தற்போதுள்ள வயலின் தோற்றம் ''ஐரோப்பா'' என்ற கூற்றால் விளங்குவது யாது?
(2) வயலின் இசைப்பதில் பிரபல்யம் பெற்ற இலங்கைக் கலைஞர் இருவரைக் குறிப்பிடுக?
(3) வயலினில் 4 தந்திகளின் பெயர்களையும், சுருதி சேர்க்கும் முறையையும் தருக?

### குழு 2

(1) வயலின் இசைப்பதில் பலர் தேர்ச்சி பெற்று விளங்கினர். இவர்களில் இந்தியக் கலைஞர் மூவரைக் குறிப்பிடுக?
(2) வாத்தியத்தின் படம் வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுக?

### குழு 3

(1) வயலின் சிறப்பம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுவர்?
(2) வயலினில் நாதம் உண்டாகும் விதத்தினை சுருக்கமாக விளக்குக?
(3) வயலின் வாத்தியம் செய்யப்பயன்படுத்தும் மரங்கள் மூன்று தருக?

## வயலின்

பக்கவாத்தியக் கருவிகளுள் வயலின் பிரதானமான இடத்தை வகிக்கின்றது. மேலைத்தேய வாத்தியமாக விளங்கியபோதும், இதன் சிறப்பியல்புகள் காரணமாக இந்திய சங்கீதத்தில் இவ்வாத்தியம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது வழக்கிலுள்ள வயலினின் அமைப்பானது ஐரோப்பாவில் முதலில் ஸ்ட்ராடி வேரி என்பவரால் உருவாக்கப்பட்டது. கர்நாடக இசைக்கு இதனை அறிமுகப்படுத்தியவர் பாலஸ்வாமி தீஷிதர் என்று கூறப்படுகிறது. தற்போது வழக்கில் உள்ள வயலின் வாத்தியம் சுமார் 300 ஆண்டுகட்கு முன் உருவாக்கப்பட்டது ஆகும். இவ்வாத்தியத்தைப் பிடில் என்றும் அழைப்பர்.

### வயலின் அமைப்பு:

நாதச் சிறப்பும், கலை அழகும் கொண்ட இவ்வயலின் வாத்தியத்தின் முழுப்பாகங்களும் வெவ்வேறு வகை மரங்களினாற் செய்யப்பட்டிருக்கும். இதன் உடற்பாகம் பைன், மேப்பிள், சிகமூர் போன்ற மரங்களாற் செய்யப்படும். வயலின் விரற்பலகை, பிரடைகள், தந்தித்தாங்கி (வாற்பலகை) போன்ற பாகங்கள் கருங்காலி மரத்தில் செய்யப்பட்டிருக்கும்.

வயலினின் உடல், நீள் வட்ட வடிவுடனும் இரு விளிம்புகள், நடுப்பகுதியிலிருந்து உட்புறம் நோக்கி இடைபோன்று வளைந்தும் காணப்படும். உடலில் மேற்பலகையும் பின்பலகையும் காணப்படுகின்றன. மேலும் இவ்விரண்டு பலகைகளையும் சுவர்போன்ற வளைந்த வடிவுள்ள 6 விலாப்பலகைகள் இணைந்துள்ளன.

வயலின் வாத்தியத்தில் 4 தந்திகள் உள. இவை வயலினின் தலைப்பாகத்திலுள்ள 4 பிரடைகளிற் சுற்றப்பட்டிருக்கும். இத் தந்திகள் பாலத்தின் மேலாகச் சென்று நுண்ணிய திருகுகளிற் பொருத்தப்படும். நுண்ணிய திருகுகள் வாற்பலகை பொத்தானுடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டுள்ளது. விரற்பலகையின் மேல் (ஸ்வரப்பலகை) உள்ள தந்திகளில் விரல்களை வைத்து வாசிப்பர். வயலினின் இனிமையான நாதம் எழுகின்றது. பிரடைகளும், நுண்ணிய திருகுகளும் தந்திகளின் சுருதியைக் கூட்டிக் குறைக்கப் பயன்படுத்தப்படுகின்றன. வயலின் உடல் மேற்பாகத்தில் இருபக்கங்களிலும் F வடிவ நாத்துளைகள் 2 காணப்படுகின்றன.

குதிரை உரோமத்தால் கட்டப்பட்ட நீண்டகுச்சியே வில் எனப்படும். வயலினின் விரற் பலகைக்கும், பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்திலுள்ள தந்திகளின் மேல், வில் போட்டு வாசிப்பர். வில்லில் உள்ள திருகு மூலம் குதிரை ரோமத்தை இறுக்கவும், தளர்த்தவும் முடிகின்றது. ரொசின் எனப்படும் கட்டிடப் பொருளை வில்லின் உரோம இழைகள் மீது பூசி வாசிப்பர்.

### சுருதி சேர்க்கும் முறை

வயலினில் 3 1/2 ஸ்தாயி முதல் 4 ஸ்தாயிவரை வாசிக்கலாம். வயலின் தந்திகளைச் சுருதி சேர்ககும் முறை பின்வருமாறு: (பஸபஸ)

1 ஆவது தந்தி [E] - மத்தியஸ்தாயி பஞ்சமம்
2 ஆவது தந்தி [A] - மத்தியஸ்தாயி ஸட்ஜம்
3 ஆவது தந்தி [D] - மந்திரஸ்தாயி பஞ்சமம்
4 ஆவது தந்தி [G] - மந்திரஸ்தாயி ஸட்ஜம்

## வாசிக்கும் முறை

வலது கை மூலம் வில் நாதத்தை எழுப்ப, அதே வேளையில் இடது கை விரல்கள் ஸ்வரப்பலகையின் மேலுள்ள தந்திகளின் உரிய ஸ்வரஸ்தானங்களில் வைத்து அழுத்தி வாசிக்கப்பட்டு, எமக்குத் தேவையான ஸ்வரங்கள் வாசிக்கப்படுகின்றன. மேல் ஸ்தாயி ஸ்வரங்களை வாசிக்க இடது கையை மேற்புறம் நகர்த்தி வாசிக்க வேண்டும். வலது கையின் கட்டை விரலையும், ஆட்காட்டி விரலையும், நடு விரலையும் வில்லின் திருகு பூட்டிய முனைப்பக்கத்தில் வைத்துச் சேர்த்து தந்தியில் வில்லினை அழுத்தி வாசிக்க வேண்டும். இதில் ஸ்வர வில், சாகித்திய வில் என இருவகை வில் போடப்படும்.

கச்சேரியில் வயலின் வாத்தியத்தைப் பிரதான வாத்தியமாகவும், பக்க வாத்தியமாகவும் வாசிப்பர். இதனைப் பாதுகாப்பாக கம்பளித்துணியிற் சுற்றி, அதிக வெப்பம் குளிர் அணுகாது பெட்டியில் வைத்துப் பாதுகாத்தல் அவசியம். மேலைத்தேய இசையில் நின்று கொண்டும் நாற்காலியில் அமர்ந்தும் வாசிக்கும் நிலை கையாளப்படுகின்றது. எனது இசையில் தரையில் உட்கார்ந்த வாசிக்கும் நிலையே பேணப்படுகின்றது.

## வயலின் வாத்தியத்தின் சிறப்பம்சங்கள்

(1) நான்கு ஸ்தாயிகளிலும் இலகுவில் வாசிக்கும் வசதி கொண்டது.
(2) வில் போட்டு வாசிக்கப்படுவதால் எழும் கார்வையான நாதத்தைக் கொண்டிருக்கும்.
(3) சுலபமாக எடுத்துச் செல்லக்கூடியதான வசதி கொண்டது.
(4) மிகத் துரித காலங்களில் இலகுவில் வாசிக்கலாம்.
(5) தேவைக்கேற்ப பஞ்சம சுருதி, மத்திம சுருதியில் வாசிக்கக்கூடிய வசதி உள்ளது.
(6) கமகங்கள், சங்கதிகளைத் தெளிவாக இலகுவிற் கையாளக்கூடிய வசதி உண்டு.
(7) ஆடவர்களதும் பெண்களதும் குரலுக்கு ஏற்றவாறு சுருதி சேர்த்து வாசிக்கும் வசதி கொண்டு விளங்குகின்றது.

## வயலின் வாத்தியத்தை வாசித்து பிரபல்யம் பெற்ற கலைஞர்கள் பின்வருமாறு:

கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை
சீர்காழி நாராயண சுவாமிப்பிள்ளை
துவாரம் வெங்கடசாமி நாயுடு
மைசூர் சௌடையா
தஞ்சை வடிவேற்பிள்ளை
புதுக்கோட்டை நாராயணசாமி ஐயர்
டி.என். கிருஷ்ணன்
லால்குடி ஜெயராமன்
எம்.எஸ். கோபால கிருஷ்ணன்
குன்னக்குடி வைத்தியநாதன்
சந்திர சேகரன்
கன்யா குமரி
மற்றும் இலங்கையைச் சேர்ந்த
புத்துவாட்டி சோமு,
ஜீ. சண்முகானந்தம்,
கலாசூரி T.V. பிச்சையப்பா ஆகியோர்.

## வயலின் (Violin)




### பாகங்கள்

1. உடல் பாகம் (The body)
2. ஸ்வரப் பலகை (The finger board)
3. பிருடைப் பெட்டி (The peg box)
4. தலைப்பகுதி (Scroll)
5. மேல் பலகை (The belly)
6. கீழ்ப்பலகை (The back)
7. விலாப்பலகை (Ribs)
8. 2 துளைகள் (F holes)
9. டெயில் பின் (Tail pin)
10. டெயில் பீஸ் (Tail piece)
11. குதிரை (The bridge)
12. ச்ருதித் திருகு (Screw adjuster)
13. வாசிக்கும் தந்திகள் (Four strings)
14. வில்லின் திருகு (The bow screw)
    - A வில்லின் ரோம இணைப்பு
    - B குதிரை ரோமம்
    - C வில் குச்சி

**தேர்ச்சி** **5.0 :** கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டினையும் விளக்குவார்.

**செயற்பாடு** **5.1.1 :** தியாகராஜசுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** :
- தியாகராஜாவின் சுவாமிகளின் படம்
- இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம் 5.1.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 5.1.1** :
- தியாகராஜ சுவாமிகளின் உருவப்படத்தைக் காட்சிப் படுத்துக.
- இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தோ அல்லது தியாகராஜ சுவாமிகளின் உருப்படியை ஆசிரியர் பாடிக் காட்டியோ அவதானிக்கச் செய்க.
- அவதானித்தவை தொடர்பாக கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • சங்கீதமும் மூர்த்திகளுள் முதன்மையான இவரது, |
| • வாழ்க்கைக்காலம் |
| • பிறந்த இடம் |
| • பெற்றோர் |
| • கல்வி |
| • இசைப்பணி |
| • வாழ்க்கைச் சம்பவங்கள் |
| • முத்திரை |
| • சமகால வாக்கேயகாரர்களும் சீடர்களும் |
| • இறுதிக் காலம் |

**(20 நிமிடங்கள்)**

**படி 5.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப, நான்கு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் செயற் பத்திரத்தைஇணைப்புடன் வழங்குக.

- கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப மாணவர் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்க.

**(30 நிமிடங்கள்)**

படி 5.1.3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தத்தம் பேறுகளை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்து கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் மீளவும் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

- காலம் : 1767 - 1847
- இடம் : தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூரில் 1767 ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி பிறந்தார்.
- பெற்றோர்: தெலுங்குப் பிராமண குலத்தைச் சேர்ந்த இராமப் பிரம்மம் என்பவருக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார்.
- கல்வி : இளமையில் தமது தாயிடமிருந்து புரந்தரதாஸரின் உருப்படிகள் பலவற்றைக் கற்றார்.
  தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் தந்தையாரிடம் கற்று இரு மொழிகளிலும் வல்லவரானர்.
  சொண்டி வீணை வெங்கடரணய்யரைக் குருவாகக் கொண்டு ஒரு வருடத்திலேயே இசை நுணுக்கங்கள் பலவற்றையும் கற்று குருவின் ஆசிரியைப் பெற்றார்.
- இசைப்பணி:
  - ஸ்ரீ இராம பட்டாபிஷேகக் காட்சியைப் காணும் பேறு பெற்ற தியாகராஜ சுவாமிகள், அடாணா இராகத்தில் ''பாலகனகமய'' என்ற அனுபல்லவியுடன் ஆரம்பித்து 'ஏலநீதயராது' என்ற கீர்த்தனையைப் பாடினார். இதுவே முதன் முதல் பாடிய உருப்படியுமாகும்.
  - ஆரம்ப காலத்தில் சுவாமிகள் இயற்றிய உருப்படிகளில் அனேகமானவை திவ்யநாமக் கீர்த்தனை தனிச் சரணத்தையுடைய கிருதிகள், ஸ்ரீ ராமரின் மேல் அமைந்த தோத்திரங்களுமாகும்.
  - பல தலங்களுக்கும் யாத்திரை செய்து கொத்துக் கீர்த்தனைகள் ஆக்கினார். உதாரணம்: திருவொற்றியூர் பஞ்சரத்தினம், கோவூர் பஞ்சரத்தினம்... போன்றவை.

- கன ராகங்களான நாட, கௌள, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகியவற்றில் பஞ்சரத்தினக் கீர்த்தனங்கள் இயற்றிய பெருமை பெற்றவர்.
- சங்கதிகளுடன் கூடிய க்ருதிகளை முதன் முதலில் இயற்றிவயவராவர்.
- இசை நாடகங்களை அமைந்துள்ளார். உதாரணம்: பிரகலாத பக்தி விஜயம், கீதாராம விஜயம், நௌகா சரித்திரம்
- இசை நாடகங்களை அமைந்துள்ளார். உதாரணம்: பிரஜலாத பக்தி விஜயம், சீதாராம விஜயம், நௌகா சரித்திரம்
- இராமாயணத்தை 24 000 கீர்த்தனைகளாகப் பாடினார்.
- ஏராளமான இசை உருப்படிகளை இயற்றியவர்களுள் முதன்மையானவர்.
- ஸ்வாமிகள் நரஸ்துதி செய்யவில்லை.
- பல அபூர்வ இராகங்கள், இவரின் பிரசித்திக்கு வந்துள்ளன.

- வாழ்க்கைச் சம்பவங்கள்
  - திருப்தியை அடைந்து ஏழுமலையானைத் தரிசிக்க சென்றபோது திரை தடையாக இருந்தது. தெரதீயகராதர் எனும் கிருதியைப் பாடி முடிந்ததும் அற்புதமாகத் திரை அகன்றது.
- முத்திரை
  - தியாகராஜ, தியாகராஜனுத, தியாகராஜ வினுத என்பவையாகும்.
- சமகால வாக்கேயகாரர்களும், சீடர்களும்
  - கோபால கிருஷ்ணபாரதியார், சியாமா சாஸ்திரிகள் தியாகராஜ சுவாமிகளைச் சந்தித்து தாமியற்றிய பாடல்களைப் படிக் காட்டி மகிழ்ந்தார்கள்.
- சுவாமிகளின் சீடர்களிற் வீணைக்குப்பையர், வாலாஜாபேட்டை போன்றோர் சிலராவர்.
- இறுதிக் காலம்
  - இறைபதம் எய்துவதற்கு முதல்நாள் சிஷ்யர் களை அழைத்து தான் மறுநாள் ராமரின் பாதார விந்தங்களை அடையப் போகிறேன் நீங்கள் தொடர்ந்து பஜனை செய்யுங்கள் எனக் கூறி, இரு க்ருதிகளைப் பாடி யோக நிலை யில் அமர்ந்தார். குறிப்பிட்ட நேரம் வந்ததும் சுவாமிகளின் தலையில் இருந்து ஓங்கார ஒலியுடன் ஒளிப்பிளம்பு கிளம்பி வடதிசை நோக்கிச் சென்று மறைந்தது.

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- தியாகராஜ ஸ்வாமிகளின் வாழ்க்கைக் காலம், பெற்றார் பெயர், பிறந்த இடம் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
- ஸ்வாமிகளது இசைப்பயிற்சி பற்றியும் ஹரிதாஸ் சுவாமிகளின் உபதேசத்தால் இராம தரிசனம் கிடைத்தமை பற்றியும் விளக்குவார்.
- இவர் இசை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவர்.
- 'க்ருதி' என்ற உருப்படி இவரால் பிரபல்யம் அடைந்ததென்பதைக் குறிப்பிடுவர்.
- தியாகராஜ ஸ்வாமிகள் ஓர் சிறந்த நாதயோகி என்பதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.1

### குழு 1

தியாகராஜ ஸ்வாமிகளின் இளமைக்காலப் பகுதியை

1. வாழ்க்கைக்காலம்
2. பெற்றார்
3. குடும்பம்
4. ஆரம்ப இசைக்கல்வி

ஆகிய அம்சங்களின் கீழ் தொகுத்து எழுதுக.

### குழு 2

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் உருப்படிகளை இயற்றுவதற்குக் காரணமாக இருந்த ஹரிதாஸ் சுவாமிகளிடம் உபதேசம் பெற்ற சம்பவத்தையும், அதன்பின் அவர் ஆற்றிய தொண்டுகள் பற்றியும் குறிப்பிட்டு எழுதுக.

### குழு 3

(1) தியாகராஜ ஸ்வாமிகள் இயற்றிய கொத்துக் கீர்த்தனைகளின் விபரங்களை உதாரணத்துடன் எழுதுக.

(2) ஸ்வாமிகளின் சீடர்கள் பற்றியும் அவரது இறுதிக் காலச் சம்பவங்கள் பற்றியும் சுருக்கமாகத் தருக.

### குழு 4

(1) "ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஓர் சிறந்த நாதயோகி" என்பதற்கு எடுத்துக்காட்டாக அவரது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை ஆதாரம் காட்டி நிறுவுக.

# தியாகராஜர்
## (கி.பி. 1767 - கி.பி. 1847)

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான இவர் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவாரூரில் 4.5.1767 அன்று (ஸர்வஜித் வருஷம், சித்திரை மாதம் 25 - ஆம் தேதி) கடக லக்னத்தில் பூச நட்சத்திரத்தில் முலக நாடு ப்ராம்மணரும் வேதசாஜ்த்ரங்களில் நிபுணருமான ராமப்பரம்மம் என்பவருக்கும் ஸீதம்மாவிற்கும் முன்றாவது மகனாகப் பிறந்தார். இவருக்கு பஞ்சாபகேசன், ராமநாதன் என்ற இரு மூத்த சகோதரர்கள் உண்டு. இவருடைய தந்தைவழி பாட்டனார் கிரிராஜகவி என்னும் பெயர் கொண்ட தஞ்சாவூர் ஸமஸ்தானக் கவி ஆவார். இவருடைய தாய்வழி பாட்டனார் வீணை காளஹஸ்தீப ஐயர் ஆவார். கிரிராஜகவி அவர்கள் பல பக்தி கீர்த்தனங்கள், யட்சஷ கானங்கள் முதலியன இயற்றியவராவர்.

தியாகராஜர் சிறு வயதில் திருவாரூரில் கல்வி கற்றார். பின் ராமப்ரம்மம் குடும்பம் திருவையாருக்கு குடியேறியது. அங்கு தியாகராஜர் வடமொழி மற்றும் வான சாஸ்திரம், தர்க சாஸ்திரம், இராமாயணம் இவைகளைக் கற்றார். மேலும் புரந்தரதாஸர், பத்ராசலம் ராமதாஸர் கீர்த்தனைகளை சிறந்த பாடகியான தன் தாயாரிடமிருந்து கற்றார். இதற்கிடையில் தியாகராஜரின் எட்டாவது வயதில் அவருக்கு உபநயனம் செய்வித்தனர். சிறு வயதிலேயே தியாகராஜருக்கு ராமபக்தி அதிகமாக இருந்து வந்தது. மேலும் கேள்வி ஞானத்திலேயே பல இசை உருப்படிகளை இசைக்கும் திறமையும் இருந்து வந்தது. தன் தந்தையின் பூஜைக்கு உதவும் போதும் மற்ற வீட்டுக் காரியங்கள் செய்யும்போதும், தாம் கற்ற பாடல்களை இசைத்துக் கொண்டிருப்பார். மேலும் அவருக்கு சுலபமாக கீர்த்தனைகள் இயற்றும் தன்மையும் தானாகவே ஏற்பட்டது. தன் முதல் பாடலான 'நமோ நமோ ராக வாய அனிசம்' தேஸ்ய தோடி ராகத்தில் அவ்வாறுதான் சுலபமாக இயற்றினார்.

தியாகராஜர் தன் தந்தை செய்யும் பூஜைக்கு பூ பறிப்பதற்காக தோட்டத்திற்குச் செல்லும் வழியில் ஸங்கீத வித்வான் ஸொண்டி வேங்கடரமணய்யா வீட்டின் முன் நின்று அவரது இசையைக் கேட்பது வழக்கம். இதை அறிந்த இவர் தந்தை ஸொண்டி வேங்கடரமணய்யாவிடம் தியாகராஜரை அவரது சிஷ்யனாக சேர்த்துவிட்டார்.

தியாகராஜர் ஒரு வருடத்திலேயே இசையை நன்கு கற்று புலமை பெற்றார். ஸொண்டி வேங்கடரமணய்யா இவரை ஸங்கீத வித்வான்கள் முன்னிலையில் பாட சொன்னபோது 'தொரகுனா இடுவண்டி ஸேவ' எனும் பிலஹரி ராகக் க்ருதியை இசைத்து பாராட்டைப் பெற்றார். இவருக்கு 18 வயதில் திருமணம் நடைபெற்றது. இதற்கு சில காலம் பின்னர் இவர் பெற்றோர்கள் மறைந்தனர்.

பிதுரார்ஜித சொத்தின் பாகமாக தியாகராஜருக்கு திருவையாறு திருமஞ்ஜன வீதியில் ஒரு வீடும், ராமபிரானின் ஏகபீட விக்ரமும் கிடைத்தது.

*இவர் தினமும் உஞ்சவிருத்தி பஜனையை தம் சீடர்களுடன் செய்து வந்தார்*

தியாகராஜருடைய 18வது வயதில் காஞ்சீபுரம் ஹரிதாஸ ஸ்வாமிகள் இவரிடம் வந்து ராமநாமத்தை 96 கோடி முறை ஜபிக்கும்படி கூறவே அந்த பணியை 21 வருடங்களில் முடித்தார். முடித்த நாளில் இவருக்கு ஸ்ரீ ராமர் தரிசனம் தந்தார். உடனே தியாகராஜர் 'ஏலாநீதயராது' எனும் அடானா ராக பாடலை இயற்றிப் பாடினார்.

நாரதர் துறவி வேடத்தில் தியாகராஜர் வீட்டிற்கு வந்து அவர் இசையைக் கேட்டு பின் 'ஸ்வரார்ணவம்', 'நாரதீயம்' மற்றும் பல கிரந்தங்களை இவரிடம் வைத்து விட்டு மதிய உணவிற்கு திரும்பிவருவதாகக் கூறிச் சென்று விட்டார். இவர் வராது போகவே தியாகராஜர் ஏமாற்றமடைந்தார். அன்று அவர் கனவில் நாரதர் தோன்றி தானே காலையில் வந்த துறவி என்று கூறி கிரந்தங்களை பரிசாக ஏற்குமாறும் கூறினார். தியாகராஜர் கிரந்தங்களினால் பயனுற்று விஜய ஸ்ரீ ராகத்தில் 'வர நாரத' என்ற க்ருதி, தர்பார் ராகத்தில் நாரத குருஸ்வாமி' என்ற க்ருதி, கானடா ராகத்தில் 'ஸ்ரீ நாரத நாத ஸரஸீருஹ' என்ற க்ருதி, அடானா ராகத்தில் 'நாரத கான லோல' என்ற க்ருதி முதலியவற்றை செய்து தன் நன்றியைத் தெரிவித்தார்.

ஒரு முறை தஞ்சாவூர் மஹாராஜா தன் மீது பாடல் இயற்றுமாறும் அதற்கு நிறைய தங்கத்தைத் தருவதாகவும் தியாகராஜரிடம் வேண்டுகோள் விடுவித்தார். தியாகராஜர் இதை மறுத்து 'நரஸ்துதி செய்யேன்' என்று கூறி கல்யாணி ராகத்தில் 'நிதி சால ஸுகமா' எனும் க்ருதியை இயற்றினார். இவருடைய சகோதரர்கள் மகாராஜாவின் வேண்டுகோளை தியாகராஜர் ஏற்காததால் கோபடைந்து தியாகராஜருடைய ஸ்ரீ ராம விக்ரஹத்தை காவிரி ஆற்றில் எறிந்து விட்டார்கள். தியகாகராஜர் வருத்தமுற்று 'எந்து தாகி நாடோ' என்று தோடி ராகத்திலும் 'நேநெந்து வெதகுதுரா' என்று கர்னாடக பெஹாக் ராகத்திலும் 'ஏபாபமு ஜேஸிதினோ' என்று அடானா ராகத்திலும் பாடினார். இரண்டு மாதங்களுக்குப் பின் விக்ரஹத்தை தியாகராஜர் தேடிக் கண்டெடுத்து ஆனந்தம் கொண்டு பிலஹரி ராகத்தில் 'கனு கொண்டினி' எனும் க்ருதியையும், ஆஹிரி ராகத்தில் 'சல்லரே' எனும் க்ருதியையும் இயற்றிப் பாடினார்.

ஒருமுறை திருவாங்கூர் மஹாராஜா இவருக்கு ஸமஸ்தான வித்வான் பதவியை தருவதாகக் கூற தியாகராஜர் 'பதவினி ஸதபக்தியு' என்ற ஸாளக பைரவி ராக க்ருதியை இயற்றி ராமனிடத்தில் வைக்கும் பக்தியே சிறந்த உண்மையான பதவி என்று பதில் அளித்தார்.

தியாகராஜரின் துணைவியார் கல்யாணமாகி 5 வருடத்தில் காலமாகவே தியாகராஜர் மறுவிவாகம் செய்து கொள்ள அவருக்கு ஸீதாலட்சுமி எனும் மகள் பிறந்தாள்.

ஸீதாலட்சுமியின் கல்யாணத்திற்கு தியாகராஜருடைய சீடரான வாலாஜாபேட்டை வேங்கடரமண பாகவதர் ராமபட்டாபிஷேக படத்தை வரைந்து அதை பரிசளிக்க திருவாரூருக்கு நடந்து வந்தார். தியாகராஜர் ராமரே நடந்து வந்ததாக பாவித்து 'நனுபாலிம்ப நடசிவச்சிதிவோ' எனும் மோஹன ராக க்ருதியை இசைத்தார்.

ஒரு முறை திருப்பதிக்கு தரிசனம் செய்ய சென்றபோது திரை மூடியிருந்ததால் 'தெர தீயகராதா' எனும் கௌளிபந்து ராகக் க்ருதியை இசைக்க திரை விலகியது. பின் *'வேங்கடய நின்னு'* என்னும் மத்யமாவதி ராக பாடலை இயற்றி இசைத்தார்.

ஸ்ரீரங்கத்திற்கு விஜயம் செய்து 'ஓரங்கஸாயி' 'ராஜுவெடல ஜூதாமுராரே' எனும் க்ருதிகளை ஸ்ரீரங்கநாதர் மேல் இயற்றினார்.

1834 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தை சேர்ந்த உபநிஷத் ப்ரம்மம் இவரை காண விருப்பம் தெரிவிக்க இவர் காஞ்சீபுரத்தை அடைந்தார். அங்கு சில நாட்கள் தங்கி பஜனைகள் செய்து வரதராஜர் மீது க்ருதிகள் இயற்றினார்.

பின் வாலாஜாபேட்டை, புத்தூர், சோளிங்கர், லால்குடி, சென்னை முதலிய ஊர்களுக்குச் சென்று சென்னையில் பந்தர் தெருவில் உள்ள கோவூர் சந்தரேச முதலியாரின் விருந்தினராகத் தங்கி, கௌரவிக்கப்பட்டு அங்கு தேவகாந்தாரி ராகத்தை 8 நாட்கள் இசைத்தார். பின் திருவல்லிக்கேணி பார்தஸாரதி கோவிலுக்குச் சென்று காபி ராகத்தில் 'சாரி வெடலின பார்தஸாரதி' எனும் க்ருதியை இசைத்தார். பின் தன் சீடரான வீணை குப்பய்யரின் வேண்டுகோளுக்கிணங்க திருவொற்றியூர் சென்று அங்கு தங்கி *'திருவொற்றியூர் பஞ்சரத்னம்'* எனும் கீழ்க்கண்ட க்ருதிகளை இயற்றினார்.

## திருவொற்றியூர் பஞ்சரத்ன க்ருதிகள்

| எண் | உருப்படியின் பெயர் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | ஸுந்தரிநீ | கல்யாணி | ஆதி |
| 2. | ஸுந்தாரி நன்னிந்தரிலோ | பேகட | ரூபகம் |
| 3. | ஸுந்தரினி தெலுஸு கொண்டி | சுத்தஸாவேரி | ஆதி |
| 4. | ஸுந்தரி நின்னு | ஆரபி | மிஸ்ரசாபு |
| 5. | கன்னதல்லி | ஸாவேரி | ஆதி |

பின் சுந்தரேச முதலியார் வேண்டுகோளின் பேரில் கோவூர் சென்று அங்குள்ள ஸுந்தரேஸ்வரர் மீதும் பஞ்சரத்ன க்ருதிகள் இயற்றினார். அவை *கோவூர் பஞ்சரத்ன க்ருதிகள்* என அழைக்கப்படும்.

அவை:

## கோவூர் பஞ்சரத்ன க்ருதிகள்

| எண் | உருப்படியின் பெயர் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | ஸம்போ மஹாதேவ | பந்துவராளி | ரூபகம் |
| 2. | ஈவஸ்த | ஸஹானா | ஆதி |
| 3. | கோரிஸேவிம்பராரே | கரஹரப்ரிய | ஆதி |
| 4. | நம்மி வச்சின | கல்யாணி | ரூபகம் |
| 5. | ஸுந்தரேஸ்வருனி | சங்கராபரணம் | ஆதி |

இதைத்தவிர லால்குடி பஞ்சரத்னம், ஸ்ரீரங்க பஞ்சரத்னம் ஆகிய சேஷத்ர க்ருதிகளையும் இயற்றியுள்ளார். மேலும் தன் சீடர்களின் அப்பியாசத்திற்காக உயர்ந்த தாது செறிவும், ஸாகித்ய பாவமும் உள்ள கனராக பஞ்சரத்னம் என்னும், தொகுதி க்ருதியை இயற்றினார். அவை:

## கனராக பஞ்சரத்னம்

| எண் | பாடல்கள் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | ஜகதானந்தகாரக | நாட்டை | ஆதி |
| 2. | துடுகுகல | கௌள | ஆதி |
| 3. | ஸாதிஞ்செனே | ஆரபி | ஆதி |
| 4. | கனகனருசிரா | வராளி | ஆதி |
| 5. | எந்தரோமஹானுபாவுலு | ஸ்ரீ | ஆதி |

த்யாகராஜர் தன் காலத்தில் வாழ்ந்த ஆனந்த பைரவி ராகத்தில் மிகத் திறமை பெற்ற திருபுவனம் ஸ்வாமிநாதய்யரின் வேண்டுகோளுக்கிணங்க 'ஆனந்த பைரவி ராகத்தில் க்ருதிகளை இனி இயற்றேன்.' என வாக்குறுதி தந்தார். இதற்கு முன் தியாகராஜர் ஆனந்த பைரவி ராகத்தில் மூன்று க்ருதிகளே இயற்றியிருந்தார். தியாகராஜர் கோவிந்தாசார்யரின் 72 மேளகர்த்தா பத்ததியை பின்பற்றி சுமார் 25,000 உருப்படிகளை இயற்றியுள்ளார். பல புதிய ராகங்களை ஏற்படுத்தி பல அபூர்வ ராகங்களிலும் க்ருதிகளை இயற்றினார். இவருடைய அங்கித முத்திரை 'தியாகராஜ', தியாகராஜனுத, தியாகராஜவினுத என்பதாகும்.

மேலும் ப்ரஹலாத பக்தி விஜயம், ஸீதாராம விஜயம், நௌகா சரித்திரம் முதலிய இசை நாடகங்களையும், உத்ஸவ சம்பிரதாய கீர்த்தனைகள், திவ்யநாம கீர்த்தனைகள் முதலியவற்றையும் இயற்றியுள்ளார். மேலும் ஸதராகரத்ன மாலிகா என்ற 100 ராகங்களில் அமைந்த 100 பாடல்களின் தொகுப்பை இயற்றியுள்ளார்.

இவருடைய இசை நாடகங்கள் கீர்த்தனைகள், க்ருதிகள், தருக்கள், கத்யாங்கள், பத்யாங்கள், உத்பலமாவாக்கள், த்விபதிகள் போன்ற இசை வகைகளையும் தர்ணிகைகள் என்ற இலக்கிய உருவகைகளையும் கொண்டவை ஆகும்.

தாதுவுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து ஸங்கதிகளை க்ருதிகளில் முதலில் அமைத்தவர் தியாகராஜரே ஆவார். ராகபாவத்தையும் ஸாஹித்ய அர்த்தத்தை வெளிப்படுத்தவும் ஸங்கதிகள் பயன்படுகின்றன. இவருடைய உருப்படிகள் ஸங்கீத பாவம், பக்தி பாவம் நிரம்பியவை. இவருடைய க்ருதிகளை திராட்சை ரஸத்திற்கு ஒப்பிடுவர். அதாவது எளிதாகப் பாடலாம்.

தன் இரண்டாவது மனைவி இறந்ததும், தியாகராஜர் சேஷத்ராடனம் செய்துவிட்டு கடைசியாக திருவாரூர் வந்தடைந்தார். அங்கு சன்யாஸ வாழ்க்கை வாழ்ந்து ஸ்ரீராமரிடம் தன்னை அவருடைய பாதார விந்தங்களில் சேர்த்துக்கொள்ளுமாறு முறையிட்டார். ஒரு நாள் ஸ்ரீராமர் கனவில் தோன்றி 'இன்னும் 10 மாதங்களில் என்னை வந்தடைவாய், உனக்கு மறு ஜென்மம் உள்ளது.' எனக்கூற தியாகராஜர் ஸ்ரீ ராமரிடம் ''எனக்கு மறு ஜென்மம் வேண்டாம், என்னை தங்கள் பாதாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்ளுங்கள்." என முறையிட்டு 'ஷீணமை திருக' என்ற முகாரி ராகப் பாடலையும் 'மோஷமு கலதா' என்ற ஸாரமதி ராகப் பாடலையும் ஸ்ரீராமரைப் பிரார்த்தித்து இசைத்தார். பத்து மாதங்களுக்கு பத்தே நாட்கள் இருக்கையில் ஸ்ரீராமர் தன் பரிவாரங்களுடன் ஒரு குன்றின் மீது காட்சி அளித்து 'ஸன்யாசம் பெற்றுக்கொள் உன்னை ஐக்யம் செய்துகொள்கிறேன்.' என வாக்கு அளிக்க தியாகராஜர் 'கிரிபை நெல கொன' என்ற ஸஹானா ராக க்ருதியைப் பாடி இவ்விஷயத்தை அனைவருக்கும் தெரியப்படுத்தி பகவான் கட்டளைக்கேற்ப மறு தினமே ஸன்யாஸம் பெற்றார். அப்போது அவருக்கு 'நாதப்ரஹ்மானந்தர்' என்ற பெயர் தரப்பட்டது. அடுத்த நாள் உதயகால வேளையில் 'ஸ்யாம ஸீந்தராங்க' என்னும் தன்யாஸி ராக க்ருதியைப் பாடி 6.1.1847 அன்று (பராபவ வருஷம் மார்கழி மாதம் 24 - ஆம் தேதி புஷ்ய பகுள பஞ்சமி அன்று) பகல் 12 மணிக்கு அனைவர் முன்னிலையிலும் வேத கோஷ, ராம கோஷங்களுக்கு இடையில் 'ஜானகீ காந்தஸ்மரணே' என்று கூறி அனைத்து ஜனங்களும் 'ஜயஜயராமா' என்று கூற பகவானுக்கு முன் நமஸ்கரித்து தன் 80ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய உடல் காவேரி நதிக்கரையில் இவருடைய விருப்பப்படி இவருடைய குரு ஸொண்டி வேங்கடரமணய்யா ஸமாதி அருகே பாவாஸ்வாமி படித்துறையில் அடக்கம் செய்யப்பட்டு ப்ருந்தாவனமும் அமைக்கப்பட்டது. இந்த ஸமாதியின் மேல் 1925ஆம் வருடம் தியாகராஜருக்கு ஒரு கோயில் கட்டப்பட்டது. வருடாவருடம் அங்கு புஷ்ய பகுள பஞ்சமியின்போது தியாகராஜ ஆராதனை நடந்து வருகிறது.

தியாகராஜருக்கு ஸீதாலட்சுமி என்னும் ஒரு மகள் இருந்தாள். அவளுக்கு தியாகராஜன் என்ற குழந்தை இருந்தது. அந்தத் தியாகராஜனும் தன் 35ஆவது வயதில் காலமானபடியால் தியாகராஜருக்கு சந்ததி யாருமில்லை.



இவருடைய முக்கிய சிஷ்யர்கள்

1. வாலாஜாபேட்டை வேங்கடரமண பாகவதர்
2. வீணை குப்பய்யர்
3. தில்லை ஸ்தானம் ராமய்யங்கார்
4. அய்யா பாகவதர்
5. ஸுப்பராம பாகவதர்
6. உமையாள்புரம் க்ருஷ்ண பாகவதர்
7. உமையாள்புரம் ஸுந்தர பாகவதர்

கீழே தியாகராஜருடைய சில உருப்படிகள் தரப்பட்டுள்ளன.

## தியாகராஜருடைய உருப்படிகள்

| எண் | உருப்படியின் பெயர் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | ஸங்கீத ஞானமு | தன்யாஸி | ஆதி |
| 2. | சக்கனி ராஜமார்கமுலு | கரஹரப்ரியா | ஆதி |
| 3. | நாதஜீதா | ஆரபி | ரூபகம் |
| 4. | மானமுலேதா | ஹமீர்கல்யாணி | ஆதி |
| 5. | எவரிமாட | காம்போஜி | ஆதி |

**தேர்ச்சி** **6.0 :** கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வு களை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

**செயற்பாடு** **6.1.1 :** இந்தியாவின் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி அறிவோம்.

**நேரம்** **:** 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- புரந்தரதாஸரின் உருவப்படம்
- 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வாக்கேயக்காரரின் படங்கள்.
- 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல்கள், உருப்படிகள் என்பவற்றின் அட்டவணை
- செயற்பத்திரம் 6.1.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 6.1.1** **:**
- 17ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் 16ஆம் நூற்றாண்டின் இசை வளர்ச்சியிலே முக்கிய பங்காற்றிய புரந்தரதாஸரது இசைத் தொண்டினைத் தொடர்புபடுத்தி 17ஆம், 18ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணியை அறிமுகம் செய்க.

- அறிமுகம் செய்யும்போது 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வாக்கேயகாரரது படங்கள், அவர்கள் இயற்றிய நூல்கள், உருப்படிகளின் அட்டவணையையும், ஒலிப்பதிவு செய்யப்பட்ட உருப்படிகளின் ஒலிநாடாவையும் பயன் படுத்துக.

- மாணவர் அவதானித்த விடயங்கள் தொடர்பாகவும், கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

| |
|---|
| • 17ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இருந்த இசையின் கலாசாரப் பின்னணி.<br>• வெங்கட மகியவர்களின் சதுர்தண்டிப் பிரகாசிகை.<br>• ஷேத்ரக்ஞர் பதம்<br>• பத்ராச்சல ராமதாஸரது கீர்த்தனைகள்<br>• முத்துத்தாண்டவருடைய பேரின்ப பதங்கள்.<br>• கோவிந்தாச்சாரியாரது ஸங்க்ரக சூடாமணி.<br>• அருணாசலக்கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனைகள்<br>• பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளது கீதங்கள்.<br>• பச்சிமிரியம் ஆதியப்பையரது வர்ணம் பல்லவி பாடும் முறை |

- சங்கீத மும்மூர்த்திகள் காலம்
  - சங்கீதத்தின் பொற்காலம்
- கனம் என்னும் மார்க்கத்தை பொப்லிகேசவய்யர் சாதித்துக் காட்டினார்.

**(20 நிமிடங்கள்)**

**படி 6.1.2** : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குக.

• அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்க.

**(30 நிமிடங்கள்)**

**படி 6.1.3** : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.

• குழுவின் பேறுகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- 16ஆம் நூற்றாண்டில் மாயாமாளவகௌளை இராகத்தில் ஆரம்ப வரிசைகள் பாடப்பட வேண்டும் என்ற ஓர் வழக்கத்தைக் கொண்டு வந்து ஓர் புதிய கலாசாரத்தை ஆரம்பித்தமையால் ஸ்ரீ புரந்தரதாஸர் ஆதிகுரு என்றும், கர்நாடக சங்கித பிதாமகர் என்றும் போற்றப்படுகிறார்.
- தற்போது வழக்கத்தில் உள்ள 24 மெட்டுக்களுடன் கூடிய வீணை சர்வராக டேள வீணை என்றும் பெயரால் ராமமாத்தியரால் எழுதப்பட்ட ஸ்வரமேள கலாநிதி என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது.
- 12 ஸ்வரஸ்தானங்களையும், 16 ஸ்வரப் பெயர்களையும் கொண்டு 72 மேளகர்த்தாக்களை வகுத்து வெங்கடமகி அவர்கள் குறிப்பிட்டுள்ளமை இசை வளர்ச்சியில் குறிப் பிடத்தக்க அம்சமாகும்.
- நாயக, நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்ட பதங்களை இயற்றிய ஒரு புதிய கலாசாரத்திற்கு வழிவகுத்தவர் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஷேத்ரக்ஞர் ஆவார்.
- ராகத்தின் மூலம் பக்திப் பிரவாகத்தை ஏற்படுத்தலாம் என்பதற்கு அத்தாட்சியாக பத்ராச்சல ராமதாஸரது கீர்த்தனங்கள் விளங்குகின்றன.

- தமிழில் கீர்த்தனங்களையும் பேரின்பப் பதங்களையும் இயற்றி இசை வளர்ச்சியில் செல்வாக்கினை ஏற்படுத்தியவர் சீர்காழி முத்துத்தாண்டவர் ஆவார்.
- தற்போது நாம் பயன்படுத்தும் கிரம சம்பூர்ண ஆரோகண அவரோகணத்துடன் கூடிய 72 மேளகர்த்தாக்களுக்கு கனகாங்கி ரத்னாங்கி என்னும் பெயர்த் தொகுதியை தனது நூலான சங்கரகூடாமணி என்றும் குறிப்பிட்டவர் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோவிந்தாச்சாரியாராவர்.
- தருக்கள், விருத்தங்கள் மூலம் இராமநாடகம் என்னும் ஓர் இசை நாடகத்தை தமிழில் இயற்றியவர் அருணாசலக்கவிராயராவர்.
- ஆயிரக்கணக்கான கீதங்களை இயற்றி வெயிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் என்னும் பட்டப் பெயரைப் பெற்றவர் பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆவார். இவரும் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவர்.
- இராகம், தானம், பல்லவி பாடுவதில் ஒரு வர்ணமார்க்க தீர்க்கதரிசி என்று போற்றப்படும் பச்சிமிரியம் ஆதியப்பய்யர் ஆவார். இவர் தசவிதகமகங்களுடன் கூடிய விரிபோணி வர்ணத்தை இயற்றிய பெருமை பெற்றவர்.
- இராகங்களுக்கு ஜீவனளித்து அவற்றின் ஸ்வரூபங்கள் அழிந்து போகா வண்ணம் ஆயிரக்கணக்கான உருப்படிகளை இயற்றி அவற்றை இசையுலகிற்கு அளித்தவர்கள் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்கீத மும்மூர்த்திகளாவர். இவர்களது இசைப்பணி இசை வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும்.
- குருகுலவாசம் என்னும் கற்றல் முறைமைக் கலாசாரத்திற்கு வித்திட்டவர்கள் மும்மூர்த்திகளே.
- கிருதிகள், கொத்துக் கீர்த்தனைகள், சமுதாயக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டதுடன் பல அபூர்வ இராகங்களும் தாளங்களும் வழக்கத்திற்கு வந்தனர்.
- சங்கீத மும்மூர்த்திகளின் இசைத் தொண்டினால் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ''சங்கீத வளர்ச்சியில் ஒரு பொற்காலம்'' எனப்போற்றப்படுகிறது.

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- கர்நாடக சங்கீத பிதாமகர் எனப் புரந்தரதாஸர் அழைக்கப்படுவதன் காரணத்தைக் கூறுவர்.
- 17ஆம் நூற்றாண்டின் இசை வளர்ச்சியில் கலாசாரப் பின்னணியின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுவர்.
- 18ஆம் நூற்றாண்டில் 72 மேளகர்த்தாக்களுக்குத் தற்போது வழங்கும் பெயர்களைக் கொடுத்த வாக்யேகாரர் பெயரையும் அவர் இயற்றிய நூலின் பெயரையும் கூறுவர்.
- சங்கீத மும்மூர்த்திகள் காலம் கர்நாடக இசை வளர்ச்சியில் ஒரு பொற்காலம் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 6.1.2.1

- வகுப்பிலுள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து உரிய செயற்பத்திரங்களை இணைப்புடன் வழங்குக.

### குழு 1

17ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் அதாவது 16ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசை வளர்ச்சியின் கலாசாரப் பின்னணியைத் தொகுத்துக் கூறுக.

### குழு 2

17ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசை வளர்ச்சியின் கலாசாரப் பின்னணியை விளக்குக.

### குழு 3

18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணியை விளக்குக.

### குழு 4

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் என்று போற்றப்படுவதற்கான கலாசாரப் பின்னணியை விபரிக்குக.

**இணைப்பு**

# இந்தியாவில் 17ஆம் 18ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

17 ஆம் நூற்றாண்டின் பின்னணியைப்பற்றி அறிவதற்கு முன்னர் 16ஆம் நூற்றாண்டின் இசை வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும்.

''சங்கீத பிதாமஹர்" என்று அழைக்கப்படும் புரந்தரதாஸர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். கர்நாடக இசை வளர்ச்சியில் முக்கிய இடத்தை வகிப்பவரான புரந்தரதாஸர் இசைப் பயிற்சிக்குரிய ஸ்வராவளிகள், அலங்காரங்கள், கீதங்கள் முதலியவற்றை இயற்றினார். அப்பியாச கானத்துக்குரிய வழிமுறைகளையும் வகுத்து ''ஆதிகுரு" என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். ''புரந்தரவிட்டல" என்பது இவரது முத்திரை. கன்னடமொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும், தேவர் நாமாக்களையும் புரந்தரவிட்டல என்ற முத்திரையுடன் இயற்றினார். மாயாமாளவகௌளை ராகத்திலேயே ஸ்வரவளி வரிசைகளைப் பாடவேண்டும் என்ற முறையைக் கொண்டு வந்தவர் இவரே! லக்ஷிய சங்கீதப் பொலிவின் தன்மை முழுமையாக வளர்ச்சியுற அத்திவாரமாக அமைந்த காலம் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகள் என்றால் மிகையாகாது.

லக்ஷியத்துக்கு தக்க லக்ஷணம் அமைதலே முறை என்ற அடிப்படையிலே ராமாமாத்யரால் கி.பி. 1550 இல் எழுதப்பட்டது. ''ஸ்வரமேளகலாநிதி" என்னும் சமஸ்கிருத கிரந்தம் இக்கிரந்தம் அக்காலத்தில் சங்கீத கலை சம்பந்தமாக நிலவி வந்த ஐயப்பாடுகளை நீக்கும் வகையில் அமைந்திருந்தது. ராமாமாத்யரும் தான் குறித்த 20 மேளங்களும் மாயாமாளவகௌளை இராகமே மிகச்சிறந்தது எனக் குறிப்பிடுகிறார். இது ஆரம்ப வரிசைகட்குத் தக்கராகம் மாயாமாளவகௌளை என்ற புரந்தரதாஸரின் முடிவிற்கும் ஏற்புடையதாக உள்ளது எனலாம்.

கி.பி. 1635 இல் சங்கீத வளர்ச்சிப்படியில் ஒரு நிறைவினை அளிப்பது வெங்கடமகியின் சதுர்ந்தண்டி பிரகாசிகை என்னும் கிரந்தம் தோன்றியதாகும். இந்நூலில் வெங்கடமகியவர்கள் 12 ஸ்வரஸ்தானங்களையும் 16 ஸ்வரப் பெயர்களையும் ஆதாரமாகக் கொண்டு 72 மேளகர்த்தாக்களை வகுக்கும் வழிகளை விபரித்துள்ளார். இது கர்நாடக இசை வளர்ச்சியின் பெரும் சாதனையாகும்.

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷேத்தரக்ஞர் நாயக, நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கு மொழியில் ஆயிரக்கணக்கான பதங்களை இயற்றியுள்ளார். பக்திமானாக விளங்கிய பத்ராசல இராமதாஸ் இயற்றிய கீர்த்தனைகள் ராகத்தின் மூலம் பக்திப் பிரவாகத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கு அத்தாட்சியாக விளங்குகின்றன.

முத்துத்தாண்டிடவரின் காலத்தில் தெய்வத்தின் புகழ்பாடும் கீர்த்தனைகள் புதிய இசைவடிவத்தில் தமிழில் இயற்றப்பட்டன. இவை பேரின்பப் பதங்கள் எனப் போற்றப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டில் கோவிந்தாச்சாரியாரால் இயற்றப்பட்ட சங்கராகூடாமணி எனும் சமஸ்கிருத நூலில் சம்பூர்ண, கிரமசம்பூர்ண ஆரோகண, அவரோஹணத்துடன் கடபயாதி ஜங்கியை அனுசரித்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவை நாம் தற்போது பாவிக்கும் கனகாங்கி - ரதனாங்கி பெயர்த் தொகுதியாகும். இதன் மூலம் ஜனக, ஜன்ய வேறுபாடுகள் உணர்த்தப்பட்டதுமன்றி ராக அமைப்பையும் அறிந்துகொள்ளக் கூடியதாயிற்று.

மும்மூர்த்திகள் பல அபூர்வ இராகங்களையும் தாளங்களையும் வழக்கத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். இவர்கள் காலத்திலேயே கனம் கிருஷ்ணய்யரும் வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராமஜயரும் தமிழில் பதங்கள் இயற்றியுள்ளார்கள். கனம் என்னும் மார்க்கத்தைப் பொப்பிலிகேசவய்யர் அவர்கள் சாதித்துக் காட்டினார்.

சங்கீத மும்மூர்த்திகளில் தியாகராஜர் தெலுங்கிலும், தீஷிதர் வட மொழியிலும் சியாமாசாஸ்திரிகள் தெழுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய மொழியிலும் உருப்படிகள் இயற்றினார். இராகங்களை எந்த அளவுக்குச் சிறப்பாகக் கையாள முடியுமோ அந்தளவிற்கு இசைத் துறையில் கையாண்டுள்ளனர்.

18ஆம் நூற்றாண்டு கர்நாடக இசை வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாகும். இந்நூற்றாண்டில் அருணாசலக்கவிராயரால் இயற்றப்பட்ட இராம நாடக் கீர்த்தனத்தில் விருத்தங்கள், கீர்த்தனங்கள், தருக்கள் என்பன காணப்படுகின்றன. இந்நாடகம் பாமர மக்களிடையே பிரபல்யமாக விளங்கியவை. இதிலுள்ள கீர்த்தனைகள் பண்டைத் தமிழ்ப் பழமொழிகள் பலவற்றைக் கொண்டுள்ளன. இராம நாடகம் தவிர சீர்காழிஸ்தல புராணம், ஹனுமார்பிள்ளைத்தமிழ், சீர்காழிக்கோவை, அசோகமுகி நாடகம் முதலிய நாடகங்களையும் எழுதியுள்ளார். இக்காலப்பகுதியில் திரிகூட இராசப்பக்கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற இசை நாடகமும் பிரபல்யமாக இருந்தது.

சிறந்த லஷ்ய-லஷ்ண வித்துவானாய் விளங்கிய பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆயிரக்கணக்கான கீதங்கள், பிரபந்தங்களை இயற்றியுள்ளார். இதனால் இவர் வெயிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் என்ற சிறப்புப்பெயரையும் பெற்றார்.

சாஸ்திரம் மூலம் கற்ற கமகங்கள் நுட்பங்களைப்பாடிக்காட்டி சீர்ப்படுத்தியவர் பச்சிமிரியம் ஆதியப்பர், தானவர்ண மார்க்க தீர்க்கதரிசி எனச் சிறப்புப்பெற்ற இவர் ராகம் - பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கினை உண்டாக்கினார். இக்காலப் பகுதியில் தானவர்ணம்

என்ற அப்பியாசகான உருப்படி தோன்றியது. தசவிதகமகங்களை வெளிப்படுத்தும் விரிபோணி வர்ணத்தை இயற்றியவரும் இவரே. இவரும் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. இக்காலப்பகுதியில்தான் மும்மூர்த்திகள் தோன்றினார்கள். தியாகராஜ ஸ்வாமிகள், சியாமாசாஸ்திரிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஆகிய மூவரும் தாமியற்றிய ஆயிரக்கணக்கான உருப்படிகள் மூலம் ராகங்கட்கு ஜீவனளித்து அவற்றின் ஸ்வரூபங்கள் அழிந்து போகா வண்ணம் அவற்றை இசையுலகிற்கு அளித்துள்ளனர். இறைவனுடன் நேரில் சம்பாஷித்தவர்கள் வக்கேயகாரத்வத்தின் உச்சநிலையை இவர்களது உருப்படிகளில் காணலாம்.

குருகுலவாசமுறை இக்காலத்தில் வழக்கத்தில் வந்தது. சங்கீத வித்தை தழைத்தோங்கவும் தஞ்சாவூர் ஓர் இசைப்பீடமாகத் திகழவும் இவர்கள் காரணமாக இருந்தார்கள்.

சமுதாய கீர்த்தனை, கொத்துக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டன. க்ருதிகள் இக்காலத்திலேயே இயற்றப்பட்டன. சங்கதிகள் அமைக்கும் முறையை தியாகராஜர் தான் முதன்முதலில் நிர்ணாயித்தார். கவர்ச்சிமிக்க இவரது உருப்படிகள் திராட்சைரசத்திற்கு ஒப்பிடப்படுகின்றன. பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இசையுலகிற்கு அளித்தவர் இவரே!

தீக்ஷிதருடைய க்ருதிகள் ராகபாவம் கொண்டவையாகவும் சௌக காலத்தில் அமைந்தவை யாகவும் காணப்படுகின்றன. மத்திம கால சாகித்தியங்களைத் தமது க்ருதிகளில் சேர்த்துள்ளார். நாளிகோ ராகத்திற்கு இவரது கிருதிகள் ஒப்பிடப்படுகின்றன.

சியாமாசாஸ்திரிகளின் க்ருதிகள் கதலிரசத்திற்கு ஒப்பானவை. இவரால் இயற்றப்பட்ட நவரத்தினமாலிகைக் கிருதிகள் பிரசித்தமானவை. ஸரபநந்தன தாளத்தில் பல்லவி பாடியவர் இவரே. இவரது படைப்புகளில் ஸ்வராட்சர அணிகள் புகுத்தப்பட்டுள்ளன. விலோமசாபு தாளத்தில் உருப்படி இயற்றிய பெருமைமிக்கவர்.

**தேர்ச்சி** **1.0 :** இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.1 :** வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** **1.1.2 :** பல்லிய இசையில் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**ஊ உள்ளீடுகள்** **:**
- பல்லியம் ஒலி/ஒளி பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி
- தொலைக்காட்சிப்பெட்டி
- செயற்பத்திரம் 1.1.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.1.1** **:**
- பல்லியம் பதிவுசெய்யப்பட்ட ஒலி/ ஒளி நாடாக்களைப் போட்டுக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச்/அவதானிக்கச் செய்க.
- செவிமடுத்த / அவதானித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

  - பல்லியம் என்பதன் வரைவிலக்கணம்
  - பல்லியத்தில் இடம்பெறும் வாத்தியங்கள்
  - வாத்திய இசையில்,
    - தாள வாத்தியம்
    - சுருதி வாத்தியம்
    - ஸ்வர வாத்தியம் என்பவற்றை இனங்காணல்
  - நாதத்தைக்கேட்டு வாத்தியங்களை இனங்காணல்
  - மேடையில் வாத்தியங்களின் ஒழுங்கமைப்பு
  - பல்லிய இசை இடம்பெறும் சந்தர்ப்பங்கள்

**(10 நிமிடங்கள்)**

**படி 1.2.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து ஒரே மாதிரியான செயற்பத்திரத்தினை வழங்குக.பல்லியம் பதிவுசெய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்களையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்க.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

படி 1.1.3 : • குழுக்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

• மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- பல வாத்தியங்கள் சேர்ந்து இசைக்கப்படும் இசை நிகழ்ச்சி பல்லியம் எனப்படும்.
- வீணை, புல்லாங்குழல், வயலின், தம்பூரா, மிருதங்கம், கடம், கெஞ்சிரா போன்றவை சேர்ந்து இசைக்கப்படும்.
- ஸ்ருதிக்காக தம்பூராவும், தாளத்திற்காக மிருதங்கள், கடம், கஞ்சிரா போன்ற வாத்தியங்களும் ஸ்வர வாத்தியங்களாக வீணை, வயலின் புல்லாங்குழல் ஆகிய வையும் இசைக்கப்படும்.
- பல்லியத்தில் பல்வேறு வகையான உருப்படிகள் வாசிக்கப் படும்
- பல்லிய இசையில் வாத்தியங்களின் பங்களிப்பு. வாத்தியங்கள் கையாளப்படும் விதம் பற்றிக் கூறல்.
- தனித்துவமான ஒலி மூலம் வாத்தியங்களை இனங்காணல்
- மேடையில் இவ்வாத்தியங்களை உரிய முறையில் ஒழுங்கமைத்தல் போன்றவைகளை விளக்கல்
- கலை விழாக்கள், கோயில் திருவிழாக்களில் இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இசைக்கருவிகள் பல சேர்ந்து இசைக்கப்படும் நிகழ்சியே பல்லியம் என்று கூறுவர்.
- பல்லியம் இசை நிகழ்ச்சியில் வாசிக்கப்படும் வாத்தியங்களைப் பட்டியற்படுத்துவர்.
- வாத்தியங்களின் பங்களிப்பையும், கையாளப்பட்ட விதத்தினையும் குறிப்பிடுவர்.
- தனித்துவமான ஒலி மூலம் வாத்தியங்களை இனங்காண்பர்.

## செயற்பத்திரம் 1.1.2.2

- பல்லியம் இசை பதிவுசெய்யப்பட்ட ஒலிநாடாவை செவிமடுத்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| |
|---|
| • பல்லியம் இசையில் இடம்பெறும் வாத்தியங்கள் எவை? |
| • அவற்றுள் தாளத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வாத்தியங்கள் யாவை? |
| • சுருதிக்காக பயன்படுத்தப்பட்ட வாத்தியம் யாது? |
| • ஸ்வரவாத்தியம் எனக் கருதப்படும் வாத்தியங்கள் எவை? |
| • எவ்வகையான உருப்படிகள் வாசிக்கப்பட்டன? |
| • பல்லிய இசை நிகழ்ச்சி இடம்பெறும் சந்தர்ப்பங்கள் இரண்டு கூறுக? |

**தேர்ச்சி** **1.0 :** இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.2 :** இசை நிகழ்ச்சிகளின் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார்.

**செயற்பாடு** **1.2.2 :** இசை நிகழ்சிகளில் பல்லிய இசையை இரசித்து அனுபவித்ததை விமர்சிப்போம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- பல்லியம் ஒலி/ஒளி பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி
- தொலைக்காட்சிப்பெட்டி
- செயற்பத்திரம் 1.1.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.1.1** **:**
- பல்லியம் பதிவுசெய்யப்பட்ட ஒலி/ ஒளி நாடாக்களைப் போட்டுக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச்/அவதானிக்கச் செய்க.
- செவிமடுத்த / அவதானித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் பல்லிய நிகழ்ச்சி<br>• தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள்<br>  • வாத்திய விருந்து<br>  • கலை விழாக்கள்<br>  • கலை அரங்கம்<br>  • திருவிழாக்கள் |

**(10 நிமிடங்கள்)**

**படி 1.2.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து ஒரே மாதிரியான செயற்பத்திரத்தினை வழங்குக. பல்லியம் பதிவுசெய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்களையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்க.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

படி 1.2.3 : • குழுக்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

• மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- வானொலி மூலம் ஒலிபரப்பாகும் பல்லியம் இசையைக் கேட்டு அதன் தன்மை, தரம், வாத்தியங்களின் பங்களிப்பு, ஒத்திசைவு போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு இரசித்தல்
- பல வாத்தியங்கள் சேர்ந்து ஒலித்தாலும், வாத்தியங்களின் நாதத்தைக்கொண்டு வாத்தியங்களின் வகைகளை இனங்கண்டு இரசித்தல்
- பல்லியம் இசையினூடாக வாசிக்கப்படும் உருப்படிகளை இனங்கண்டு-இரசனையை வெளிப்படுத்தல்.
- தொலைக்காட்சியில் பல்லிய நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்போது பல்வேறு விடயங்களை அவதானித்து இரசித்தல்
- வாசிக்கப்படும் வாத்தியங்களின் வகைகள்
  - சுருதி வாத்தியம்
  - தாள வாத்தியம்
  - ஸ்வர வாத்தியம்
- வாத்தியங்களைக் கையாளும் திறன்
- மேடையில் இவ்வாத்தியங்களின் ஒழுங்கமைப்பு

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- வானொலி, தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பப்படும் பல்லிய நிகழ்ச்சியில் இடம்பெறும் வாத்தியங்களின் வகைகளைக் கூறுவர்.
- பல்வேறு வகையான வாத்திய இசைகள் ஒருங்கு சேர்ந்து இசைப்பதை இரசிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சிகரமான உணர்வை வெளிப்படுத்துவர்.
- வாசிக்கப்படும் பல்வேறு உருப்படிகளை இனங்கண்டு இரசனையை வெளிப்படுத்துவர்.
- தனித்துவமான ஒலி மூலம் வாத்தியங்களை இனங்காண்பர்.

## செயற்பத்திரம் 1.2.2.2

- ஒரே மாதிரியான செயற்பத்திரத்தினை இரு குழுவிற்கும் வழங்குக.

- பல்லிய நிகழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடா ஒன்று தரப்பட்டுள்ளது. அதனை நன்கு செவிமடுத்து இரசித்து, பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி விமர்சனக்கட்டுரை ஒன்று வரைக.

    - நிகழ்ச்சியின் தரம், தன்மை
    - வாத்தியங்களின் பங்களிப்பு
    - பாவம்
    - வாத்தியங்களின் அணிசேர் தன்மை
    - ஒத்திசைவு
    - இரசித்தலினால் பெறும் அனுபவங்கள்
    - குறை நிறைகள்

தேர்ச்சி 1.0 : இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.2 : இசை நிகழ்ச்சிகளின் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார்.

செயற்பாடு 1.2.3 : வெகுசனத்தொடர்பு ஊடகங்கள் மூலம் ஒலி, ஒளி பரப்பப்படும் சாஸ்திரிய சங்கீத சம்பந்தமான நிகழ்ச்சிகளை இரசித்து, அனுபவித்தவற்றை விமர்சிப்போம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடுகள் :
- சாஸ்திரிய சங்கீதம் சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஒலி/ஒளி பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி
- பத்திரிகைகள், சஞ்சிகைகள்
- தொலைக்காட்சிப்பெட்டி
- செயற்பத்திரம் 1.2.2.3

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 1.2.1 :
- வானொலி / தொலைக்கட்சியில் இடம்பெறும் சாஸ்திரிய சங்கீதம் சம்பந்தமான நிகழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்ட ஒலி/ ஒளி நாடாக்களைப் போட்டுக்காட்டி செவிமடுக்கச்/ அவதானிக்கச் செய்க.
- செவிமடுத்த / அவதானித்த விடயங்களினூடாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் இசை நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள்
  - கலை அரங்கம்
  - இராக பாவம்
  - இசைக்கச்சேரிகள்
  - சுருதி லயம்
  - சப்தஸ்வரங்கள்
  - வாத்ய விருந்து

**(10 நிமிடங்கள்)**

படி 1.2.2 :
- வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து ஒரே மாதிரியான செயற்பத்திரத்தினை வழங்குக. இசைக்கச் சேரியில் பதிவுசெய்யப்பட்ட ஒலி நாடாக்களையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்க.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

படி 1.2.3 :

- குழுக்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- வானொலி மூலம் ஒலிபரப்பாகும் இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு அவற்றின் தன்மை, தரம், ஒத்திசைவு போன்ற விடயங்களை விளங்கிக்கொண்டு இரசித்தல்
- தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் இசை நிகழ்ச்சிகளைப் பார்த்து இரசிக்கும்போது கீழ் வரும் விடயங்களை அவதானிக்கலாம் என்பதை விளக்குதல்
  - பாடப்பட்ட விதம்
  - பாடகரின் குரல்வளம்
  - பாவம்
  - அணிசேர் வாத்தியங்கள்
  - பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு
  - நிகழ்ச்சி நேரக்கட்டுப்பாடு
- சாஸ்திரிய சங்கீத உருப்படி வகை, மனோதர்ம இசை, வாத்திய இசை, இராக தாள ஞானம், கச்சேரி இலட்சணப் பாங்கு , தனி இசை, குழு இசை, வாத்ய இசை போன்ற வற்றில் ..... அம்சங்கள்

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- வானொலி, தொலைக்காட்சியில் ஒலி, ஒளி பரப்பப்படும் சாஸ்திரிய இசை சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் கூறுவர்.
- இந்நிகழ்ச்சிகளைக் கேட்டும் பார்த்தும் இசனைத்திறனை வெளிப்படுத்துவர்.
- வாழ்க்கையின் இயந்திரத்தன்மையை நீக்க, சாஸ்திரிய இசை நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலம் மனப்பக்குவத்தையும் இரசனை உணர்வையும் பெறலாம் என்பதனை ஏற்றுக் கொள்வர்.
- தரமான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு/ஒலிப்பதிவு செய்து வேண்டிய சந்தர்ப்பத்தில் (போட்டிகள், விழாக்கள்) பயன்படுத்திக்கொள்வர்.
- எந்தவொரு இசை நிகழ்ச்சியையும் விமர்சனக் கண் கொண்டு பார்க்கும் திறனை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 1.2.2.3

- வானொலியில் ஒலிபரப்பப்பட்ட ஒரு இசைக்கச்சேரியின் ஒலிப்பதிவு நாடா ஒன்று தரப்படுகிறது. இதனை நன்கு அவதானித்துக் கேட்டு இரசித்து பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி விமர்சனக் கட்டுரை ஒன்று எழுதுக.
    - நிகழ்ச்சியின் தரம், தன்மை
    - வெளிப்பாடு
    - பாடகரின் குரல் வளம்
    - பாவம்
    - வாத்தியங்களின் அணிசேர் தன்மை
    - ஒத்திசைவு

**தேர்ச்சி** **2.0 :** பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத்திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பார்.

**செயற்பாடு 2.1.2 :** இசை நாடகத்தை ஆற்றுகைப்படுத்துவோம்.

**நேரம்** : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** :
- ஏற்கனவே தாயாரித்த இசை நாடகப்பிரதிகள், இசை நாடகங்கள் அடங்கிய ஒலிப்பதிவுநாடா, ஒளிப்பதிவு நாடா
- செயற்பத்திரம் 2.1.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.1.1** :
- இசை நாடகங்கள் அடங்கிய ஒலி, ஒளிப்பதிவு நாடாக்களைப் போட்டு அவதானிக்கச் செய்க.
- மாணவர் அவதானித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

> - **ஏற்கனவே தயாரித்த இசைநாடகங்களின் கதையில் வரும் சம்பவங்களுக்கேற்ப பாடல்களுக்கு இசையமைக்க.**
> - **கதாபாத்திரங்களைத் தெரிவு செய்க.**
> - **பொருத்தமான உடை, ஒப்பனை பற்றியும், பக்க வாத்தியங்கள் பற்றியும் கலந்துரையாடுக.**

**(20 நிமிடங்கள்)**

**படி 2.1.2** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(30 நிமிடங்கள்)**

**படி 2.1.3** :
- குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

- இசை நாடகக் கதையில் வரும் சந்தர்ப்பங்களுக்கமைய பாடல்கள் இசையமைக்கப்பட வேண்டும்.
- கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- கதைக்குப் பொருத்தமான பின்னணி இசை வழங்கப்பட வேண்டும்.
- பொருத்தமான முறையில் உடை, ஒப்பனை பயன்படுத்தப் பட வேண்டும்.
- இசை நாடகத்தை நன்கு பயிற்சி பெற்ற பின் ஆற்றுகைப் படுத்த வேண்டும்.

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இசை நாடகங்களில் சம்பவங்களுக்குப் பொருத்தமான முறையில் பாடல்களுக்கு இசையமைக்கும் திறனை வெளிப்படுத்துவர்.
- கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமானவர்களை தெரிவு செய்வர்.
- பொருத்தமான வகையில் பின்னணி இசை, உடை, ஒப்பனை, பக்கவாத்தியங்களைப் பயன்படுத்துவர்.
- இசை நாடகம் ஒன்றினை ஆற்றுகைப்படுத்தும் திறனை வெளிப்படுத்துவர்.
- குழுவாகச் செயற்படும் நன்மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 2.1.2.2

- சகல குழுவிற்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- நீங்கள் ஏற்கனவே பிரதியாக்கம் செய்த இசைநாடகத்தை ஆற்றுகைப்படுத்தும் வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆயத்தம் செய்க.
  - பாடல்களுக்கு இசையமைத்தல்
  - கதாபாத்தரங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்தல்
  - பின்னணி இசை, உடை, ஒப்பனை, பக்கவாத்தியங்கள் என்பவற்றைத் தெரிவு செய்தல்
- இசை நாடகத்தை குழுவாகச் சேர்ந்து நன்கு பயிற்சி செய்க.
- இசை நாடகத்தை ஆற்றுகைப்படுத்துக.

**தேர்ச்சி 3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார்.

**செயற்பாடு 3.1.2 :** மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம், ஹிம்ஹேந்திர மத்திமம் ஆகிய இராகங்களின் ஆரோஹண, ஆரோஹணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

**நேரம் :** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள் :**
- சுருதிப்பெட்டி, வயலின்/ஹார்மோனியம்
- இராகங்களின் ஆரோஹண, அவரோஹண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம்
- செயற்பத்திரம் 3.1.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.1.1 :**
- மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம், ஹிம்ஹேந்திர மத்திமம் ஆகிய இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களைப் பாடிக்காட்டியும், வாத்தியத்தில் வாசித்துக்காட்டியும் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த ஆரோஹண, அவரோஹணங்களின் இராகங்களை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட இராகங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.1.2 :**
- வகுப்பிலுள்ள மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

- ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தல்களுக்கேற்ப ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 3.1.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனையவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்கள் மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- மாயாமாளவகௌளை ஆ: ஸரிகமபதநிஸ் } 15வது
  அவ: ஸ்நிதபமகரிஸ } மேளம்
  ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம்
- மோகனம் ஆ - ஸரிகபதஸ் } 28வது ஹரிகாம்போதி
  அவ- ஸ்தபகரிஸ } யின் ஜன்னியம்
  ஸ்வரஸ்தானங்கள்: ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம்
- சங்கராபரணம் ஆ - ஸரிகமபதநிஸ் } 29வது
  அவ - ஸ்நிதபமகரிஸ } மேளம்
  ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்
- ஹிம்ஹேந்ரமத்திமம் ஆ: ஸரிகமபதநிஸ் } 57வது
  அவ: ஸ்நிதபமகரிஸ } மேளம்
  ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம்
- ஒவ்வொரு இராகத்தினதும் ஆரோகண, அவரோஹணத்தை மாணவருடன் சேர்ந்து பாடுக.
- குறிப்பிட்ட இராகங்களில் சிறு சஞ்சாரங்களையமைத்துப் பாடுக.

**(10 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம், ஹிம்ஹேந்திரமத்திமம் ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தையும் ஸ்வரஸ்தானங்களையும் கூறுவர்.
- மாயாமாளவகௌளை, சங்கராபரணம், மோகனம், ஹிம்ஹேந்தரமத்திமம் ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவர்.
- ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடுவதன் மூலம் குறிப்பிட்ட இராகங்களை இனங்காண்பர்.
- குறிப்பிட்ட இராகங்களில் சஞ்சாரங்களை அமைத்துப் பாடும் திறனை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 3.1.2.2

- ஒவ்வொரு மாணவருக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

- மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம், ஹம்ஹேந்திரமத்திமம் ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் குழு நிலையிலும், தனியாகவும் பாடிப் பயிற்சி செய்க.
- குறிப்பிட்ட இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.
- மேற்குறிப்பிட்ட இராகங்களில் சிறு சஞ்சாரங்களையமைத்துப் பாடுக.

**இணைப்பு**

| இராகம் | ஆரோஹண, அவரோஹணம் | ஸ்வரஸ்தானம் |
|---|---|---|
| மாயாமாளவகௌளை | ஆ - ஸரிகமபதநிஸ்<br>அவ - ஸ்நிதபமகரிஸ } 15 | ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம் |
| மோகனம் | ஆ - ஸரிகபதஸ்<br>அவ- ஸ்தபகரிஸ | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம் |
| சங்கராபரணம் | ஆ - ஸரிகமபதநிஸ்<br>அவ - ஸ்நிதபமகரிஸ } 29 | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம் அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம் |
| ஹிம்ஹேந்ர மத்திமம் | ஆ: ஸரிகமபதநிஸ்<br>அவ: ஸ்நிதபமகரிஸ } 57 | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம் |

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.2.3 :** ஸ்வரவரிசை, மேல்ஸ்தாயி வரிசை, ஜண்டை வரிசைகளை இராக, தாளத்துடன் பாடுவோம்.
(ஸ்வர வரிசை 01 - 12
மேல்ஸ்தாயி வரிசை 01 - 04
ஜண்டை வரிசை 01 - 03)

**நேரம்** : 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- அப்பியாச வரிசைகள் எழுதப்பட்ட அட்டைகள்
- செயற்பத்திரம் 3.2.2.3
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.2.1** : • ஏற்கனவேகற்ற அப்பியாச வரிசைகளை நினைவுபடுத்தி மாணவருடன் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- அப்பியாச வரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்திலும், ஆதி தாளத்திலும் பாடப்படும் என்பதைக் கூறுக.
- ஏற்கனவே கற்ற அப்பியாசகான வரிசைகள் ஸ்வர வரிசை 01 - 12, மேல் ஸ்தாயி வரிசை 01 - 04, ஜண்டை வரிசை 01 - 03 என்பவற்றை 3 காலங்களிலும் ஆசிரியர் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்துக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து 3 காலங்களிலும் இராக, தாளத்தோடு பாடுக.
- மாணவர்களைக் குழுக்களாகவும் எழுமாற்றாகவும் தெரிந்து தனியாகவும் பாடச்செய்க.

**(30 நிமிடங்கள்)**

**படி 3.2.2** : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ, தனித்தனியாகவோ செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் அப்பியாச வரிசைகளைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(30 நிமிடங்கள்)**

**படி 3.2.3** : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

- குழுக்களின் பேறுகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் ஒன்றை மீளவும் மேற்கொள்க.

- அப்பியாச வரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்தில் ஆதி தாளத்தில் பாடப்படும் என்பதையும், புரந்தரதாஸரினால் இயற்றப்பட்டது என்பதைக் கூறுக.
- அப்பியாச வரிசைகள் ஸ்வரவரிசை 01 - 12, மேல்ஸ்தாயி வரிசை 01 - 04, ஜண்டை வரிசை 01 - 03 என்பவற்றை மூன்று காலங்களிலும் இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.
- அப்பியாச வரிசைகளைக் கற்பதனால் சபாகான உருப்படிகளை மெருகுடன் பாடலாம் என்பதை வலியுறுத்துக.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- ஆரம்ப அப்பியாச வரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்தின் பாடப்படும் என்பதைக் குறிப்பிடுவர்.
- அப்பியாச வரிசைகள் புரந்தரதாஸரினால் இயற்றப்பட்டது என்பதைக் கூறுவர்.
- ஆரம்ப அப்பியாச வரிசைகளை 3 காலங்களிலும் பயிற்சி செய்வதனால் சபாகான உருப்படிகளை மெருகுடன் பாடலாம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வர்.
- அப்பியாச வரிசைகளை இராக, தாளத்தோடு மூன்று காலங்களிலும் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.3

- ஒவ்வொரு குழுவிற்கும் இச்செயற்பத்திரத்தினையும், இணைப்பையும் வழங்குக.

### குழு 1

- ஆரம்ப அப்பியாச வரிசைகளில் ஸ்வர வரிசை 01 - 12 வரை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்க.
- ஸ்வர வரிசை 01 - 12 வரை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

### குழு 2

- ஆரம்ப அப்பியாச வரிசைகளில் மேல்ஸ்தாயி வரிசை 01 - 04 வரை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்க.
- மேல்ஸ்தாயி வரிசை 01 - 04 வரை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

### குழு 3

- ஆரம்ப அப்பியாச வரிசைகளில் ஜண்டை வரிசை 01 - 03 வரை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்க.
- ஜண்டை வரிசை 01 - 03 வரை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

## ஸ்வராவளி வரிசைகள்

இராகம் : மாயாமாளவகௌளை
தாளம் : ஆதி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸரிகம | பதநிஸ் | ஸ்நிதப | மகரிஸ |
| 2. | ஸரிகம | ஸரிகம | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ |
| 3. | ஸரிகம | ஸரிஸரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | ஸ்நிஸ்நி | ஸ்நிதப | மகரிஸ |
| 4. | ஸரிகம | பாபா | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மாமா | ஸ்நிதப | மகரிஸ |
| 5. | ஸரிகம | பா-ஸரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மா-ஸ்நி | ஸ்நிதப | மகரிஸ |
| 6. | ஸரிகம | பமகரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மபதநி | ஸ்நிதப | மகரிஸ |
| 7. | ஸரிகம | பமதப | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மபகம | ஸ்நிதப | மகரிஸ |
| 8. | ஸரிகம | ரிகமப | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | நிதபம | ஸ்நிதப | மகரிஸ |
| 9. | ஸரிகம | பா-கம | பா ; | பா ; |
| | கமபத | நிதபம | கமபக | மகரிஸ |
| 10. | ஸ்நித | நீதப | தாபம | பாபா |
| | கமபத | நிதபம | கமபக | மகரிஸ |
| 11. | ஸரிகரி | கா-கம | பமபா | தபதா |
| | மபதப | தநிதப | மபதப | மகரிஸ |
| 12. | ஸரிகம | பாபா | ததபா | மமபா |
| | தநிஸ்ா | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ |

## ஜண்டை (ஸ்வர) வரிசைகள் - ஆதி தாளம்

1.
ஸஸரிரி ககமம பபதத நிநிஸ்ஸ்
ஸ்ஸ்நிநி ததபப மமகக ரிரிஸஸ

2.
ஸஸரிரி ககமம ரிரிகக மமபப
ககமம பபதத மமபப ததநிநி
பபதத நிநிஸ்ஸ் ஸ்ஸ்நிநி ததபப
நிநிதத பபமம ததபப மமகக
பபமம ககரிரி மமகக ரிரிஸஸ

3.
ஸஸரிரி ககரிரி ஸஸரிரி ககமம
ரிரிகக மமகக ரிரிகக மமபப
ககமம பபமம ககமம பபதத
மமபப ததபப மமபப ததநிநி
பபதத நிநிதத பபதத நிநிஸ்ஸ்
ஸ்ஸ்நிநி ததநிநி ஸ்ஸ்நிநி ததபப
நிநிதத பபதத நிநிதத பபமம
ததபப மமபப ததபப மமகக
பபமம ககமம பபமம ககரிரி
மமகக ரிரிகக மமகக ரிரிஸஸ

## மேல் ஸ்தாயி வரிசைகள் - ஆதி தாளம்

1.
ஸரிகம பதநிஸ் ஸ்ா ; ஸ்ா ;
தநிஸ்ரீ ஸ்நிதப ஸ்நிதப மகரிஸ

2.
ஸரிகம பதநிஸ் ஸ்ா ; ஸ்ா ;
தநிஸ்ரீ ஸ்ஸ்ரீஸ் ஸ்ரீஸ்நி தபமப
தநிஸ்ரீ ஸ்நிதப ஸ்நிதப மகரிஸ

3.
ஸரிகம பதநிஸ் ஸ்ா ; ஸ்ா ;
தநிஸ்ரீ க்ரீஸ்ரீ ஸ்ரீஸ்நி தபமப
தநிஸ்ரீ ஸ்ஸ்ரீஸ் ஸ்ரீஸ்நி தபமப
தநிஸ்ரீ ஸ்நிதப ஸ்நிதப மகரிஸ

4.
ஸரிகம பதநிஸ் ஸ்ா ; ஸ்ா ;
தநிஸ்ரீ க்ம்க்ரீ ஸ்ரீஸ்நி தபமப
தநிஸ்ரீ க்ரிஸ்ரீ ஸ்ரீஸ்நி தபமப
தநிஸ்ரீ ஸ்ஸ்ரீஸ் ஸ்ரீஸ்நி தபமப
தநிஸ்ரீ ஸ்நிதப ஸ்நிதப மகரிஸ

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.4 :** உன்னையல்லால் என்னும் மத்திமகாலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி
- பாடல் எழுதப்பட்ட அட்டைகள்
- ஸ்வரஸ்தான வரைபடம்
- ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 3.3.2.4
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**
- உன்னையல்லால் என்னும் கீர்த்தனையை ஒலிப்பதிவு நாடாவில் போட்டுக்காட்டியோ, பாடியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

- மாணவர் செவிமடுத்த பாடல் தொடர்பான கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

ஆரோஹண, அவரோஹண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம் என்பவற்றைக் காட்சிப்படுத்தி
- உன்னையல்லால் என்று கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம், ஸ்வரஸ்தானம் என்பவற்றைக் கூறுக.
- 'உன்னையல்லால் என்னும் கீர்த்தனை அமைந்துள்ள ஸிம்ஹேந்திரமத்திம இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடத்தைக் காட்சிப்படுத்துக.
- ஹிம்ஹேந்திரமத்திம இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாட மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.
- பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி பாடலை பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்துக.
- கீர்த்தனையை தாளத்துடன் ஆசிரியர் பாட மாணவர் தொடர்ந்து பாட நெறிப்படுத்துக.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து பாடுக.
- மாணவரை குழுவாகவும், தனியாகவும், எழுமாற்றாகத் தெரிந்து பாடச் செய்க.

**(45 நிமிடங்கள்)**

படி 3.3.2 : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ, தனித்தனியாகவோ செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் திருப்புகழைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

படி 3.3.3 : • மாணவர் தனியாகவோ, குழுவாகவோ கீர்த்தனையை பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• தனியாகவோ குழுவாகவோ பாடும்போது ஏனைய மாணவரும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க. தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமைப்படுத்துக.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- **கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பவற்றை மீண்டும் வலியுறுத்திக் கூறுக.**
- **கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.**

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பவற்றைக் கூறுவர்.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவர்.
- இசை நிகழ்ச்சிகளில் கீர்த்தனையைப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.4

- சகல குழுவிற்கும் இச்செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.

- உன்னையல்லால் என்னும் சிம்ஹேந்திரமத்திமக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப்பயிற்சி செய்க.
- குறித்த கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக.

# மத்திமகாலக் கீர்த்தனை
# உன்னையல்லால்

உன்னையல்லால் என்னும் இக்கீர்த்தனையைப் பாடிக் கற்கத் தொடங்கு முன்பாக இக்கீர்த்தனை அமைந்த இராகம், தாளம், இயற்றியவர், ஸ்வரஸ்தானங்களை அறிந்து கொள்ளல் வேண்டும். பின் ஸிம்ஹேந்திரமத்திம இராக, ஆரோஹண, அவரோஹணத்தை முன்று காலமும் பாடிப் பயிற்சி செய்ய வேண்டும். இதன் பின்னர் ஸ்வர சாகித்திய ரூபமாகக் கீர்த்தனையைப் பயின்றிடல் வேண்டும்.

இராகம் : ஸிம்ஹேந்திர மத்திமம்
ஆ : ஸரிகமபதநிஸ்
அவ: ஸ்நிதபமகரிஸ் - 57ஆவது மேளம்
தாளம் : ஆதி
இயற்றியவர்: கோடீஸ்வரஐயர்

ஸட்ஜ, பஞ்சமங்களைத் தவிர, இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்திமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம் என்பனவாகும்.

## பல்லவி

, ஸ்ா நீதா பா; : தத / பமதநி ஸ்ாநீ /ஸ்ர் : ;; //
உன் னையல் லால் வே... / றே ... க.. தி
, ஸ்ா நீதா நிஸ்நித , பபத / பமதநி ஸ்ாநீ / ஸ்ா; ஸ்நிதப //
உன் னையல் லால் ___வே .. / றே ... க ../ தி ..... //
தநிஸ்ா நீதா தநிரீக்ரி நிதநித / பமதநி ஸ்ாநீ / ஸ்ா : ரிஸ்நிஸ் //
..உன் னையல் லால் ... வே ... / றே .. க... தி ... எனக்
நிஸ்ரீ ; ஸ் ஸ்ர்ரிஸ் க்ரரீஸ்ா / ரீஸ் நித நி; : ஸ்நி தபமா //
குண் டோ சொல்வாய் நீயே .... / அருள் வாய் / பரம கிருபா //
தநிஸ்ஸ் நீதா பா ; ; தத / பமதநி ஸ்ாநீ / ஸ்ா ; ; ; //
நிதி உன் னையல் லால் வே / றே .... க .... தி ....

## அனுபல்லவி

;பத ,பதா நிஸ்ரீ, க்ரி /; ரிக் , ரிஸ்ா / ரீ : ரிக்க்ா //
கனை கடல் சூழ் உல / கம் தனி / லே கந் ..... //
ம்க்ா, ரீஸ்ா ஸ்நிதா நிஸ்ா / க்ரிஸ்ரி ஸ்நிதப / பதபத பதநீ //
தா ... இக ... பர .... சுகம் / தந் .. தெனை / யா ... ளவே

## சரணம்

,பா,மகாரீ ஸாகரி ஸநி ஸா / ஸரிகா ; மா / பாபா தாதா
அம்மே .. எனக்கருள் .. செய் / அப்பா எ / னவே சொல்லி //
பா, ப ; பா பாதநி தபபா / பாதநி தப மாபா / பாதம பாபா //
யுமே குஞ் சரதா / .. சன் னுமே.. ... ச ... ரணடை ந்தேன்
ஸ்ாதா, நீ ஸ்ா, ஸ்ா ஸ்ா / ரீக்ா ஸ்ா; / ரீரீ ரிஸ்ரீ
கைமேல் ப லன் அருள்தெய் வமே து / ணை செய்தருள் //
க்ரிம் க்ரீ ஸ்ாக்ரி ஸ்நிஸ்ா / க்ரிரிஸ் ஸ்நிதா / பாதம நிஸ் ரீக்ரி //
ப்ரம்மே ந்தி ரர்க் கரிய சிம்மேந் திர மத்ய மா ...

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.5 :** மத்யகாலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம்.
(மயில்வாகனா - மோகனம்
அல்லது
தேவதேவ - மாயாமாளவகௌளை)

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக்கருவி, பாடல் எழுதப்பட்ட அட்டை
- தாளம்
- செயற்பத்திரம் 3.3.2.5
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** :
- மயில்வாகனா அல்லது தேவதேவ என்னும் மத்யமகாலக் கீர்த்தனைகளைப்பாடிக் காட்டியோ ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர்களை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- மயில்வாகனா என்னும் கீர்த்தனை மோகன இராகத்திலும் தேவ தேவ என்னும் கீர்த்தனை மாயாமாளவ கௌளை இராகத்திலும் அமைந்துள்ளதென்பதைக் குறிப்பிடுக.
- எடுத்துக்கொண்ட கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண, அவரோகண வரைபடங்களைக் காட்சிப் படுத்தி ஆரோகண, அவரோகணங்களைப் பாடிக்காட்டி மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.
- கீர்த்தனையைத் தாளத்துடன் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.
- மாணவரைக் குழுவாகவும் எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனியாகவும் பாடச்செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 3.3.2 : • மாணவர்களிடம் தனித்தனியாகவோ குழுக்களாகவோ தனியாகவோ பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் கீர்த்தனைகளைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடங்கள்)

டி 3.3.3 : • மாணவர் தனியாகவோ, குழுவாகவோ கீர்த்தனையை பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• தனியாகவோ, குழுவாகவோ கீர்த்தனையைப் பாடும்போது ஏனைய மாணவரும் அதனை அவதானித்துக் கருத்துக் களைக் கூற இடமளிக்க. தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமை பெறச் செய்க.

• பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் மீண்டும் ஒரு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

> • **எடுத்துக்கொண்ட மத்யமகால கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் குறிப்பிடுக.**
> • **எடுத்துக்கொண்ட மத்தயமகாலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து பாடுக.**

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- மயில்வாஹனா, தேவதேவ என்னும் மத்யமகாலக்கீர்த்தனைகளின் இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பவற்றைக் கூறுவர்.
- கற்றுக்கொண்ட கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவர்.
- இசை நிகழ்ச்சிகளில் கீர்த்தனையைப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.5

• சகல குழுவிற்கும் மாணவருக்கும் இச்செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.

> • எடுத்துக்கொண்ட மத்யமகாலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
>
> • எடுத்துக்கொண்ட மத்யமகாலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக.

# மத்திமகாலக் கீர்த்தனை - மயில்வாஹனா

இராகம்: மோஹனம் தாளம் : ஆதி

இயற்றியவர்: பாபநாசம் சிவன்

ஆ : ஸரிகபதஸ்

அ : ஸ்தபகரிஸ - 28 இன் ஜன்யம்

## பல்லவி

1. தஸ்தா ;பா பகதப கரிஸா / ரிகாஸா, ரீ / கா ; பாதா //
மயில் வா , ஹ ன .. வள்ளி மன , மோஹ னா . . மா

2. ரிஸ்தா ; பா தஸ்தப கரிஸரி / தபாகரிஸரீ / கா ; ஸாரீ //
மயில்வா ஹ . ன . . வள்ளி மன . மோஹ ன . . சர
காரீ காபா காபா தாரீ / ஸ்ா ; ; ; / தா ; கபதா //
வ; ண ப . வ வ ர ம . ருள் வாய் . . . வா . . மா.

3. ஸ்ரிஸ்த ஸ்தபத ரிஸ்தப கரிஸா / தபாக ரிஸரீ / பகா , ஸாரீ //
மயில்வா ஹ .னா . . . . வள்ளி மன மோஹ ன . . சர
காபக காபாதப பா தாஸ்த ஸரிக்ரி/ஸ்ாரிஸ் தாஸ்த பாதபகரி/ஸரிகப தஸ் ரீகரி//
வ . . ண ப. . வ வ . . ரம . ம ருள் வா . வா . . . . ம . ய் வா . . மா . .

## அனுப்பல்லவி

1. பதாபா , தா ஸ்ஸஸ்ா ஸாரீ / க்ாரீ ஸ்ாஸ்ா ; / ; தா பாதா //
கயி , லா . யம் மு .தல்மலை க ளிலெல்லாம் . .க ளித்து

2. தபாக ரிகபா தாஸ்ாஸாரீ / க்ப்க்ரிஸ்ாஸ்ா / ரிஸ்தப தாஸ்ா //
க.யிலா.யம் முதல் மலை களி லெல்லா ம்க் . ளித்து
ரிக்ாஸ்ா , ரீ. பாதா ஸாரீ / க்ரீஸா , தா / ரிஸ்தா பாதா //
விளை , யாடும் பன்.னி .ரு கை..யா .மு ரு . கை .. ய
க் ரீ ஸ்ா , ரீ தாஸ்ாபாதா / க்ரீஸ்ா , பத / ரிஸ்தப கரிகப //
விளை .யா. டும் பன்.. னி.ரு கை..யா.மு. ரு..கை .. யா

## சரணம்

1. தா ; ஸ்ாதா ; பா கா ; / தா ; பாபா / காரீ ஸா; /
பூ . .ர்ணசந் . . தி . ரன் போ . லும்அ று.மு.கா..
ஸாரீ காஸா ; ரீ காபா / கா ; பாதா / ரீஸ்ா தா ; /
பு.வ னமெங் . கும் நிறை மா .. ய. வன் ம.ரு.கா

2. பாதா ரிஸ்தா ; பத தபகா / பதரிஸ் தபகப / தபகரிஸா; //
பூ . . ர்ணசந் தி. ரன் போ. தும்அ று . மு.கா
ஸரி காபாக கரிரிக பாதபபக பாதா/ தபகா பாதா / பதரிஸ்தா; //
புவ . . ன. மெங் . . கும் நிறை மா . யவன் ம . ரு.கா
; பதாபதா ஸ்ாரீ கா ; / தாஸ்ா ரீக்ா / ரீஸ்ா ; ஸ்ா //
ஆ . . ர ணப் பொரு . ளே அ . டி . மைஎ. னையா..ள
ரிஸ்தா பதபதஸ்தஸரி க்ா; / பதஸ்ரி க்ப்க்ரி / ஸ்ாரிஸ் தாஸ்//
ஆ . . ர. ணப் பொரு ளே அ.டி.மை.எ. னை . யா..ள

1. தா ; ஸ்ா ; பா ; பாதா/ பாகா ; ரீ /ஸ்ாரீ காபா//
வா. . வா ..வா. ரா.. ம.தா. ஸன் ப.ணி கு..ஹ்ரா

2. தஸ்ரிஸ் பதஸ்த கா; ஸரிகப / தாக்ரி ஸ்தபா / தபகரிகபதா//
வா .. வா.. வா.. ரா.. மா.தாஸன் ப.ணிகு.ஹ்ரா

# மத்திமகாலக் கீர்த்தனை (தேவ தேவ)

இராகம் - மாயாமாளவகௌளை இயற்றியவர்: சுவாதிதிருநாள் மகாராஜா
ஆ :ஸரிகமபதநிஸ தாளம் : ரூபகம்
அ: ஸ்நிதபமகரிஸ - 15ஆவது மேளம்

## பல்லவி

1. ஸா, ரீகா; மா / பாபா பபமக மாபா / ; பாதா;பாமா/ மகமபபமகமகரிஸநி //
தேவ வதே வ கல யா .. மிதே சரணாம்புஜ ஸே ..வ . ன. ம்

2. ஸா; ரீகா; மா/பமபா பபமக மாபா/ ; தநிதாபாபபம/ மகமதபமகம கரிஸரி//
தே வ தே வ க ல யா .. மிதே . சரணம் புஜ ஸே ..வ னம் . .

3. ஸா;ரீகா, மா/பத மப கம பத நீஸ்ா/ ஸ்ாஸ்ரிஸ்நிதாபாமா/கமதபபம கமகரிஸநி//
தே வ தே வக ல யா .மி தே சரணாம் . . . புஜ. ஸே . .வ ன ம் .

4. ஸா;ரீ கா;மா/ததபம கமபத நீஸ்ா/ஸ்நி க்ரிஸ்நி தாபாதா/ நிஸ்நிததபமகமகரிஸ//
தே வ தே வ க ல யா. .மி தேசர.ணாம் . . . பு ஜ ஸே . . . .வனம்

## அனுபல்லவி

1. பா தா பா ; மாபா / பபமக மாபா ; ; /
பு வ ன த்ரய நா . ய க . .

2. ; தநிதபா ; பமதப / பபமக மாபா ; ; /
. புவன . திரய நா . . ய . க
கம பாபாமபதபத / பதநிததாநீஸ்ா ; /
பூ . ரி கர . ண யா . . ம ம
; ஸ்ஸ்ா ஸ்நிக்ரிஸ் / ஸ்நிதநீ ; ஸ்ா ; /
பவ . தா .. ப ம . . . கி லம்
ஸ்ா ; ஸ்நிதா பாமா / மகமதபம கமகரிஸா /
வா ரா . . . ய ரா . மா . காந்த
ஸ்ரிக்மக்ரிஸ்நிதபதநி / ரிஸ்நிதபம கமகரிஸநி /
வா . . ரா . . ய ரா ம . . கா . ந்த

## சரணம்

; பாமகபம கரிஸநி / ஸாரீ கா ; மா ; / ; கமாபா ; தாப / மபமா ; மக பமகரி//
ஜா தரு . . . ப நி ப சே . ல ஜன்மா சித ம ம கி ல . .

கம பதமப கமகரிஸநி /ஸாரீபாபாமகமா; /; கமாபா ; தாப/ மபமா; மக பமகரி//
ஜா . த . ரு . . ப நி . ப சே . . ல ஜன்மா சி த ம ம கி . ல . .

ஸரிகமாகரீஸா ;/ ரீஸாஸாரிகரிஸஸா / ; ஸாரீகரிகா ; / மகமபமகரிரீஸா ; //
. . பா . தகசஞ் ச ய ரீ . . க . வா . ர . ய க . ரு . ந . ய

திதி ஜாலிவி தாளன
தீன பந்து மாமவ
ஸ்ரத லிபுத சாலஹரீ
பத்ம னாப சௌரே

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.6 :** சௌககாலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். (கபாலி - மோஹனம் , அகிலாண்ட நாயகி - சங்கராபரணம்)

**நேரம்** **:** 02 மணி 40 நிமிடங்கள் (04 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி
- பாடல் எழுதப்பட்ட அட்டை
- ஆரோஹண, அவரோஹண வரைபடடம் ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 3.3.2.6
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**
- கபாலி - மோஹனம் அல்லது அகிலாண்டநாயகி - சங்கராபரணம் என்னும் சௌககாலக்கீர்த்தனையைப் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர்களை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- கபாலி - மோஹன ராகம் அல்லது அகிலாண்ட நாயகி - சங்கராபரண இராகத்தில் அமைந்துள்ளதென்பதைக் குறிப்பிடுக.
- இவ்விரண்டு சௌககாலக்கீர்த்தனைகளும் ஆதி தாளத்தில் அமைந்துள்ளதென்பதைக் குறிப்பிடுக.
- ஆரோஹண, அவரோஹண வரைபடங்களைக் காட்சிப் படுத்தி எடுத்துக்கொண்ட சௌககாலக்கீர்த்தனையின் இராக, ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிக்காட்டி மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.
- எடுத்துக்கொண்ட சௌககாலக்கீரத்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அக்கீர்த்தனையைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் அதனைத் தொடர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்துக.
- சௌககாலக்கீர்த்தனையைத் தாளத்துடன் ஆசிரியர்பாட மாணவர் அதைத்தொடர்ந்து தாளம் போட்டுப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.
- கீர்த்தனையை மாணவர் குழுவாகவும் தனியாகவும் பாடச் செய்க.

(60 நிமிடங்கள்)

படி 3.3.2 : • மாணவர்களைக் குழுக்களாகவோ தனியாகவோ பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் சௌகக்காலக்கீர்த்தனைகளைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

டி 3.3.3 : • மாணவர் தனியாகவோ, குழுவாகவோ சௌகக்காலக் கீர்த்தனையை பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• தனியாகவோ, குழுவாகவோ கீர்த்தனையைப் பாடும்போது அவற்றை ஏனைய மாணவரும் அவதானித்துக் கருத்துக் களைக் கூற இடமளிக்க. தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமை பெறச் செய்க.

• பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் மீண்டும் ஒரு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- எடுத்துக்கொண்ட சௌகக்காலக் கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் குறிப்பிடுக.
- எடுத்துக்கொண்ட சௌகக்காலக் கீர்த்தனையை இராக, தாளத்துடன் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து பாடுக.

**(40 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கபாலி, அகிலாண்டநாயகி என்னும் சௌகக்காலக்கீர்த்தனைகளின் இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பவற்றைக் கூறுவர்.
- மாணவர் கற்றுக்கொண்ட சௌகக்காலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவர்.
- இசை நிகழ்ச்சிகளில் கீர்த்தனையைப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.6

• சகல குழுவிற்கும் மாணவருக்கும் இச்செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.

- எடுத்துக்கொண்ட சௌகக்காலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- எடுத்துக்கொண்ட சௌகக்காலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக.

## சௌககாலக் கீர்த்தனை
## அகிலாண்ட நாயகி

முதலில் அகிலாண்ட நாயகி .... என்ற இச் சௌக்ககாலக் கிருதி அமைந்த இராகம், தாளம், இயற்றியவர், ஸ்வரஸ்தானங்கள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். பின் சங்கராபரண ஆரோஹண, அவரோஹணத்தை மூன்று காலமும் பயிற்சி செய்தல் வேண்டும். இதன் பின்பாக ஸ்வரசாகித்திய ரூபமாக அகிலாண்ட நாயகி சௌக்ககாலக் கிருதியைப் பாடிப் பழகுதல் வேண்டும்.

இராகம் : சங்கராபரணம் ஆ: ஸரிகமபதநிஸ்
தாளம் : ஆதி அ: ஸ்நிதபமகரிஸ - 29ஆவது மேளம்
இயற்றியவர்: பாபநாசம்சிவன்

### பல்லவி

;ஸ்நீபா, பாபம கரிகம / பா ; ; மா / தபாம , கமப //
அகிலாண்டநா .... ய / கி அம் புலிங்கத் தலம்வ //
தநி ஸ்ரீ ஸ்நிதப, பாமபதம பமகரி கம / பா ; ; தரி / ஸ்நிபாம, கமப //
ளரும் அகி லா ... ண்ட நா ..... ய . . கீ அம் புலிங்கத் தலம்வ //
தநிஸ்ரிக்கா ரிஸ்நிதபா; பாமபதம பமகரி கம / பா ; ; தரி/ஸ்நிபாம கம //
ளரும் அகி லா. ண்ட நா .... ய. / கி . அம் . . புலிங்கத்தலம் வ //
தநி ஸ்நிஸ் நிதநிபா பாபமகரிகம / பமபதாப ; / ; ; ; ;
ளரும் அ.கி ..... லாண்டநா .... ய / கி ..... . . .....//

### அனுபல்லவி

; தநிஸ்ா ; ஸ்ா ; ஸ்ாரீ / க்ாரிஸ் ஸ்ாஸ்ப / ; ஸ்தாநிஸ்ா //
ஜகதீ சன் ஜம் / புகே .. சன் / உளங்கவர் //
; தநீஸ்ா, ரிக் ஸ்ா ஸ்ார் / ப்ம்ம்க்க்ரிஸ்ர / ; க்ரிஸ்நிதா ; நிஸ் //
ஜகதீ சன் ஜம் / புகே சன் / உளங் கவர் //
; பரிஸ்ா ; ஸ்நிரிநிதா, பா ; / பமமா ; தநிஸ்ாநித / பதநிதப கமாப //
திருவா .. னைனக் கா / வில், ப. திதனில் / எழுந்தருள் ஜகஜ்ஜ
தநி ஸ்ரிக்காம்க் ரிஸ்ஸ் நிதப பமகரி கம / பா ; ; ; / ; ; ; //
னனீ அகி . . . ல ண்டநா ..... ய . . கீ .. .. ..

## சரணம்

; பகாமபா ; பா ; பா /;;நீதநீ / பதா, பம காமா //
; உபயகா வே , ரி / , , மத்தியில் / ஒரு யா . . னை //
; ரிகாரிமா காரீ ; கரி / ஸாஸரி , காம / பா ; பாபா //
ஒரு சிலந் திக்கும் முக் / திஅளித்தம , / ஹே சனை //
; நிதபம கமபா ; பா ; பா/ ; ; நீதநீ / பதா, பமகாமா //
உ . . ப. யகா வே ரி / . . மத்தியில்.˙. ஒரு யா . னை //
, கமாதபா பா , தபமகா ; மகரீ / ஸாஸரி , காம / பதநீஸ்நிதா ரிஸ்நிதபா//
ஒரு சிலந் தி க்கும் மு.க் / தி அளித்தம / ஹே ச.னை . . . . . //
;த;ததா தா ; தாபத / நிரிஸ்நி தபபம . . கா ; பமகரி //
;உள்ளம் விரும்பித்த / வம் புரிந் / தாள் உமை//
கஸரீ காமா ; ,க மபதா / நீ ; தாநீ / பா ; ; ; //
அன் னையே நித்திய / கன் னிகை / யே. .. //
ஸ்நீபா, ; மாபதகமபமகம / ; மதாபமா / மககா மா. ம//
அபயம் த.ந் தருள் / அ டி மலர் . . / த. ஞ் சம் அ
பா ; தநிநிப ;நிரீஸ்ஸா / ஸ்நிதா தபாதநீ / ஸ்ா ; ; ; //
டைந் தே, ன் அடியவர்க் / க ... ருள்வர/ தே . . . //
;நிஸ்நிதா , பதாபபா / ; பதாப தரிஸ்நீ / பா ; பமமா , ம //
அபயம தந்தருள் / அடி மலர் / தஞ் சம் அ //
பா ; தநிதப ;நிரீஸ்ஸா / ஸ்நிதா தபாதநீ / ஸ்ா ; ; நீ //
டைந்தேன் அடியவர்க் / க ருள்வர / தே . ; ; அ //
ஸ்ா ; ரீப்ம் ம்க்ரிக், ரி ஸ்ாஸ்ா / ஸ்நிக்ரி ஸ்ா ; / ஸ்ாரிஸ்ா , த நீஸ்நி /
னந்தகு ணா , , கரி / அம் . . பா / சங் , கரி //
நீ ; ரீம்ப் ம்க்ரிக் ரிஸ்ஸ்ா / நிஸ்ரிஸ் ரிக்ாரிஸ்ஸ்ா ; / க்ரிஸ்ஸ்ா , தநீஸ்ா
னந்தகு ணா கரி / அம் பா / சங் கரி //
; பா ; ரிஸ்ாஸ் நிநித தப / ; பதநீ , தபா / பமகம, பதநி //
ஆ திஅந் தமில் / ,த்ரிபு வன / ஸுந் தரி //

## மத்யமகாலம்

ஸ்நிதப பமகம தபமப கரிஸா / ஸாபா மகமரி / காமபா பதநி //
ஹரஹர சங்கர பகவத் பா.தான் / அன்பில் பிரதிஷ்டை / செய்த அற்புத //
ஸ்ா பதா நீஸ் ஸ்க்ரிம் க்ரிஸ்ஸ் / ஸ்ரிஸ்தி தபமத / பமகம ரிகமப //
ரதன தாடங்க ஒளி உமிழ் அழகிய / இரு செவியொடு குளிர் / நகை நவமும் மதிவ
தநி
தன (அகிலாண்ட)

**இணைப்பு II**

# சௌக்ககாலக் கீர்த்தனை

இராகம் : மோஹனம்
தாளம் : ஆதி

ஆ: ஸரிகபதஸ்
அ: ஸ்தபகரிஸ
} 28 இன் ஜன்யம்

இயற்றியவர்: பாபநாசம்சிவன்

## பல்லவி

1. கா ; கபா, கரீ, ஸா; / பதஸ்ஸ்த தப பக்க / ககதப பகரீ ஸரி//
   கா பா. லி. .. கருணை நி.லவுபொழி வதநமதி . யனொரு

2. கா; பாதா,ப கரீ, ஸா; / „ / பாதஸ் „ //
   கா பா .. லி . . „ வ த. „

3. ஸரிகபதஸ்ா;, பா, கரீ, ஸா; /க்ரி ஸ்ரிஸ்தபத/பதரிஸ்ஸ்ததபபகதப கரிஸரி//
   கா ..... பா.. லி . கருணைநிலவுபொழி வ.த.ந.ம.தி.னொ.ரு

4. ஸரிகபதஸ்ரீ, க்ரிஸ் ஸ்ா,தபா, கரீ, ஸா/ ஸ்ரிக்ரி ரிஸ்ஸ்தரிஸ்ஸ்த தபதா//
   கா .....பா. லி .. ... கரு.ணைநி..ல.வு. பொ.ழி //

5. „ / „ //
   „ „ //
   ஸ்ரிக்க் ரிஸ்ரிரி ஸ்தரிஸ் தபதா / ரிஸ்ரி தஸ்ததபபகதப கரிஸத
   க.ரு.ணை்.நி.ல.வு . பொ.ழி வ.த.ந.ம.தி.ய.னொ.ரு.

## அனுபல்லவி

1. கா, பா, தா ஸ்ாரி க்ரீக்ா / ஸ்ரிக்ரி ரிஸ் ஸ்ாஸ்/ஸ்ார்ீ ரிஸ்ஸ்ததப//
   ஆ பா ல கோ. பா. லம் ஆ.ழி.சூ.ழ்த லத்த வ... ரும்

2. பா, தபாதா „ / „ / „ //
   ஆ பா . ல „ / „ / „ //

3. பா, தஸ்ஸ்பாதாதா,க்ரீக்ா / ஸ்ரிக்ப் க்ாரீஸ் / „ //
   ஆ .. பா. லகோ பா.லம் ஆ.ழி. . சூழ்த „ //

1. தா,ஸ்ா,ஸ்ாஸ்தாதபததா / ரிஸ்ஸ்த தபபக / காரித பககரி /
பூ - பா - ல ரும் அஷ்-டதிக் பா-ல- ரும்போ - ற்றும் - அத்பு-த

2. தா,ஸ்ரிக்ரிரிஸ் ஸ்ா;, ஸ்ாரிஸ் ஸ்த,, // ,, // ,, //
பூ பா... ல .. ரும் .. ..... ,, ,,

## சரணம்

தகபப பபதப தப கதபக கரி / கபகரி ஸதஸரி / ககபா ; ; //
மதிபுனல் அரவு கொன்றைதும்பை அறுகுந் / மத்தைபனைமாசடை / யான்..

2. ,, ,, / ,, / கபதஸ்பதாப் பா; //
,, ,, / ,, யா .....ன் .

1. ஸ்தப கரிக பாதஸ் தப கபகரிஸஸ / ஸரிகக கரிரிக பபபா / பாதஸ் பத பதா; ,//
அதிர முழங்கும் உடு.க்கையும் திரிசூலமும் அங்.கியுங்குரங். கமு மி லங்கிடுகை.யான்

2. ,, பகதப கரிஸா ஸஸ,, / ,, / ,, தஸ்தஸ்ா; ரி //
,, தி.ரி .சூ.. லமும் ,, ,, ,, கை.யான்.

3. க்ரிஸ் தப தரிஸ் தப ,, / ஸரிகரிகரிரிகபபபா / கபததபபதஸ்ா;
அதிர முழங்கும் உடுக்கையும்,, // அங்.கியுங்குரங்கமுமி / லங்கிடுகை.யான்

ககபதஸ்ரி ஸ்ரிக்ப் க்ரிஸ் ஸ்ரிரிஸ்ஸ்த/
த்யுதி மிகுதிரு மே.னி. முழுதும் சாம்.பல்து
க்ரிஸ்த ரிஸ்தப / ஸ்தபக ககதப கரிஸ்த //
லங்க எதிர் மங்கையர்ம நங்கவர் ஜகந்.மோ.ஹ.ந.

*** திஸ்ரகதி**

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.7 :** ''சின்னஞ்சிறு கிளியே'' என்னும் இராகமாலிகையை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவுநாடா, ஒலிப்பதிவுக்கருவி
- பாடல் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.7
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**
- ''சின்னஞ் சிறு கிளியே'' என்னும் இராகமாலிகையை ஆசிரியர் பாடிக்காட்டி அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்து மாணவரை செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்த பாடலினை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • இராகமாலிகை என்னும் பதத்தினை விளக்கி, மாணவர் கட்குத் தெளிவுபடுத்துக. |
| • சுப்பிரமணியபாரதியாரால் இயற்றப்பட்டதனை அறியச் செய்க. |
| • 'சின்னஞ் சிறு கிளியே'' எனும் இராகமாலிகையில் இடம் பெறுகின்ற இராகங்களை மாணவர்கள் அறியச் செய்க. |
| • இராகமாலிகையில் வரும் இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தினைப் பாடிக்காட்டுக. |
| • இவ் இராகமாலிகை அமைந்த சாபுதாளம் பற்றி விளக்கமளித்து இத்தாளத்தினை மாணவர் போடப் பயிற்றுக. |
| • பாடல் அட்டையினைக் காட்சிப்படுத்திப் பகுதி, பகுதியாக ஆசிரியர் பாட மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க. |
| • தாளத்துடன் பாட நெறிப்படுத்துக. |
| • ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாயகப் பாடுக. |
| • குழுக்களாகவும், எழுமாற்றாகத் தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக. |

**(45 நிமிடங்கள்)**

படி 3.3.2 : • மாணவர்கள் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற் பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் இராகமாலிகையைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

டி 3.3.3 : • குழுவாகவும், தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு பாடும்போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் மீளவும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- இராகமாலிகையில் வரும் இராகங்கள் காபி, மாண்டு, வசந்தா, திலங், நீலமணி
- திஸ்ர சாபு தாளத்தில் அமைந்துள்ளமை
- சுப்பிரமணிய பாரதியாரால் பாடப்பட்டுள்ளமை
- சின்னஞ்சிறு கிளியே இராகமாலிகையை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சின்னஞ் சிறு கிளியே எனும் இராகமாலிகையில் இடம்பெறும் இராகங்களைக் கூறுவர்.
- இராகமலிகை அமைந்து தாளத்தினைக் கூறி அதனைப் போட்டுக் காட்டுவர்.
- இராகமாலிகையை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.7

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

- சின்னஞ்சிறு கிளியே எனும் இராகமாலிகையை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- இராகமாலிகையை இராக, தாளத்துடன் பாடுக.

## இராகமாலிகை

இராகம் : காபி
தாளம் : திஸ்ர சாபு

ஆ: ஸரிமபநிஸ்
அ: ஸ்நிதநிபமகரிஸ
} 22

இயற்றியவர்: பாபநாசம்சிவன்

1. மநிபா மககா // ரீ ஸா ஸநி // ஸா; ஸக // ரிஸ நிதநீ //
சின்னஞ் சி று. கி.ளி யே. கண் ணம் மா.
ஸகஹாகா // கரீகபா // பமமா ; ; // ; ; ; //
செல்லக்க ளஞ்சிய மே . . . . .

2. மநிபா மககா // ரீ ஸா ஸநி // ஸா; ஸக // ரிஸ நிதநீ //
சின்னஞ் சி று. கி.ளி யே. கண் ணம் மா.
ஸகஹாகா // கரீகபா // பமமா ; ; // மகஹஸரிம //
செல்லக்க ளஞ்சிய மே . . . . .

மரிமாபா // தாநீதா // நிதபா ; மா // மக மா ; //
என்னைக்க லி தீர்த் தே . . உ லகில்
மநீபமா // காஸாரீ // பா ; ; // மகஹஸரிம ∴∴
ஏற்றம்பு ரிய வந் தாய் . . . . . .

தா தா தா // தபா தஸ்ா // நீ ; பநி // தப மா ; //
பிள்ளைக்க னிய மு தே . கண் ண ம் மா.
மநிபாமா // காஸாரீ // பா ; ; // ; ; ;
பேசும் பொற் சித்திர மே . . . . .

பம மா மா // பா ; தஸ் // நீ ; பநி // தப மா ; //
அள்ளி அ ணை த்திட வே. என் முன்னே
மநிபாமா // காஸாரீ // பா ; ; // மகஹஸரிம //
ஆடி வ ருந்தே னே . . . . . .

இராகம் : மாண்டு

ஆ: ஸகமபதஸ்
அ: ஸ்நிதபமகரிஸ
} 29

ஸ்ா , ஸ் ஸ்ா // ஸ்நிதாகா // பதஸ்ா; // நிஸ்தா;
ஓ , டி வ ரு கை யி லே ... கண்ணம்மா
மதபாமா // காஸா ரீ // பா ; ; // ; ; ;
உள்ளம் கு ளி ரு த டி . . . . . .
மா, ம மா // பாதாதா // பதநீ ; // தப பா ; //
ஆடித்தி ரிதல் கண்டா.ல் உன்னை போய்
கா, பதா // ஸ்ாஸாஸ்ா // க்ஸ்ா, ; ; // ; ; ; //
ஆ. வித ழு வு த டி . . . . . .

இராகம் : வசந்தா

ஆ: ஸகமதநிஸ்
அ: ஸ்நிதமகரிஸ } 17

மா மா மா // மா ; மம // தா ; மா // தா மதநீ //
உச்சி த னை முகந் தால் க ரு வம்
நீ தா மா // கா ஸா மா // கா ; ; // ; ; ;
ஓ ங் கி வ ள ரு த டி . . . . . .
கா மா தா // நீ நீ ; // நீ ; தா // மா மா ; //
மெச்சி உ னை ஊ ரார் பு கழ்ந்தால்
கமா தநீ // ஸ்ாஸ்ாஸ்ா // ரிஸ்ா ; ; ; // ; ; ; //
மே னி சி லிர்க்குத . . . டி . . .

இராகம் : திலங்

ஆ: ஸகமபநிஸ்
அ: ஸ்நிபமகஸ } 28

கா கா கா // கா கா பா // மா ; கா // மா பாஸ்ா ; //
கன்னத்தில் முத்தமிட் டால்.உள் ளம் தான்
நீ பாமா // கா ஸா மா // கா ; ; // ; ; ;
கள்வெறி கொள்ளுத டி . . . . . .
கா மா பா // நீ நீ நீ // பநிஸ்ா ; // நிபாமா, //
உன்னைத்த ழு வி ட வோ. . . கண்ணம்மா
கமா பநீ // ஸ்ாஸ்ாஸ்ா // க்ஸ்ா ; ; // ; ; ; //
உன்மத்த மா கு த டி . . . . . .

இராகம் : நீலமணி

ஆ: ஸரிமபதநிஸ்
அ: ஸ்நிதபமரிஸ } 27

தா தா தா // பதா மரீ // மபதா ; பத // மா ; ; //
உன் கண்ணீல் நீர் வழிந் தால் . என் நெஞ்சில்
மா பா மா // ரீஸா ரீ // பா ; ; // ; ; ; //
உ தி ர ம் சொட்டுத டி . . . . . .

மா பா தா // ஸ்ா; ஸ்ஸ் // தஸ்ரீ ; ஸ் த // பமா ; ; //
என் கண்ணில் பாவையன் றோ கண் ணம்மா
மா பா மா // ரீஸா ரீ // தா ; ; // பா ; ; // மா ; ; //
என்னுயிர் நின்னதன் றோ . . . . . .

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.8 :** ''எந்தை ஈசன்'' என்னும் தேவாரத்தினை பண்முறைக்கமைய தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி தேவாரம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.8
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** :
- தேவாரம் பற்றி ஏற்கனவே கற்ற விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.
- தேவாரத்தை ஆசிரியர் முழுமையாகப் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

  - தேவாரத்தின் பண் - பியந்தைக் காந்தாரம்
    இராகம் - நவரோஜ்
    தாளம் - ஆதி
    அருளியவர் - திருஞானசம்பந்தர்
  - தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை அறியச் செய்க.
  - மத்யம சுருதியை இனங்காணச் செய்க.
  - தேவாரம் எழுதப்பட்ட அடடையைக் காட்சிப்படுத்துக.
  - தேவாரத்தைப் படித்து அதன் பொருளை மாணவர் அறியச் செய்க.
  - ஆசிரியர் தேவாரத்தைப் பண்முறைக்கமைய பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுக.
  - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
  - மாணவரைச் சிறிய குழுக்களாகவும், தனித்தனியாகவும் பாடச் செய்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.3.2** :
- மாணவர்கள் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவும் தேவாரத்தைப் பண்ணுடன் பாடிப் பழக இடமளிக்க.

- சகல குழுவும் தேவாரத்தைப் பண்ணுடன் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

டி 3.3.3 : • ஒவ்வொரு குழுவும் தேவாரத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு பாடும்போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • எந்தை ஈசன் என்னும் தேவாரத்தின் பண் - பியந்தைக் காந்தாரம் ஆகும்.<br>• இதன் இராகம் - நவரோஜ் ஆகும்<br>• ஆதி தாளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.<br>• இத்தேவாரத்தை அருளியவர் திருஞானசம்பந்தர் ஆவர்.<br>• மத்திம சுருதியில் பாடப்படுதல் வேண்டும்.<br>• தேவாரத்தை ஆசிரியரும், மாணவரும் பண்முறைக் கமைய முழுமையாப் படுக. |

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- எந்தை ஈசன் எனும் தேவாரம் அமைந்த பண், இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- இத்தேவாரத்தை அருளியவரின் பெயரைக் கூறுவர்.
- தேவாரத்தைப் பண்முறைக்கமையப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.8

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

| |
|---|
| • எந்தை ஈசன் எனும் தேவாரத்தை பண்முறைக்கமையத் தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.<br>• எந்தை ஈசன் எனும் தேவாரத்தை பண்முறைக்கமையத் தாளத்துடன் பாடுக. |

# தேவாரம்

பண் : பியந்தைக்காந்தாரம் தாளம்: ஆதி
இராகம்: நரோஜ் அருளியவர் : திருஞானசம்பந்தர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஸா | கரி | ஸஸ | ஸஸ | / | ஸஸ | கரி | / ஸநி | தப // |
| ஏந் | தை | ஈ. | சன் | / | எம் | பெரு | / மா. | ன் |
| பத | தஸ | ஸஸ | ஸஸ | / | ஸரி | கம | / கா | ; // |
| ஏ. | றமர் | கட | வுளென் | / | றே. | , த் | / தி, | .. |
| கம | பா | பா | மக | / | ரீ | கப | / கக | ரிஸ // |
| சிந் | தை | செய் | பவர்க் | / | கல் | . . | / லா | . ல் |
| ஸஸ | ரிஸ | ஸா | ஸரி | / | கா | பம | / கரி | ஸா // |
| சென் | றுகை | கூ | டுவ | / | தெ | ன். | / றா. | ல் |
| கந் | த. | மா | மல | / | ரு, | ந். | / தி, | க். // |
| கடும் | புனல் | நிலா | மல்கு | / | க. | ரை | / மேல் | . . // |
| அந் | தண் | சோ. | லைநெல் | / | வா | . . | / யி . | . ல் |
| அரத் | துறை | அடி | கள்தம் | / | அ. | ரு. | ளே. | . . // |

## சந்தர்ப்பம்

இப்பதிகம் முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்ற பேற்றை வியந்து பாடியதாகும்.

## பொருள்

எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுளென்று வாக்கால் ஓதி, மனத்தால் சிந்தித்து உடம்பினால் வழிபாடு செய்பவர்க்கே இறைவன் திருவருள் கிடைக்கப் பெறுவதாகும். வாசனை பொருந்திய மலர்களை கரையில் சேர்க்கின்ற நீர்பெருக்கையுடைய நிலா நதிக்கரையில், சோலைகளோடு விளங்குகின்ற திருநெல்வாயிலரத்துறையில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனின் திருவருளால் இவ்வண்ணம் முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் முதலாய விருதுகள் கிடைக்கப் பெற்றன.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.9 :** ''ஏறுமயில்'' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி பாடல் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.9
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**
- ஏறுமயில் என்னும் திருப்புகழை ஆசிரியர் பாடிக்காட்டி அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச்செய்து மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த திருப்புகழை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

  - திருப்புகழ் என்னும் உருப்படியின் அமைப்புப்பற்றிய பொது விளக்கத்தினைப் பெற்று அறிந்து கொள்ளச் செய்க.
  - ஏறுமயில் என்னும் திருப்புகழ் அமைந்த இராகம்: மோகனம், தாளம்: கண்டசாபு, அருளியவர்: அருணகிரிநாதர் என்பனவற்றை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
  - திருப்புகழைப் பாடிப்பொருள் கூறுக.
  - மோகன இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிக்காட்டி, ஸ்வரஸ்தானப் பிழையின்றி மாணவர் பாட வழிகாட்டுக.
  - கண்ட சாபு தாள விளக்கமளித்து. இத்தாளத்தை மாணவர் போடப் பயிற்றுக.
  - பாடல் அட்டையினைக் காட்சிப்படுத்தி, பகுதி, பகுதியாக ஆசிரியர் பாட மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.
  - தாளத்துடன் பாட நெறிப்படுத்துக.
  - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
  - தனித்தனியாகவும், குழுக்களாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

**(15 நிமிடங்கள்)**

படி 3.3.2 : • மாணவர்கள் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை இணைப்புடன் வழங்குக.

• செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுகின்றார்களா என்பதை உறுதிப் படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

டி 3.3.3 : • ஒவ்வொரு குழுவும் திருப்புகழைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு பாடும்போது, மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் மீளவும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

| |
|---|
| • எறுமயில் என்னும் திருப்புகழ் மோகன இராகத்திலும், கண்ட சாபு தாளத்தில் அமைந்துள்ளமை<br>• மாணவருடன் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக. |

**(10 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஏறுமயில் என்னும் திருப்புகழின் இராகத்தினைக் குறிப்பிடுவர்.
- பெருமாளே என்னும் முடிவுடன் கூடிய உருப்படி என்பதனை அறிந்து குறிப்பிடுவர்.
- இவ் இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தினைப் பாடிக் காட்டுவர்.
- பல்வேறு உருப்படிவகைகளுள், திருப்புகழினை இனங்கண்டு கூறுவார்.

## செயற்பத்திரம் 3.3.2.9

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

| |
|---|
| • 'ஏறுமயில்' என்ற திருப்புகழ் அமைந்த இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிப் பயிற்சி செய்க.<br>• கண்டசாபு தாளப் பயிற்சியினைப் பெறுக.<br>• திருப்புகழினை இராக, தாளத்துடன் பாடுக. |

# திருப்புகழ்

இராகம்: மோகனம்
தாளம்: கண்டசாபு
அருளியவர்: அருணகிரிநாதர்

ஆ: ஸரிகபதஸ்
அவ: ஸ்தபகரிஸ
} 28 இன் ஐன்யம்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்த்த முக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்.
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.1.3 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் இசைக் குறியீடுகள் பற்றிய முழு விபரங்களையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- இசைக்குறியீடுகள் எழுதப்பட்ட அட்டை
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.1.2.3
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.1.1** **:**
- குறில், நெடில் ஸ்வரங்கள், தாள அங்க முடிவு, ஆவர்த்தன முடிவு, கமகம் ஆகிய இசைக்குறியீடுகள் புலப்படும் வகையில் உருப்படி ஒன்றை பாடிக்காட்டுக.
- இசைக்குறியீடுகள் அடங்கிய பாட அட்டையைக் காட்சிப் படுத்துக.
- செவிமடுத்த பாடலினூடாகவும், அவதானித்த விடயங்களி னூடாகவும் இசைக் குறியீடுகளை இனங்காண வழிப்படுத்துக.
- இனங்கண்ட விடயம் தொடர்பாகக் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுக.

| |
|---|
| • **இசைக் குறியீடுகளின் அவசியம்** |
| • **கால அளவைக்காட்டும் குறியீடு** |
| • **ஸ்தாயிக் குறியீடுகள்** |
| • **தாளக் குறியீடுகள்** |
| • **இதர குறியீடுகள்** |

**(10 நிமிடங்கள்)**

**படி 4.1.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து சகல மாணவருக்கும் இணைப்பினை வழங்குக. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரே மாதிரியான செயற்பத்திரத்தினை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக.
- சகல குழுக்களும் சரியாக செயற்படுகின்றார்களா என்பதை அவதானிக்குக

**(15 நிமிடங்கள்)**

படி 4.1.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க வழி செய்க.

• ஏனைய குழுக்கள் அவதானித்து கருத்துக்கள் கூற சந்தர்ப்பம் தருக.

• குழுக்களின் பேறுகளைத் தொகுத்து வழங்கும்போது பின்வரும் விடயங்களை மேற்கொணர்க.

• உருப்படிகளை எழுதுவதற்கு இசைக் குறியீடுகள் மிகவும் அவசியமானது. இக்குறியீடுகளை உபயோகித்து உருப்படிகளை எழுதுவது பாடுவதற்கு இலகுவானதாக அமையும்.
• கால அளவைக்காட்டும் குறியீடுகள்.
குறில் ஸ்வரம் ஸ - 1 அட்சரகாலம்
நெடில் ஸ்வரம் ஸா - 2 அட்சரகாலம்
• கார்வைகளின் காலப்பிரமாணம்
ஸ, - 2 அட்சரகாலம், ஸா, - 3 அட்சரகாலம்
ஸா; - 4 அட்சரகாலம், ஸா;, - 5 அட்சரகாலம்
ஸா ; ; - 6 அட்சரகாலம்
• ஸ்வரத்தின் மேல் படுக்கைகோடு போடப்படுதல்
ஸ 1/2 அட்சரகாலம்
ஸ 1/4 அட்சரகாலம்
• படுக்கைக்கோடு போடப்படாவிடில் 1 அட்சரகாலம் (ஸ ஒரு அட்சரகாலம்)
முதலாம் காலம் - ஸரிகம / பத / நிஸ் //
இரண்டாம் காலம்- ஸரிகமபதநிஸ் / ஸ்நிதப /மகரிஸ//
மூன்றாம் காலம் - ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ
ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ//
• ஸ்தாயி
பொதுவாக பாடல்கள் 3 ஸ்தாயிகளுக்குள் அமைந்துள்ளன.
• மந்தரஸ்தாயி - ஸ்வரங்கள் ஒவ்வொன்றின் கீழும் புள்ளிகள் இட்டுக் காண்பிக்கப்படும் உதாரணம்: ரிகமபதநி
• மத்தியஸ்தாயி - ஸ்வரங்களின் மேலேயோ, கீழேயோ புள்ளிகள் இடப்படுவதில்லை. உதாரணம்: ஸரிகமபதநி
• தாரஸ்தாயி - ஸ்வரங்கள் ஒவ்வொன்றின் மேலேயும் ஒவ்வொரு புள்ளி போடுவதன் மூலம் இந்தஸ்வரங்களைக் காண்பிக்கலாம்.
உதாரணம்: ஸ்ரிகம்பதநி
• தாளக்குறியீடு:
தாளத்தின் ஆறு அங்கங்கள் ஷடங்கம் எனப்படும். இவை பின்வருமாறு
1. அனுத்ருதம் (ᴗ) 2. த்ருதம் (0)
3. லகு (|) 4. குரு (8)
5. ப்லுதம் (ᴗ|) 6. காகபாதம் (+)

- லகுவின் ஜாதி பேதங்களும் அவற்றின் அங்க அடையாளங்களும்
  திஸ்ரலகு (|3), சதுஸ்ரலகு (|4), கண்டலகு (|5), மிஸ்ரலகு (|73),சங்கீர்ணலகு (|9)
- தாளத்தில் வரும் அங்கமுடிவைக் காட்டும் குறியீடு - /
- ஆவர்த்தன முடிவைக்காட்டும் குறியீடுக - //
- இதர குறியீடுகள்:
  - அன்னியஸ்வரங்களைக் காட்டும் நட்சத்திரக் குறியீடு - *. பாஷாங்க இராகங்களில் வரும்.
  கமகம் - அசைத்துப்பாடவேண்டிய ஸ்வரங்களின் மேல் போடப்படும்.
  ஏற்ற ஜாரு /, இறக்கஜாரு \, வளைவுகோடு ∩
- வாத்திய இசையில் சாகித்ய வில்லில் அல்லது சாகித்ய மீட்டில் அடங்கும் பிரயோகங்கள் வளைவு கோடிட்டு காண்பிக்கப்படும்.

  உதாரணம்: பா; பமரீ பமகம ரீ;
  ரா. ரா.. ரா... மா\

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இசைக் குறியீடுகளைக் கற்பதன் மூலம் உருப்படிகளைச் சரியான முறையில் பாடுவர்.
- இசைக் குறியீடுகளை உரிய முறையில் பிரயோகித்து தாம் கற்ற உருப்படிகளை எழுதுவர்.
- உருப்படிகளைச் சரியான முறையில் எழுதிப் பாதுகாப்பதற்கு இசைக் குறியீடுகளைக் கற்பது அவசியம் என்பதனை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 4.1.2.3

- ஒரே மாதிரியான செயற்பத்திரத்தை மூன்று குழுக்களுக்கும் வழங்குக. சகல மாணவருக்கும் இணைப்பினையும் வழங்குக.

1) நீங்கள் கற்றுக்கொண்ட கீர்த்தனை ஒன்றின் பல்லவி தரப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் இசைக்குறியீடுகளைத் தருக.

### பல்லவி

$1_4$ 0 0

ஸ்ரா; ; ; ஸ்நிதப மகரிஸ / ஸரிகா ரிகபா / தரிஸ்ரா மகபத //
மா .. ல் மருகனை நினைந்திரு மனமே தினமே கணமே உதவிய //

ஸ்ரா, பா, த ஸ்ரா ஸ்நிதபமகரிஸ / ஸரிகா ரிகபா / தரிஸ்ரா மகபத //
மா . . . . ல் மருகனைநினைந்திரு மனமே தினமே கணமே உதவிய//

2) ✱ ∪ / + ⁓

இவ் இசைக்குறியீடுகளில் கமகத்திற்கான குறியீடு யாது?
பாஷாங்கராகத்தில் வரும் அன்னியஸ்வரத்திற்கான குறியீடு யாது?

3) ஸ்ரநீதபாமகரீஸா என்னும் ஸ்வரங்களின் எண்ணிக்கையைத் தருக?
   - இத்தொடரில் உள்ள நெடில் ஸ்வரங்களின் எண்ணிக்கையைத் தருக?
   - இத்தொடரில் உள்ள குறில் ஸ்வரங்கள் எவை?

# இசைக்குறியீடு பற்றிய முழு விபரம்

உருப்படிகளை எழுதுவதற்கு இசைக் குறியீடுகள் மிகவும் அவசியமானவையாகும். இக் குறியீடுகளைத் தக்கமுறையில் உபயோகித்து உருப்படிகளை எழுதும்போது அவ்வுருப்படிகளைச் சரியான முறையில் பாடுவதற்கு இலகுவாகிறது.

## கால அளவைக்காட்டும் குறியீடு

இசை உலகில் ஸ்வரங்களின் கால அளவைக் காட்டுவதற்கு குறியீடுகள் உபயோகப்படுகின்றன. ஒரு அட்சரகாலமுடையவை குறில் (ஹ்ரஸ்வ) ஸ்வரங்கள் எனவும் இரண்டு அட்சர காலமுடையவை நெடில் (தீர்க்க) ஸ்வரங்கள் எனவும் அழைக்கப்படும்.

குறில் ஸ்வரம் - ஸ - 1 அட்சரகாலம்
நெடில் ஸ்வரம் - ஸா - 2 அட்சரகாலம்

கார்வைகளின் காலப்பிரமாணம்

1. ஸ, - 2 அட்சரகாலம்
2. ஸா, - 3 அட்சரகாலம்
3. ஸா; - 4 அட்சரகாலம்
4. ஸா;, - 5 அட்சரகாலம்
5. ஸா; ; - 6 அட்சரகாலம்

ஒரு ஸ்வரத்தின் மேல் ஒரு படுக்கைக்கோடு போடப்பட்டால் அந்த ஸ்வரத்தின் அட்சரகாலம் 1/2 ஆகும். இரண்டு படுக்கைக்கோடுகள் போடப்பட்டிருந்தால் அதன் அட்சரகாலம் 1/4 ஆகும்.

உதாரணம்: ஸ = 1 அட்சரகாலம்
ஸ = 1/2 அட்சரகாலம்
ஸ = 1/4 அட்சரகாலம்

முதலாம் காலம் - $1_4$ 0 0
ஸ ரி கம / பத / நிஸ்

இரண்டாம் - ஸரிகமபதநிஸ் / ஸ்நிதப / மகரிஸ //

மூன்றாம் காலம் - ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ/ஸரிகமபதநிஸ்/ஸ்நிதபமகரிஸ//

# ஸ்தாயி

ஸரிகமபதநி என்னும் சப்த ஸ்வரங்களும் அடங்கிய நிலை ஸ்தாயி எனப்படும். அதாவது ஸ்வரங்கள் நிற்கும் நிலையினைக் குறிப்பது ஸ்தாயி ஆகும். ஆங்கில இசையில் இது octave என அழைக்கப்படும். இது மூன்று வகைப்படும். பொதுவாக பாடல்கள் மூன்று ஸ்தாயிகளுக்குள் அமைந்துள்ளன. மூன்று ஸ்தாயிகளும் பின்வருமாறு:

(1) மந்த்ர ஸ்தாயி
(2) மத்திய ஸ்தாயி
(3) தார ஸ்தாயி

**மந்தரஸ்தாயி:** கீழ்ஸ்தாயி, தக்குஸ்தாயி, நீசஸ்தாயி எனவும் இது அழைக்கப்படும். ஸ்வரங்கள் ஒவ்வொன்றின் கீழும் ஒவ்வொரு புள்ளி போடுவதன் மூலம் இவ்வகை ஸ்வரங்களைக் காண்பிக்கலாம்.
***உதாரணம்:*** ஸரிகமபதநி

**மத்தியஸ்தாயி:** சமஸ்தாயி எனவும் இது அழைக்கப்படும். ஸ்வரங்களின் மேலேயோ கீழேயோ புள்ளி எதுவும் போடாமல் இவ்வகை ஸ்வரங்களைக் காண்பிக்கலாம்.
***உதாரணம்:*** ஸரிகமபதநி

**தாரஸ்தாயி:** மேல்ஸ்தாயி, ஹெச்சுஸ்தாயி, உச்சஸ்தாயி எனும் பெயர்களாலும் இது அழைக்கப்படும். ஸ்வரங்கள் ஒவ்வொன்றின் மேலேயும் ஒவ்வொரு புள்ளி போடுவதன் மூலம் இந்த ஸ்வரங்களைக் காண்பிக்கலாம்.
***உதாரணம்:*** ஸ்ரிக்ம்ப்த்நி

**குறிப்பு:** தாரஸ்தாயிக்கு மேலுள்ள ஸ்தாயிக்கு அதிதாரஸ்தாயி என்று பெயர். ஸ்வரங்களுக்கு மேல் இரண்டு புள்ளிகள் போடப்பட்டிருக்கும்.

***உதாரணம்:*** ஸ் ரி் க் ம்

மந்தரஸ்தாயிக்கு கீழுள்ள ஸ்தாயிக்கு அனுமந்தர ஸ்தாயி என்று பெயர். ஸ்வரங்களுக்குக் கீழே இரண்டு புள்ளிகள் போடப்பட்டிருக்கும்
***உதாரணம்:*** ஸ ரி க ம

# தாளக்குறியீடு

தாளத்தின் அங்கங்கள் ஆறு ஆகும். இவை ஷடங்கம் என்று அழைக்கப்படும். தாளத்தின் அங்கங்களும் அவற்றின் அடையாளங்களும் பின்வருமாறு:

1. அனுத்ருதம் - ∪
2. த்ருதம் - 0
3. லகு - 1
4. குரு - 8
5. ப்லுதம் - $\overset{1}{8}$
6. காகபதம் - +

தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் திரியாங்கம் என அழைக்கப்படும். திரியாங்கத்தில் வரும் லகுவானது ஜாதி பேதமடையும் அங்கமாகும். லகுவின் ஜாதி பேதங்களும் அவற்றின் அங்க அடையாளங்களும் பின்வருமாறு:

1. திஸ்ர லகு - |3
2. சதுஸ்ர லகு - |4
3. கண்ட லகு - |5
4. மிஸ்ர லகு - |7
5. சங்கீர்ண லகு - |9

தாளத்தில் வரும் அங்க முடிவைக் காட்டும் குறியீடு - /

ஆவர்த்தன முடிவைக்காட்டும் அடையாளம் - //

இதர குறியீடுகள்:

✱ - பாஷாங்க இராகங்களில் வரும் அன்னிய ஸ்வரங்கள் நட்சத்திரக் குறியீடு இட்டுக் காண்பிக்கப்படும்.

〰 - கமகத்தைக் குறிக்கும் குறியீடு . அசைத்துப் பாடவேண்டிய ஸ்வரங்களின் மேல் இக்குறியீடு போடப்படும்.

／ - ஏற்ற ஜாருவைக் குறிக்கும் அடையாளம்.

＼ - இறக்க ஜாருவைக் குறிக்கும் குறியீடு

∪ - வளைவு கோடு:

வாத்திய இசையில் சாகித்திய வில்லில் அல்லது சாகித்திய மீட்டில் அடங்கும் பிரயோகங்கள் வளைவு கோடிட்டுக் காண்பிக்கப்படும்.

பா ; பமரீ பமகம ரீ; / ஸாரீ காமா / பமரீ ஸரிகம //

ரா ரா.. ரா.... மா ர வி குல சோ .. மா ..

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.1 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.1.4 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் சாபுதாள வகைகள் பற்றி அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி
- சாபுதாளங்கள் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 4.1.2.4
- இணைப்பு

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 4.1.1** **:**

- சாபுதாளங்களில் அமைந்த சில நாட்டார் பாடல்களை ஆசிரியர் பாடிக்காட்டி மாணவரை செவிமடுக்கச் செய்க.
- சாபு தாளங்கள் எழுதப்பட்ட அட்டையை காட்சிப்படுத்தி அவதானிக்கச் செய்க.
- செவிமடுத்து அவதானித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

- சாபு தாளங்கள் நாடோடி கானத்தினின்றும் வந்த புராதன தாளங்கள் ஆகும்.
- சாபு தாளங்களின் வகைகள் நான்கு
  - திஸ்ரசாபு
  - கண்டசாபு
  - மிஸ்ரசாபு
  - சங்கீர்ண சாபு
- இத்தாளங்களின் அட்சரங்களையும் கதிகளையும் கூறல்
- சாபு தாளங்களில் அமைந்த உருப்படிகளைக் குறிப்பிடல்
- சாபு தளாங்களைப் போடும் முறைகளை விளக்கல்

**(10 நிமிடங்கள்)**

**படி 4.4.2** **:**

- மாணவர்களின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற் பத்திரங்களை வழங்குக.
- சகல மாணவருக்கும் இணைப்பினை வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கமைய மாணவரின் செயற்பாட்டை அவதானிக்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.4.3 : • குழுக்கள் தத்தம் பேறுகளைச் சமர்ப்பிக்க வழி செய்க.

• ஒரு குழுவின் சமர்ப்பணத்தை அவதானித்து ஏனைய குழுக்கள் கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பம் தருக.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துக.

- சாபு தாளம் நாடோடி கானத்தினின்றும் வந்த புராதன தாளங்களில் ஒன்றாகும்.
- சாபு தாளம் சாய்ப்பு தாளம் என்றும் அழைக்கப்படும்.
- சாபு தாளம் நான்கு வகைப்படும். அவை திஸ்ரசாபு, கண்டசாபு, மிஸ்ரசாபு, சங்கீர்ணசாபு
- திஸ்ரசாபு: இது ஆவர்த்தனத்திற்கு மூன்று (1+2 = 3) எண்ணிக்கைகளைக் கொண்டது. முதல் தட்டு ஒரு எண்ணிக்கையும், இரண்டாம் தட்டுக்கு இரண்டு எண்ணிக் கைகளுமாகும். சில நாடோடிப் பாடல்கள் இத்தாளத்தில் அமைந்துள்ளது. இத்தாளத்திற்குரிய ஜதி தகிட என்பதாகும்.
- கண்டசாபு: இது ஆவர்த்தனத்திற்கு (2 + 3 = 5) ஐந்து எண்ணிக்கைகளையுடையது. முதல் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளும், இரண்டாம் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளுமாகும். தகதகிட என்பது கண்டசாபு தாளத்தின் ஜதியாகும்.
- மிஸ்ரசாபு : இது ஆவர்த்தத்திற்கு (3 + 4 = 7) ஏழு எண்ணிக்கைகளுடையது. இதில் முதல் தட்டுக்கு மூன்று எண்ணிக்கைகளும் இரண்டாம் தட்டுக்கு நான்கு எண்ணிக் கைகளுமாகும். மிஸ்ரசாபு தாளத்தின் ஜதி தகிடதகிதிமி என்பதாகும்.
- சங்கீர்ணசாபு: இது ஆவர்த்தத்திற்கு (4 + 5 = 9) ஒன்பது எண்ணிக்கையுடையது. இதில் முதல் தட்டுக்கு நான்கு எண்ணிக்கைகளும் இரண்டாம் தட்டுக்கு ஐந்து எண்ணிக்கைகளுமாகும்.
- இதன் ஜதி தகதிமிதகதகிட என்பதாகும். அபூர்வமாக சில பல்லவிகளில் இத்தாளம் உபயோகிக்கப்படுகிறது. கண்டசாபு தாளத்தில் அமைந்து உருப்படிக்கு உதாரணங்கள்.
  - பரிதான மிச்சிதே (பிலஹரி ராகம்)
  - குருலேக எடுவண்டி (கௌரிமனோகரி ராகம்) மிஸ்ரசாபு தாளத்தில் அமைந்த உருப்படிக்கு உதாரணங்கள்
    - நிதிசாலஸுகமா (கல்யாணிராகம்)
    - நீ சித்தமு (தன்யாசி ராகம்)
- சாபு தாளங்களைப் போட்டுக்காட்டி அதனை மாணவரைப் போடச் செய்தல்

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- சாபு தாளங்களின் வகைகளைக் கூறுவர்.
- சாபு தாளங்களில் அமைந்த உருப்படிகளைக் கூறுவர்.
- சாபு தாளங்களின் மிருதங்கச் சொற்களைக்கூறி போட்டுக் காட்டுவர்.
- பல வகையான உருப்படிகளைக் கேட்கும்போது சாபு தாளங்களில் அமைந்த உருப்படிகளை இனங்காண்பர்.

## செயற்பத்திரம் 4.1.2.4

### குழு 1

- பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
  - சாபு தாளம் எத்தனை வகைப்படும்?
  - அவற்றை வரிசைப்படுத்துக?
  - ஒவ்வொன்றுக்குமுரிய மிருதங்கச் சொற்களைக் கூறி திஸ்ரசாபு தாளத்தைப் போட்டுக் காட்டுக?

### குழு 2

- பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
  - நாடோடி கானத்தினின்றும் தோன்றிய தாளம் யாது?
  - இத்தாளத்தின் வகைகள் எவை?
  - கண்டசாபு தாளத்திற்குரிய ஜதியைக்கூற போட்டுக் காட்டுக?
  - இத்தாளத்தில் அமைந்த உருப்படி ஒன்று கூறுக?

### குழு 3

- பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
  - மிஸ்ர சாபு தாளம் என்றால் என்ன?
  - இத்தாளத்தின் மொத்த அட்சரகாலம் யாது?
  - இத்தாளத்தின் ஜதியைக் குறிப்பிட்டு தாளத்தைப் போட்டுக் காட்டுக?
  - இத்தாளத்தில் அமைந்த உருப்படி ஒன்று கூறுக?

### குழு 4

- பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
  - சங்கீர்ணசாபு தாளம் என்றால் என்ன?
  - இத்தாளத்தின் மொத்த அட்சரகாலம் யாது?
  - இத்தாளத்தின் ஜதியைக் குறிப்பிட்டு தாளத்தைப் போட்டுக் காட்டுக?
  - சாபு தாளத்தை வேறு எப்படி அழைப்பர்?

## சாபு தாள வகைகள்

நாடோடி கானத்தினின்றும் வந்த புராதன தாளங்களில் இதுவும் ஒன்று. சாபு தாளத்தை சாய்ப்பு தாளம் எனவும் அழைப்பதுண்டு. இத்தாளத்தை இரண்டு தட்டுகளாகப் போடுவது வழக்கம். வீச்சம் தட்டுமாகக்கூட இந்தத் தாளத்தைப் போடுவதுண்டு. பொதுவாக சாபுதாளம் என்பது மிஸ்ரசாபு தாளத்தினையே குறிக்கும்.

**சாபு தாளம் நான்கு வகைப்படும்.**

1. திஸ்ரசாபு
2. கண்டசாபு
3. மிஸ்ரசாபு
4. ஸங்கீர்ணசாபு

- திஸ்ர சாபு: இது ஆவர்த்தனத்திற்கு (1 + 2 = 3) மூன்று எண்ணிக்கைகளைக் கொண்டது. முதல் தட்டுரு ஒரு எண்ணிக்கையும், இரண்டாம் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளுமாகும். சில நாடோடிப் பாடல் கள் இத்தாளத்தில் காணலாம். திஸ்ரசாபு தாளத்திற்குரிய ஜதி தகிட என்பதாகும்.

- கண்ட சாபு: இது ஆவர்த்தனத்திற்கு (2 + 3 = 5) ஐந்து எண்ணிக்கைகளையுடையது. முதல் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளும், இரண்டாம் தட்டுக்கு மூன்றுஎண்ணிக்கைகளுமாகும். தகதகிட என்பது கண்டசாபு தாளத்தின் ஜதியாகும்.
  உதாரணம்: 1. பரிதான மிச்சிதே (பிலஹரி ராகம்)
  2. குருலேக எடுவண்டி (கௌரி மனோகரி இராகம்)

- மிஸ்ரசாபு : இது ஆவர்த்தத்திற்கு (3 + 4 = 7) ஏழு எண்ணிக்கைகளுடையது. இதில் முதல் தட்டுக்கு மூன்று எண்ணிக்கைகளும் இரண்டாம் தட்டுக்கு நான்கு எண்ணிக்கைகளுமாகும். மிஸ்ரசாபு தாளத்தின் ஜதி தகிடதகிதிமி என்பதாகும்.
  உதாரணம்: 1. நிதிசாலஸுகமா (கல்யாணி ராகம்)
  2. நீ சித்தமு (தன்யாசி ராகம்)

- சங்கீர்ணசாபு: இது ஆவர்த்தத்திற்கு (4 + 5 = 9)ஒன்பது எண்ணிக்கையுடையது. இதில் முதல் தட்டுக்கு நான்கு எண்ணிக்கைகளும் இரண்டாம் தட்டுக்கு ஐந்து எண்ணிக்கைகளுமாகும். இதன் ஜதி தகதிமிதகதமிட என்பதாகும். அபூர்வமாக சில பல்லவிகளில் இத்தாளம் உபயோகிக்கப்படுகிறது.

**பின்குறிப்பு :** 3 + 4 என்ற எண்ணிக்கையில் வருவது கிரமசாபு தாளமாகும். இதன் எதிர்ப்பதம் விலோமசாபு. இதன் அட்சரங்கள் 4 + 3 என்ற எண்ணிக்கையில் வரும்.
சியாமாசாஸ்திரிகள் இவ்விலோமசாபு தாளத்தில் பல கிருதிகளை இயற்றியுள்ளார்.

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.1.5 :** சர்வதேச இசை வகைகளையும், கர்நாடக சங்கீதத்துக்கு உள்ள தொடர்புகளையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம், மேலைத்தேய சங்கீதம் அடங்கிய ஒலிநாடா, ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 4.1.2.5
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.1.1** **:**
- தர உள்ளீட்டில் தரப்பட்ட ஒலிநாடாவை ஒலிக்கச்செய்து மாணவரை செவிமடுக்கச் செய்க.
- ஏற்கனவே கற்ற விடயங்களான சர்வதேச இசை வகைகள், இசைப்படும் முறைகள், இசைக்கப்படும் தேசங்கள் போன்ற விபரங்களையும் கலந்துரையாடுக.
- செவிமடுத்த, கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகக் கீழ்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

- கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் ஆகியவை கீழைத்தேய சங்கீதமாகும். இவை மெலடி என அழைக்கப்படும்.
- மேலைத்தேய சங்கீதம் ஹார்மனி என்றும் பாலிபோனி என்றும் அழைக்கப்படும்.
- இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் மெலடிக்கல் சங்கீதத்தைக் கேட்கலாம்.
- ஐரோப்பிய நாகரீகம் பரவியுள்ள தேசங்களில் ஹார்மனிக்கல், பலிபோனி சங்கீதத்தைக் கேட்கலாம்.
- கர்நாடக சங்கீதத்தின் சிறப்பம்சங்கள்
  - நுண்மையான சுருதிகள் • கமகங்கள்
- கர்நாடக சங்கீத இராகங்களான சங்கராபரணம், நட பைரவி ஆகிய இராகங்கள் ஐரோப்பிய சங்கீதத்தில் உபயோகிக்கப்படுகின்றன.
- மோகன இராகம் எல்லாதேசத்து இசையிலும் காணப்படுகிறது.

**(10 நிமிடங்கள்)**

**படி 4.1.2** : • வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குக.

• சகல மாணவர்களுக்கும் பின்னிணைப்பினை வழங்குக.

• அறிவுறுத்தல்களுக்கேற்ப குழுக்களின் செயற்பாட்டினை அவதானித்து வழிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

**டி 4.1.3** : • குழுக்கள் தத்தம் பேறுகளைச் சமர்ப்பிக்க வழிப்படுத்துக.

• ஒரு குழுவின் சமர்ப்பணத்தை ஏனைய குழுக்கள் அவதானித்து கருத்துக்கூற இடமளிக்க.

• சகல குழுக்களின் பேறுகளைத் தொகுத்து ஆசிரியர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- சர்வதேச இசை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
  - மெலடி (Melody)
  - ஹார்மனி (Harmony)
  - பாலிபோனி (Polyphony)
- மெலோடிக்கல் சங்கீதத்தில் ஒன்றை ஸ்வரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் தொடர்ச்சியாய் ஒரு முறையை அனுசரித்து வரும்.
- இந்தியா, இலங்கை போன்ற கீழ்நாட்டு பிரதேசங்களில் மெலோடிக்கல் சங்கீதத்தைக் கேட்கலாம்.
- ஹார்மோனிக்கல் சங்கீதத்தில் ஸ்வரத்தொகுதிகள் அல்லது ஸ்வர அடுக்குகள் ஒன்றன்பின் ஒன்றாய் வரும்.
- பாலிபோனி சங்கீதத்தில் ஒரு முறையைத் தழுவி அமைக்கப்பட்டுள்ள பல கீதங்கள் ஒரே தருணத்தில் வாசிக்கப்படும்.
- ஐரோப்பிய நாகரிகம் பரவியிருக்கும் மற்றைய தேசங் களிலும் பாலிபோனி சங்கீதத்தையும் ஹார்மனிக்கல் சங்கீதத்தையும் கேட்கலாம்.
- இந்திய சங்கீதத்தை இராக சங்கீதம் என்றும் கூறுவர்.
- கர்நாடக சங்கீதத்திலுள்ள நுண்மையான சுருதிகள், கமகங்கள் முதலிய அருமையான இசைதத்துவங்களை மேல் நாட்டு சங்கீதத்தில் காண முடியாது.
- கர்நாடக சங்கீத இராகங்கான சங்கராபரணம், நடபைரவி ஆகியவை ஐரோப்பிய சங்கீதத்தில் உபயோகிக்கப் படுகின்றன.
- கர்நாடக சங்கீத இராகமான மோகனம் எல்லா தேசத்து இசையிலும் பயன்படுத்தப்படுகின்றது.

**(10 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சர்வதேச இசைவகைகளைக் கூறுவர்.
- மெலடி, ஹார்மனி, பாலிபோனி இசை வகைகளுக்கான வேறுபாட்டை விளக்குவர்.
- வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் ஒலி / ஒளி பரப்பாகும் இசை நிகழ்ச்சிகளில் சர்வதேச இசை வகைகளை இனங்காண்பர்.
- சங்கராபரணம், நடபைரவி போன்ற கர்நாடக இராகங்கள் மேலைத்தேய இசையிலும் காணப்படுவதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 4.1.2.5

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

- இலங்கை, இந்தியா போன்ற பிரதேசங்களில் எவ்வகையான சங்கீதத்தைக் கேட்கலாம்.
- கர்நாடக சங்கீத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் கூறுக.
- சங்கராபரணம், நடபைரவி போன்ற கர்நாடக இராகங்கள் எந்நாட்டு இசையில் உபயோகிக்கப்படுகின்றது.
- எல்லாத்தேச சங்கீதங்களிலும் காணப்படும் இராகம் யாது.
- கீழைத்தேச சங்கீதம் எந்த இசை வகையைச் சேர்ந்தது.
- ஹார்மனிக்கல் இசையின் தன்மை யாது.
- மெலடி, ஹார்மனி இசை தவிர்ந்த இன்னொரு வகை இசையின் பெயரைத் தருக.

## சர்வதேச இசை வகைகள்

சர்வதேச இசை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

- மெலடி (Melody)
- ஹார்மனி (Harmony)
- பாலிபோனி (Polyphony)

மெலோடிக்கல் சங்கீதத்தில் ஒன்றை ஸ்வரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் தொடர்ச்சி யாய் ஒரு முறையை அனுசரித்து வரும். பாலிபோனி சங்கீதத்தில் ஒருமுறையைத் தழுவி அமைக்கப்பட்டுள்ள பல கீதங்கள் ஒரே தருணத்தில் வாசிக்கப்படும். ஹார்மனிக்கல் சங்கீதத்தில் ஸ்வரத் தொகுதிகள் அல்லது ஸ்வர அடுக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ச்சியாய் வரும். அதாவது ஒரு ஸ்வரத்தை வாசிக்கும் பொழுது அதன் இணை ஸ்வரங்களும், நட்பு ஸ்வரங்களும் கூடவே வாசிக்கப்படும்.

இந்தியா, இலங்கை போன்ற கீழ்நாட்டு பிரதேசங்களில் மெலாடிக்கல் சங்கீதத்தைக் கேட்கலாம். ஐரோப்பிய நாகரிகம் பரவியிருக்கும் மற்றைய தேசங்களில் பாலிபோனி சங்கீதத்தையும் ஹார்மனிக்கல் சங்கீதத்தையும் கேட்கலாம்.

இந்திய சங்கீதத்தை இராக சங்கீதம் என்று கூறுவர். இராக சங்கீதத்திலுள்ள நுண்மையான சுருதிகள், கமகங்கள் முதலிய விசேட இசைத் தத்துவங்கள் மேல் நாட்டு சங்கீதத்தில் காணமுடியாது. ஐரோப்பிய சங்கீதத்தில் சங்கராபரணம் நடபைரவி போன்ற இராகங்கள் உபயோகிக்கப்படுகின்றன. மோகன இராகம் எல்லாத் தேச சங்கீதத்திலும் காணப்படுகின்றது.

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.3 :** இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.3.2 :** ஸிம்ஹேந்திரமத்யம இராக லட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- ஸிம்ஹேந்திரமத்யம இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம் ஹார்மோனியம், சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.3.2.2
- இணைப்பு

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 4.3.1** **:**
- ஸிம்ஹேந்திர மத்திம இராகத்தின் ஸ்வரஸ்தான வரை படத்தை காட்சிப்படுத்தியும், ஸிம்ஹேத்திர மத்யம இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தை பாடிக்காட்டியும், ஹார்மோனியத்தில் ஸ்வரஸ்தானங்களை வாசித்துக் காட்டியும் மாணவரை செவிமடுக்கச் செய்க.

| |
|---|
| • ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தின்,<br>• மேள எண்<br>• ஆரோஹண, அவரோஹணம்<br>• ஸ்வரஸ்தானங்கள்<br>• விசேட அம்சங்கள்:<br>- ஜீவஸ்வரம், நியாசஸ்வரம், கிரகஸ்வரம்<br>- மூர்ச்சனாகாரக இராகம்<br>- சஞ்சாரம்<br>இசை உருப்படிகள் |

**(10 நிமிடங்கள்)**

**படி 4.3.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்பாட்டினை ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

**டி 4.3.3** **:**
- குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

- குழுக்களின் பேறுகளின் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மீளவும் மேற்கொள்க.

- ஸிம்ஹேத்திர மத்யம இராகத்தின் மேள எண் 57
- ஸிம்ஹேத்திர மத்யம இராகத்தின்
  ஆ: ஸரிகமபதநிஸ்
  அ: ஸ்நிதபமகரிஸ
- ஸ்வரஸ்தானங்கள்:
  ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம், பிரதி மத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்
- ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தின் விசேட அம்சங்கள்
  - சம்பூர்ண இராகம்
  - ஜீவஸ்வரங்கள் : ரி, க, ம, நி
  - நியாசஸ்வரங்கள்: ரி, ம, ப, நி
  - கிரகஸ்வரங்கள் : ஸ, ப, நி
  - மூர்ச்சனாகாரக மேளம். இதன் பஞ்சம, தைவத மூர்ச்சனைகள் முறையே மாயாமாளவகௌளை (15), ரசிகப்ரியா (72) ஆகிய மேளங்களைத் தோற்றுவிக்கின்றன.
  - கருணைச்சுவை நிரம்பிய இராகம்.
- ஐரோப்பிய ஹங்கேரி நாட்டின் இசையிலும், நாடோடி இனத்தவரின் இசையிலும் இந்த இராகம் ஒலிக்கிறது.
- முக்கியமான பிரதிமத்தியம மேளங்களில் இது வொன்றாகும்.
- சஞ்சாரம்
- நிஸ்நிதபம - பதநிதநிநிஸ்ா, ஸ் - பதநிஸ்ரீரீ - ஸ்ரிக்ரிசாஸ்றி - ஸா, ஸ்நிதபம - பா, மபதபம - பாபமகரிரிஸா
- இசை உருப்படிகள்
  1. வர்ணம் - பதபங்கே - ஆதி - வீணைபைரவமூர்த்தி
  2. கிருதி - காமாட்சி - ரூபகம் - முத்துஸ்வாமிதீட்சிதர்
  3. கிருதி - உன்னையல்லால் - ஆதி - கோடீஸ்வரஐயர்
  4. கிருதி - நீதுசரணமுலே - ஆதி - தியாகராஜர்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைக் கூறுவர்.
- ஆரோஹண, அவரோஹணத்தில் ஸ்வரஸ்தானங்களை இனங்காண்பர்.
- இராகத்தின் கிரகஸ்வரங்களை கூறுவர்.
- ஸிம்ஹேந்திரமத்யம இராகத்திலமைந்த உருப்படிகளை இனங்காண்பர்.

## செயற்பத்திரம் 4.3.2.2

- சகல மாணவர்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

கீழ்வரும் வினாக்களுக்கு விடை அளிக்குக.

1) ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தின் மேள எண் யாது?
2) ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தை எழுதுக?
3) இவ் இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் எவை?
4) ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தில் உருப்படிகள் இரண்டு எழுதுக?
5) ஸிம்ஹேந்திர மத்யம இராகத்தின் சஞ்சாரம் சிறிது எழுதுக?
6) இவ் இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடத்தை வரைக?

# இராகலட்சணம்
## ஸிம்ஹேந்திர மத்யமம்

57ஆவது மேளகர்த்தா இராகம் திசி சக்கரத்தில் 3ஆவது இராகம் (திசி - கோ)

ஆ : ஸரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ

இவ்விராகத்தில் வரும் சுரங்களாவன ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்தியம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்

சம்பூர்ண ராகம். ரி, க,ம, நி ஜீவ சுரங்கள். ரி, ம, ப, நி நியாச சுரங்கள். ரி, ப, வில் நின்று சஞ்சாரம் செய்யலாம். உருப்படிகள் ஸ, ப, நி சுரங்களில் ஆரம்பிக்கின்றன. பிரத்யாகத கமகம் இந்த இராகத்தின் சாயலை நன்கு விளக்கிக் காட்டும்.

ஸர்வ, ஸ்வர, கமக, வரிக, ரக்தி, ராகம், த்ரிஸ்தாயி ராகம், விஸ்தாரமான ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் இராகம், பிரசித்தமான பிரதி மத்யம ராகங்களில் இது ஒன்று. கீரவாணியின் நேர்ப்பிரதி மத்யம ராகம் மூர்ச்சனாகாரக மேளராகம். இதன் பஞ்சம, தைவத மூர்ச்சனைகள் முறையே மாயாமாளவகௌளையும், ரசிகப்பிரியாவும் ஆகும்.

- ஐரோப்பாவில் ஹங்கேரி நாட்டின் சங்கீதத்திலும், ஜிப்ஸி இனத்தவரின் வாத்யப்பருந்த சங்கீதத்திலும் இந்த ராகம் ஒலிப்பதைக் காணலாம்.

### சஞ்சாரம்

நிஸ்நிதபம - பதநிபத நிநிஸ்ா - பதநிஸ் - ரீரி ஸ்ாஸ்ஸ்ா
பதநிஸ்ரீ - ஸ்நிதபமபா - மபதபம -பமபத பமகரிரி
ஸநீஸரிகரிஸா - ஸ்நீதபம - பதநிநித நிநிஸ்ா

### உருப்படிகள்

1. வர்ணம் - பதபங்கே - ஆதி - வீணைபைரவமூர்த்தி
2. க்ருதி - காமாட்சி - ரூபகம் - முத்துஸ்வாமிதீட்சிதர்
3. க்ருதி - இன்னம் ஒரு தலம் - ரூபகம் - முத்துத்தாண்டவர்
4. க்ருதி - உன்னையல்லால் - ஆதி - கோடீஸ்வரஐயர்
5. க்ருதி - அசைந்தாடும் - ஆதி - ஊத்துக்காடு வெங்கட சுப்பய்யர்

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.3.3 :** பந்துவராளி இராக லட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- பந்துவராளி இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்
- ஹார்மோனியம், சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.3.2.3
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.3.1** **:**
- பந்துவராளி இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடத்தைக் காட்சிப்படுத்தியும்,
- இவ் இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தை பாடிக்காட்டியும், ஹார்மோனியத்தில் ஸ்வரஸ்தானங்களை வாசித்துக்காட்டியும் மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- பந்துவராளி இராகத்தின் மேள எண்
- இவ் இராகத்தின் ஆரோஹண, அவரோஹணம்
- ஸ்வரஸ்தானங்கள்
- விசேட அம்சங்கள்:
- ஜீவஸ்வரம், நியாசஸ்வரம், கிரகஸ்வரம்
- மூர்ச்சனாகாரக மேளம்
- சஞ்சாரம்
- இசை உருப்படிகள்

**(10 நிமிடங்கள்)**

**படி 4.3.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒழுங்கமைத்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்பாட்டினை ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

டி 4.3.3 : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
• மற்றைய குழுக்களும் அதனை அவதானித்துக் கருத்துக்கள் கூற இடமளிக்க.
• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- பந்துவராளி இராகத்தின் மேள எண் 51
- கடபயாதிஸங்கைக்காக காமவர்த்தனி என்றழைக்கப் படுவது.
- பந்துவராளி இராகத்தின்
  ஆ: ஸரிகமபதநிஸ்
  அ: ஸ்நிதபமகரிஸ
- இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள்:
  ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்
- பந்துவராளி இராகத்தின் விசேட அம்சங்கள்
  - சம்பூர்ண இராகம்
  - பழமையான இராகம்
  - பண்டைத்தமிழிசையில் சாதாரிப்பண் என்றழைக்கப்படும்.
  - இந்துஸ்தானி இசையில் 'பூர்விதாட்" என்றழைக்கப் படுகிறது.
  - ஜீவஸ்வரங்கள் எல்லா ஸ்வரங்களும் (முக்கியமாக ரி, ம, நி)
  - நியாசஸ்வரங்கள்: ம, ப
  - கிரகஸ்வரங்கள் : ஸ, ப, நி
  - மூர்ச்சனாகாரக மேளம்: இதன் இராகத்தின் நிஷாத மூர்ச்சனை கனகாங்கி மேளமாகும்.
  - கருணைச்சுவையை வெளிப்படுத்தும் இராகம்.
- ஜண்டைப் பிரயோகம், தாட்டுப்பிரயோகங்கள், பிரக்தியாகத கமகங்கள் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கின்றன.
- சஞ்சாரம்
  ஸரிகமபாம - பததபமா - பதநிஸ்ரி
  க்ரிஸ்ா - ஸ்நிதபாம - கமபதநிதபம
  கமகரிஸா - ஸநிதநிஸரிஸா
- இசை உருப்படிகள்
  1. வர்ணம் - காஞ்சிகாமகோடி - அட - சுப்பராமதீட்சிதர்
  2. கிருதி - சிவசிவசிவயென - ரூபகம் - தியாகராஜர்
  3. கிருதி- விசாலாட்சிம் - மிஸ்ரசாபு - முத்துஸ்வாமிதீட்சிதர்
  4. கிருதி - நீயல்லவோ - ஆதி - பாபாநாசம்சிவன்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பந்துவராளி இராகத்தின் மேள எண்ணைக் கூறுவர்.
- இவ் இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைக் கூறுவர்.
- பந்துவராளி இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை இனங்காண்பர்.
- பந்துவராளி இராகம் ஓர் மேளகர்த்தா இராகம் என்பதனைக் கூறுவர்.
- சஞ்சாரத்தைப்பாடும் ஆர்வத்தை வெளிப்படுத்துவர்.
- பந்துவராளி இராகத்தில் அமைந்து உருப்படிகளை இனங்காண்பர்.
- பந்துவராளி இராகமும், காமவர்த்தனி இராகமும் ஒன்றே என்பதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 4.3.2.3

- சகல மாணவர்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்பையும் வழங்குக.

இந்துஸ்தானி இராகத்தில் பூர்விதாட் என அழைக்கப்படும் இராகத்தின்

- ஆரோஹண, அவரோஹணத்தை எழுதுக?
- ஸ்வரஸ்தானங்கள் எவை?
- இவ்விராகத்தின் பண் யாது?
- கிரகஸ்வரங்கள் எவை?
- சிறு சஞ்சாரம் எழுதுக?
- உருப்படிகள் இரண்டு கூறுக?
- ஸ்வரஸ்தான வரைபடம் ஒன்றைக் கீறுக?

# இராகலட்சணம்
## பந்துவராளி (காமவர்த்தனி)

51ஆவது மேளகர்த்தா இராகம் பிரம்ம சக்கரத்தில் 3ஆவது இராகம் (பிரம்ம - கோ)
ஆ : ஸரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ

இவ்விராகத்தில் வரும் சுரங்களாவன: ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்

சம்பூர்ணராகம், ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் எல்லா சுரங்களும் ராகச்சாயா சுரங்கள், நியாச ஸ்வரமாக வரும். மத்திமம் சற்று தீர்க்கமாக அசைத்துப் பாடலாம். பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம். உருப்படிகள் ஸ, ப, நி சுரங்களில் ஆரம்பிக்கின்றன. பதமா, தஸ்நிதபம ஆகியவை விசேட சஞ்சாரங்கள்.

ஸர்வ, ஸ்வர, கமக, வரிக, ரக்தி, ராகம், தாரஸ்தாயி காந்தாரத்திற்கு மேலே இவ்விராகத்தின் சஞ்சாரம் காண்பது அரிது. விஸ்தாரமாக ஆலாபனைக்கு இடங் கொடுக்கும் இராகம். பிரசித்த பிரதி மத்திம ராகங்களில் இது ஒன்று. மாயாமாளவகௌளையின் நேர்பிரதி மத்திம இராகம் இதுவேயாகும். சாயாலக இராகங்களில் ஒன்று.

மூர்ச்சனாகாரக ராகம். இதன் நிஷாத மூர்ச்சனையே கனகாங்கி (1) மேளகர்த்தாவாகும். எப்பொழுதும் பாடலாம். கச்சேரியின் ஆரம்பத்தில் இவ்விராகக் க்ருதிகளைப்பாடக் கச்சேரி விரைவில் களைகட்டும். பண் சாதாரி நட்டாராகம் என்பதும் இவ்விராகமே. ஹிந்துஸ்தானி இசையில் பூர்விதாட் என்று அழைக்கப்படுகிறது. கருணைச்சுவையை வெளிப்படுத்தும் இராகம். கடபயாதி ஸங்க்யைக்காக காமவர்த்தனி என்று அழைக்கப்படுகிறது.

### சஞ்சாரம்

ஸரிகமபாம - பததபமா - பதநித நிநிஸ்ரிநி - தநிஸ்நிதபாம
பதநிஸ்ரிக்ரிஸ்ரா - ஸ்நிதபாம - கமபதநிதபம - கமபதபம
கமகரிரிஸா - ஸரிகம பாமகாரி - பமகரிரிஸா - ஸநித நிஸரிஸா

### உருப்படிகள்

1. வர்ணம் - ஸாமிநின்னே - ஆதி - ஷட்கால நரசய்யா
2. க்ருதி - ஸாரஸாசஷி - ஆதி - ஸ்வாதித்திருநாள்
3. க்ருதி - சம்போமஹாதே - ரூபகம் - தியாகராஜர்
4. க்ருதி - நின்னருள் இயம்பலாகுமோ - ரூபகம் - பாபநாசம் சிவன்
5. க்ருதி - சிவசிவயென - ஆதி - தியாகராஜசுவாமிகள்
6. க்ருதி - நின்னேநெர - ரூபகம் - தியாகராஜசுவாமிகள்

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.4 :** இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** **4.4.2 :** மிருதங்க வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- மிருதங்க வாத்தியத்தின் பாகங்கள் குறிப்பிட்ட படம், மிருதங்கம், மிருதங்க ஒலி அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 4.4.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.4.1** **:**
- மிருதங்க வாத்தியத்தின் ஒலி அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை இசைக்கச் செய்து அல்லது மிருதங்க வாத்தியத்தினை வாசித்துக் காட்டி, மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- மிருதங்கம் தொடர்பான கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

| |
|---|
| • மிருதங்க வாத்தியத்தின் சிறப்பு<br>• மிருதங்க வாத்திய அமைப்பும், பாகங்களின் பெயரும்<br>• மிருதங்க அமைப்பு விளக்கம்<br>• வாசிக்கும் முறை<br>• சுருதி சேர்க்கும் முறை<br>• பிரபல்யமான கலைஞர்கள் |

**(10 நிமிடங்கள்)**

**படி 4.4.2** **:**
- மாணவரரின் தொகைக்கேற்ப, பொருத்தமான சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.
- ஒவ்வொரு மாணவருக்கும் இணைப்பினையும் வழங்குக.
- குழுவிலுள்ள எல்லா அங்கத்தவர்களும் தனித்தனியாகச் செயற்படச் செய்க.
- வழங்கிய வழிகாட்டலுக்கேற்ப, செயற்பாட்டில் ஈடுபடுவதனை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.4.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பத்தினை வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுத்திடும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.

• கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- மிருதங்க வாத்தியச் சிறப்பு
  கர்நாடக இசைக்கச்சேரியின் பிரதான தாளவாத்தியம். சிவனது நாட்டியத்திற்கு வாசிக்கப்படுவதாகப் புராணங்கள் கூறுகின்றன. வாத்தியத்ரயத்தில் முன்றாவது சிறப்பிடம். தமிழிசையில் மத்தளம்; நான்முகன் என்பர். நாட்டியக் கச்சேரியில் முக்கிய இடம்பெறுகின்றது.
- மிருதங்க வாத்திய அமைப்பும் பாகங்களும்.
  - முற்காலத்தில் மண்ணாற் செய்யப்பட்டும், தற்காலத்தில் பலாமரம், கருங்காலி, பனை, வேம்பும் பயன்படுத்தப் படுகின்றன.
  - மிருதங்கம் செய்யும் மரத்தை, உட்பாகம் கனமாகவும் ஒரப்பாகம் இலேசாகவும் அமையும் படி குடைந் தெடுப்பர்.
  - பின் மூட்டுப்போடுவர். மிருதங்க நடுப்பாகம் பருத்தும் இருபுறமும் அமைப்பில் சிறுத்தும் அமைந்திருக்கும்.
  - வலப்புறம் வலந்தலை என்றும் இடப்புறம் இடந்தலை என்றும் அழைக்கப்படும்.
  - வலப்புற இடப்புற மூட்டுத்தோலை இணைக்கும் கயிறு தோல்வார் எனப்படும்.
  - மிருதங்கக் கட்டையின் நடுவளையத்திற்கு அரடா என்பர்.
  - வலப்புற இடப்புறப் பக்கங்கள் ஒவ்வொன்றிலும் 16 கண்கள் காணப்படும்.
- இருபுறமுள்ள தோல்வளையங்களுள், வாரினைச் செலுத்தி இழுத்துக் கட்டுவர்
- வலந்தலை 3 தோலால் ஆனது.
  1. உட்காரத்தட்டு
  2. வெட்டுத்தட்டு (மீட்டுத்தோல்)
  3. கொட்டுத்தட்டு (சாப்புத்தோல்)
- வலந்தலையின் நடுமையத்தில் கறுப்பு நிறமான சோறு அல்லது கரணை (மருந்து) அமைக்கப்பட்டிருக்கும். இப்பகுதியே மிருதங்கத்திற்கு கணீர் என்ற ஒலியைத் தருகின்றது.

- மிருதங்க இடந்தலைத் தொப்பி என்று அழைக்கப்படும். இது 2 தோல்களால் மூடப்பட்டிருக்கும். ஆட்டுத்தோலும், எருமைத்தோலும் பயன்படுத்தும்.
- வாசிக்குமுன், தொப்பியின் நடுவில் ரவையை நீருடன் கலந்து பிசைந்து தடவுவர். வாசிப்பின் பின் ரவையை அகற்றி விடுவர்.
- வாசிக்கும் முறை
  இக்கருவியை இரு கைகளின் விரல்களினாலும் மணிக்கட்டுக்களினாலும் வாசிப்பர்.
- சுருதி சேர்க்கும் முறை
  - மிருதங்கத்தைச் சுருதி சேர்க்கையில் வலந்தலையைப் பாடுவரது ஸட்ஜத்திற்கும் இடந்தலையை மந்திரஸ்தாயி பஞ்சமம், அல்லது மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்குச் சுருதி சேர்ப்பர்.
  - மூட்டினை இழுத்துப் பிணைக்கும் வார்களின் இடை வெளியில், 'புள்' எனப்படும் மரத்துண்டினை வைத்து மூட்டுப் பின்னலில் மேல்நோக்கித் தட்டினால் சுருதி குறைந்து ஒலிக்கும். கீழ்நோக்கித் தட்டினால் சுருதி அதிகமாக ஒலிக்கும்.
  - மிருதங்கத்தில் தக்குஸ்ருதி மிருதங்கம் ஆண்களுக்கும் ஹெச்சுஸ்ருதி மிருதங்கம் பெண்களுக்கும் பாடுகையில் பயன்படுத்தப்படும்.
- பிரபலமான கலைஞர்கள்
  துக்காராம் நாராயணசாமி அப்பா
  தஞ்சாவூர் வைத்தியநாத ஐயர்
  புதுக்கோட்டைத் தட்சிணாமூர்த்திப்பிள்ளை
  கும்பகோணம் அழகநம்பிப்பிள்ளை
  பாலக்காடு மணி ஐயர் போன்றோர்.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- மிருதங்க வாத்தியத்தின் சிறப்பைக் குறிப்பிடுவர்.
- மிருதங்க வாத்தியத்தின் படத்தைப் பொருத்தப்பாட்டுடன் வரைந்து, பாகங்களைப் பெயரிடுவர்.
- மிருதங்க வாத்தியத்தின் அமைப்பினைக் கூறுவர்.
- மிருதங்க வாத்தியத்தை வாசிக்கும் முறையைக் கூறுவர்.
- மிருதங்க வாத்தியத்தைச் சுருதி சேர்க்கும் முறையினைக் கூறுவர்.
- மிருதங்க வாத்தியத்தில் பிரபலமான கலைஞர்களை இனங்கண்டு குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.4.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- குழுவிலுள்ள அங்கத்தவர்களும் தனித்தனியாகச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.

- மிருதங்கவாத்தியத்தின் அமைப்பைக் காட்டும் படம் வரைக.
- மிருதங்க வாத்தியத்தின் பாகங்களைப் படத்தில் குறிப்பிடுக.
- மிருதங்க வாத்திய அமைப்பை விளக்குக.
- மிருதங்க வாத்தியத்தை வாசிக்கும் முறையையும் சுருதி சேர்க்கும் முறையையும் குறிப்பிடுக.
- மிருதங்க வாத்தியத்திற் பிரபலமடைந்த கலைஞர்கள் மூவரின் பெயர்களைத் தருக.

**இணைப்பு**

# இசைக்கருவி
# மிருதங்கம்

தாளவாத்தியங்களில் மிகவும் முக்கியமானது மிருதங்கமாகும். தென்னிந்தியக்கச் சேரிகளில் பிரதான தாள வாத்தியமாக மிருதங்கம் விளக்குகின்றது. இவ்வாத்தியத்தைச் சிவனது நாட்டியத்திற்கு வாசிப்பதற்கெனப் படைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. வாத்ய த்ரயமாகிய வீணை, வேணு மிருதங்கம் ஆகியவற்றில் இது மூன்றாவதாக இடம்பெறுகின்றது. தமிழிசையில் இக் கருவியை மத்தளம் என்றும் நான்முகன் என்றும் கூறுவர்.

இது பண்டைக்காலத்தில் மண்ணாற் செய்யப்பட்டு, மிருத் + அங்கம் = மிருதங்கம் எனப் பெயர் பெற்றது. (மிருத் = மண்) தற்காலத்தில் பலாமரம் அல்லது கருங்காலி மரத்தில் மிருதங்கம் செய்யப்படுகின்றது. பனை, வேம்பு போன்ற மரங்களும் பயன்படுத்தப்படுகின்றது.

## மிருதங்கத்தின் அமைப்பு

மிருதங்கம் செய்யும் மரத்தின் உட்பாகத்தை நடுப்பாகம் சற்றுக் கனமாகவும், ஓரப்பாகம் சற்று இலேசாகவும் அமையுமாறு குடைய வேண்டும். பின் மிருதங்கத்திற்கு மூட்டுப் போடுவார்கள். சுற்றளவில் மிருதங்கத்தின் நடுப்பாகம் பருத்தும் இருபுறமும் சிறுத்தும் இருக்கும். வலப்புற இடப்புற மூட்டுத் தோலை இழுத்து இணைக்கும் கயிறு தோல்வார் எனப்படும். வலப்புற இடப்புற ஒவ்வொரு பக்கத்திலும் 16 கண்கள் காணப்படும். இரண்டு ஓரங்களிலும் பொருத்தப்பட்டுள்ள தோல் வளையங்களுள், வாரினைச் செலுத்தி இழுத்துக் கட்டப்பட்டிருக்கும்.

மிருதங்கத்தின் உடலுக்கும் வாருக்கும் இடையே உருளையான 'புள்' எனும் கட்டைகள் பொருத்தப்பட்டிருக்கும். மிருதுங்கமானது சுமார் 2 அடி நீளம் கொண்டதாகவும் இடது பக்கம் சுமார் 8 அங்குல விட்டமும் வலது பக்கம் சுமார் 7 அங்குல விட்டமும் கொண்டதாகவும் அமையும்.

மிருதங்கத்தின் வலது பக்கத்தை வலந்தலை என்றும், இடது பக்கத்தை இடந்தலை என்றும் அழைப்பர். வலந்தலையானது மூன்று மெல்லியதோல் அடுக்குகளால் ஆனது. காண இயலாததும் மிகவும் உட்புறத்திலும் உள்ளதுமான தோலுக்கு உட்கரைத் தட்டு என்று பெயர். அதற்கு மேலுள்ள வளைவான தோல் வட்டத்திற்கு மீட்டுத் தோல் அல்லது வெட்டுத் தட்டு என்று பெயர். இது கன்றின் தோலாற் செய்யப்பட்டது. நடுவிற் காணப்படும் தோல் வட்டத்துக்குச் சாப்புத் தோல் அல்லது கொட்டுத் தட்டு என்று பெயர். இது ஆட்டுத் தோலாற் செய்யப்பட்டது. இந்த வட்டத்தின் மையத்திற் சிறுவட்டமான கறுப்பு நிறமான சோறு அல்லது கரணை (மருந்து) என்ற ஒருவகைக் கற்பொடி தடவப்பட்டிருக்கும்.

இது புளியஞ்சாறு, வெந்தசோறு, மங்கனீஸ் அல்லது இரும்புப்பொடி மூன்றும் சேர்ந்த ஒரு கலவைப் பொடியாகும். இக்கரணையின் மையப்பகுதி தடிப்பானதாகவும், ஓரப்பகுதி மெல்லியதாகவும் காணப்படும். இதை அவ்வப்போது கூழான் கல் என்னும் ஒரு தனி வகைக் கல்லினாற் தேய்த்து ஒழுங்குபடுத்துவர். இவ்வாறு கரணைபோடச் சுமார் மூன்று மணிநேரம் ஆகும் என்பர். இப்பகுதியே மிருதங்கத்திற்கு கணீர் என்ற ஒலியைத் தருகிறது.

மிருதங்கத்தின் இடந்தலைக்கு தொப்பி என்றும் பெயர் உண்டு. இது இரண்டு தோல்களால் மூடப்பட்டிருக்கும். உட்தோல் ஆட்டுத்தோலாலும் வெளித்தோல் எருமைத் தோலாலும் ஆக்கப்பட்டிருக்கும். வாசிக்கும் முன்னர் தொப்பியின் நடுவில் ரவையை நீருடன் கலந்து பிசைந்து தடவுவர். இது நல்ல இசை ஒலியை எழுப்புகிறது. வாசித்து முடிந்ததும் இந்த ரவையைச் சுரண்டி எடுத்து விடுவர்.

மூட்டினை இழுத்துப் பிணைக்கும் வார்களின் இடைவெளிகளிற் புள் என்று சொல்லப்படும் சிறு மரத்துண்டுகளை வைத்து அவற்றை நகர்த்துவதன் மூலமும் சுருதி சேர்ப்பர். மேலும் மூட்டுப் பின்னலின் மீது மேல் நோக்கித் தட்டினாற் சுருதி குறைந்து ஒலிக்கும். மூட்டுப்பின்னலின் மீது கீழ் நோக்கித் தட்டினால் சுருதி அதிகமாகவும் ஒலிக்கும்.

மிருதங்கத்தைச் சுருதி சேர்க்கையில் வலந்தலையைப் பாடுபவரது ஸட்ஜத்திற்கும் இடந்தலையை மந்திரஸ்தாயி பஞ்சமம் அல்லது மந்தரஸ்தாயி ஸட்ஜத்திற்குச் சுருதி சேர்ப்பர். மிருதங்கக்கட்டை மேற்பாக நடு வளையத்திற்கு அரடா என்ற பெயர்.

மிருதங்கத்தின் நீளமும் பருமனும் அதிகமாய் இருப்பின் அது குறைந்த சுருதியில் பாடுபவருக்கும் (ஆண்களுக்கு) நீளமும் பருமனும் குறைவாக இருந்தால் அது அதிக சுருதியிற் பாடுபவருக்கு (பெண்களுக்கும்) பயன்படுத்தப்படுகின்றது. தக்குஸ்ருதி

மிருதங்கம் 1/2, 1, 1 1/2, 2, 2 1/2 கட்டைச் சுருதி கொண்டிருக்கும். ஹெச்சுஸ்ருதி மிருதங்கம் 4, 4 1/2, 5, 5 1/2 சுருதியிலும் இருக்கும்.

இக்கருவி இரு கைகளினாலும் மணிக்கட்டுகளாலும் விரல்களாலும் வாசிக்கப்படுகிறது. மிருதங்க இசை விற்பன்னர் கச்சேரியில் தனி ஆவர்த்தனம் வாசிக்கும்போது, தன் திறமையை நன்கு வெளிக்காட்ட முடிகிறது.

**மிருதங்க இசையிற் சிறந்து விளங்கிய சில கலைஞர்கள் பின்வருமாறு:**

துக்காராம் நாராயணசாமி அப்பா
தஞ்சாவூர் வைத்தியநாத ஐயர்
புதுக்கோட்டைத் தட்சிணாமூர்த்திப்பிள்ளை
கும்பகோணம் அழகநம்பிப்பிள்ளை
புதுக்கோட்டை மான்பூண்டியாப்பிள்ளை
புதுக்கோட்டைத் தட்சிணாமூர்த்தி ஆசாரியார்
பாலக்காடு மணி ஐயர்

மிருதங்கம் (MRUDANGAM)




1. தோல்வார்
2. தொப்பித் தட்டு
3. வளையம்
4. 2 & 3 இடந்தலை
5, 6, 7 & 8 வலந்தலை
5. தோல் வளையம்
6. மீட்டுத்தோல்
7. சாப்புத்தோல் (கொட்டுத்தட்டு)
8. சோறு (மருந்து)
9. புள் (மரக்கட்டை)

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5 :** உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** **4.5.1 :** தில்லானா என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுக்கருவி, தில்லானா பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா, தில்லானா எழுதப்பட்ட பாடல் அட்டை
- செயற்பத்திரம் 4.5.2.1
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.5.1** **:**
- தில்லானா பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்க/ பாடிக்காட்டுக.
- செவிமடுப்பதன் மூலம் அவதானிக்கச் செய்க.
- தில்லானா எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்துக.
- அவதானித்த தில்லானாவில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்க.

| |
|---|
| • தில்லானாவின் இலட்சணம் |
| • தில்லானாக்களுக்கு உதாரணங்கள் |
| • கச்சேரியில் தில்லானாவின் பங்களிப்பு |
| • தில்லானாவை இயற்றிய மகான்கள் |

**(10 நிமிடங்கள்)**

**படி 4.5.2** **:**
- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தையும் இணைப்பினையும் வழங்கி செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்து கொள்க.

**(15 நிமிடங்கள்)**

**டி 4.5.3** **:**
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்கள் இதனை அவதானித்துக் கருத்துக்கள் கூற இடமளிக்க.

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- திரிதில்லானா என்ற தேசிய வகையிலிருந்தே தில்லானா தோன்றியது.
- இது மத்திம காலத்தில் அமைந்து கேட்போருக்கும், இசைப்போருக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தும்.
- இது இசைக்கச்சேரியிலும், நாட்டியக் கச்சேரிகளிலும் இடம்பெறும். நாட்டியக் கச்சேரியில் ஏழாவதாக இடம் பெறும். இசைக்கச்சேரிகளில் கச்சேரியை நிறைவு செய்வதாக அமைந்திருக்கும்.
- தில்லானாவிற்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் உண்டு.
- சில தில்லாலனாக்களில் பல்லவி, அனுபல்லவியும், மற்றும் சிலவற்றில் பல்லவி, சரணம் மட்டும் இருப்பதுண்டு.
- அங்கங்கள் வெவ்வேறு தாதுக்களில் அமைக்கப் பட்டிருக்கும்.
- தில்லானாக்களில் தாதுவின் அமைப்பானது கவர்ச்சிகர மானதாகவும், சுலபமானதாகவும் அமைந்திருக்கும்.
- சங்கதிகள் நிறைந்த தில்லானாக்களும் உண்டு.
- இதன் சாகித்தியமானது பல்லவி, அனுபல்லவியில் தில்லில்லானா, திரனா தொம்திரனா, தனனம் போன்ற ஜதிகளைக் கொண்டிருக்கும்.
- சரணத்தில் வார்த்தைகளையும், ஸ்வரங்களையும், ஜதிகளையும் கொண்டதாக இருக்கும்.
- தில்லானாவின் கானக்கிரமம் கீர்த்தனை போன்றதாகும்.
- இது ஹிந்துஸ்தானி இசையில் அமைந்த தரானா என்னும் உருப்படிக்கு ஒப்பானது.
- தில்லானாக்களில் விறுவிறுப்பான நடையும், கவர்ச்சிகர மான இசையமைப்பும் கொண்டமைந்ததன் காரணமாக கதா காலட் சேபங்களிலும், இவ்வுருப்படி பாடப்படுகிறது.
- தில்லானாக்கள் இயற்றிய மகான்கள்
  - மஹாவைத்திய நாதய்யர்
  - குன்றக்குடி கிருஸ்ணய்யர்
  - வீரபத்திர ஐயர்
  - ஸ்வாதித்திருநாள் மஹாராஜா
  - இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார்
  - லால்குடி ஜெயராமன்
  - பாலமுரளிகருஷ்ணா
  - தஞ்சை க. பொன்னையாபிள்ளை

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தில்லானாவை வேறு உருப்படி வகைகளிலிருந்து இனங்கண்டு கூறுவர்.
- தில்லானாவின் அமைப்பை விளக்குவர்.
- தில்லானா இயற்றிய மகான்களின் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- சில தில்லானாக்களை உதாரணமாக தெரிந்துகொண்டு கூறுவர்.
- நடனத்தில் தில்லானாக்களின் பங்களிப்பு பற்றி வலியுறுத்துவர்.

## செயற்பத்திரம் 4.5.2.1

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

- ஹிந்துஸ்தானி இசையில் 'தரானா' என்னும் உருப்படிக்கு ஒப்பான உருப்படியைக் குறிப்பிடுக?
- இவ் உருப்படியின் பயன்பாடு யாது?
- இவ் உருப்படியை இயற்றிய சில மகான்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
- இவ்வுருப்படியின் இலட்சணத்தைத் தருக?

## உருப்படிகளின் இலட்சணம்
## தில்லானா

திரிதில்லான என்னும் தேசிய வகையினின்னும் உதித்ததே தில்லானா ஆகும். இவ்வுருப்படி விறுவிறுப்பான நடையில் அமைந்திருப்பதனால் இது கேட்போருக்கு உற்சாகத்தை ஏற்படுத்த வல்லது. இது இசைக் கச்சேரிகளிலும் நாட்டியக் கச்சேரிகளிலும் இடம்பெறும் உருப்படியாகும்.

தில்லானாவிற்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் உண்டு. சில தில்லானாக்களில் பல்லவி, அனுபல்லவியும் மற்றும் சிலவற்றில் பல்லவி, சரணம் மட்டும் இருப்பதுண்டு. பல்லவி, அனுபல்லவி, சரணம் ஒவ்வொன்றும் வெவ்வேறு தாதுக்களில் அமைந்திருக்கும். தில்லானாக்களில் தாதுவின் அமைப்பானது கவர்ச்சிகரமானதாகவும் சுலபமானதாகவும் அமைந்திருக்கும். இதன் ஸாகித்தியமானது பல்லவி, அனுபல்லவியில் ஜதிகளைக் கொண்டதாகும். சரணத்தில் வார்த்தைகளையும், ஸ்வரங்களையும், ஜதிகளையும் கொண்டதாகவும் இருக்கும். சங்கதிகள் நிறைந்த தில்லானாக்களும் உண்டு. ஜதிகள் தில்லில்லானா, திரனா, தொம்திரனா, தனனம் என்றவாறு அமைந்திருக்கும்.

தில்லானாவின் வேகம் பொதுவாக மத்யம காலத்தில் அமைந்திருக்கும் இதன் கானக் கிரமம் கீர்த்தனை போன்றதாகும். நாட்டியக் கச்சேரிகளில் தில்லானா ஏழாவது உருப்படியாக ஆடப்படுகின்றது. தில்லானா ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் தரானா என்னும் உருப்படிக்கு ஒப்பானதாகும். தில்லானாக்களின் விறுவிறுப்பான நடையும் கவர்ச்சிகரமான இசையமைப்பும் காரணமாக கதாகாலட்சேபங்களிலும் இவ்வுருப்படி பாடப்படுகின்றது.

தில்லானாக்களை இயற்றிய வாக்கேயக்காரர்கள் மஹாவைத்யநாதய்யர், குன்றக்குடி கிருஷ்ணய்யர், வீரபத்திரஐயர், ஸ்வாதித்திருநாள் மஹாராஜா, இராமநாதபுரம் ஸ்ரீநிவாஸ ஐயங்கார், லால்குடி ஜெயராமன், பாலமுரளிகிருஷ்ணா போன்றோர்.

**தேர்ச்சி** **5.0 :** கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவார்.

**செயற்பாடு** **5.1.2 :** முத்துஸ்வாமி தீஷிதரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- முத்துஸ்வாமி தீஷிதரின் படம், இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி, சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 5.1.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 5.1.1** **:**
- முத்துஸ்வாமி தீஷிதரின் படத்தைக் காட்சிப்படுத்தியு, அவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தோ அன்றி ஆசிரியர் பாடிக்காட்டியோ, வாக்கேயகாரரை இனங்காண வழிப்படுத்துக.

- முத்துஸ்வாமி தீஷிதர் தொடர்பான, கீழ்வரும் விடயங்களை வலியுறுத்திடும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

| |
|---|
| • வாழ்க்கைக் காலம் |
| • பிறந்த இடம் |
| • பெற்றோர் பெயர் |
| • இளமைக்கல்வி |
| • வாழ்க்கைச் சம்பவங்கள் |
| • இசைப்பணி |
| • இயற்றிய உருப்படிவகைகள் |
| • சிஷ்யர்கள் |
| • முத்திரை |

**(10 நிமிடங்கள்)**

**படி 5.1.2** **:**
- மாணவரின் தொகைக்கேற்ப, சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.

- ஒவ்வொரு மாணவருக்கும், இணைப்பினை வழங்குக.

- வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றானரா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

டி 5.1.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பத்தினை வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

முத்துஸ்வாமி தீஷிதரின்,

- வாழ்க்கைக்காலம் : 1776 - 1835
- பிறந்த இடம் : திருவாரூர்
- பெற்றோர் : இராமசாமி தீஷிதர், சுப்புலஷ்மி அம்மாள்
- இளமைக்கல்வி : - இளமையிலேயே சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு மொழிப்புலமை.
  - காசியில் சிதம்பரநாதயோகிகளிடம் 5 வருடங்கள் ஹிந்துஸ்தானி இசை கற்றார்
  - வீணை வாசிப்பதில் தேர்ச்சி
  - திருவாரூர் வடக்குக் கோபுர வாயிலில் அமர்ந்து பாடல்கள் பாடும் வழக்கம்
- வாழ்க்கை சம்பவங்கள்
  - திருத்தணியில் சுப்ரமணியக் கடவுள் கனவிற் தோன்றி வாயில் கற்கண்டு இடல். முதற் கிருதி பாடுதல். 'ஸ்ரீநாதாதி குருகுஹ' மாயாமாளவகௌளை
  - காசியில், சிதம்பரநாதயோகி, தீஷிதருக்குச் 'ஸ்ரீவித்யா' உபதேசம் செய்தல், பின் விரும்பிய பொருளை நினைத்துக் கங்கையில் முழ்கியவேளை தீஷிதருக்கு, யாழிமுகம் மேல் நோக்கியதும், குடத்தில் 'ஸ்ரீராம்' என எழுதப்பட்டதுமான அபூர்வ வீணை கிடைக்கப் பெற்றமை. தற்பொழுதும் இவ்வீணை இவர் சந்ததியினரிடம் உள்ளமை.
  - காஞ்சிபுரத்தில் 'கஞ்சதளாயதாட்சி' எனும் கமலாமனோஹரி இராக கிருதி பாடியமை
  - எட்டயபுரம் செல்லும் வழியில் வறட்சி - இவர் 'ஆனந்தாமிர்த வர்ஷனி' எனும் அமிர்தவர்ஷனி இராகக் கிருதி பாட மழை பொழிந்தது.
- இவர் சகோதரர்களான பாலுசாமி தீஷிதரும், சின்னசாமி தீஷிதரும், தீஷிதரிடமும், தியாகராஜரிடமும் பயின்ற வர்கள். இவ்வறிமுகமே தீஷிதருக்கு தியாகராஜரது இசை உருப்படிகள் போன்ற சில உருப்படிகளை அமைத்திட வழிகோலியது என்பர்.

- இசை உருப்படிகள்
  - தொகுதிக் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.
    1. கமலாம்பா நவாவர்ணம்
    2. அபயாம்பா நவாவர்ணம்
    3. சிவ நவாவர்ணம்
    4. பஞ்சலிங்க ஸ்தலகிருதிகள்
    5. நவக்ரஹ கிருதிகள்
- இசைப்பணி
  - இவர் தனித்தன்மையும், அதி உயர் இசைச் சிறப்பும் கொண்ட இசை உருப்படிகளை இசை உலகிற்கு நல்கி, மாபெரும் இசைத் தொண்டாற்றினார்.
  - பல சமுதாயக் கிருதிகளை இயற்றியுள்ளார்.
  - இவர் கிருதிகளிலிருந்து, பலவித இசையணிகளை நாம் அறிந்திட முடிகின்றது. உதாரணம்: 'ஸ்ரீவரலஷ்மி' - ஸ்ரீராகம் அழகுற அமைந்து உள்ளது.
  - இவர் கிருதிகள் பெரும்பாலும் சௌக்க காலத்தில் அமையும்.
  - கிருதிகளில் இராக முத்திரை, ஸ்வராக்ஷர அணி, மத்திம கால சாகித்தியம், ஜதி போன்ற இசை அணிகள் உள.
  - இவர் இசை நயம் மிக்க கிருதிகளின் சுவை நாளிகேர (தேங்காய்) ரசத்திற்கு ஒப்பிடப்படுகின்றது.
  - இவரது கிருதிகளிற் பெரும்பாலும், மத்திமகால சாகித்தியங்கள், சொற்கட்கு ஸ்வரங்கள் உள்ளன.
  - சாகித்தியங்களின் பொருள், ஆழம் மிக்கவையாக உள்ளன.
  - இவரது சகோதரராலும் சிஷ்யராலும் இவர் கிருதிகள் பாடப்பட்டுப் பல்வேறிடங்களிடங்களிலும் பிரபல்ய மடைந்து உள்ளன.
- சிஷ்யர்கள்
  - சின்னையா, பென்னையா, சிவானந்தம், வடிவேலு, திருக்கடையூர்பாரதி, சுத்த மிருதங்கம் தம்பியப்பா.
- இவரது முத்திரையை கிருதிகளிற் காணலாம். முத்திரை - 'குருகுஹ

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- முத்துஸ்வாமி தீஷிதரின் வாழ்க்கைக் காலம், பிறந்த இடம், பெற்றோர் பெயர், இளமைக்காலம் முதலியவற்றைக் குறிப்பிடுவர்.
- முத்துஸ்வாமி தீஷிதரின் இளமைக்கால இசைக்கல்வியை அறிந்து கூறுவர்.
- அவரது வாழ்க்கையின் இசை நிகழ்வுச் சம்பவங்களைத் தேடிப் பெற்றுத் தொகுப்பர்.
- அவரது இசைப்பணியை அவர் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தொகுத்து ஆராய்வர்.
- இவரது இசை உருப்படிகளையும் முத்திரைகளையும் இனங்காண்பர்.
- இவரது சிஷ்யர்கள் மூலம், இவரது இசைப்பணி சிறந்தோங்கியமையை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

(01) முத்துஸ்வாமி தீக்ஷிதரின் வாழ்க்கை வரலாற்றில் உள்ள பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

- வாழ்க்கைக்காலம்
- பிறந்த இடம்
- பெற்றோர் பெயர்
- இளமைக்கல்வி
- வாழ்க்கைச் சம்பவங்கள்
- சிஷ்யர்கள்
- முத்திரை

(02) முத்துஸ்வாமி தீக்ஷிதர் இசைக்காற்றிய பணிகளையும், அவர் இயற்றிய உருப்படி வகைகளையும் தொகுத்துத் தருக.

# வாக்கேயகாரர் சரித்திரம்
# முத்துஸ்வாமிதீக்ஷிதர் (1776 - 1835)

திருவாரூரில் இவர் 1776ஆம் ஆண்டு பங்குனி திங்கள் 24ஆம் திகதி பிறந்தார்.இவரது தாய் சுப்புலஷ்மி அம்மாள், தந்தை இராமசுவாமி தீட்சிதர். வெங்கடமகியின் பரம்பரையைச் சேர்ந்தவர். முத்துசுவாமி தீட்சிதர் இளமையிலேயே சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளில் புலமை அடைந்தார். ஒரு சமயம் மணலி சின்னய்யா முதலியார் திருவாரூர் வந்தார். அவருடைய அழைப்பை ஏற்று, இராமசுவாமி தீட்சிதர் தம் மூன்று மைந்தர்களாகிய முத்துசுவாமி, பாலுசுவாமி, சின்னசுவாமி ஆகியோருடன் மணலிக்குச் சென்றார்.

மற்றொரு சமயம் சிதம்பரநாத யோகி என்ற பெரியார் இராமசுவாமி தீட்சிதரைச் சந்தித்தார். முத்துசுவாமி தீட்சிதர் மீது அன்பு கொண்டு அவரைத் தன் சீடனாக ஏற்றுக்கொண்டு காசிக்கு அவரை அழைத்துச் சென்றார். காசியில் முத்துசுவாமி தீட்சிதர் 5 ஆண்டுகள் தங்கி ஹிந்துஸ்தானி இசையைக் கற்றார். சிதம்பரநாதயோகி இறந்த பின் முத்துசுவாமி தீட்சிதர் மணலிக்கு திரும்பினார்.

தீட்சிதர் திருத்தணிக்குச் சென்றபொழுது அங்கு எழுந்தருளியுள்ள சுப்பிரமணியசுவாமி அவருடைய கனவில் தோன்றி வாயில் ஒரு கற்கண்டைப் போட்டுவிட்டு மறைந்தார். அப்பொழுது தான் தீட்சிதர் ஸ்ரீநாதாதி குருகுஹஜயதி என்ற மாயாமாளவகௌளை ராகக் கிருதியை முதன் முதலாக இயற்றினார். அது முதற்கொண்டு தீட்சிதருக்குக் கிருதிகள் இயற்றும் வல்லமை உண்டாயிற்று. சுப்பிரமணியரின் அருளைப் பெற்றதால் அவர் தன்னுடைய கிருதிகளில் குகனையே குருவாகக் கொண்டு குருகுஹ என்ற முத்திரையை அமைத்துள்ளார்.

காஞ்சிபுரம் சென்றபொழுது ''கஞ்சதளாய தாட்சி'' என்ற கமலமனோஹரி இராக கிருதியை இயற்றினார். அவர் பாடிய தொகுதிக் கிருதிகள் ஆவன.

1. கமலாம்பா நவாவர்ணம்
2. அபயாம்பா நவாவர்ணம்
3. சிவ நவாவர்ணம்
4. பஞ்சலிங்க ஸ்தலகிருதிகள்
5. நவக்ரஹ கிருதிகள்

இவருடைய இரு சகோதரர்களாகிய பலுசுவாமி தீட்சிதர், சின்னசுவாமி தீட்சிதரும் இவருடைய கிருதிகளைப் பல இடங்களிலும் பாடி வந்தனர். இவர்கள் சிறிதுகாலம் தியாகராஜரிடம் தங்கி அவரது கீர்த்தனைகளைக் கற்று பின் அவைகளை முத்துசுவாமி தீட்சிதரின் முன் பாடினார்கள்.



முத்துஸ்வாமி தீட்சிதரின் தம்பியாகிய சின்னசுவாமி தீட்சிதர் திடீரென மரணமடைந்தார். மனவேதனை அடைந்த முத்துசுவாமி தீட்சிதர், உயிரோடிருக்கும் ஒரே சகோதரராகிய பாலு சுவாமியைக் காண எட்டையபுரம் புறப்பட்டார். வழியில் குடிப்பதற்கு நீர் கிடைக்காத அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருப்பதை அறிந்த தீட்சிதர் ''ஆனந்தாம் ருதவர்ஷினி'' என்ற க்ருதியை அமிர்தவர்ஷினி இராகத்தில் பாடினார். உடனே மேகங்கள் திரண்டு நல்ல மழை பெய்தது. தீட்சிதர் எட்டையபுரம் சென்று தம் சகோதரர் பாலுவாமிதீட்சிதரின் திருமண விழாவில் கலந்து கொண்டு பின் திருவாரூர் திரும்பினார்.

தீட்சிதரின் கீர்த்தனைகள் பொதுவாக சௌக்க நடையிலேயே அமைந்துள்ளன. இவரது கிருதிகளில் அநேகமாக மத்திம கால ஸாஹித்யம் காணப்படுகின்றது. இவரது பல கிருதிகள் இராக முத்திரைகளைப் பொருத்தமாக அமைந்துள்ளன. அவரது கிருதிகளை நாளிகேர(தேங்காய்) ரஸத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளன. இவரது சிஷ்யர்களாக விளங்கியவர்கள் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு,போன்றோராவர்.

**தேர்ச்சி** **6.0 :** கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

**செயற்பாடு** **6.1.2 :** இந்தியாவின் 20ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணியை அறிவோம்.

**நேரம்** **:** 2 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய இசைப் பெரியார்களின் படங்கள்.
- இசை நிறுவனங்களின் படங்கள்.
- இசை சஞ்சிகைகள்
- செயற்பத்திரம் 6.1.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 6.1.1** **:**
- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இந்தியாவில் இருந்த கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணியை இசைப் பெரியார்களின் படங்களின் உதவியுடன் கலந்துரையாடி அறிமுகம் செய்க.
- இசை நிறுவனங்களின் படங்கள், இசை நூல்கள், சஞ்சிகைகள் இவற்றைக் காட்சிப்படுத்துக.
- மாணவர்கள் அவதானித்த விடயங்கள் தொடர்பாகவும், கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது 19ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி
- ஸ்வாதித்திருளாள் மகாராஜாவின் இசைத்தொண்டு
- கவிக்குஞ்சரபாரதியின் அழகர்குறவஞ்சியில் நாட்டுப்புற இசையும் சாஸ்திரிய இசையும் கையாளப்பட்ட விதம்.
- மேலை நாட்டுக் கருவியான வயலின் கர்நாடக சங்கீத வாத்தியமானது.
- காதகாலட்சேபம்
- காவடிச்சிந்து
- யாழ்நூல்
- 20ஆம் நூற்றாண்டில் பரவிய தமிழிசை இயக்கம்.
- பேராசரியர் சாம்பமூர்தியால் எழுதப்பட்ட தமிழ், ஆங்கில இசை நூல்கள்.

- திரைப்படம் என்ற சாதனம் முலம் கர்நாடக இசையை மக்களிடையே பரப்பிய பாபநாசம்சிவனின் இசைத்தொண்டு
- தொலைத்தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு
- இசை நிறுவனங்கள்
- எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் பாரம்பரியம் கெடாமல் இசைக்கலை பாதுகாக்கப்பட்டுள்ளது.

(30 நிமிடங்கள்)

**படி 6.1.2** : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

• அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

**படி 6.1.3** : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.

• குழுவின் பேறுகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- 20ஆம் நூற்றாண்டிற்கு முன் அதாவது 19ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையை வளர்த்தவர்களின் குறிப்பிடத்தகவர் திருவாங்கூர் மன்னர் ஸ்வாதித்திருவார் மகராராஜா ஆவார்.
- இவர் வித்வான்களை ஆதரித்தது மட்டுமன்றி தானும் ஓர் சிறந்த வாக்கேயகாரராக விளக்கினார். பல கர்நாடக இசை உருப்படிகளை இயற்றியதுடன், இந்துஸ்தானி இசை உருப்படிகளையும் இயற்றியுள்ளார். உதாரணம்: ஸ்வரஜதி, வர்ணம், இராகமாலிகை, கீர்த்தனை, த்ருபத் கஸல்
- கவிக்குஞ்சரபாரதி தமிழில் இயற்றிய பல உருப்படிகளுள் அழகர் குறவஞ்சி முக்கியமானது.
- இதில் நாட்டுப்புற இசையும், சாஸ்திரிய இசையும் கலந்த ஒரு கலாசாரம் நன்கு கையாளப்பட்டுள்ளது.
- தமிழ் நாட்டில் ஆத்மீகத்தையும் தமிழிசையையும் வளர்த்த பெருமை கோபாலக்ருஷ்ண பாரதியாரையே சாரும். வாழ்க்கை நடை முறையில் இருந்த நலங்கு, ஊஞ்சல், கும்மிப்பாடல்களையும் இயற்றி உள்ளார்.

- இவரது நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் எல்லோராலும் போற்றப்பட்ட பெருமை மிக்கன.
- இசைக்கருவிகளும் பாடல்களும் கர்நாடக இசை மேடையில் பிரசித்திக்கு வந்தன. மேலைநாட்டு வாத்தியமான வயலினில் கர்நாடக சங்கீதம் பாலுசாமி தீட்சிதரால் சீராக வாசிக்கப்பட்டது.
- மராட்டிய மன்னர் மகாராஷ்டரத்தில் இருந்த கீர்த்தனை காரரை ஆதரித்ததால் கதாகாலஷேபமுறை கர்நாடக இசையில் புகுந்தது.
- காவடிச் சிந்தின் தந்தை எனப் போற்றப்படும் அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச்சிந்து பிரபல்யமடைந்தது.
- 20ஆம் நூற்றாண்டு தமிழிசை இயக்கம் பரவிய காலமாகும். இக் காலப்பகுதியில் சாதாரண மக்கள் விரும்பத்தக்க இசைப்பாடல்கள் பாரதியார், தேசிக விநாயகம் பிள்ளை போன்றோரால் இயற்றப்பட்டன.
- இசை இலக்கண நூல்கள் சமஸ்கிருதம் தெலுங்கு மொழியில் இருந்தமையால் சாதாரண மக்களால் தெரிந்து கொள்ள முடியாதிருந்த நிலையைத் தீர்த்து வைத்தவர் பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள் பலவற்றை எழுதி இக் குறையைப் போக்கினார்.
- கல்விப் பாடநெறியில் இசை ஒரு பாடமாக இக்காலத்தே பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்களால் புகுத்தப் பட்டமையால் இசை கற்கும் ஒரு மாணவர் பரம்பரை உருவாக வழி ஏற்பட்டது.
- பாபநாசம் சிவன் காலத்தே பாமரரும் படித்தோரும் இரசிக்கும் வகையில் தமிழில் பாடல்கள் இயற்றப்பட்டன.
- சங்கீத லிபி முறையில் பாடல்களை அச்சடிக்கப்பட்டன.
- திரைப்படங்களில் பாபநாசசிவன் நடித்தது மட்டுமன்றி பாடல்களை இயற்றி இசையும் அமைத்தார். கர்நாடக சங்கீதம் தெரியாதவர்கள் கூட இவரது திரை இசைப் பாடல்களால் சாருகேசி, கரகரப்ரியா, நாதநாமக்ரியா போன்ற இராகங்களை இனங்கண்டு கொண்டனர். திரைப்படம் என்ற சாதனம் மூலம் பாமர மக்களிடையே கர்நாடக இசையைப் பரப்புவதில் வெற்றி கண்டார்.
- தற்போது வானொலி, தொலைக்காட்சி, இசைநாடா, இசைத்தட்டு, இசைச் சஞ்சிகை, சபாக்கள் முதலியவற்றால் கர்நாடக இசை வளர்ச்சி அதிகரித்துக் கொண்டிருக்கிறது.
- இசைக்கலைஞர்களையும், இசை ஆய்வாளர்களையும் உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றது. உதாரணம்: அண்ணாமலை இசைக்கல்லூரி, சென்னை மியூசிக் அக்கடமி தமிழ்நாடு அரச இசைக்கல்லூரி
- ஏராளமான இசைக்கலைஞர்கள் இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கச்சேரிகள் செய்கின்றனர்.

- திரைப்படத் துறையில் கர்நாடக இசையோடு மெல்லிசையும் வளர்ந்துள்ளது.
- இன்றைய மக்களின் இரசனைக்கேற்ப கர்நாடக இசையும், பிற இசை வகைகளும் சேர்ந்த ஒரு இசை மரபு வளர்ந்துள்ளது.
- எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் கர்நாடக இசையின் கலாசார பாரம்பரியம் கெடாமல் பாதுகாத்து வளர்ப்பதில் வித்வான்களும் இளைய தலைமுறையினரும் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

(45 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- மேலை நாட்டு இசைக்கருவியான வயலினை கர்நாடக சங்கீத மேடைக்குக் கொண்டு வந்தவர் பெயரைக் கூறுவர்.
- 20ஆம் நூற்றாண்டின் இசை வளர்ச்சியில் தமிழிசை இயக்கம் பரவுவதற்குப் பங்களிப்புச் செய்த இரு பெரியார்களின் பெயரைக் குறிப்பிடுவர்.
- திரைப்படம் என்ற சாதனத்தின் மூலம் பாமர மக்களிடையே கர்நாடக இசையைப் பரப்புவதில் பெரும் பங்காற்றியவர் பாபநாசம் சிவன் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- இசையை வளர்க்கும் நிறுவனங்களின் பெயர்களைப் பட்டியற்படுத்துவர்.
- கர்நாடக இசை வளர்ச்சியின் கலாசாரப் பின்னணி பற்றி மேலும் ஆய்வுகளில் ஈடுபடுவதற்குத் தூண்டப்படுவர்.

## செயற்பத்திரம் 6.1.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் சகல மாணவர் கட்கும் வழங்குக.

- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இந்தியாவில் கர்நாடக இசை வளர்ச்சியின் கலாசாரப் பின்னணி பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் தொகுத்துக் கூறுக.
  - 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த கலாசாரப் பின்னணி
  - இசைப் பெரியார்கள் அவர்தம் தொண்டு.
  - இசைக்கருவிகளின் பயன்பாடு
  - தமிழிசை இயக்கம்
  - திரைப்பட சாதனத்தின் பங்கு
  - இசை கற்கும் மாணவர் பரம்பரை உருவாக வழிகோலியவர். அவரது பங்களிப்பு
  - கர்நாடக இசை வளர்க்கும் நிறுவனங்கள்
  - இசை வளர்ச்சியின் இன்றைய நிலை

# இந்தியாவில் 20ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

சங்கீத மும்மூர்த்திகளின் காலத்தில் உன்னத நிலையில் விளங்கிய கர்நாடக இசையை அவர்கட்கு பின்னரும், முன்னரும் வித்வான்கள் வளர்த்து வந்துள்ளார்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவாங்கூரை அரசாண்ட ஸ்வாதித்திருநாள் மகாராஜா ஆவார். இவர் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் வித்வான்களை ஆதரித்தது மட்டுமன்றி, தானும் ஒரு சிறந்த வாக்கேயகாரராக விளங்கினார். இவரது சபையை வின்னையா, பொன்னையா, சகோதரர்கள் மற்றும் மும்மூர்த்திகளின் சீடர்களும் அலங்கரித்தனர். ஸ்வரஜதிகள், தானவர்ணம், பதவர்ணம், க்ருதி, பதம், ஜாவளி, இராகமாலிகை முதலிய உருப்படிகளை இயற்றினார். அத்துடன் இந்துஸ்தானி, இசையில் த்ருபத், கசல் முதலியவற்றையும் இயற்றினார்.

19ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் பல்வேறு வகையான உருப்படிகள் இயற்றப்பட்டன. கவிக்குஞ்சரபாரதி, கோபாலகிருஷ்ண பாரதியார் இவ்வகையில் பெருமை சேர்த்தவராவர். கவிக்குஞ்சரபாரதி இயற்றிவற்றுள் முக்கியமானது அழகர் குறவஞ்சி நாடகப் பாடல்களாகும். நாட்டிய நாடகமாக மிளிர்ந்த இக்குறவஞ்சியில் வெண்பா, விருத்தம் முதலிய செய்யுள் வகைகளும் சிந்து, கும்மி, கண்ணிகள் ஓரடிக்கீர்த்தனம் முதலிய பாவகைகளும் கையாளப்பட்டுள்ளன. இந்நூலில் சாஸ்திரிய இசையும், நாட்டுப்புற இசையும் நன்கு கையாளப்பட்டுள்ளன. பக்தியும் சிருங்காரமும் இணைந்து காணப்படுகின்றன.

தமிழ் நாட்டில் ஆத்மீகத்தையும், தமிழிசையையும் வளர்த்த பெருமை கோபாலகிருஷ்ண பாரதியாரையே சாரும். நந்தனார் கீர்த்தனை மூலம் தனி முத்திரை பதித்தவர். வாழ்க்கை நடைமுறையில் இருந்த நலங்கு, ஊஞ்சல், கும்மிப் பாடல்களையும் இயற்றினார்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளை சர்வசமய சமரசக் கீர்த்தனை மூலம் அறநெறிக் கருத்துக்களைப் பரப்பினார்.

இதே காலத்தில் இசைக்கருவிகளும், பாடல்களும் கர்நாடக இசை மேடையில் பிரசித்திக்கு வந்தன. பாலுஸ்வாமி தீஷ்தரால் மேல்நாட்டு வாத்தியமான வயலினில் கர்நாடக சங்கீதம் சீராக வாசிக்கப்பட்டது. சரபோஜி மகாராஜா காலத்தில் கிளாரினட், வயலின் போன்ற இசைக்கருவிகள் கர்நாடக இசை மேடைக்கு வந்தன.

19ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூரை ஆண்ட மராட்டிய மன்னர் மகாராஷ்டிரத்தில் இருந்த கீர்த்தனைகாரரை ஆதரித்ததால் கதாகாலஷேபமுறை கர்நாடக இசையில் புகுந்தது.

தேசாதி, மத்யாதி தாளங்கள் பிரசித்திக்கு வந்தன. காவடிச் சிந்தின் தந்தை எனப்போற்றப்படும் அண்ணாமலை ரெட்டியார், ஊற்றுமலை ஜமீந்தார் காவடி எடுத்தபோது காவடிச் சிந்துகள் பல பாடினார். காவடிச்சிந்துமெட்டு என்று சொல்லுமளவிற்கு இவை பிரபல்யம் வாய்தவை.

20ஆம் நூற்றாண்டு தமிழிசை இயக்கம் பரவிய காலமாகும். இக்காலத்தில் சாதாரண மக்கள் விரும்பத்தக்க இசைப்பாடல்கள் சுப்பிரமணிய பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை போன்றோரால் இயற்றப்பட்டன. இது காலவரை இசை சம்பந்தமான நூல்கள் சமஸ்கிருதம், தெலுங்கு மொழியில் இருந்தமையால் சாதாரண மக்களால் அவற்றைத் தெரிந்துகொள்ள முடியாது போய்விட்டது. இக்குறையைத் தீர்த்து வைத்தவர் பேராசிரியர் பி. சம்பமூர்தி ஆவார். இசை நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இவரால் எழுதப்பட்டன. கல்விப் பாடநெறியில் இசை ஒரு பாடமாக இக்காலத்தே பேராசிரியர் பி. சம்பமூர்த்தி அவர்களால் புகுத்தப்பட்டது. இதனால் எல்லோரும் இசையில் ஆர்வம் கொண்டு இசை கற்கும் ஒரு மாணவர் பரம்பரை உருவாக்க வழி ஏற்பட்டது.

பாபநாசம் சிவன் காலத்தில் பாமரரும், படித்தோரும் இரசிக்கும் வகையில் பாடல்கள் தமிழில் இயற்றப்பட்டன. சங்கீத லிபி முறையில் பாடல்கள் அச்சடிக்கப்பட்டன. பஜனைப் பாடல்கள் பிரசித்தமாகின. தமிழிசைச் சங்கம் பரவிய காலம் பாநாசம் சிவனின் காலமாகும். திரைப் படங்களில் பாபநாசம் சிவன் நடித்தது மட்டுமன்றி, பாடல்கள் இயற்றி இசையும் அமைத்துக் கொடுத்தார். கர்நாடக சங்கீதம் தெரியாதவர்கள் கூட இவரது திரை இசைப்பாடல்களால் சாருகேசி, கரகரப்பிரியா, நாதநாமக்ரியா போன்ற இராகங்களை இனங்கண்டு கொண்டனர். திரைப்படம் என்ற சாதனம் மூலம் பாமரமக்களிடையே கர்நாடக இசையைப் பரப்புவதில் வெற்றி கண்டார். இவர் திரைப்படங்களுக்கு இயற்றிய பக்திப்பாடல்கள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவி குழந்தை முதல் வயோதிபர் வரை எல்லோர் வாயிலும் ஒலித்தது. இதனால் பக்தியும் ஓரளவு வளர்ந்தது.

தற்போது வனொலி, இசைநாடா, இசைத்தட்டு, தொலைக்காட்சி, இசைச்சஞ்சிகை, இசை மகாநாடுகள், சங்கீத சபாக்கள் முதலியவற்றால் கர்நாடக இசையின் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் இசை வளர்க்கும் நிறுவனங்களாக அண்ணாமலை இசைக்கல்லூரி, சென்னை மியூசிக் அக்டமி, சென்னை வித்வசபை, தமிழ்நாடு அரச இசைக்கல்ஸலூரி முதலியவற்றைக் கூறலாம்.

இசையில் ஓர் உன்னத நிலையை இந்தியாவில் தற்போது காணக்கூடியதாக இருக்கிறது. ஏராளமான இசைக் கலைஞர்கள், வளர்ந்து பிரபல்யமடைந்துள்ளனர். இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இசைக்கச்சேரிகள் நடைபெறுகின்றன. திரைப் படத்துறையில் கர்நாடக இசையோடு மெல்லிசையும் வளர்ந்துள்ளது.

இன்றைய மக்களின் ரசனைக்கேற்ப கர்நாடக இசையும் பிற இசைவகைகளும் சேர்ந்த ஒரு இசை மரபு வளர்ந்துள்ளது. எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் தொன்று தொட்டு வளர்ந்து வந்த இசைக்கலை அதன் தொன்மை கெடாமல் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு அதன் பாரம்பரியம் கெடாமல் வளர்ந்து வருகின்றது. பழம்பெரும் வித்வான்களும், இளைய தலைமுறையினரும் இவ்விடயத்தில் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

**தேர்ச்சி** **1.0 :** இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.1 :** வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** **1.1.3 :** பிறதேச இசைகளில் மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப் படுத்துவோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட ஒளி/ஒலி நாடாக்கள்
- தொலைக்காட்சிப்பெட்டி, ஒலிப்பதிவுக்கருவி
- மேலைத்தேய, ஹிந்துஸ்தானி வாத்தியக் கருவிகளின் படங்கள்
- செயற்பத்திரம் 1.1.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

***படி 1.1.1*** **:**

- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்களை ஒலி/ஒளி பரப்பியும், மேலைத்தேய, ஹிந்துஸ்தானி வாத்தியக் கருவிகளின் படங்களைக் காட்சிப்படுத்தியும் மாணவரைச் செவிமடுக்க/அவதானிக்கச் செய்க.

- செவிமடுத்த/அவதானித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

- கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

  - **மேலைத்தேய இசைக்கும், ஹிந்துஸ்தானி இசைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**
  - **மேலைத்தேய இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்.**
  - **ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்**
  - **கச்சேரி அமைப்பு முறை**

**(10 நிமிடங்கள்)**

**படி 1.1.2** **:**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும் மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களையும் வழங்குக.

- அறிவுறுத்தலுக்கேற்ப மாணவர்கள் செயற்படுகிறார்களா என்பதை அவதானிக்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 1.1.3** : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

- மற்றைய குழு அவதானித்து கருத்துக்கள் கூற இடமளிக்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- சர்வதேச இசைவகைகளும் மேலைத்தேய இசை, ஹார்மானிக்கல் இசையையும், ஹிந்துஸ்தானி இசை, மெலடிக்கல் இசையையும் சேர்ந்தது.
- மேலைத்தேய இசையில் அடிப்படை இராகம் ''மேஜர்ஸ்கேல்'' ஆகும்.
- இவ்விராகம் ஹிந்துஸ்தானி இசையில் பிலாவலுக்கு ஒப்பானதாகும்.
- மேலைத்தேய இசையில் ஸ்வரங்களை 'நோட் - Note' என்றும் ஸ்ருதியை 'பிச்(Pitch) என்றும் அழைப்பர். இங்கு மூன்றுவிதமான லய வேறுபாடுகள் காணப்படுகின்றன.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பாடகர் தம் குரலுக்கு உகந்த சுருதியை தேர்ந்தெடுப்பதற்கு சுதந்திரம் உண்டு.
- மேலைத்தேய சங்கீதத்தில் அவ்வாறில்லை எந்தச் சுருதியில் பாட்டு இயற்றப்பட்டுள்ளதோ அந்தச் சுருதி யிலேயே பாட வேண்டும்.
- மேலைத்தேய சங்கீதத்தில், ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 12 ஸ்வரஸ்தானங்கள் உள்ளன.
- மேலைத்தேய சங்கீத இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப் படும் வாத்தியங்களாவன பியானோ, கிடார், பியானோ எக்கோடியம், மெலோடிக்கா, ஓர்கன், வயலின், டிரம்செட்
- ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களாவன ஸிதார், ஸரோட், ஸாரங்கி, தலோ போன்றவை.
- மேலைத்தேய இசையில் பலர் ஒன்றுசேர்ந்து கச்சேரி செய்வர் (Orchestra) அதற்கு 'நொடேஷன்' மிகவும் பயன்படுகிறது. நிகழ்ச்சியைக் கொண்டு நடாத்துபவர் (Conductor) முக்கிய இடத்தை வகிக்கிறார்.
- ஹிந்துஸ்தானி இசையில் கச்சேரியின்போது சுருதிக்காகத் தம்பூராவும், தாளத்திற்காக தபேலாவும் மாத்திரமே வாசிக்கப்படுகின்றன. இன்று ஸாரங்கி தனி வாத்தியமாக வும் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படுகிறது.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகளிலும், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்படும் வாத்தியங்களை இனங்காண்பர்.
- மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை இரண்டிற்குமிடையிலான வேறுபாடுகளைக் கூறுவர்.
- மேலைத்தேய சங்கீதத்தையும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும் கர்நாடக சங்கீதத்துடன் சமநிலையாக நோக்கும் மனப்பாங்கைப் பெறுவர்.

## செயற்பத்திரம் 1.1.2.3

- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்களைக் கேட்டு உங்கள் ரசனை தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
  - மேலைத்தேய இசை நிகழ்ச்சிகளில் ஒலித்த வாத்தியங்கள் எவை?
  - இவ்வாத்தியங்களுள் தாளவாத்தியமாகப் பயன்பட்ட கருவி யாது?
  - தபேலா எவ்வகையான இசை நிகழ்ச்சியில் வாசிக்கப்படுகிறது?
  - ஹிந்துஸ்தானி இசையில் சுருதிக்காகப் பயன்படும் வாத்தியம் எது?

**தேர்ச்சி** **1.0 :** இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** இசை நிகழ்ச்சிகளில் தாம் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** **1.2.4 :** பிறதேச இசைகளில் மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளை இரசித்து, அனுபவித்த வற்றை விமர்சிப்போம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் ஒளி/ஒலிப் பதிவுசெய்யப்பட்ட நாடாக்கள்
- தொலைக்காட்சிப்பெட்டி, ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 1.2.2.4

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.2.1** **:**
- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகள், ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்களை ஒலி/ஒளி பரப்பி மாணவர்களை செவிமடுக்க/அவதானிக்கச் செய்தல்.
- செவிமடுத்த/அவதானித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

  - நிகழ்ச்சியின் தன்மை
  - தரம்
  - வெளிப்பாடு
  - இசைக்கருவிகளின் பங்களிப்பு
  - ஒத்திசைவு
  - அனுபவப்பகிர்வு

**(10 நிமிடங்கள்)**

**படி 1.2.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும் மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடாக்களை யும் வழங்குக.
- மாணவர்களின் செயற்பாட்டினை அதானித்து வழிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

படி 1.2.3 : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக
• மற்றைய குழு அவதானித்து கருத்துக்கள் கூற இடமளிக்க.
• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- வானொலி மூலம் ஒலிபரப்பாகும் மேலைத்தேய, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு அவற்றின் தரம், தன்மை, ஒத்திசைவு போன்ற விடயங்களை விளங்கி கொண்டு இரசனையை வெளிப்படுத்தலாம்.
- தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் மேலைத்தேய ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளைப் பார்த்து இரசிக்கும்போது பல விடயங்களை அவதானிக்கலாம்.
  - பாடகரின் குரல்வளம்
  - பாவம்
  - பாடப்பட்டவிதம்
  - பக்கவாத்தியங்களின் பங்களிப்பு
  - ஒத்திசைவு
  - நேரக்கட்டுப்பாடு போன்றவை
- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகளில் பலர் ஒன்று சேர்ந்து கச்சேரி செய்வர். ஹிந்துஸ்தானி இசைக்கச்சேரியில் சுருதிக்காகத் தம்பூராகவும் தாளத்திற்காகத் தபேலாவும் மட்டுமே இசைக்கப்படுவதை அவதானிக்கலாம்.
- மேலைத்தேய இசை நிகழ்ச்சிகளைக் கேட்கும்போது உற்சாகம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகள் ஏற்படும்.
- ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளைக் கேட்கும்போது அமைதி, சாந்தம் போன்ற உணர்வுகள் ஏற்படும்.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- வானொலி, தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பப்படும் பிறதேச இசைகளுள் மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளை இனங்காண்பர்.
- இந்நிகழ்ச்சிகளைக் கேட்டும் பார்த்தும் இரசனைத்திறனை வளர்த்துக்கொள்வர்.
- இந்நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலம் பெறும் உணர்வுகளை வெளிப்படுத்துவர்.
- இந்நிகழ்ச்சிகளை அவதானிப்பதன் மூலம் பல்வேறு வகையான இசைக்கருவிகளைப் பற்றிக் கூறுவர்.

## செயற்பத்திரம் 1.2.2.4

- வானொலி ஒலிபரப்பாகிய மேலைத்தேய, ஹிந்துஸ்தானிய இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட பதிவுநாடா ஒன்று தரப்படுகின்றது. இதனை நான்கு கேட்டு உங்கள் இரசனை தொடர்பாகப் பின்வரும் அம்சங்களை அடக்கி விமர்சனக் கட்டுரை ஒன்று எழுதுக.
  - நிகழ்ச்சியின் தரம், தன்மை
  - வெளிப்பாடு
  - பாடகரின் குரல்வளம்
  - பாவம்
  - வாத்தியங்களின் அணிசேர் தன்மை
  - ஒத்திசைவு
  - இரசித்தலினால் பெறும் அனுபவம்

**தேர்ச்சி 2.0 :** பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் ஆற்றுகைத் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** நிகழ்ச்சிகளைக் கூட்டாகத் தயாரிப்பதன் மூலம் கூட்டுமனப் பாங்கினை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 2.2.1 :** வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம்.

**நேரம் :** 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள் :**
- நிகழ்ச்சி நிரலுடன் அமைந்த மாதிரி அழைப்பிதழ்
- செயற்பத்திரம் 2.2.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.2.1 :**
- நிகழ்ச்சி நிரல் அடங்கிய மாதிரி அழைப்பிதழ் ஒன்றினைக் காண்பித்து மாணவர் தாமாகவே நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதற்கான கலந்துரையாடலொன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • மேடை ஏற்றப்படும் நிகழ்ச்சிகளைப் பட்டியற்படுத்துக. (வருடம் முழுவதும் பயிற்சி பெற்றவையும், புதியவையும்)<br>• இடம், காலம், நேரம், பிரதம அதிதி, தலைமை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைத் தீர்மானிக்குக.<br>• இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு அழைப்பிதழைத் தயாரிக்குக.<br>• நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்க.<br>• ஒலி, ஒளி அமைப்பு, மேடை அமைப்பு போன்றவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்க.<br>• அறிவிப்பாளர், விருந்துபசாரக் குழு, மண்டப அலங்காரக் குழு போன்றவற்றுக்குத் தீர்மானித்துக் கொள்க. |

**(30 நிமிடங்கள்)**

**படி 2.2.2 :**
- தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பயிற்சியில் ஈடுபட வழிப்படுத்துக.
- நிகழ்ச்சியினை சரியான முறையில் பயிற்சி பெறுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.
- சகல குழுக்களும் தமது நிகழ்ச்சிகளையும் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.
- நிகழ்ச்சிகள் தொடர்பாக மாணவர்கள் தமது கருத்துக்களைக் கூற இடமளிக்க.

- குறைகளை நிவர்த்தி செய்ய வழிப்படுத்துக.

**(45 நிமிடங்கள்)**

**படி 2.2.3** : • மேடை நிகழ்ச்சி தொடர்பாகக் கவனிக்கப்படவேண்டிய விடயங்களைப் பற்றி மீளவும் வலியுறுத்துக.

- அழைப்பிதழ்
  திகதி, நேரம், இடம், பிரதம அதிதி, தலைமை, அழைப்பவர் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்
- மேடையேற்றுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து அதில் நன்கு பயிற்சி பெறவேண்டும்.
- சகல மாணவரும் பங்கேற்கும் வகையில் நிகழ்ச்சிகள் திட்டமிடப்படல் வேண்டும்.
- நிகழ்ச்சி நிரலில் கலை நிகழ்ச்சிகளுடன் தேசிய கீதம். பாடசாலை கீதம், வரவேற்புரை, நன்றியுரை அதிதியின் உரை என்பன இடம்பெற வேண்டும்.
- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான வகையில் உடை, ஒப்பனை பயன்படுத்தப்படல் வேண்டும்.
- மேடையேற்றப்படும் கலை நிகழ்ச்சியின் வெற்றி வெவ்வேறு குழுக்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாட்டில் தங்கியுள்ளமை.
- ஆற்றுகைப் படுத்தலின் போது நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர். அறிவிப்பாளர் பங்கு அவசியம்
- நிகழ்ச்சிகளைப் பிறிதொரு தினத்தில் ஒத்திகை பார்த்து கலை நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டபடி அதிதியின் முன்னிலையில் குறித்த தினத்தில், குறித்த நேரத்தில் மேடை ஏற்றுதல்

**(45 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- நிகழ்ச்சியொன்றினை மேடையேற்றுவதற்கு அவசியமான விடயங்களைக் குறிப்பிடுவர்.
- மேடையேற்றப்படும் நிக்ழ்ச்சிகளைத் தெரிவு செய்வர்.
- தத்தமது ஆக்கங்களைத் திட்டமிடுவர்.
- கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கான ஒழுங்குகளை வடிவமைப்பர்.
- நிகழ்ச்சிகளை குறித்த தினத்தில் ஆற்றுகைப்படுத்துவர்.
- கூட்டாகச் செயற்படும்போது தலைமைத்துவப் பண்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஒற்றுமை, பிறர் கருத்தை மதிக்கும் பண்பு, நேரம்பேணல் போன்ற திறன்கள் விருத்தியாவதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 2.2.2.1

### குழு 1

- மேடையேற்றுவதற்கான ஒழுங்குகளைப் பின்வரும் அடிப்படையில் திட்டமிடுக.

  * ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல்
  * மேடையமைப்பு
  * அறிவிப்பாளரின் கடமைகள்

### குழு 2

- மேடையேற்றப்படும் நிகழ்ச்சிகளுக்கேற்ப குழுவாகவோ தனியாகவோ பயிற்சி செய்க.
  உதாரணம்: தனிப்பாட்டு, குழுப்பாட்டு, வில்லுப்பாட்டு

### குழு 3

- திகதி, நேரம், இடம், பிரதம அதிதி ஆகியவற்றைத் தீர்மானித்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்க.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.1.3 :** ரேவதி, சுத்தஸாவேரி, கமாஸ், கானடா ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களைச் சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஆரோஹண, அவரோஹணம் எழுதப்பட்ட அட்டை, ஆரோஹண, அவரோஹண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம்
- செயற்பத்திரம் 3.1.2.3
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.1.1** :
- ரேவதி, சுத்தஸாவேரி, கமாஸ், கானடா ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஹார்மோனியத்திலோ வேறு வாத்தியங்களிலோ வாசித்துக் காட்டி அல்லது பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த ஆரோஹண, அவரோஹணங்களைக் கொண்ட இராகங்களை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட இராகங்களை அடிப்படையாகக் கொண்டு பின் வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரை யாடல் ஒன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • ரேவதி, சுத்தஸாவேரி, கமாஸ், கானடா ஆகிய இராகங் களின் ஆரோஹண, அவரோஹண ஸ்வரஸ்தான வரை படங்களைக் காட்சிப்படுத்தி, குறிப்பிட்ட இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களையும் ஸ்வரஸ்தானங் களையும் கூறுவதற்கு இடமளிக்க. |
| • மேற்குறிப்பிட்ட இராகங்களின் ஆரோஹண, அவரோஹணத்தையும், ஸ்வரஸ்தானங்களின் ஒலி நிலை களையும் பாடிக்காட்டி மாணவர் தொடர்ந்து அதனைக் கேட்டுப் பாடுவதற்கு வழிப்படுத்துக. |
| • ஒவ்வொரு இராகத்தினதும் ஆரோஹண, அவரோஹணங் களை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக. |

- மாணவர் குழுவாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் முதலாம், இரண்டாம் காலங்களில் பாட நெறிப்படுத்துக.
- குறிப்பிட்ட இராகங்களில் சிறு சஞ்சாரங்களை அமைத்துக் கொடுத்து மாணவரைப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.

**(10 நிமிடங்கள்)**

**படி 3.1.2** : • ஒவ்வொரு மாணவருக்கும் செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

• அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்து, முழுமைப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.1.3** : • மாணவர் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனையவர்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக் களைக் கூற இடமளிக்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் மீண்டும் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்க.

- ரேவதி இராகத்தின் ஆ : ஸரிமபநிஸ் } 02வது மேள
  அ : ஸ்நிபமரிஸ } ஜன்யம்

  ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம், சுத்திரிஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம்

  சுத்தஸாவேரி இராகத்தின் ஆ: ஸரிமபதஸ் } 29வது மேளத்தின்
  அ: ஸதபமரிஸ } ஜன்யம்

  ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்

  கமாஸ் இராகத்தின் ஆ: ஸமகமபதநிஸ் } 28வது மேள
  அ: ஸ்நிதபமகரிஸ } ஜன்யம்

  இந்த இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம்

கானடா இராகத்தின்
ஆ: ஸரிகமதாநிஸ்
அ: ஸ்நிஸ்தாபமபகாமரிஸ} 22வது மேளமாகிய கரஹரப்ரியாவின் ஜன்யம்

இதன் ஸ்வரஸ்தானங்கள்
ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்

- ஒவ்வொரு இராகத்தினதும் ஆரோஹண, அவரோஹணத்தை மாணவருடன் சேர்ந்து பாடுக.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- ரேவதி. சுத்தஸாவேரி, கமாஸ், கானடா ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹண வரைபடங்களை வரைந்து காட்டுவர்.
- குறிப்பிட்ட இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவர்.
- குறிப்பிட்ட ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடுவதன் மூலம் அந்த இராகங்களை இனங்காண்பர்.
- குறிப்பிட்ட இராகங்களின் சஞ்சாரங்களை அமைத்துப் பாடும் திறனை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 3.1.2.3

- ஒவ்வொரு மாணவருக்கும் செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

- ரேவதி, சுத்தஸாவேரி, கமாஸ், கானடா ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் குழுவாகவும், தனியாகவும் பாடிப் பயிற்சி செய்க.
- குறிப்பிட்ட இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள இராகங்களில் சிறு சஞ்சாரங்களை அமைத்துப்பாடுக.

| இராகம் | ஆரோஹணம் | ஸ்வரஸ்தானம் |
|---|---|---|
| ரேவதி | ஆ: ஸரிமபநிஸ் } 02வது மேள<br>அ: ஸ்நிபமரிஸ ஜன்யம் | ஸட்ஜம், சுத்தரிஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம் |
| சுத்தஸாவேரி | ஆ: ஸரிமபதஸ் } 29வது<br>அ: ஸ்தபமரிஸ மேளத்தின் ஜன்யம் | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம் |
| கமாஸ் | ஆ: ஸமகமபதநிஸ் } 28வது மேள<br>அ: ஸ்நிதபமகரிஸ ஜன்யம் | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம் |
| கனடா | ஆ: ஸரிகமதாநிஸ்<br>அ: ஸ்நிஸ்தாபமபகாமரிஸ<br>{22வது மேளமாகிய கரஹரப் பிரியாவின் ஜன்யம்} | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகி நிஷாதம் |

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.2.4 :** தாட்டு வரிசைகளை (01, 02) சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- தாட்டு வரிசைகள் (01, 02) எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.2.2.4
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.2.1** **:**
- தாட்டு வரிசைகளை மூன்று காலங்களிலும் ஆசிரியர் பாடிக் காட்டி, மாணவர் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த இத்தாட்டு வரிசைகளை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • அப்பியாச வரிசைகளுள் தாட்டு வரிசைகளும் அடங்கும் என்பதைக் குறிப்பிடுக.<br>• தாட்டு வரிசைகள் அமைந்த இராகம்: மாயாமாளவ கௌளை, தாளம்: ஆதி, இயற்றியவர்: புரந்தரதாஸர் எனக் கூறுக.<br>• தாட்டு வரிசைகள் எழுதப்பட்ட அட்டையினைக் காட்சிப் படுத்தி, தாட்டு வரிசைகளின் அமைப்பினை விளக்குக.<br>• தாட்டு வரிசையினை பகுதி, பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.<br>• இவ் வரிசையினைத் தாளத்துடன் பாட, மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.<br>• தாட்டு வரிசையினை மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி பெறச் செய்க.<br>• ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து தாட்டு வரிசைகளை மூன்று காலங்களிலும் பல தடவைகள் பாடிப் பயிற்சி பெறுக.<br>• தனித்தனியாகவும், குழுக்களாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக. |

**(30 நிமிடங்கள்)**

**படி 3.2.2** : • மாணவர் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்தோ அல்லது தனித்தனியாகவோ செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

• செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப சரியாகப் பாடுவதை உறுதிப்படுத்துக.

**(30 நிமிடங்கள்)**

**படி 3.2.3** : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு சமர்ப்பிக்கும் போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

• மீளவும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- **தாட்டு வரிசைகள், அப்பியாச வரிசைகள் ஆகும்.**
- **தாட்டு வரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்தில் அமைந்துள்ளது.**
- **ஆதி தாளத்தில் அமைந்தது.**
- **புரந்தரதாஸரினால் இயற்றப்பட்டது.**
- **மாணவருடன் சேர்ந்து தாட்டு வரிசையினை சுருதி, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.**

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- தாட்டு வரிசைகள் அமைந்த இராகத்தினைக் குறிப்பிடுவர்.
- புரந்தரதாஸரால் இயற்றப்பட்டது என்பதைக் கூறுவர்.
- அப்பியாச வரிசைகளுள் தாட்டு வரிசைகளும் அடங்கும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- தாட்டு வரிசையினை மூன்று காலங்களிலும் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.4

- சகல மாணவருக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

- தாட்டு வரிசைகளை மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி பெறுக.
- தாட்டு வரிசையினை மூன்று காலங்களிலும் பாடுக.

# தாட்டு வரிசைகள்

இராகம் : மாயாமாளவகௌளை இயற்றியவர் : புரந்தரதாஸர்
தாளம் : ஆதி

(1)

| 14 | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|
| ஸமகரி | / | ஸரி | / | கம | // |
| ரிபமக | / | ரிக | / | மப | // |
| கதபம | / | கம | / | பத | // |
| மநிதப | / | மப | / | தநி | // |
| பஸ்நித | / | பத | / | நிஸ் | // |
| ஸ்பதநி | / | ஸ்நி | / | தப | // |
| நிமபத | / | நித | / | பம | // |
| தகமப | / | தப | / | மக | // |
| பரிகம | / | பம | / | கரி | // |
| மஸரிக | / | மக | / | ரிஸ | // |

(2)

| 14 | | | | 0 | 0 | |
|---|---|---|---|---|---|---|
| ஸமகம | ரிக | ஸரி | / | ஸஸரிரி | / ககமம | // |
| ரிபமப | கம | ரிக | / | ரிரிகக | / மம பப | // |
| கதபத | மப | கம | / | ககமம | / பப தத | // |
| மநிதநி | பத | மப | / | மமபப | / தத நிநி | // |
| பஸ்நிஸ் | தநி | பத | / | பபதத | / நிநி ஸ்ஸ் | // |
| ஸ்பதப | நித | ஸ்நி | / | ஸ்ஸ்நிநி | / தத பப | // |
| நிமபம | தப | நித | / | நிநிதத | / பப மம | // |
| தகமக | பம | தப | / | ததபப | / மம கக | // |
| பரிகரி | மக | பம | / | பபமம | / கக ரிரி | // |
| மஸரிஸ | கரி | மக | / | மமகக | / ரிரி ஸஸ | // |

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.2.5 :** ''ரேவதி இராகம்" என்னும் இலட்சண கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 40 நிமிடம் (02 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- ஸ்வரஸ்தான வரைபடம்
- இலட்சணகீதம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.2.2.5
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** :
- ''ரேவதி ராகம்" என்னும் இலட்சண கீதத்தை ஆசிரியர் பாடிக்காட்டி அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்து மாணவரை செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்த பாடலினை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

  - கீதம் அமைந்துள்ள இராகத்தின் இலட்சணத்தைக் கூறும் சாகித்தியத்தை உடைய கீதம் இலட்சணகீதம் என்பதை அறியச் செய்க.
  - எடுத்துக்கொண்ட இலட்சண கீதத்தின் இராகம், தாளம் என்பவற்றினை அறியச் செய்க.
  - ஸ்வரஸ்தான வரைபடத்தினைக் காட்சிப்படுத்தி ரேவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிக் காட்டி, மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.
  - பாடல் அட்டையினைக் காட்சிப்படுத்தி, சாகித்திய மூலமாக எடுத்துக் கூறப்படும் விடயங்களை அறியச் செய்க.
  - இலட்சணகீதத்தின் ஸ்வரப்பகுதியை பகுதி, பகுதியாகப் பாட, மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.
  - ஸ்வரப் பகுதியினை பிழையின்றிப் பாடும் வரை மாணவருடன் சேர்ந்து முழுமையாகப் பல தடவைகள் பாடச் செய்க.
  - ஸ்வரப் பகுதியினை தாளத்துடன் பாடநெறிப்படுத்துக. சாகித்தியத்தினை பகுதி, பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.

- சாகித்தியத்தை தாளத்துடன் பாட நெறிப்படுத்துக.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து கீதத்தை சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
- ஒரு பகுதியினர் ஸ்வரப்பகுதியையும் மற்றைய பகுதியினர் சாகித்தியத்தையும் மாறி மாறிப் பாடச் செய்க.
- குழுக்களாகவும், எழுமாற்றாகத் தனித்தனியாகப் பாடவும் சந்தர்ப்பம் வழங்குக.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.3.2** :

- மாணவர் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற் பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.
- செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடுகிறார்களா என்பதை உறுதிப் படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.3.3** :

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்க.
- ஒரு குழு பாடும்போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.
- மீளவும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- இராகத்தின் இலட்சணத்தைக் கூறும் சாகித்தியத்தை உடைய கீதம் இலட்சண கீதம்.
- ரேவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணம் ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ
- ஆதி தாளத்தில் அமைந்துள்ளமை
- ரேவதி ராக இலட்சண கீதத்தை இராக, தாளத்துடன் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுக.

**(10 நிமிடம்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இலட்சண கீதம் அமைந்த இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- சாகித்திய மூலமாக அறிந்து கொள்ளப்படுகின்ற ரேவதி இராகத்தின் இலட்சணத்தைக் கூறுவர்.
- ரேவதி ராக இலட்சண கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்.
- பல்வகை உருப்படிகளுள் இலட்சண கீதத்தினை இனங்கண்டு கூறுவர்.
- இலட்சண கீதம் மூலமாக இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 3.3.2.5

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

| |
|---|
| • ரேவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிப் பயிற்சி செய்க. |
| • ரேவதி ராகம் என்னும் இலட்சணகீதத்தை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க. |
| • இலட்சண கீதத்தை இராக, தாளத்துடன் பாடுக. |

**இணைப்பு**

### இலட்சண கீதம்

இராகம்: ரேவதி
தாளம் : ஆதி

ஆ: ஸரிமபநிஸ்
அவ: ஸ்நிபமரிஸ
} 2வது ரத்னாங்கியின் ஜன்யம்

இயற்றியவர் : பொன்ஸ்ரீவாமதேவன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 0 | 0 | 14 | 0 | 0 |
| மா பநி | / பா | / மா | // பம ரிஸ | / ரிப / | மா // |
| ரே வதி | ரா | கம் | ரத்னாங்கியின் | சே | யே |
| ரிஸ ரிம | / பா | / நீ | // ஸ்நிபநி | / ஸ்ா / | ஸ்ா // |
| அதில்வரும் | ஸ்வரங் | கள் | ஒளடவ | மே | யாம் |
| ஸ்ா ஸ்ஸ் | / ஸ்நி | / பநி | // ஸ்ஸ் ஸ்ரீ | / ம்ரீ / | ஸ்ஸ் // |
| ஸட்ஜசு | த்த | ரிஷப | சுத்த மத்தி | மபஞ் | சம |
| நீ நிநி | / ஸ்நி | / பம | // நிநி ஸ்ரீ | / ஸ்ா / | ஸ்ா // |
| கை சிகி | நிஷா | தம் | களை தரு | வன | வே |
| ஸரிமப | / நிஸ் | / நிப | // மரி ஸநி | / ரீ / | ரிஸ // |
| ஸரிமப | நிஸ் | நிப | மரிஸவி | லடங் | கும் |

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.10:** மத்யமகாலக்கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். (ஸ்ரீ சரஸ்வதி - ஆரபிராகம்/காலஹரண சுத்தஸாவேரி ராகம்)

**நேரம்** **:** 02 மணி (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- பாடல் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.10

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** **:**

- ஸ்ரீ சரஸ்வதி - ஆரபி ராகம்/காலஹரண - சுத்தஸாவேரி ராகம் என்னும் மத்யமகாலக்கீர்த்தனைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தோ, பாடிக்காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்த கீர்த்தனைகள் அமைந்துள்ள இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களைப் பாடி அவ்விரு இராகங்களையும் இனங்காணச் செய்க.

- இனங்கண்ட பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

**ஸ்ரீசரஸ்வதி - ஆரபிராகம், ரூபகதாளம், காலஹரண - சுத்தஸாவேரி ராகம் - ரூபகதாளத்தில் அமைந்துள்ளது.**
**எடுத்துக்கொண்ட கீர்த்தனையின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடி மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.**
**எடுத்துக்கொண்ட கீர்த்தனையைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் பகுதி, பகுதியாக பாட மாணவர் அதைத்தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குக.**
**எடுத்துக்கொண்ட மத்யமகாலகீர்த்தனையைத் தாளத்துடன் பாட மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.**
**மாணவரைக் குழுவாகவோ, எழுமாற்றாகத் தெரிந்து தனியாகவே பாடச் சந்தர்ப்பம் வழங்குக.**

**(45 நிமிடம்)**

**படி 3.3.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுவாகவோ, தனியாகவோ பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- சகல மாணவரும் எடுத்துக்கொண்ட கீர்த்தனையை முழுமையாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

**படி 3.3.3** :

- குழுவாகவோ, தனியாகவோ கீர்த்தனையைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- தனியாகவோ குழுவாகவோ கீர்த்தனையைப் பாடும்போது ஏனைய மாணவர்களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • ஸ்ரீ சரஸ்வதி - ஆரபி இராகக் கீர்த்தனை அல்லது காலஹரண என்ற சுத்தஸாவேரி இராகக் கீர்த்தனைகளில் மாணவர் தெரிவு செய்த மத்யமகாலக் கீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பவற்றைக் கூறி கீர்த்தனையை ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து இராக தாளத்துடன் பாடுக. |

**(30 நிமிடம்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- எடுத்துக் கொண்ட மத்யமகாலகீர்த்தனையின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- கீர்த்தனை பாடும் ஒழுங்கு முறையை விபரிப்பர்.
- கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டது என்பதைக் கூறுவர்.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.10

- ஒவ்வொருவருக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

| |
|---|
| • தெரிவுசெய்து கீர்த்தனையைப் பாடிப் பயிற்சி செய்க. |
| • தெரிவுசெய்த கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக. |

# ஸ்ரீ ஸரஸ்வதி

இராகம் : ஆரபி
ஆ. ஸரிமபதஸ்
அ. ஸ்நிதபமகரிஸ } 29வது மேளத்தின் ஜன்யம்

தாளம்: ரூபகம்
இயற்றியவர்: முத்துஸ்வமி தீட்சிதர்

## பல்லவி

பா; பாமக ரீஸா // ரீ; ஸரிஸநி தா்ரிஸ // ஸாரீ ரீ; ரிஸரிம //
ஸ்ரீ ஸர ஸ்வ தி ந.மோ. ஸ்து தே . . வ.ர.தே
2. பா; மபதப மகரிஸ// ரீ; ஸரிஸநி தாரிஸ// ஸாரீ ரீ; ரிஸரிம//
ஸ்ரீ ஸ.ர .ஸ்வ தி ந.மோ. ..ஸ்து தே . பரதே
3. பா; மபதரி் ஸ்நிதப // மகரீ ஸரிஸநி் தா்ரிஸ// ஸாரீ ரீ; பாதப//
ஸ்ரீ ஸ.ர. .ஸ்வ தி. . ந.மோ. ஸ்து தே . . பர.
பா; பாமக ரிஸரீ // ஸ்ாரிஸ மகரீ பமகரி // மபதரிஸ்நிதப மகரிம//
தே வதே . . . ஸ்ரீ பதி கௌரீ பதிகுரு குஹவினு தே.விதி யுவதே
பா; மபதரி் ஸ்நிதப// ரீ; ஸரிஸநி் தா்ரிஸ // ஸாரீ ; ; ஸ்நிதா//
ஸ்ரீ ஸ.ர. . .ஸ்வ தி ந.மோ ..ஸ்து தே. . . . . .
ஸா; ; ; ; ; //
.... .... ...

## ஸமஷ்டிச் சரணம்

மகரீ ஸாஸநி் தாஸா // ஸாரிக ரிஸஸா ஸநிதா//
வா.. ஸனா. . த்ர ய. வி. வ. .ர் . ஜித
ரீஸா ரிபமக ரிஸரிம // பாபம பாதஸ் பதாப //
வர மு.னி பா. . . வித மூ. ர்த் தே. .
2. மகரீ ஸாஸநி் தாஸா // ஸாரிக ரிஸஸா ஸநிதா//
வா.. ஸனார் . த்ர யவி. வா. .ர் ஜி.த
ரீஸா ரிபமக ரிஸரிம // ரிமபத ஸ்நிதா பா; //
வர மு.னி. பா. . வி.த. மூ. .ர்த் தே.
ஸநிதா ஸ்ாஸ்ா ;ரீ // ரி்ரி்ம்க் ரீ; ரீஸ்ா //
வா.. ஸவா த்ய கி.ல நிர் ஜர
ஸ்நிதா ஸ்ா; ; ; // ஸ்நிதப மகரிஸ ரிமபத //
அ . . . . . . . . . . . . . . . . . .
ஸ்ாரி்ஸ் நித ஸ்ாஸா ;ரீ // ரி்ரி்ம்க் ரீ; ரீஸ்ா//

வா. .  ஸவா த்ய  கி.ல.  நிர் ஜர
ஸதரீ ஸ்ரிஸ்நி தாபா // மாபத மா,க ரிஸரிரி//
வ.ர  வி.த.  ரண  ப.ஹீன கீ..ர்த் தே தர
ரீஸரி  ஸரிஸா மகரீ //  பாபம ததபா ஸ்தஸ்ா//
ஹாஸயு தமுகாம் புருஹே அற்புத சரணாம் புருஹே
ஸ்ா; ;ஸநி தபமக // ரீஸரி  ஸ்ரிஸா மகரீ //
அ. . . . . .தர  ஹாஸயு தமுஹாம் புருஹே
பாபம  ததபா  ஸ்தஸ்ா // ரிரிமக ரிரீஸ் நிதரீ//
அற்புத சரணாம் புருஹே  ஸம்.ஸா ரபீத்ய .பஹே
ஸ்நிதப  ; மக ரிஸரிம //
ஸகலமந் .த்ரா ஷரகுஹே (ஸ்ரீ சரஸ்வதி)

# மத்திமகாலக் கீர்த்தனை

இராகம் : சுத்தசாவேரி
ஆ. ஸரிமபதஸ்
அ. ஸ்தபமரிஸ } 29வது மேளத்தின் ஜன்யம்

தாளம்: ரூபகம்
இயற்றியவர்: தியாகராஜசுவாமிகள்

## பல்லவி

1. ஸ்ா ஸ்த பம // பா மரி , ம // ரீ ஸா ரிமரிஸ // ரீ மா பா, த //
   கா லஹ ரண // மே லரா ஹ ரே ... ஓ . . // ஸீதா ராம்

2. ஸ்ா ஸ்த பம / பதஸ்த பமரிம பதபம // ரீஸா ரிமரிஸ // ரீ மா பா, த
   கா லஹ ரணமே . . ல . . ராஹ ரே . ஓ . . ஸீதா ராம

3. ஸ்ரிம்ரி ஸ்ததஸ் ரிஸ்தப //பதஸ்த பமரிம பதபம / ரீ ஸா ரிமரிஸ // ரீமா பா, த
   கா .... லஹ. . . ரண . மே . . ல . . ராஹ ரே . . ஓ . . ஸீதாராம

## அனுபல்லவி

1. பம பத பத // ஸ்த ஸ்ா ; //
   கா லஹ ரண மே ல //

2. பம பத // ஸ்த ஸ்ரி ஸ்ரீ //
   கா லஹ ரண // மே ல //

   ரிம்ரிரி ஸ்ாஸ்ஸ் தா // தஸ்தத பாபம பத //
   ஜா லக . . ரு // ணா . . லவா . . ல . .

## சரணம்

பத ஸ்த தப // பமதத பமரீ ஸா //
தின தின முனு // தி.ரி கிதிரி கி . .// 
ரிம ,ம பா, த //பத ஸ்த பம //
திக் குலே . க // சர ணுஜீ சி . . .//

## அனுபல்லவி போல்

தனுவுதனமு // நீதேயண்டி //
த்யாகராஜ // வினுதராம //

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.11:** பதத்தினை இராக, தாளத்துடன் பாடுவோம்.
(அலைபாயுதே - கானடா ராகம்/
தெருவில்வாரானோ - கமாஸ் ராகம்)

**நேரம்** : 02 மணி (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- பதம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.11
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** :
- பதத்தின் அமைப்பு அதன் சிறப்பம்சம் என்பவற்றை விளக்கி எடுத்துக்கொண்ட பதத்தை முழுமையாகப் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- அலைபாயுதே - கானடா இராகம், ஆதி - தாளம்/ தெருவில் வாரானோ - கமாஸ் ஆதி தாளம் (திஸ்ரநடை) என்பதை மாணவர் அறியச் செய்க.
- எடுத்துக்கொண்ட பதம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோஹண, அவரோஹணங்களைப் பாட, மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.
- எடுத்துக்கொண்ட பதம் எழுதிய அட்டையைக் காட்சிப் படுத்தி அதன் இராகம், தாளம், இயற்றியவர் பெயர்களைக் குறிப்பிடுக.
- பதம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்ட கௌரவ சிருங்கார ரஸம் பொருந்திய உருப்படி என்பதை விளக்குக.
- எடுத்துக்கொண்ட பதத்தைப் பகுதி பகுதியாகப்பாட மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.
- ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து தாளத்துடன் முழுமை யாகப்பாடுக.
- மாணவரைக் குழுவாகவோ, எழுமாற்றாகத் தெரிந்து தனியாகவே பாடச் செய்க.

**(45 நிமிடம்)**

**படி 3.3.2** : • மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் தாம் எடுத்துக்கொண்ட பதத்தினை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்ய இடமளிக்க.

• சகல குழுவும் தாம் எடுத்துக்கொண்ட பதத்தினைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

**படி 3.3.3** : • ஒவ்வொரு குழுவும் தாம் எடுத்துக்கொண்ட பதத்தினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு பாடும்போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- **அலைபாயுதே என்ற பதம் கானடா ராகம் ஆதி தாளத்தில் அமைந்தது.**
- **தெருவில்வாரானோ - கமாஸ் ராகம் ஆதி தாளம் திஸ்ரநடையில் அமைந்துள்ளது.**
- **அலைபாயுதே என்ற பதம் ஊத்துக்காடு வெங்கட சுப்பய்யரால் இயற்றப்பட்டது.**
- **தெருவில் வாரானோ என்ற பதம் முத்துத் தாண்டவரால் இயற்றப்பட்டது.**
- **பதம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்ட கௌரவ சிருங்கார ரஸம் பொருந்திய உருப்படி யாகும்.**
- **பதம் இசைக்கச்சேரிகள் நாட்டியக் கச்சேரிகளில் பாடப் படும் உருப்படியாகும்.**
- **ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் முழுமை யாகப் பாடி நிறைவு செய்க.**

**(30 நிமிடம்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- எடுத்துக் கொண்ட பதத்தின் இராகம், தாளம், ஆரோஹண, அவரோஹணம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- பதத்தின் அமைப்பு பற்றியும் அவை பாடப்படும் சந்தர்ப்பம் பற்றியும் கூறுவர்.
- எடுத்துக்கொண்ட பதத்தினை சுருதி, இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.11

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

| |
|---|
| • எடுத்துக்கொண்ட பதத்தை சுருதி, சுத்தமாக இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.<br><br>• எடுத்துக்கொண்ட பதத்தை இராக, தாளத்துடன் பாடுக. |

## அலைபாயுதே

இராகம் : கானடா
தாளம் : ஆதி
ஆ. ஸரிகமதாநிஸ்
அ. ஸ்நிஸ்தாபமபகாமரிஸ } 22வது மேளத்தின் ஜன்யம்
இயற்றியவர்: ஊத்துக்காடு வெங்கட ஸுப்பய்யர்

### பல்லவி

1. நீஸா ரீ, பாகா; ;கா / கமாரி ;ரீ / ஸாஸா ஸாஸா /
அலை பா -யு-தே கண் ணா... என் மனம் - மிக

2. நீஸா ரீ, பாகா; ;கா / கமாரி ;ரீ / ஸாஸா ஸாஸா /
அலை பா -யு-தே கண் ணா... என் மனம் - மிக
;நிதா ஸா,நி ரீஸா; ;பா / ஸ்ாஸ்ப நீபம / தபமக ,மரிஸ /
அலை பா-யு தே . உன் ஆனந்த மோஹன வேணுகா னமதில்

3. நிஸா ரி ; பா மபதா நிதமமகா. ;கா / கமாரி ;ரீ / ஸாஸா ஸாஸா /
அலை பா; யு தே.....கண் ணா.....என் மனம் மிக
நிதாஸ ,நிரீ ஸா ; ; பா /ஸ்ாஸ்ப நீபம / தபமக,மரிஸ //
அலைபா -யு தே ..... உன் ஆனந்த - மோஹன வேணுகானமதில்

4. நிஸா ரீ, பா. மபதாநிதபமகா. ;கா / கமாரி ;ரீ / ஸாஸா ஸாஸா /
அலை பா -யு தே .... .... ..... கண் ணா ..என் மனம் - மிக
நிதா ஸாநீ ரீ ஸா ; ; ஸ்ா/ நிஸ்ரிஸ்நிப.பமநிதபம / மபதப மக. கமரிஸ/
அலை பா -யு தே ... உன் ஆன....னந்த மோ..ஹன வே..ணுகா. னமதில்

(அலைபாயுதே)

### அனுபல்லவி

1. ;தமாதநீ ஸா; ஸா / ; ; ; ; / ; ; நீரிஸ்ஸ்நி நீ /
நிலைபெய . ரா. . து ; ; ; ; ; . நின்ற

2. ; தமாதநீ ஸா ; ;ஸா/ ; ; ; ; / ; ஸாநி ஸரீக்ரி /
. நிலைபெயரா . து ... ... ... நின்ற . .

3. ஸ்நிபா. நிபாநிநீ . . தநிரீ ஸ்ா ஸ்ாஸா/ ;க்ம்ா ரிஸ்/ ஸ்ாநிரிஸ். ஸ்நி நீநீ /
.... .... நிலைபெய ரா . . . . . .து சிலை போல வே ... . நின் ...ற

1. தாநிஸ்ாஸ்ஸ்ஸ் தாதநீ மதநி / நிரிஸ்நி பப மப / தாபம காஸ்ஸ் /
நேர மாவ தறி யாமலே .மிகவி னோ. த மானமுர ளீத;ரா . நின்ற

2 . . . . . . . . . . . . . . . / நிரிஸ்நி பப மப / தாபம - கமரிஸ /
. . . . . . . . . . . . . . . னோ. த மானமுர ளீதரா.என் மனம்

(அலைபாயுதே)

## சரணம்

1. ;தநீதபா - பாபா . பாபா / மதா பா , மா / பாதாநிதபமகா; /
-தெளிந்தநி லவு பட்டப் பகல்போல் எ ரியு. . . தே. . .

2. ;தநீதபா . பாபா . மாதா/ நிஸாநி பாமா/ பாதாநித . பமகா //
-தெளிந்தநி லவு பட்டப் பகல்போல் எ ரியு... ...தே.....
; ; காமரீ . ஸா , ஸா ஸஸா / நிஸாரி ,ஸா / ரீபா .தபமக //
; ; திக்கை நோக்கி என்னிரு புரு வம் . நெ ரியு தே.....

1. ; தமாத நீ ,ஸ்ா,ஸ் ஸ்ாஸ்ா / ; ;ஸ்ாஸ் ஸ்ா / ஸ்நீரிஸ் . ஸ்நிநீ ; //
கனிந்தஉன்வேணு கானம் . . காற்றில் வ ரு கு தே. . .

2. ; தமா தநீ . தநிரீ . ஸா . ஸ்ாஸ்ா / ; க்மாரிஸா / ஸ்நிரிஸ் . ஸ்நி நீ //
கனிந் த உன் வே ணு கானம் . காற்றில் வ ருகு . . . தே

3. ; நிபா நிஸ்ா . ரீ , ரி ரீ, ரி / ரீ ரீ . ரீ ரீ ரீ / ஸ்ரி. ஸ்ரிபா . கா //
. கனிந்தஉன் வேணு கானம் தென்றல்காற்றில்வ ரு.கு. . . . தே. .
கம்ா ரீஸ்ா ஸ்ா நீரிஸ் , நிதா / மாதா தநிஸா நிபா / மபதாநித பமகா;
. கண்.கள் சொருகி. . . ஒரு வித. மா ய் வ ரு.கு. . . .தே...
ஸஸாஸ . பபாப மமாம ததாத /மதாநீ ஸ்ஸ்ாஸ் /ஸ்ஸ்ாஸ் ஸ்ாஸஸ்
கதித்த மனத்தில் உறுத்தி பதத்தை எனக்கு அளித்து மகிழ்த்த வா ஒரு

க்க்காம் ரிரீஸ் ஸ்ஸ்ாஸ் நிதாநி /மதாநி ஸ நீ ப/ மபா. நிதபமாகா;
தனித்த வனத்தில் அணைத்து எனக்கு உணர்ச்சி கொடுத்து முகிழ்த்த வா,
.ஸஸஸஸ . பபபப . மமமம தததத / மதபத நிஸ்ஸ்ஸ்/ ஸ்ஸ்ாஸ் ஸ்ா;
கனைகடல் அலையினில் கதிரவன் ஒளியென இணையிரு கழலெனக் களித்த வா.

1. பபநிஸ் ரிரிரிரி . ரீரிரீரிரி / க்க்ம்ரி ரீஸ்ஸ் / ஸ்ஸ்ா நீ நி நீ //
கதறிம னமுருகி நானழைக்கவோ இதர மாதருடன் நீ களிக்கவோ

2. பபநிஸ் ரிரிரிரி . ஸ்ரிபாமா க்காக்ர / க்க்மரீ ரீஸஸ / ரீஸரீஸ்ா நீநிநீ //
கதறிம னமுருகி நா...னழைக்கவோ இதர மாதருடன் நீ.....களிக்கவோ
நித நிஸ்ஸ்ா . நித நிஸ்ஸ்ா நிபநிஸ் / ரீஸ்ரி ப்ம்க்ா / க்ம்ாரி ;ஸ்ஸ் //
இது தகுமோ இதுமுறையோ இது தரு மந். தா..... னோ... குழல்
ஸ்ாரிஸ்ா நிதநி . ஸ்ாரிஸ்ா. நிதநி / மாதநீ ஸநிப / மதபம கமரிஸ //
ஊதிடும் பொழுது ஆடிடும்குழைகள் போலவே மனது வே.தனை மிகவொடு

(அலைபாயுதே)

## இணைப்பு II

### பதம் - தெருவில் வாரானோ

இராகம் : கமாஸ் — தாளம் : ஆதி (திஸ்ர நடை)

ஆ. ஸமகமபதநிஸ்
அ. ஸ்நிதபமகரிஸ் } 28வது மேளத்தின் ஜன்யம் — இயற்றியவர் : முத்துத்தாண்டவர்

### பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மமம | மகம | பாக | மபத | பதநி | நிதப | மா, | கமபதநிஸ் |
| தெருவில் | வாரா | னோஎன் | னைச்சற்றெ | திரும்பிப் | பாரா | னோ | . ..... |

### அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மநித | நிதப | தநிஸ் | ஸ்ஸ்ஸ் | ஸ்நிரிஸ்நித | தபப | மபத | பமமம |
| உருவி | லியொடு | திரிபு | ரத்தையும் | உடனெ | ரிசெய்த | நடன | ராஜன் |

### சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிதத | தபத | நீதி | தபப | மபத | தபம | மா; | கமபதநிஸ் |
| வாசல்முன் | நில்லா | னோஎ | னக்கொரு | வாசகம் | சொல்லா | னோ | . . . . . |
| நிதநி | ஸ்தநி | ஸ்ஸ் | நிதப | மபத | தபப | மா, | கமபதநிஸ் |
| நேசமாயப் | புல்லா | னோகழை | வைத்த | ராஜனை | வெல்லா | னோ | . . . . . |
| மகம | ; பபப | நிதநி | ஸ்ஸ்ஸ் | நிரிஸ் | நிதத | பபத | மாம |
| தேசிக | னம்பல | வாணன் | தடம்புரி | தேவாதி | தேவன்சி | தம்பர | நாதன் |

இதைப்போன்று பின்வரும் அடிகளைப் பாடவும்.

போது போகு தில்லையெ எனக்கொரு / தூது சொல்வாரில்லை / யே //
ஈதறிந் தேனில்லையே என்மேல்க் குற்றம் யாதொன்றும் இல்லை / யே //
வேதனுமாலும் மூவாயிர ருந்திரள் / விண்ணவருந் தொழ / ஆடிய பாதன் //

2. மெய்யென்றிருந்தேனே அவருடை / செய்கையறிந்தே / னே //
மையலுங் கொண்டேனே செவ்விய என் / மெய்யும் பசந்தே / னே //
வையகம் உய்யப் பதஞ்சலி போற்றிட / வாழும் கனகச பை நடராஜன் //

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.12:** ''பூத்தேர்ந்தாயன'' என்னும் தேவாரத்தினை பண்முறைக்கமைய தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 40 நிமிடம் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- தேவாரம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.12
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1** :

- பூத்தேர்ந்தாயன என்னும் தேவாரம் பற்றி ஏற்கனவே கற்ற விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- தேவாரத்தினை ஆசிரியர் முழுமையாகப் பாடிக் காட்டியோ. ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தேவாரத்தின் பண் : பழந்தக்க ராகம்
  இராகம் : ஆரபி
  தாளம் : ஆதி
  அருளியவர் : திருஞானசம்பந்தர்
- தேவாரம் எழுதப்பட்ட அட்டையை காட்சிப்படுத்துக.
- தேவாரத்தினை உச்சரிப்புத் தெளிவுடன் வாசிக்கச் செய்க.
- தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினையும், பொருளினையும் மாணவர் அறியச் செய்க.
- ஆசிரியர் தேவாரத்தைப் பண்முறைக்கமைய பகுதி. பகுதியாகப் பாட, மாணவர் தொடர்ந்து பாடுக.
- ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து தாளத்துடன் முழுமையாகப்பாடுக.
- மாணவர் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தனித்தனியாகவும் பாடச் செய்க.

**(10 நிமிடம்)**

படி 3.3.2 : • மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் தேவாரத்தைப் பண்ணுடன் பாடிப் பழக இடமளிக்க.

• சகல குழுவும் தேவாரத்தைப் பண்ணுடன் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 3.3.3 : • ஒவ்வொரு குழுவும் தேவாரத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு பாடும்போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

• பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- பூத்தேர்ந்தாயன என்னும் தேவாரத்தின் பண்: பழந்தக்கராகம் ஆகும்.
- இப்பண்ணிற்கு ஒப்பான இராகம் ஆரபி ஆகும்.
- ஆதி தாளத்தில் இத்தேவாரம் அமைந்துள்ளது.
- இத்தேவாரத்தை அருளியவர் திருஞானசம்பந்தர் ஆவார்.
- தேவாரத்தை ஆசிரியரும், மாணவரும் பண்முறைக்கமைய முழுமையாகப் பாடுக.

**(15 நிமிடம்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- பூந்தேர்ந்தாயன எனும் தேவாரம் அமைந்த பண், இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- இத்தேவாரத்தை அருளியவரின் பெயரைக் கூறுவர்.
- தேவாரத்தைப் பண்முறைக்கமையப் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.12

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

- பூந்தேர்ந்தாயன எனும் தேவாரத்தை பண்முறைக்கமையத் தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- பூந்தேர்ந்தாயன எனும் தேவாரத்தை பண்முறைக்கமையத் தாளத்துடன் பாடுக.

## தேவாரம் (பூத்தேர்ந்தாயன)

இராகம் : ஆரபி

பண் : பழந்தக்கராகம்

தாளம் : ஆதி

அருளியவர் : திருஞானசம்பந்தர்

; தஸ் தா; பா; பாபா / ; , ப ாபபா / மா,க ரிஸரீ //
பூத் தேர்ந் தா யன கொண்டுநி பொன் . னடி

; ரிம ாபதப ,மாக ரிலரீ / ; ரிம ாபதஸ் / தா ; மாபா //
ஏ த் தா.. தா. ரில்லை எண் .ணுங் கா . ல் .

; பாதஸ் தபமா பாஸ்த ஸ்ாஸ் / ; ஸ்ரீ ர்ரீ / ஸ்ரிம்க் ரிஸ்ரீ //
ஓத் தூர். மே . . ய . ஒளி மழு வா. . . ளங்கை

; தர் ஸ்ரீ ஸ்நிதா தாபா / ; , ம பாபா /மாகரி ரிஸரீ //
கூத் தீ. ரும். . . ம குணங்க ளே. . . . . .

; தர் ஸ்ரீ ஸ்நிதா தாபா / மபதரி ஸ்நிதப / தபமக ரிஸரீ //
கூத் தீ. ரும். . . ம குணங் . .க. . ளே. . . . .

### சந்தர்ப்பம்

இப்பதிகம் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய போது பாடப்பெற்றது.

### பொருள்

உரிய நல்ல பூக்களைத் தேர்ந்து காலமிடங்களுக்கும் விதிக்கும் பொருத்தமாக பெறலாயினவற்றைக் கொண்டு அவ்வவர் பக்குவத்திற்கேற்றவாறு திருவடியை போற்றாதவர்கள் இல்லை என்னும் இவ் உண்மை சிந்தித்து ஆராய்வோர்க்குப் புலப்படும். வேதம் ஓதி வழிவழியாக வழிபாடு செய்யப்படுகின்ற திருவோத்தூரில் ஒளி பொருந்திய மழுவாயுதத்தையும், வாளையும் திருக்கரத்தில் தாங்கியருளி ஐந்தொழிலருட் கூத்தினை இயற்றியருளுகின்ற பெருமானே! இவ்வாறு யாவையும் உட்பட நிற்றல் தேவரீரது அருட்தன்மைகளாம்.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** **3.3.13:** 'காலனிடத்தணுகாதே' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** **:** 40 நிமிடம் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- திருப்புகழ் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.3.2.13
- இணைப்பு

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 3.3.1** **:**
- காலனிடத்தணுகாதே என்னும் திருப்புகழை ஆசிரியர் பாடிக்காட்டி அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச்செய்து மாணவரை செவிமடுக்கச் செய்க.

- செவிமடுத்த திருப்புகழை அடிப்படையாகக்கொண்டு. பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

  - திருப்புகழ் என்னும் உருப்படியின் அமைப்புப் பற்றிய பொது விளக்கத்தினை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
  - காலனிடத்தணுகாதே என்னும் திருப்புகழ் அமைந்த இராகம்: மோகனம், தாளம்: கண்டசாபு, அருளியவர் : அருணகிரிநாதர் என்பவற்றை மாணவர் அறிந்துகொள்ளச் செய்க.
  - மோகன இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தினைப் பாடிக்காட்டி, அதனை ஸ்வரஸ்தானப் பிழையின்றி மாணவர் தொடர்ந்து பாட வழிகாட்டுக.
  - கண்ட சாபு தாள விளக்கமளித்து, இத்தாளத்தினை மாணவர் போடப் பயிற்றுக.
  - திருப்புகழ் அமைந்த தாளத்திற்கமைவான சந்தத்தினை அறியச் செய்க.
  - சந்தத்தினை தாளத்துடன் பாடப் பயிற்சியளிக்க.
  - பாடல் அட்டையினைக் காட்சிப்படுத்தி, பகுதி, பகுதி பாட மாணவர் தொடர்ந்து பாட இடமளிக்க.
  - திருப்புகழினைத் தாளத்துடன் பாட நெறிப்படுத்துக.
  - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

- குழுக்களாகவும் எழுமாற்றாகத் தனித்தனியாகவும் பாட சந்தர்ப்பம் வழங்குக.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.3.2** :

- மாணவரின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தலிற்கேற்ப ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என உறுதிப்படுத்துக.

**(15 நிமிடங்கள்)**

**படி 3.3.3** :

- ஒவ்வொரு குழுவும் திருப்புகழினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும்போது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் மீளவும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துக.

- காலனிடத்தணுகாதே என்னும் திருப்புகழ் மோகன இராகத்திலும், கண்டசாபு தாளத்திலும் அமைந்துள்ளமை.
- மாணவருடன் சேர்ந்து பாடலை சுருதி, தாளத்துடன் முழுமையாகப்பாடுக.

**(10 நிமிடம்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- காலனிடத்தணுகாதே என்னும் திருப்புகழின் இராகத்தினைக் குறிப்பிடுவர்.
- பெருமாளே என்னும் முடிவுடன் கூடிய உருப்படி என்பதனை அறிந்து குறிப்பிடுவர்.
- பல்வேறு உருப்படி வகைகளுள், திருப்புகழினை இனங்கண்டு கூறுவர்.
- மோகன இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தினைப் பாடிக் காட்டுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.13

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

| |
|---|
| • 'காலனிடத்தணுகாதே' என்னும் திருப்புகழ் அமைந்த இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தினைப் பாடிப் பயிற்சி செய்க. |
| • சந்தத்தினை கண்டசாபு தாளத்தில் பயிற்சி பெறுக. |
| • திருப்புகழினை இராக, தாளத்துடன் பாடுக. |

**இணைப்பு**

## திருப்புகழ்

இராகம் : மோகனம் ஆ - ஸரிகபதஸ் / அ - ஸ்தபகரிஸ - } 28வது மேளத்தின் ஜன்யம்

தாளம் : கண்டசாபு

தானதனத் தனத்தான தானதன தனதான

காலனிடத்தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத்தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக்கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே.

**தேர்ச்சி** **3.0 :** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4 :** தாளத்திலமைந்த ஸ்வர சஞ்சாரங்களைப் பார்த்துப் பாடுவார்.

**செயற்பாடு** **3.4.1 :** சங்கராபரணம், பிலஹரி இராகங்களில் அமைந்த ஸ்வரக் கோர்வைகளை இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 80 நிமிடம் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- சங்கராபரணம், பிலஹரி இராகங்களின் ஆரோஹண, அவரோஹண ஸ்வரஸ்தான வரைபடங்கள்
- ஸ்வரக்கோர்வைகள் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 3.4.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.4.1** :
- ஏற்கனவே கற்ற சங்கராபரண, பிலஹரி இராக உருப்படி களைப்பாடி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- மாணவர் செவிமடுத்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- சங்கராபரண, பிலஹரி இராகங்களின் ஆரோஹண, அவரோஹண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம் என்ப வற்றைக் காட்சிப்படுத்தி ஸ்வரஸ்தானங்களை விளக்குக.
- சங்கராபரண, பிலஹரி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாட மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.
- ஸ்வரக் கோர்வைகள் எழுதப்பட்ட அட்டையை காட்சிப் படுத்தி சங்கராபரண, பிலஹரி இராகத்தில் அமைந்த சிறு சிறு சஞ்சாரங்களைப் பாட மாணவர் தொடர்ந்து பாட வழிப்படுத்துக.
- ஸ்வரக் கோர்வைகளைப் பாடும்போது குறில், நெடில் ஸ்வரங்கள், கார்வைகள், ஸ்தாயிகள், அங்கக் குறியீடுகள் என்பவற்றை விளக்கிக் கொள்ளச் செய்க.
- ஸ்வரக் கோர்வைகளை ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடி தாளத்துடன் சஞ்சாரங்களைப் பாட வழிப்படுத்துக.
- ஸ்வரக் கோர்வைகளை இராக, தாளத்தோடு பாடும்போது மாணவருக்கு ஏற்படும் தவறுகளை நீக்கி முழுமையாகப் பாட நெறிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 3.4.2 : • மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தினை வழங்குக.

• சகல குழுக்களும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என உறுதி செய்க.

**(30 நிமிடங்கள்)**

படி 3.4.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க வழி செய்க. தவறுகளைத்திருத்தி நெறிப்படுத்துக.

- சங்கராபரணம், பிலஹரி இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை 1ம், 2ம் காலங்களில் ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடச் செய்க.
- சஞ்சாரங்களை நன்கு பார்வையிட்டு அதன் கார்வைகள், குறில், நெடில் ஸ்வரங்கள், ஒரு அட்சர காலத்திற்கு ஸ்வரங்களின் எண்ணிக்கை ஸ்தாயி அங்க குறியீடுகளை விளங்கிக்கொள்ள நெறிப்படுத்துக.
- ஸ்வர சஞ்சாரங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடிப் பின்னர் தாளத்துடன் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- ஸ்வரக் கோர்வைகளைப் பாடும்போது அவற்றில் விசேட சஞ்சாரங்கள், ஜீவஸ்வரங்கள் என்பவற்றை அவதானித்து பாடச் செய்க.
- ஸ்வரக்கோர்வைகளை இராக, தாளத்துடன் ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.

**(20 நிமிடம்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- சங்கராபரண, பிலஹரி இராக ஸ்வரக்கோர்வைகளை ஆதி, ரூபக தாளத்தில் பாடுவர்.
- சங்கராபரண, பிலஹரி இராக ஸ்வரஸ்தானங்களைக் கூறுவர்.
- ஸ்வர ஞானம், கற்பனைத்திறன், ஆக்கத்திறன் என்பவற்றை வெளிக்காட்டுவர்.

## செயற்பத்திரம் 3.4.2.1

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குக.

### குழு 1

- இராகம் - சங்கராபரணம் தாளம் : ஆதி

| | | |
|---|---|---|
| 14 | 0 | 0 |
| ஸ்ாநிதபம கரி / | கமபா / | மபதநி // |
| ஸ்தநிபதாநிஸ் / | தநிஸ்ா / | ; ; // |

### குழு 2

- இராகம் - சங்கராபரணம் தாளம் : ரூபகம்

| | | | |
|---|---|---|---|
| 0 | 14 | 0 | 14 |
| ஸ்தாப / | மகரீகமபா // | ஸரிகம / | பாதநிஸரிகம // |
| பா ; / | மபதநிஸ்ா // | ஸ்நிதநி / | ஸ்ா ; ; ; // |

### குழு 3

- இராகம் - பிலஹரி தாளம் : ஆதி

| | | |
|---|---|---|
| 14 | 0 | 0 |
| பாதபமகரீ / | ஸரிகப / | மாகரி // |
| கபதஸ்ாநிதப/ | தபா, / | மகரீ // |

### குழு 4

- இராகம் - சங்கராபரணம் தாளம் : ரூபகம்

| | | | |
|---|---|---|---|
| 0 | 14 | 0 | 14 |
| கபதஸ் / | ரிகபதஸ்ா ; // | ஸ்ாநித / | பமகரீ; ; // |
| ஸரிகப / | ரிகபதஸ்நிதத// | பபமக / | ரிகபா; ; // |

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.3.4 :** ஆரபி இராக இலட்சணத்தை அறிந்த கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஆரபி இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- ஆரபி இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்
- செயற்பத்திரம் 4.3.2.4
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.3.1** **:**
- ஆரபி இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிக் காட்டியும் / வாத்தியத்தில் வாசித்துக் காட்டியும் வரைபடத்தினைக் காண்பித்தும் மாணவர் குறிப்பிட்ட இராகத்தினை இனங்கண்டு கூறுவதற்கு வழிப்படுத்துக.
- இனங்கண்ட இராகம் தொடர்பாகக் கீழ்வரும் விடயங்கள், வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

ஆரபி இராகத்தின்:
- தாய்இராகத்தின் மேள எண்
- ஆரோஹண, அவரோஹணம்
- ஸ்வரஸ்தானங்கள்
- விசேட அம்சங்கள்
  - வர்ஜ ஸ்வரங்கள்
  - ஜீவஸ்வரம், நியாசஸ்வரம்
  - கிரகஸ்வரம்
  - கிரகபேதம்
- சஞ்சாரம்

இசை உருப்படிகள்

**(10 நிமிடங்கள்)**

**படி 4.3.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாக அமைத்து ஒரே செயற் பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.3.3 : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்க இடமளிக்க.

• மற்றைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கள் கூற சந்தர்ப்பம் வழங்குக.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- ஆரபி - தாய் இராகத்தின் மேள எண் 29
- ஜன்னியராகம், ஔடவசம்பூர்ண இராகம், உபாங்க இராகம்

  ஆ :ஸரிமபதஸ அ : ஸ்நிதபமகரிஸ

  ஸ்வரஸ்தானங்கள் - சட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்
- வர்ஜஸ்வரங்கள்- ஆரோஹணத்தில் க,நி வர்ஜம்
- காந்தாரம், நிஷாதம் துர்பலஸ்வரங்கள்
- கன இராகம்
- மத்யம கால சஞ்சாரங்கள் நன்கு வெளிப்படும் ராகம்
- ஜண்டை ஸ்வரக் கோர்வைகளும், நிஷாத வர்ஜ ஸ்வரக் கோர்வைகளும் இனிமையைக் கொடுக்கும்.
- பண்பழந்தக்க ராகம் என்று பெயர்.
- நிஷாதம், காந்தாரம் அல்பஸ்வரங்கள்
- ஜீவஸ்வரங்கள்: ரி, ம, த
  நியாசஸ்வரங்கள் : ரி, ப
  கிரகஸ்வரங்கள் : ரி, ப, த
- இவ் இராகத்தில் ரி, ம, ப ஆகிய ஸ்வரங்கள் கிரக பேதத்தினால் முறையே ஆபேரி ,மோகனகல்யாணி கேதாரகௌளை ஆகிய இராகங்களைத் தோற்றுவிக்கின்றன.
- மங்களகரமான இராகம் எப்பொழுதும் பாடலாம். அரங்கிசையில் ஆரம்பத்தில் பாட ஏற்ற இராகம்
- சஞ்சாரம்
  ரிமபதாத - மபதஸ்ரிஸ் - ஸ்நிதா - தஸ்ஸ்ரீ- மாகர் - ஸ்ரிஸ்நிதா - மபதஸ்ததப - மபமகரிரிஸா
- உருப்படிகள்
  கீதம்: வாரணமுகா - திரிபுடை - டைகர் வரதாச்சாரியார்
  வர்ணம்: அன்னமே - ஆதி - டைகர் வரதாச்சாரியார்
  கிருதி : ஸ்ரீசரஸ்வதி - ரூபகம் - முத்துஸ்வாமிதீக்ஷிதர்
  கிருதி : ஒருக்கால்சிவ - ஆதி - மாரிமுத்தாப்பிள்ளை

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- ஆரபி இராகத்தின் தாய் இராகத்தைக் குறிப்பிடுவர்.
- ஆரோஹணத்தில் ஐந்து ஸ்வரமும் அவரோஹணத்தில் எல்லா ஸ்வரங்களும் வருவதை கூறுவர்.
- சஞ்சாரத்தைப் பாடும் ஆர்வத்தை, வெளிப்படுத்துவர்.
- ஔடவ சம்பூர்ண ராகம் என்பதை இனங்காண்பர்.
- காந்தாரம், நிஷாதம், அல்பஸ்வரங்கள் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- கன இராகங்களில் ஒன்று என்பதை உணர்ந்து கொள்வர்.
- இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடம் வரைவர்.
- இராகத்தின் உருப்படிகளைக் கூறுவர்.

## செயற்பத்திரம் 4.3.2.4

- ஒவ்வொரு குழுவுக்கும் இச் செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக

பண் பழந்தக்க ராகத்தில்,

1. ஆரோஹண, அவரோஹணம்
2. கிரக ஸ்வரங்கள்
3. கிரக பேதத்தினால் உண்டாகும் இராகங்கள்
4. இவ் இராகத்தில் சிறு சஞ்சாரம் ஒன்றினை எழுதுக.
5. இந்த இராகத்திலமைந்த உருப்படிகள் இரண்டினைத் தருக.

# இராகலட்சணம்
## (ஆரபி)

இது ஜன்ய ராகம் 29ஆவது மேளமான சங்கராபரணத்தின் ஜன்யம்

ஆ : ஸரிமபதஸ்

அ : ஸ்நிதபமகரிஸ

இவ்விராகத்தில் வரும் ஸ்வரங்களாவன: சட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்

வர்ஜராகம் ஆரோஹணத்தில் மட்டும் காந்தாரம், நிஷாதம் வர்ஜம் ஒளடவ சம்பூர்ண ராகம், உபாங்க ராகம் கனராகம் பிரசித்த கனபஞ்சக ராகங்களில் இது ஒன்று. எனவே இவ்விராகத்தின் சாயல் மத்திமகாலம் அல்லது தானம் (கனம்) வாசிப்பதால் எளிதாக விளங்கும். ரிஷபம், மத்திமம், தைவதம், ராகச்சாயா ஸ்வரங்கள், ரிஷபம், பஞ்சமம் நியாச ஸ்வரங்கள். ரிஷபம், தைவதம் கம்பித ஸ்வரங்கள். நிஷாதம், காந்தாரம் இவ்விராகத்தின் அல்ப ஸ்வரங்கள் இவை தீர்க்க ஸ்வரங்களாக வரமாட்டா. நிஷாதம் இல்லாமலே சில உருப்படிகள் உள. அத்துடன் ஸ்ஸ்ததபபமபமகரிரி போன்ற நிஷாத வர்ஜ பிரயோகங்களும் ரஞ்சகமானவை. காந்தாரம் ஒர துர்பல ஸ்வரம் அதனை அழுத்தமாகவோ, தீர்க்கமாகவோ ஜண்டையாகவோ, பிடிப்பது பொருந்தாது.

மா, கரிஸரீ என்பது ஒரு விசேட ரஞ்சக பிரயோகம். உருப்படிகள் ரி, ப, த ஸ்வரங்களில் ஆரம்பிக்கும். எப்பொழுதும் பாடலாம். கமக வரிக ரக்தி ராகம். மிகவும் மங்களகரமான இராகம், த்ரிஸ்தாயி ராகம். கச்சேரியின் ஆரம்பத்தில் பாடத் தகுதியான ராகம். இது ஒரு மூர்ச்சனாகார ஜன்ய ராகம். இதன் ரி, ம, ப ஸ்வரங்களைக் கிரக பேதம் செய்யமுறையே ஆபேரி, மோகனகல்யாணி, கேதாரகௌளை ராகங்கள் வரும். ரௌத்ர ரசம் பொருந்திய ராகம். கன இராகம்.

பண் பழந்தக்க ராகம் என்று குறிப்பிடப்படுவது ஆரபியையேயாகும்.

## சஞ்சாரம்

ரிமபதாப - மபதபமகரீரி - ஸரிமாகரி - ஸரிமகரிமபா - மபதஸ்ா
ஸ்நிதா - ததஸ்ஸ்ரிஸ்ரீர் - ம்ாக்ரீ - ஸ்ரிஸ்நிதா - ததர்ரீர் - ததஸ்ாஸ்
பதாத - மபதஸ்ா- ததபபமபமகரிரி - ஸரிஸநிதா - ததரிரிஸதஸா

## உருப்படிகள்

1. கீதம் - வாரணமுகா - திரிபடை - டைகர் வரதாச்சாரியார்
2. வர்ணம்- அன்னமே - ஆதி - டைகர் வரதாச்சாரியார்
3. பஞ்சரத்தினம் - ஸாதிஞ்சனே - ஆதி - தியாகராஜர்
4. க்ருதி - ஸ்ரீ சரஸ்வதி - ரூபகம் - முத்துஸ்வாமிதீட்ஷிதர்
5. க்ருதி - ஒருக்கால் சிவ - ஆதி - மாரிமுத்தாப்பிள்ளை

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு** **4.3.5 :** மத்தியமாவதி இராக இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- மத்தியமாவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடம்
- இவ் இராகத்தில் ஸ்வரஸ்தான வரைபடம்
- ஹார்மோனியம், சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.3.2.5
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.3.1** **:**
- மத்தியமாவதி இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரை படத்தை காட்சிப்படுத்துக.
- ஆரோஹண, அவரோஹணத்தை சுருதியுடன் பாடிக் காட்டியும் ஸ்வரஸ்தான வரைபடத்தைக் காண்பித்து ஸ்வரஸ்தானங்களை ஹார்மோனியத்தில் வாசித்தும் இராகத்தினை மாணவர் இனங்காணச் செய்க.
- இனங்கண்ட இராகத்தில் பின்வரும் விடயங்களை வலியுறுத்தப் படும் வகையில் கலந்துரையாடுக.

மத்தியமாவதி இராகத்தின்,
- தாய் இராகம்
- மேள எண்
- ஆரோஹண, அவரோஹணம்
- தேவாரப் பண்களில் இதன் பெயர்
- ஒளடவ இராகம், உபாங்க இராகம்
- ஸ்வரஸ்தானங்கள்
- வர்ஜ ஸ்வரங்கள்
- ஜீவஸ்வரம், நியாசஸ்வரம், கிரகஸ்வரம்
- மூர்ச்சனாகாரகராகம்
- விசேட பிரயோகங்கள்
- சஞ்சாரம்
- உருப்படிகள்

**(10 நிமிடங்கள்)**

படி 4.3.2 : • மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.

• அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.3.3 : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

• மற்றைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்கள் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- 22வது மேளமாகிய ஹரகரப்ரியாவின் ஜன்யம்
  ஆரோஹணம் : ஸரிமபநிஸ்
  அவரோஹணம் : ஸ்நிபமரிஸ
- ஆரோஹண, அவரோஹணத்தில் காந்தாரமும், தைவதமும், வர்ஜம்
- இவ் இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம்
- ஔடவ இராகம், உபாங்க இராகம்
- ஜீவஸ்வரங்கள் : ரி, ம, நி
- நியாசஸ்வரங்கள் : ரி, ம, ப, நி
- திரகஸ்வரங்கள் : ஸ, ரி, ம, ப, நி
- பழமையான இராகம், பழங்காலத்தில் இதற்கு மத்யமாதி என்னும் பெயர் இருந்தது.
- தேவாரப் பண்களில் இதற்கு செந்துருத்தி என்று பெயர்
- மூர்ச்சனாகாரக இராகம்: மத்தியமாவதியின் ரி, ம, ப, நி ஆகிய ஸ்வரங்களைக் கிரகபேதம் செய்தால் முறையே இந்தோளம், சுத்தஸாவேரி, உதயரவிச்சந்திரிகா, மோகனம் ஆகிய இராகங்கள் தோன்றும்.
- தாட்டு ஸ்வரப் பிரயோகம் இந்த ராகத்தின் அழகைக் கொடுக்கின்றன.
- எப்பொழுதும் பாடலாம்.
- சுபகரமான இராகம்
- அரங்கிசை இறுதியில் மங்களம்பாடி முடிப்பதற்கு உகந்த இராகம்.
- புராணம் பாடுவற்கு உகந்த இராகம்

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- மத்தியமாவதி ஔடவ ஔடவ இராகம் என்பதைக் குறிப்பிடுவர்.
- இவ் இராகத்தின் தாய் இராகத்தைக் கூறுவர்.
- இந்த இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை கூறுவர்.
- புராணம் பாட உகந்த இராகம் என்பதைக் குறிப்பிடுவர்.
- மத்திய மாவதி இராகம் மங்களகரமான இராகம் என்பதைக் கூறுவர்.

## செயற்பத்திரம் 4.3.2.5

- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.

புராணம் பாட உகந்த ராகத்தின்

1. தாய் ராகத்தைக் குறிப்பிடுக.
2. ஸ்வரஸ்தானங்களை எழுதுக.
3. இவ் இராகத்தின் பண் யாது.
4. இந்த இராகத்தின் ஜீவஸ்வரங்கள் எவை.
5. இவ் இராகத்திலமைந்த உருப்படிகள் இரண்டு எழுதுக.

# இராகலட்சணம்
## மத்தியமாவதி

இது ஜன்ய ராகம் தாய்ராகம் 22ஆவது மேளமான கரஹரப்பிரியாவாகும்.

ஆ : ஸரிமபநிஸ்

அவ : ஸ்நிபமரிஸ

இவ்விராகத்தில் வரும் ஸ்வரங்களாவன: ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம்

வர்ஜ ராகம், காந்தாரம், தைவதம், வர்ஜ சுரங்கள், ஔடவ ராகம், உபாங்க இராகம், ரிஷபம். மத்திமம், நிஷாதம் ஜீவ சுரங்களும் ரி, ம, ப, நியாச சுரங்களாகும். கம்பித சுரங்கள். கமக வரிக ரக்தி ராகம், த்ரிஸ்தாயி ராகம், ஒரு புராதன ராகம், தேவாரப் பண்களில் இதற்குச் செந்துருத்தி என்று பெயர். சுத்த கர்நாடக இராகம்.

இதனுடைய கானகாலம் நடுப்பகல் ஆயினும் மிகவும் சுபகரமான ராகமானதால், இதை எப்பொழுதும் பாடலாம். எல்லா சுரங்களிலும் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. ரிமரிபமநிபஸ், நிரிஸ்ரீ நிஸ்பநிமப ஸரிமரிஸநிபநிஸரிஸா ஸ்நிபமரிமபநி ஸர்நி, பாம - ரிஸ் ரீமபா போன்ற தாடு பிரயோகப்பிடிகள் மிகவும் ரஞ்சகமானவை. இசை நாடகங்களில் உபயோகப்படுத்தப்படும் இராகங்களில் ஒன்று.

ஸர்வ ஸ்வர மூர்ச்சனாகார ஜன்ய ராகம். மோகனத்தின் ரிஷப மூர்ச்சனையே இவ்விராகம். ரி, ம, ப, நி சுரங்கள் கிரகபேதம் செய்தால் முறையே இந்தோளம், சுத்தசாவேரி, உதய ரவிச்சந்திரிகா, மோகனம் ஆகிய இராகங்கள் தோன்றும்.

இந்த ராகத்தை கச்சேரி பஜனை காலசேஷபம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகளின் இறுதியில் பாடி முடிக்கும் வழக்கம் தொன்று தொட்டு வருகின்றது. இசை நிகழ்ச்சிகளில் பல்வேறு ராகங்களை கேட்பதன் மூலமாக பல்வேறு இரச உணர்ச்சிகள் நமக்கு ஏற்படுகின்றன. மத்தியமாவதி ராகத்தைக் கடைசியில் கேட்பதால் ஒருவித சாந்த நிலைமை ஏற்படுகிறது. அத்துடன் ராகங்களை அகாலங்களில் பாடுவதால் ஏற்படும் தோஷமும் இந்த ராகத்தைக் கடைசியில் பாடுவதால் நிவாரணமாகிறது என்று கூறப்படுகிறது. மத்தியமாவதியின் பழைய பெயர் மத்யமாதி ஆகும். மாலை வேளையில் புல்லாங்குழலில் வாசிக்க மிக்க ரஞ்சகமாக இருக்கும். புராணம் பாடுவதற்கு உகந்த இராகம்.

## சஞ்சாரம்

ரிமபநீநி - மபநிஸ்ாஸ் - பநிஸ்ரீரீ்
ரிம்ப்ம்ர்ீர்ீஸ்ா நீ - ஸ்ரிஸ் - நிஸ்ரிஸ்ஸ்நிபா - பரிஸ்ஸா
நிபா, ம - பாஸ்நிபா, ம - மபநீ, பமரீ, ரிமபாபமரீஸா
நிஸரிஸாஸநி்பா், - ம்பநி்ஸரீரி - பமரீஸா//

## உருப்படிகள்

1. வர்ணம் - ஸரகுனநன்னேல - ஆதி - திருவொற்றியூர் தியாகையர்
2. க்ருதி - எவரிச்சிரிரா - ஆதி - தியாகராஜர்
3. க்ருதி - ராமகதாஸுதா - ஆதி - தியாகராஜர்
4. க்ருதி - பாலிஞ்சுகாமாட்சி - ஆதி - சியாமாசாஸ்திரி
5. அஷ்டபதி - ராதாவதன - ஆதி - ஜயதேவர்
6. க்ருதி - விநாயகுனிவேலனு - ஆதி - தியாகராஜா
7. க்ருதி - கற்பகமே - ஆதி - பாபநாசம் சிவன்
8. கீர்த்தனை முருகனே - ரூபகம் - தண்டபாணி தேசிகர்
9. பதம் - ஆடாது அசங்காது - ஆதி - ஊத்துக்காடு வெங்கட் ஸுப்பையா

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.

**செயற்பாடு** **4.4.3 :** தவில் வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடம் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- தவில் வாத்தியத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்
- தவில்
- தவில் இசை அடங்கிய ஒலி நாடா, ஒலிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 4.4.2.3
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.4.1** **:**
- தவில் வாத்தியத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படத்தைக் காட்சிப்படுத்துக.
- சுருதி கூட்டப்பட்ட தவிலில் தவில் குச்சியால் வாசித்துக் காட்டியோ, தவில் வாத்தியத்தின் நாத ஒலி அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக் காட்டியோ மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த விடய தொடர்பைக் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

| |
|---|
| • தவில் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்<br>• இவ்வாத்தியம் செய்யப்படும் இடங்கள்<br>• சுருதி சேர்க்கும் முறை<br>• வாசிக்கும் முறை<br>• தவில் வாத்தியத்தின் பயன்பாடு<br>• தவில் வாசித்துப் பிரபல்யம்பெற்ற இந்திய இசைக் கலைஞர்கள்<br>• இவ்வாத்தியத்தை வாசிப்பதில் பிரபல்யமான இலங்கை இசைக் கலைஞர்கள் |

**(10 நிமிடங்கள்)**

**படி 4.4.2** **:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 4.4.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்பபம் வழங்குக.

• மற்றைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களை கூறுவதற்கு இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

• தவில் மங்களகரமான வாத்தியமாகும்.
• ஆலயங்கள் மூலம் வளர்ச்சி பெற்ற வாத்தியங்களில் தவில் பிரதானமானது.
• நாதஸ்வரத்திற்குப் பக்கவாத்தியமாகத் தவில் வாசிக்கப் படுகிறது.
• திருமண வைபவம், ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் போன்றவற்றில் தவில் நாதஸ்வரத்துடன் சேர்த்து மங்கள கரமாக இசைக்கப்படுகிறது.
• இவ்வாத்தியம் செய்வதற்கு பலா, கொண்டல் முதலிய மரங்கள் பயன்படுகின்றன.
• உறுதியான பலா மரத்திலிருந்து உருளை ஒன்று குடைந்து எடுக்கப்படுகிறது. இவ் உருளையின் இரு பக்கங்களும் ஆட்டுத் தோலால் இணைக்கப்பட்டு , மூடுவதற்கு எருமை மாட்டுத் தோல் வார் பயன்படுத்தப் படும்.
• உருளையின் மேலே தனிவார் காணப்படும். இது தேவை யான சுருதியை இழுத்துக் கட்டுவதற்காக வார்கள் இரு வளையங்களில் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும்.
• ஒவ்வொரு பக்கத்தில் வார்கள் செல்வதற்கு பதினொரு துவாரங்கள் காணப்படும்.
• தற்காலத்தில் வார்களுக்குப் பதிலாக உலோக வார்கள் பயன்படுத்தப்படுகின்றன.
• தவிலில் வலப்பக்கம் வலது கை மணிக்கட்டு விரல்களி னாலும் இடப்பக்கத்தை குச்சியாலும் அடித்து வாசிப்பர்.
• இந்த குச்சிக்கு தவில் கழி என்று பெயர். இது திருவாச்சி மரத்தால் செய்யப்படுகின்றது.
• வலது கைவிரல்களில் போட்டுக் கொள்வதற்கு கூடுகள் என்ற வலிமையான 7 சிறு துணிச் சுற்றுக்களை பயன் படுத்துவதற்கு:

| | | |
|---|---|---|
| சுண்டுவிரலுக்கு | : | 1 |
| மோதிர விரலுக்கு | : | 2 |
| நடுவிரலுக்கு | : | 2 |
| ஆட்காட்டி விரலுக்கு | : | 2 |

• இவ்வாத்தியம் நாதஸ்வரம், ஒத்து, தாளம் போன்ற கருவிகளுடன் வாசிக்கப்படுகின்றது.

- இவ் இசைக்குழுவை பெரிய மேளம் என்றும் அழைப்பதுண்டு.
- தவில் வாசித்து பிரபல்யமான இந்திய இசைக் கலைஞர்கள்
  அம்மா சத்திரம் கண்ணுசாமிப்பிள்ளை
  திருக்கருகாவூர் குருநாதபிள்ளை
- தவில் வாசித்துப் பிரபல்யமான இலங்கை இசைக் கலைஞர்கள்
  தவில் தட்சிணாமூர்த்தி
  இணுவில் சின்னராசா
  கைதடி பழனி

*(15 நிமிடங்கள்)*

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- தவில் வாத்தியத்தின் அமைப்பைக் கூறுவர்.
- தவில் வாத்தியம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவர்.
- தவில் வாத்தியத்தின் நாதத்தை வேறு தோல் வாத்தியக்கருவி நாதத்தோடு ஒப்பிட்டு வேறுபடுத்துவர்.
- தவில் வாத்திய இசையைக் கேட்டு இரசிக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 4.2.2.3

### குழு I

- தவில் வாத்தியத்தின் தொன்மையும் சிறப்பும் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

### குழு II

- தவில் வாத்தியத்தின் அமைப்பை விளக்குக.

### குழு III

- தவில் வாத்தியத்தை வாசிக்கும் முறை பற்றியும் கெட்டிமேளம், மல்லாரி வாசிக்கும்சந்தர்ப்பம் பற்றியும் குறிப்பிடுக.

### குழு IV

- தவில் வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

# தவில்

நாதஸ்வரத்திற்கு தாள வாத்தியமாக தவில் பயன்படுத்தப்படுகிறது. மங்கள இசையில் இடம்பெறக்கூடிய முக்கியமான இசைக்கருவி தவில் ஆகும். இது நாதசுவரம், கிளாரினெட் ஆகியவற்றிற்கு பக்கவாத்தியமாக வாசிக்கப்படுகின்றது. தொன்மை வாய்ந்த தோற்கருவிகளுள் தவிலும் ஒன்றாகும். கோவில் விழாக்கள், சுபகாரியங்கள் மற்றும் திருவிழாக்களில் தவில் இசை சிறப்பாகப்பயன்படுத்தப்படுகின்றது. இது 'மங்களவாத்தியம்' என்றும் 'இராஜவாத்தியம்' என்றும் சிறப்புடன் அழைக்கப்படு கின்றது. தோளில் தொங்கவிட்டு வாசிப்பதனால் டோளம் (தொங்விடுதல்) என்பது காலப்போக்கில் டோல், டவுல் என மாற்றம்பெற்று தவில் என்று அழைக்கப்பட்டது எனக் கருதப்படுகிறது. ஒரு பக்கம் கழியினாலும் மறுபக்கம் விரல்களினாலும் வாசிக்கப்படுவதனால் இது அதத, விதத வாத்தியம் எனப்படுகிறது. தோல் வாத்தியமாகையால் அவனத்த வாத்தியம் ஆகும்.

**அமைப்பு:**

தவில் பலாமரத்தில் உருளை வடிவமாக உட்புறத்தில் குடைந்தெடுக்கப்பட்டு, இருபுறமும் தோலால் மூடப்படும். இவை வலந்தலை (தட்டு) இடந்தலை (தொப்பி) என அழைக்கப்படுகின்றன. வலந்தலையில் 2 தோல்களும், தொப்பியில் ஒரு தோலும் கொண்டு மூடப்பட்டுள்ளது. இந்தத்தோல்கள் ஆட்டுத் தோலால் ஆனவை. தவில் வார்கள் எருமை மாட்டுத் தோலால் செய்யப்பட்டு இறுக்கிக்கட்டப்படுகின்றன. மூங்கில் வளைகள் தவிலின் இருபுறங்களிலும் பொருத்தப்படும், ஒலி எழுப்பும் தோற்பகுதிகள் வளைகளில் இணைத்துச் சுற்றப்படும். வலது கைவிரல்களால் வாசிக்கப்படும் அகன்ற தோற்பகுதிக்கு வலந்தலை என்று பெயர். இடதுகையில் குச்சியால் அடித்து வாசிக்கப்படும் பகுதிக்கு இடந்தலை என்று பெயர். இது தொப்பி எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்விரு தோற்பகுதிகளிலும் வார்கள் நுழைவதற்கு ஏற்றவாறு 11 துவாரங்கள் காணப்படுகின்றன. இத்துளைகளை ''கண்கள்'' என்று கூறுவார்கள். இவற்றின் இடையே வார்க்கற்றைகள் நுழைக்கப்பட்டு, வளைகளுடன் இறுக்கிக் கட்டப்படுகின்றது. தற்காலத்தில் தோல்வாருக்குப் பதிலாக உலோகவார் பயன்படுத்தப்படுகிறது. தவில் வாத்தியத்தை கட்டியுள்ள நாடாவை இணைக்கும் வளையத்தின் பெயர் ''வெண்டயம்'' ஆகும். இது பஞ்ச உலோகங்களினால் ஆனது. தவில் பெரும்பாலும் தஞ்சை நாச்சிமார் கோவிலடியில் செய்யப்பட்டு வருகிறது. தவில் கழி திருவாச்சிமரக்கொம்பினால் செய்யப்படுகின்றது. இது 12 அங்குலம் நீளமுடையது.

**வாசிக்கும் முறை:**

திறந்த வெளி இசை அரங்கில் வாசிப்போர் தவிலை முன்பக்கமாகத் தொங்கவிட்டு நின்றுகொண்டே வாசிப்பர். இடந்தலையில் கழி எனப்படுகின்ற சிறு கோலாலும், வலந்தலையில் கூடுகள் அணிந்த விரல்களினாலும் வாசிக்கப்படுகின்றது. இடது கையில் கழி இருந்த போதிலும் மணிக்கட்டுவரை உபயோகிக்கப்படுகிறது.

லய விந்நியாசம் செய்யும்பொழுது இரசனை ஊட்டுவதற்காக வலந்தலையில் கழியினாலும் கையினாலும் ஒருவிதமான இரஞ்சகமான வாசிப்பு வாசிக்கப்படுகின்றது. தவில், சுருதி சேர்த்து வாசிக்கமுடியாத வாத்தியம் எனினும் நாதஸ்வரத்தின் சுருதிக்குத்தக்கவாறு சுருதி அமைக்கப்படுகின்றது. தவிலானது நாதஸ்வரம், ஒத்து, தாளம் போன்ற கருவிகளுடன் வாசிக்கப்படுகின்றது. இந்நால்வர் இணைந்த குழுவைப் ''பெரியமேளம்'' என்றும் அழைப்பதுண்டு.
மங்கள நிகழ்வான தாலிகட்டல், கங்கணம் கட்டுதல் போன்றவற்றில் இவ்வாத்திய குழுவினால் ஏற்படுத்தப்படும் உரத்த இசையே ''கெட்டி'' மேளம் ஆகும். கோவிலில் சுவாமி வீதி உலா புறப்படும் பொழுது ''மல்லாரி'' வாசிக்கையில் தவில் வாசிப்பு மிக ரம்மியமாக இருக்கும்.

**தவில் வாசித்துப் பிரபல்யமான இந்திய இசைக் கலைஞர்கள்**

அம்மா சத்திரம் கண்ணுசாமிப்பிள்ளை, அம்மா பேட்டைப் பக்கிரி,திருக்கருகாவூர் சிவகுருநாதபிள்ளை , காரைக்கால் மலைப்பெருமாள்பிள்ளை, வழுவூர் முத்துவீரப்பிள்ளை, ஸ்ரீவாஞ்சியம் கோவிந்தப்பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, வாங்கைமான் சண்முகசுந்தரம்,

**தவில் வாசித்துப் பிரபல்யமான இலங்கை இசைக்கலைஞர்கள்**

அளவையூர் தவில் தட்சணாமூர்த்தி, இணுவில் சின்னராசா,




01 கொட்டு 02. வார 03. வலந்தலை 04. கழி

05. வெண்டயம்

**தேர்ச்சி** **4.0 :** கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5 :** உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** **4.5.2 :** இசை உருப்படிகளுள் இராகமாலிகை என்னும் உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**நேரம்** **:** 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** **:**
- இராகமாலிகைகள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடா, ஒலிப்பதிவுக்கருவி, சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 4.5.2.2
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.5.1** **:**
- இராகமாலிகைகள் பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தோ/ஆசிரியர் சில இராகமாலிகைகளைப் பாடிக்காட்டியோ மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த பாடலினூடாக இராகமாலிகையின் இலட்சணத்தை விளங்கிக்கொள்ள வழி செய்க.
- விளங்கிக்கொண்ட விடயம் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும்போது பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

  - இராகமாலிகை என்பதன் பொருள்
  - இவ்வுருப்படியின் அங்க வேறுபாடுகள்
  - இராகங்களின் ஒழுங்கமைப்பு
  - இராகமாலிகையின் விசேட அம்சங்கள்
    - சிட்டைஸ்வரம்
    - மகுடஸ்வரம்
    - மகுடஸாகித்யம்
    - விலோமசிட்டைஸ்வரம்
    - சாகித்ய அமைப்பு
  - இராகமாலிகைக்கு உதாரணங்கள்
  - இராகமாலிகையை இயற்றிய மகான்கள்.

**(10 நிமிடங்கள்)**

**படி 4.5.2** **:**
- மாணவர்களை மூன்று குழுக்களாகப்பிரித்து ஒரே மாதிரியான செயற்பத்திரத்தினை வழங்குக.
- சகல மாணவருக்கும் இணைப்பை வழங்குக.

- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 4.5.3** : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு சமர்ப்பிக்கும்போது, மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்கூற சந்தர்ப்பம் தருக.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- இராகமாலிகை பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி வகையாகும்.
- ஒரு இராகமாலிகையில் குறைந்தது நான்கு இராகமாவது இருக்க வேண்டும்.
- முதல் இராகமும், இறுதி இராகமும் மங்களகரமானதாக இருக்க வேண்டும்.
- கச்சேரியில் பாடுவதற்கு இவ்வுருப்படி மிகவும் ஏற்றவை.
- இந்த உருப்படி பல்லவி, அ.பல்லவி, சரணம் என்றும் அங்கங்களையுடையது. ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் இருக்கலாம்.
- எல்லா அங்கங்களும் வெவ்வேறு இராகத்தில் அமைந்திருக்கும். பல்லவி, அ.பல்லவி வெவ்வேறு இராகத்திலோ அல்லது ஒரே இராகத்திலோ அமைந்திருக்கலாம்.
- இராகங்களின் ஒழுங்குமுறை பாவம், ரஸம் இவற்றை ஒட்டி அமைந்திருக்க வேண்டும்.
- ஒரே சாயலையுடைய இராகங்கள் அடுத்தடுத்த வரமாட்டா.
- அ.பல்லவியின் முடிவிலும் சரணங்களின் முடிவிலும் அந்தந்த இராகங்களில் சிட்டைஸ்வரம் அமைந்திருக்கும்.
- ஒவ்வொரு சிட்டைஸ்வரத்தின் முடிவிலும் பல்லவி இராகத்தில் ஒரு ஸ்வரத்தொகுதி பாடப்படும். இது மகுடஸ்வரம் எனப்படும்.
- இதற்கு ஸாஹித்யம் அமைந்திருந்தால் மகுடஸாகித்யம் எனப்படும். இது பாலம் போன்று அனுபல்லவி, சரணங்கள் என்பவற்றுடன் பல்லவியைப் பிணைப்பதற்கு ஒரு சாதனமாக விளங்குகிறது.

- இவ்வுருப்படியின் முடிவில் விலோமகிரமத்தில் எல்லா இராகங்களிலும் ஒரு ஆவர்த்தமோ அல்லது 1/2 ஆவர்த்தமோ ஸ்வரங்கள் பாடப்பட்டு முடிக்கப்படுகிறது. சிகரம் போன்ற இக்கடைசி விலோம சிட்டைஸ்வரம் இராகமாலிகையின் அழகுக்கு மகுடம் போல் விளங்கு கின்றது.
- இதன் ஸாஹித்யம் பக்திரசம் உள்ளதாகவோ சிருங்கார ரசம் உள்ளதாகவோ இருக்கும். வித்துவான்களை ஆதரிக்கும் வள்ளல்களைப் புகழ்வதாகவும் இருக்கலாம்.
- இராகமாலிகைக்குச் சில உதாரணங்கள்

  பாவயாமி - ரூபகம்

  ஆரபிமானம் - ஆதி

  நித்யகல்யாணி - ரூபகம்
- இராகமாலிகையை இயற்றிய சில மகான்கள்
  - மஹாவைத்தியநாத ஐயர்
  - ஸ்வதித்திருநாள் மகாராஜா
  - அருணாசலக்கவிராயர்
- பண்டைக்காலத்தில் இராகமாலிகை இராகதம்பம் என அழைக்கப்பட்டது.

(20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- ஒரு இராகமாலிகையில் குறைந்தது நான்கு இராகங்களாவது இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவர்.
- இராகமாலிகையின் விசேட அமசங்களை விளக்குவர்.
- இசைக்கச்சேரியில் பல்வேறு உருப்படிகளைக் கேட்கும்போதே இராகமாலிகையை இனங்காண்பர்.
- இராமாலிகையை இயற்றியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- இராகமாலிகை பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி வகை என்பதை ஏற்றுக் கொள்வர்.

## செயற்பத்திரம் 4.5.2.2

- தரப்பட்டுள்ள இணைப்பை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

- இராகமாலிகை என்பதன் பொருள் யாது?
- ஒரு இராகமாலிகையில் குறைந்தது எத்தனை இராகங்கள் இருக்க வேண்டும்?
- இராகமாலிகையின் ஸாஹித்ய அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது?
- இராகமாலிகையின் விசேட அம்சங்கள் எவை?
- இராகமாலிகையின் அழகுக்கு மகுடம்போல் விளங்கும் அம்சம் யாது?
- இராகமாலிகையின் அங்கங்கள் எவை?
- இவ்வுருப்படிக்கு மூன்று உதாரணங்கள் தருக?
- இவ்வுருப்படியை இயற்றிய வாக்கேயகாரர்களுள் மூவர் பெயரைக் குறிப்பிடுக?
- பண்டைக்காலத்தில் இராகமாலிகை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

# இராகமாலிகை

இராகமாலிகை பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி வகையாகும். உருப்படிகளுள் இது மிகச்சிறப்புடையது. இராகமாலிகை வர்ணங்களும், இராகமாலிகைக் கீர்த்தனைகளும், இராகமாலிகை ஜதிஸ்வரங்களும் உள்ளன. மனோதர்ம சங்கீதத்தில் ஒரு பல்லவியின் கடைசியில் இராகமாலிகையாகக் கற்பனாஸ்வரம் பாடப்படுகிறது. ச்லோகம், பத்யம், விருத்தம் இவற்றைப் பல இராகங்களில் பாடுவதற்கும் இராகமாலிகை என்று சொல்லுகிறோம்.

இந்த உருப்படி பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களை உடையது. ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் இருக்கலாம். சரணங்கள் எல்லாம் ஒரேயமைப்பு உள்ளவையாக இருக்கும். பல்லவி, அனுபல்லவி இரண்டும் ஒரே இராகத்திலோ அல்லது வெவ்வேறு இராகங்களிலோ அமைந்திருக்கலாம். சில இராகமாலிகைகளில் அனுபல்லவி இல்லாமலேயே இருக்கும். எல்லா அங்கங்களும் வெவ்வேறு இராகத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இராகங்களின் பெயர்கள் அந்தந்த அங்கங்களின் சாகித்தியத்தின் அர்த்தத்திற்கு வேறுபடாத வகையில் புகுத்தப்பெற்றிருக்கும். பல வாக்கேயகாரர்கள் இப்படிச் செய்வதன் மூலம் தம் திறமையைக் காண்பித்துள்ளார்கள். சில இராகமாலிகைகளில் இராக முத்திரை காணப்படுகிறது. உதாரணம் சாரங்கன் மருகனே, சங்காபரண தேவி, நெஞ்சில் நிறைந்திருக்கும் ரஞ்சனியே போன்றவை.

அனுபல்லவியின் முடிவிலும், சரணங்களின் முடிவிலும் அந்தந்த இராகங்களில் பொருத்தமான சிட்டைஸ்வரம் அமைக்கப்பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு சிட்டை ஸ்வரத்தின் முடிவிலும் பல்லவி இராகத்தில் ஒரு சிறு ஸ்வரத்தொகுதி பாடப்படும். இது பாலம்போன்று அனுபல்லவி, சரணங்கள் என்பவற்றுடன் பல்லவியைப் பிணைப்பதற்கு ஒரு சாதனமாக விளங்குகின்றது. இவ்வுருப்படியின் முடிவில் விலோம கிரமத்தில் எல்லா இராகங்களிலும் ஓர் அவர்த்தமோ அல்லது 1/2 ஆவர்த்தமோ ஸ்வரங்கள் பாடப்பட்டு முடிக்கப்படுகிறது. சிகரம் போன்ற இக்கடைசி விலோம சிட்டை ஸ்வரம் இராகமாலிகையின் அழகுக்கு மகுடம் போல் விளங்குகிறது.

இதன் ஸாஹித்தியம் பக்திரஸம் உள்ளதாகவோ அல்லது சிருங்காரம் உள்ளதாகவோ இருக்கும். வித்துவான்களை ஆதரிக்கும் வள்ளலைப் புகழ்வதாகவும் இருக்கலாம். இராகங்களின் ஒழுங்குமுறை, பாவம், ரஸம் இவற்றை ஒட்டி இயற்கையாக அமைந்திருக்க வேண்டும். ஒரு ரஸத்திலிருந்து இன்னொரு ரஸத்திற்கு மாறும்போது இரண்டு இராகங்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். ஒரே சாயலை உடைய இராகங்கள் அடுத்தடுத்து வரக்கூடாது.

ஒரு இராகமாலிகையில் குறைந்தது நான்கு இராகங்களாவது இருக்க வேண்டும். முதல் இராகமும், இறுதி இராகமும் மங்களகரமானதாக இருக்க வேண்டும். கச்சேரியில் பாடுதற்கு இவை மிகவும் ஏற்றவை. பண்டைய காலத்தில் இந்த உருப்படியை இராக கதம்பம் என அழைத்து வந்தனர்.

## இராகமாலிகைக்குச் சில உதாரணங்கள்

பாவயாமி - ரூபகம்
ஆரபிமானம் - ஆதி
நித்யகல்யாணி - ரூபகம்
பன்னகேந்திரசயன - ரூபகம்
எனக்குன்னிருபதம் - மிஸ்ரசாபு

## இராகமாலிகையை இயற்றியவர்கள்

இராமஸ்வாமி தீஷிதர், முத்துஸ்வாமி தீஷிதர், மஹாவைத்தியநாதய்யர், சுப்பராமதீஷிதர், ஸ்வாதித்திருநாள் மகாராஜா, திருவொற்றியூர் தியாகையர், அருணாசலக் கவிராயர்

மஹா வைத்தியநாதய்யர் 72 மேள இராகமாலிகையை ஆக்கியுள்ளார்.

இராகமாலிகையில் ஒவ்வொரு அங்கத்தின் முடிவிலும், பல்லவியின் ஆரம்ப இராகத்தில் அமையும் சிட்டை ஸ்வரத்திற்கு மகுடஸ்வரம் என்று பெயர். அந்த ஸ்வரத்திற்கு ஸாஹித்தியம் அமைந்திருந்தால் மகுட ஸாஹித்யம் என்று அழைப்பர்.

**தேர்ச்சி** **4.0 :** இசை உருப்படிகளையும் நாட்டார் பாடல்களையும் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.6 :** கற்ற பாடல்களை ஸ்வர, தாளக்குறியீட்டுடன் எழுதுவார்.

**செயற்பாடு** **4.6.1 :** கற்ற பாடல்களை ஸ்வரதாளக் குறிப்புடன் எழுதப் பழகுவோம்.

**நேரம்** **:** 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள்** **:**
- சுருதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம்
- இசைக்குறியீடுகளின் விளக்கப்படம்
- பாடல் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம் 4.6.2.1

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 4.6.1** **:**
- இசைக்குறியீடுகளின் விளக்கப்படத்தையும், பாடல் எழுதிய அட்டையையும் அவதானிக்கச் செய்து தெரிவுசெய்த பாடலை ஸ்வர, ஸாகித்யமாகப் பாடிக் காட்டுக.
- செவிமடுத்த/அவதானித்த பாடலினூடாக அதில் அமைந்துள்ள இசைக்குறியீடுகளை இனங்காண வழிசெய்தல்
- இனங்கண்ட விடயங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுக.

| |
|---|
| • இராகம்<br>• இராகத்தின் ஆரோஹண, அவரோஹணம்<br>• மேள எண்<br>• தாளம்<br>• இயற்றியவர் பெயர்<br>• அங்கவேறுபாடுகள்<br>• குறியீடுகள்<br>• ஸ்வரஸாஹித்யம் |

**(20 நிமிடங்கள்)**

**படி 4.6.2** **:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப, மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக.
- மாணவர்களின் செயற்பாட்டை உறுதி செய்து கொள்க.

**(30 நிமிடங்கள்)**

படி 4.6.3 : • ஒவ்வொரு குழுவுக்கும் தத்தம் பேறுகளைச் சமர்ப்பிக்கச் *சந்தர்ப்பம் தருக.*

• ஏனைய குழுக்களும் அதனை அவதானித்துக் கருத்துக் களைத் தெரிவிக்க இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்ளும் போது பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- ஒரு பாடலை ஸ்வரதாளக் குறியீடுகளுடன் எழுதும்போது பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.
  - உருப்படி அமைந்துள்ள இராகம், மேளஎண்
  - இராகத்தின் ஆரோஹண, அவரோஹணம்
  - இயற்றியவர் பெயர்
  - தாளத்தின் பெயர்
  - இசைக்குறியீடுகள்
  - ஸ்வரதாளத்திற்கேற்ப ஸாகித்யத்தை எழுதுதல்
- இசைக்குறியீடுகள் என்னும்போது, அங்கமுடிவு, ஆவர்த்த முடிவு, ஸ்தாயி, கார்வைகள், அன்னிய ஸ்வரக்குறியீடுகள், கமகத்திற்குரிய குறியீடுகள் என்பவை பொருத்தமான இடத்தில் குறிக்கப்படுதல் வேண்டும். உதாரணமாக ''அன்னமே" என்னும் ஆரபிராக வர்ணத்தில் பல்லவியின் முதல்வரி இராகம்: ஆரபி, தாளம்: ஆதி , இயற்றியவர்: டைகர் வரதாச்சாரியார்.
  ஆரோஹணம்: ஸரிமபதஸ்
  அவரோஹணம்: ஸ்நிதபமகரிஸ்
  29ஆம் மேளகர்த்தாவின் ஜன்யம்,
  பாமாபா; பமபம , கரிரி / ரிரிமக ரிரிஸஸ / ஸ்நிதரி அன்னமே. ... ர ..... வா... ப. . . ர. .ண், ,ஸரிம// னை. . .
  என்று எழுதப்படல் வேண்டும்.
- இங்கு அங்கமுடிவு, ஆவர்த்தனமுடிவு, ஸ்தாயி, கார்வைகள் என்பன இடம்பெறுவதை அவதானிக்கலாம்.
- ஸ்வரத்திற்கேற்ப ஸாகித்யத்தை, தாளத்துடன் எழுது வதற்கு வழிப்படுத்துக.

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- பாடல்களை இசைக்குறியீடுகளுடன் ஸ்வர ஸாஹித்யமாக எழுதப்பழகுவர்.
- பாடல்களை இசைக்குறியீடுகளுடன் எழுதி வைப்பதனால் எக்காலத்திலும் அந்தப்பாடலை இராக, தாளம் மாறாது பாடக்கூடியதாக இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- கீதம், வர்ணம், கீர்த்தனை போன்ற உருப்படிகளை ஸ்வரஸாகித்யமாக எழுதிப்பழக வேண்டும் என்ற ஆர்வத்தினை வெளிப்படுத்துவர்.
- பாடல்களை ஸ்வர தாளக்குறிப்புடன் எழுதும்போது கவனிக்கவேண்டிய அம்சங்களைக் கூறுவர்.

## செயற்பத்திரம் 4.6.2.1

- மூன்று குழுக்களுக்கும் ஒரே செயற்பத்திரத்தை வழங்குக.

அன்னமே அரவபாரணனை
அழைத்து வா வேகமதாய்

மேலே வர்ணத்தின் பல்லவி தரப்பட்டுள்ளது.
இவ்வர்ணம் அமைந்துள்ள இராகம்,
மேள எண்,
ஆரோஹண, அவரோஹணம்,
தாளம்,
இயற்றியவர்... ஆகியவற்றைக் குறிப்பிடுவதுடன் ஸ்வர, ஸாகித்யமாக, தாள, அங்க வேறுபாடு, ஆவர்த்தன முடிவு, ஸ்தாயி, கார்வைகள் போன்ற இசைக்குறியீடுகளையும் பூரணப்படுத்தி எழுதுக.

**தேர்ச்சி 5.0 :** கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத்தொண்டினையும் விளக்குவார்.

**செயற்பாடு 5.1.3 :** சியாமாசாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- சியாமாசாஸ்திரிகளின் படம்
- இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவு கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 5.1.2.3
- இணைப்பு

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 5.1.1** :
- சியாமா சாஸ்திரிகளின் இசை உருப்படிகள் அடங்கிய ஒலி நாடாவை ஒலிக்கச் செய்தோ அன்றி, இவர் இசை உருப்படிகளைப் பாடிக் காட்டியோ இவ்வாக்கேயகாரரை அறிமுகம் செய்க.

- சியாமாசாஸ்திரிகளின் படத்தினையும் காட்சிப்படுத்துக.

- சியாமாசாஸ்திரிகள் தொடர்பான கீழ்வரும் விடயங்களை உணர்த்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மாணவருடன் மேற்கொள்க.

சியாமாசாஸ்திரிகளின்,
- வாழ்க்கைக்காலம்
- பிறந்த இடம்
- இளமைப்பெயர்
- இளமைக்கல்வி
- வாழ்க்கைச் சம்பவங்கள்
- இசைப்பணியும் இயற்றிய உருப்படிகளும்
- சிஷ்யர்கள்
- முத்திரை

- சியாமாசாஸ்திரிகள் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராவார்.

**(10 நிமிடங்கள்)**

**படி 5.1.2** :
- மாணவர்களின் தொகைக்கேற்ப, சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.

- ஒவ்வொரு மாணவருக்கும் இணைப்பினையும் வழங்குக.
- வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

**படி 5.1.3** : 
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பத்தினை வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- வாழ்க்கைக்காலம் - 1762 - 1827
- பிறந்த இடம் - தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவாரூர்
- பெற்றோர் - விஸ்வநாதய்யர், வேங்கடலஷ்மி
- இளமைப்பெயர் - வேங்கட சுப்ரமண்யன்
- இளமைக்கல்வி -
  - சமஸ்கிருதம், தெலுங்கில் பாண்டித்தியம் பெற்றவர்.
  - தேவியின் அனுக்ரஹமே, இசைப்பாண்டித்தியம் அடையக் காரணமாக விளங்கியது.
  - முதன் முதலாக தனது மாமாவிடமே இசை பயின்றார்.
  - சங்கீதத்திலும் பரதத்திலும் நிபுணரான 'சங்கீத சுவாமிகள்' எனும் யதி சிரேஷ்டரிடம், சங்கீத தத்துவங்கள், தாள சாஸ்திர மர்மங்கள், கதிநடை பேதங்கள், பிரஸ்தார நுட்பங்களைக் கற்றுணர்ந்தார்.
  - பின் சங்கீத சுவாமிகள் பணித்தபடி பச்சிமிரியம் ஆதியப்பையரிடம் சென்று சங்கீத நுட்பங்கள், இராக மர்மங்கள், கமக நுண்மைகளைப் பாடியும் வீணையில் வாசிக்கக் கேட்டும் பயின்றார்.
- வாழ்க்கைச் சம்பவங்கள்
  - தனது குடும்பத்தினருடன் 18ஆம் வயதில் திருவாரூரில் இருந்து தஞ்சாவூருக்கு வந்தார்.
  - பங்காரு காமாட்சி அம்மன் மீது, பக்தி கொண்டவர்; தியானத்தில் ஈடுபடுவர்.
  - இவர் உருப்படிகள், கண்களில் நீர் பெருகிய பரவர நிலையிலேயே உருவாகி, வெளியாகின என்பர்.
  - புதுக்கோட்டையில், மதுரை மீனாட்சி அம்மன் பேரில் கிருதிபாடுமாறு, அறிமுகமற்ற ஒருவர் வேண்டவே, பிரசித்தி பெற்ற நவரத்னமாலிகைக் கிருதிகளை இயற்றினார்.

- மதுரையில், இதன் மிகுதி நான்கு பாட்டுக்களையும் இயற்றி, மீனாட்சி அம்மன் சன்னிதியில் அரங்கேற்றிக் கோவில் மரியாதையுடன் கௌரவிக்கப்பட்டார்.
- மேலும் ஊருராகச் சென்று, அம்மன் சன்னிதானத்தில் கிருதிகள் இயற்றுவது இவர் வழக்கமாகும்.

இவரது இசைத்தொண்டு

- இவரது பாடல்கள் பெரும்பாலும் காமாஷி அம்மன் மேல் பாடப்பட்டிருக்கும்.
- ஏறத்தாழ 300 கிருதிகளை இயற்றியுள்ளார்.
- அபூர்வமான இராகங்களான மாஞ்சி, கல்கடகர்நாடக காபி, சிந்தாமணி போன்றவற்றிலும் கிருதிகளை இயற்றியுள்ளார்.
- கிருதிகளில் அழகிய ஸ்வரஸாகித்யங்கள் உள.
  உதாரணம்: 'நின்னே நம்மினானு' - தோடி
- கிருதிகளில் பலவித எடுப்புக்கள், தாளப் பிரஸ்தாரங்களைச் சிறப்புற அமைத்துள்ளார்.
- ஒன்பது கிருதிகள் கொண்ட நவரத்ன மாலிகையை இசையுலகிற்கு அளித்துள்ளார்.
  உதாரணம்: மரிவேநேகதி - ஆனந்தபைரவி
- ஆனந்தபைரவி இராகத்தில் பல உருப்படிகளை இயற்றியமையால் ஆனந்தபைரவி இராகம் இவரது சொத்து எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.
  உதாரணம்: 'ஓ ஜெகதம்பா' - ஆனந்தபைரவி
  'சாயினிரம்மனவே - ஆனந்தபைரவி
  'பாஹிஸ்ரீகிரிராஜ' - ஆனந்தபைரவி
- இவரது உருப்படிகளில் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்துள்ளன.
- பாவபுஷ்டி பொருந்திய இசை உருப்படிகளை இசையுலகிற்கு அளித்துள்ளார்.
- ஸ்வராட்சர அணிகள் இவர் உருப்படியில் அமைந்துள்ளன.
- இவரது உருப்படிகளின் சுவை, 'கதலி' இரசத்திற்கு ஒப்பானது.
- சாபு தாளத்தின் பெருமையையும் இவரே உணர வைத்தார்.
- விலோம சாபு தாளத்தில் பல கிருதிகளை இயற்றிய சாபு தாளப் பெருமையை இசையுலகிற்கு அளித்தார்.
  உதாரணம்: நின்னுவினாகமரி - பூர்விகல்யாணி
- "சியாம கிருஷ்ண" என்பது இவரது முத்திரையாகும்.
- இவரது சிஷ்யர்கள்
  - சுப்பராயசாஸ்திரிகள்
  - அலஸூர் கிருஷ்ணையர்
  - பொரம்பூர் கிருஷ்ணையர்
- சியாமா சாஸ்திரிகள் சங்கீதமும் மூர்த்திகளில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- சியாமாசாஸ்திரிகளின் வாழ்க்கைக் காலம், பிறந்த இடம், பெற்றோர் பெயர், இளமைப் பெயர் முதலியவற்றைக் குறிப்பிடுவர்.
- சியாமாசாஸ்திரிகளின் இளமைக்காலக் கல்வியை கூறுவர்.
- அவரது வாழ்க்கையில் இடம்பெற்ற இசை நிகழ்வுச் சம்பவங்களைத் தேடிப் பெற்றுக் கருத்திற் கொள்வர்.
- அவர் தம் இசைப்பணியை, அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து தொகுத்து ஆராய்ந்து வெளிப்படுத்துவர்.
- அவரது இசை உருப்படிகளையும் முத்திரையையும் இனங்காண்பர்.

## செயற்பத்திரம் 5.1.2.3

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(1) 'கதலி' இரசத்திற்கு ஒப்பான கிருதிகளை இயற்றிய வாக்கேயகாரர் யார்?

(2) இவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

1. வாழ்க்கைக் காலப்பகுதி
2. பிறந்த இடம்
3. பெற்றொர் பெயர்
4. இளமைப் பெயர்
5. இளமைக்கல்வி
6. வாழ்க்கைச் சம்பவங்கள்
7. முத்திரை

(3) இவர் இசைக்கு ஆற்றிய பணிகளையும் இவர் இயற்றிய மூன்று உருப்படிகளையும் தருக.

## வாக்கேயகாரர் சரித்திரம்
## சியாமாசாஸ்திரிகள் (1762 - 1827)

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவாரூரில் 1762ஆம் ஆண்டு பிறந்தார். சங்கீத திரிமூர்த்திகளில் மூத்தவர் இவரே. தமிழ்ப் பிராமணர். சியாமா சாஸ்திரிகள் கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்ததால் வெங்கட சுப்ரமண்யன் என்னும் பெயர் சூட்டப்பட்டது. ஆனால் 'சியாமகிருஷ்ணா' என்னும் செல்லப் பெயரால் அழைக்கப்பட்டார்.

சங்கீதம் இவருடைய குடும்பக் கலையாக இல்லாது போனாலும் தேவியின் அனுக்கிரகத்தால் இவருக்கு அக்கலையில் சிறந்த பாண்டித்தியம் ஏற்பட்டது. இளமையிலேயே இவர் சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவர் தமது 18வது வயதில் குடும்பத்துடன் திருவாரூரினின்றும் தஞ்சாவூர் வந்தார்.

முதன்முதலாக சியாமாசாஸ்திரி சங்கீதம் பயின்றது அவருடைய மாமாவிடத்தில் தான் சங்கீத ஸ்வாமிகள் என்கின்ற யதிசிரேஷ்டர் தஞ்சாவூருக்கு வந்து தங்கும்படி ஏற்பட்டது. சாஸ்திரிகளின் தந்தை ஒரு நாள் யதீந்திரரைப் பிஷைக்கு அழைத்து வந்தபோது அவர் சியாமா சாஸ்திரிகளை உற்று நோக்கினார். தமக்குத் தெரிந்த சங்கீத மர்மங்கள் யாவற்றையும் இவரிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென்று மனதில் தீர்மானித்துக் கொண்டார். எனவே சாஸ்திரிகள் யதீந்திரரின் சிஷ்யரானார். சியாமா சாஸ்திரிகள் சங்கீத சுவாமிகளிடத்தினின்று சங்கீதத்தின் தத்துவங்களையும், தாள சாஸ்திரத்தின் மர்மங்களையும் ஜாதி பேதங்களின் கிரமங்களையும் பிரஸ்தாரங்களின் நுட்பங்களையும் மிக்க விரைவில் கற்றுணர்ந்தார்.

வெள்ளிக்கிழமைகளிலும், மற்ற விசேஷ தினங்களிலும் சாஸ்திரிகள் பங்காரு காமாட்சியம்மன் சன்னிதியில் தியானம் செய்வது வழக்கம். பக்தி பரவசத்தால் அவரது கண்களினின்றும் நீர் பெருகுவது உண்டு. அச் சமயங்களில் அநேக உருப்படிகள் அவர் கற்பனையினின்று தானாகவே வெளிவரும். இதன் காரணமாக அவரது உருப்படிகளுக்குத் தனிச்சுவை உண்டானது.

ஒரு சமயம் தன் சிஷ்யரான அலசூர்கிருஷ்ணையருடன் புதுக்கோட்டைக்குச் சென்றபோது தமக்கு முன்பின் தெரியாத ஒருவர் இவரை மதுரை மீனாட்சியம்மன் பேரில் க்ருதிகளைப்பாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் அதைத் தெய்வக் கட்டளையாக நினைத்து நவரத்ன மாலிகை என்ற பிரசித்தி பெற்ற ஒன்பது க்ருதிகளை மீனாட்சியம்மன் பேரில் இயற்றினார். இவர் சுமார் 300

கீர்த்தனைகள் செய்துள்ளார். அபூர்வ ராகங்களில் இவர் செய்துள்ள கிருதிகள் அந்தந்த ராகங்களில் அமைந்தள்ள ரத்தினங்கள் என்று சொல்லலாம்.

தேவிப்ரோவ - சிந்தாமணி - ஆதி

அகிலாண்டேஸ்வரி கர்நாடக காபி - ஆதி

ப்ரோவவம்மா - மாஞ்சி - ஆதி

ஆனந்தபைரவி ராகம், இவரது சொத்து, இவர் கல்யாணியின் ''ஹிமாத்ரிசுதே பாஹிமாம்'' பிராணவரலிச்சி ப்ரோவுமு முதலிய க்ருதிகளை இயற்றியுள்ளார். ராக முத்திரைகளை சில உருப்படிகளில் அழகாக அமைத்துள்ளார்.

உதாரணம் : பைரவி - காமாட்சி (ஸ்வரஜதி)

சாபுதாளத்தில் அமைந்தள்ள இவரது க்ருதிகளில் சில சாதாரணமான தகிடதகதிமி (3+ 4) என்ற நடையிலன்றி தகதிமிதகிட (4+3) என்ற நடையில் அமைந்து அழகாக விளங்குகிறது. இது விலோமசாபு தாளம் எனப்படும்.

உதாரணம்: நின்று வினாகமரி - பூர்வகல்யாணி

இவரது முத்திரை ''சியாமகிருஷ்ண'' என்பதாகும். தாளப்பரஸ்தாரம் அதீத, அனாகத எடுப்புகள் முதலியன இவரது உருப்படிகளின் அமைப்புக்குச் சுவை ஊட்டுவன. சொற்சுவை, பொருட்சுவை, இன்பச்சுவை, பாவபுஷ்டி முதலியவைகள் இவரது உருப்படிகளில் நிறைந்துள்ளது. இவரது உருப்படிகளின் சுவை கதலி ரஸத்திற்கு ஒப்பானது. இவர் 1827ஆம் ஆண்டு இவ்வுலகை நீத்தார். பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார். சியாமாசாஸ்திரிகள் மும்மூர்த்திகளுள் ஒருவராகப் போற்றப்படுகிறார்.



**தேர்ச்சி** **5.0 :** கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1 :** வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத்தொண்டினையும் விளக்குவார்.

**செயற்பாடு** **5.1.4 :** அருணாசலக்கவிராயரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடுகள்** :
- அருணாசலக் கவிராயரின் இசை உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம் 5.1.2.4
- இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 5.1.1** :
- அருணாசலக்கவிராயரின் இசை உருப்படிகள் அடங்கிய ஒலிநாடாவை ஒலிக்கச் செய்தோ அன்றி ஆசிரியர் பாடிக் காட்டியோ இவ்வாக்கேயகாரர் பற்றி அறிந்திட வழிப்படுத்துக.
- அருணாசலக்கவிராயர் பற்றிய கீழ்வரும் விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலை மாணவருடன் மேற்கொள்க.

அருணாசலக்கவிராயரின்,
- வாழ்க்கைக்காலம்
- பிறந்த இடம்
- பெற்றோர்
- இளமைக்கல்வி
- வாழ்க்கைச் சம்பவங்கள்
- இசைப்பணியும் இயற்றிய உருப்படிகளும்

**(10 நிமிடங்கள்)**

**படி 5.1.2** :
- மாணவர்களின் தொகைக்கேற்ப, பொருத்தமான சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.
- ஒவ்வொரு மாணவருக்கும் இணைப்பினையும் வழங்குக.
- வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில், மாணவர் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 5.1.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பத்தினை வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

அருணாசலக்கவிராயரின்,

- வாழ்கைக்காலம் - 1711 - 1778
- பிறந்த இடம் - தில்லையாடி
- பெற்றோர் - நல்லதம்பிப்பிள்ளை, வள்ளியம்மை
- இளமைக்கல்வி -
  - 15ஆம் வயதில் தமிழ்ப்பள்ளிப் பயிற்சியை செவ்வனே முடித்தார்.
  - தருமபுரம் சைவமடத்தில் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் சமய நூல்களிலும் புலமை பெற்றார்.
  - வடமொழியிலும் பயிற்சி பெற்றவர்.
  - இவரின் தமிழறிவு ஆசான் - அம்பலவாணக் கவிராயர்
  - 12 ஆண்டுகள் சைவமடத்தில் கற்றார்.
  - தமிழ்மொழியில் அரிய நூல்கள் பலவற்றைக் கற்றார்.
- வாழ்க்கைச் சம்பவங்கள்
  - 30வது வயதில் திருமணம்
  - திருமணத்தின் பின், சீர்காழி தர்மபுர ஆதினத்தைச் சேர்ந்த மடத்துத் தம்பிரான் சிதம்பரம் பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க சீர்காழியிலேயே வாழ்ந்தமையால் 'சீர்காழி அருணாசலக் கவிராயர்' என அழைக்கப்பட்டார்.

தமது 60ஆம் வயதில்,

- 'இராம நாடகம்' எனும் நூலை எழுதிக் கம்பர் அரங்கேற்றம் செய்த திருவரங்கத்திலேயே அரங்கேற்றம் செய்ய விருப்பம் கொண்டவேளை, கோயில் நிர்வாகத்தினர் மறுக்க, கவலையுற்று, ஏன்பள்ளி கொண்டீரையா என்ற கீர்த்தனையைப் பாடினார்.
- இறைவன், கோயில் அதிகாரிகள் கனவில் தோன்றி நூலை அரங்கேற்றுமாறு பணித்தார்.
- விடிந்ததும், அதிகாரிகள் நூல் அரங்கேற ஒழுங்கு செய்தனர்.
- சென்னையில், மணலி முத்துக் கிருஷ்ணமுதலியார் அருணாசலக் கவிராயரை அழைத்து, இராம நாடகத்தை விரிவாகச் சொற்பொழிவாற்ற வாய்ப் பளித்தார்.

- பல பெரியார்கள், இவரைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கினர்.
- இசைப்பணியும், இயற்றிய உருப்படிகளும்
  - 18ஆம் நூற்றாண்டில் தமிழ் இசை மறைந்து போகும் நிலையில் இருந்தபோது அதனை மறுபடியும் மலர வைத்த பெருமை பெற்றவர்.
  - பாடல்கள், எளிய நடையில், இலகுவாய் விளங்கக் கூடிய வகையில் அமைந்தமையால் சாதாரண மக்களிடையே கூடப் பிரசித்தி பெற்றமை.
  - இராமநாடகமானது தரு வடிவிலும், செய்யுள் வடிவிலும் அமைக்கப்பட்ட சிறப்புக்குரியது.
  - இந்நாடகத்தில் பொருத்தமான தமிழ்ப்பழமொழிகளை கையாண்டு, அதனை மேலும் மெருகேற்றியமை.
- இவர் இயற்றிய உருப்படிகளிற் சில:
  'யாரோ இவர் யாரோ' - பைரவி
  'ஏன்பள்ளி கொண்டீரையா' - மோகனம்
  'வந்தான் வந்தான்' - மத்தியமாவதி
  'ஸ்ரீராமனுக்கு ஜயமங்களம்' - மத்தியமாவதி
- அறிஞர்களால் போற்றப்படும் தமிழிசையின் மும்மணிகளுள் ஒருவராக அருணாசலக் கவிராயர் கருதப்படுகிறார்.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- அருணாசலக் கவிராயரின் வாழ்க்கைக் காலம், பிறந்த இடம், பெற்றோர் பெயர் முதலியவற்றைக் குறிப்பிடுவர்.
- அருணாசலக் கவிராயரின் இளமைக்காலக் கல்வியை கூறுவர்.
- அவரது வாழ்க்கையின், இசை நிகழ்வுச் சம்பவங்களைத் தேடிப் பெற்றுக் கருத்திற் கொள்வர்.
- அவரது இசைப்பணியை அவர்தம் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தொகுத்து ஆராய்ந்து வெளிப்படுத்துவர்.
- அவரது இசை உருப்டிகளை அறிந்து கூறுவர்.

## செயற்பத்திரம் 5.1.2.4

• சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

(1) 'இராம நாடகம்' இயற்றிய வாக்கேயகாரர் யார்?

(2) இவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து, பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

1. வாழ்க்கைக் காலம்
2. பிறந்த இடம்
3. பெற்றொர் பெயர்
4. இளமைக்கல்வி
5. வாழ்க்கைச் சம்பவங்கள்

(3) இவர் இசைக்கு ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

## வாக்கேயகாரர் சரித்திரம்
## அருணாசலக் கவிராயர் (1711 - 1778)

சீர்காழி மூவர் என சிறப்புப் பெயர் பெற்றவர்கள் முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆகிய மூவருமாவர். இவர்களுள் அருணாசலக் கவிராயர் தில்லையாடி என்ற சிற்றூரில் நல்லதம்பி பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் மைந்தனாக கி.பி. 1711 ஆம் ஆண்டு பிறந்தார். தமது ஐந்தாவது ஆண்டில் தமிழ்ப் பள்ளியில் சேர்ந்து 12ஆவது வயது முடியும் முன்னரே பள்ளியிற் பயிற்சி பெற வேண்டிய கல்வியை செவ்வனே கற்றறிந்தார். எப்பாடலையும் இன்னிசையுடன் பாடும் வல்லமை பெற்றார். ஆயினும் இவருடைய புகழை கண்டுகளிக்கும் பேறு இவர் பெற்றாருக்குக் கிட்டவில்லை. கவிராயர் தம் இளம் பருவத்திலேயே தம் பெற்றோரை இழந்தார். தம் தமையன்மாரின் மேற்பார்வையில் இருக்க விரும்பாமல் அருணாசலக் கவிராயர் தருமபுரத்தில் அமைக்கப்பட்ட சைவ மடத்தை அடைந்து தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் சமய நூல்களிலும் புலமை பெற்றார். வடமொழியிலும் ஓரளவு பயிற்சி பெற்றார். இவருக்குத் தமிழறிவு புகட்டியவர் அம்பலவாணக் கவிராயராவர். 12 ஆண்டுகள் சைவ மடத்திலிருந்து கற்றபின் ஊர் திரும்பினார்.

தமிழ் மொழியிலுள்ள அரிய நூல்கள் பலவற்றையும் கற்றுத் தம் புலமையை விருத்திசெய்து கொண்டார். 30வது வயதில் திருமணம் செய்து காசுக் கடையொன்று (வட்டிக்கடை) வைத்துப் பொருள் ஈட்டினார்.

இவர் கற்ற தமிழ் நூல்களில் இவரது மனதைக் கவர்ந்தவை திருக்குறளும் கம்பராமாயணமும் ஆகும். இராமாயணத்தை ஆழ்ந்து பயின்று பலருக்கு கற்பித்து இன்னிசையோடு உரை நிகழ்த்தியும் வந்தார். சீர்காழியில் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த மடத்துத் தம்பிரான் சிதம்பரம் பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க அருணாசலக் கவிராயர் தம் குடுபத்தாருடன் சீர்காழியிலேயே வாழத் தொடங்கினார். இக்காரணம் கொண்டே இவர் சீர்காழி அருணாசலக்கவிராயர் என்று அழைக்கப்பட்டார். இவர் சீர்காழியில் இருக்கும்போது அசோமுகி நாடகம், சீர்காழி ஸ்தல புராணம், சீர்காழிக் கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களை இயற்றினார்.

சட்டநாதபுரத்தில் வாழ்ந்த வெங்கடராமர், கோதண்ட ராமர் என்ற இரு இசை வாணர்கள் இவரிடம் தமிழ் கற்றனர். கவிராயர் இவர்கள் மூலமாகவே தன் இராம நாடகப்பாடல்களுக்கு இசை அமைக்கும் வேலையை முடித்துக் கொண்டார். இக்கீர்த்தனைகளில் பல தமிழ்ப்பழமொழிகளும் இடம்பெறுகின்றன.

இராமாயணத்தைச் செய்யுளாக இயற்றி கம்பர் அரங்கேற்றம் செய்த இடமாகிய திருவரங்கத்திலேயே அரங்கேற்றம் செய்ய விருப்பம் கொண்டார். ஆயினும் ஆலய நிர்வாகிகள் கடவுள் அனுமதியின்றி நூலை அரங்கேற்றம் செய்ய இயலாது என மறுத்துவிட்டனர். கவிராயர் அரங்கநாதரை நினைத்து ஏன் பள்ளி கொண்டீரையா என்று தொடங்கும்மோகன இராகக் கீர்த்தனையை பாடினார். இதனால் திருவுளம் கொண்ட பெருமாள் கோவில் அதிகாரிகளின் கனவில் தோன்றி நூலை அரங்கேற்ற ஆணையிட்டார். கவிராயரது கனவிலும் தோன்றினார். பொழுது புலர்ந்ததும் கவிராயரும் கோவில் அதிகாரிகளும் தாம் கண்ட கனவுகள் ஒன்றுக்கொன்று பொருத்தமுற்றிருப்பதை அறிந்து நூலின் அரங்கேற்றத்திற்கு ஒழுங்கு செய்தனர்.

சென்னையில் மணலி முத்துக்கிருஷ்ண முதலியாரும் கவிராயரை அழைத்துப் பெரிய அவையொன்று கூட்டி இராம நாடகத்தைப் பற்றி விரிவாக சொற்பொழிவு செய்ய வாய்ப்பளித்தார். பல பெரியார்கள் இவரது திறமைக்கு பல பரிசில்களை வழங்கினார்கள்.

அருணாசலக் கவிராயர் இராம நாடகத்தைப் பாடிமுடித்ததும் அவருடைய 60வது வயதிலாகும். இராம கதையை இனிய தமிழில் கீர்த்தனை வடிவில் இயற்றிய பெருமைக்குரியவராவர். இவர் தம் 67ஆவது வயதில் இறைவன் திருவடி அடைந்தார். அறிஞர்களால் போற்றப்படும் தமிழிசையின் மும்மணிகளுள் ஒருவராக இவர் கருதப்படுகிறார்.

**தேர்ச்சி 6.0 :** கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வு களை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

**செயற்பாடு 6.1.3 :** இலங்கையின் இசை வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வோம்.

**நேரம் :** 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடுகள் :**
- இசை வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர்களின் படங்கள், இசை நூல்கள், இசைமன்றங்கள், கல்லூரிகளின் படங்கள், தவில் நாதஸ்வரக்கச்சேரி, மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவு கருவி
- செயற்பத்திரம் 6.1.2.3 இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 6.1.1 :**
- இலங்கைக் கலைஞர்களின் படங்களைக் காட்சிப்படுத்தியும், ஒலிப்பதிவு நாடாக்களைப் பயன்படுத்தியும் இலங்கையின் இசை வளர்ச்சிக் பற்றி மாணவருடன் கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகம் செய்க.

- மாணவர் அவதானித்த விடயங்கள் தொடர்பாக, இலங்கையின் இசை வளர்ச்சி பற்றி கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- **இராவணன் பாடிய சாமகானமும், இலங்கையின் கர்நாடக இசை மரபும்.**
- **இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர் கையாண்ட வாத்தியம்**
- **இலங்கையில் சோழராட்சிக் காலத்தில் ஆலயங்களில் திருமுறை ஓதும் மரபு**
- **பள்ளு, பிரபந்தப் பாடல்கள், கீர்த்தனைகள்.**
- **கிராமிய தெய்வங்களை மையமாகக்கொண்டு உருவான உப பாரம்பரிய இசை.**
- **கோயில்களில் மங்கள வாத்தியங்களின் அறிமுகம்**
- **இலங்கை மக்களிடையே வழக்கில் உள்ள கூத்துக்கள், நாடக மரபுகள், விலாச மரபுகள், நாடகப் பாடல்கள்**
- **விபுலாந்தரும், யாழ் நூலும்**
- **பண்ணிசை**
- **வட இலங்கை சங்கீத சபை**
- **பாடசாலைக் கலைத்திட்டமும், இசையும்**
- **இசை வளர்ச்சிக்கு தொண்டாற்றும் நிறுவனங்களும் சபாக்களும்.**

- ஈழத்து மெல்லிசை வளர்ச்சி
- வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பங்கு.
- இலங்கையின் இசைக்கலைஞர்கள்
- இசை நூல்கள்

**(30 நிமிடங்கள்)**

**படி 6.1.2** : • மாணவர்களை குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

• அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

**(45 நிமிடங்கள்)**

**படி 6.1.3** : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக் களைக் கூற இடமளிக்க.

• குழுவின் பேறுகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- இராவணேஸ்வரன் காலத்தில் இருந்தே இலங்கையில் இசைமரபு இருந்தமை. அவர் சாமகானம் பாடியமை
- கல்லினாலான துளை வாத்தியக்கருவி பயன்படுத்தப் பட்டமை - ஆதாரம் மணிமேகலை.
- இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் காலத்தில் மகுடி பயன்படுத்தப்பட்டமை. இவர்கள் கையாண்ட வாத்தியக்கருவி நாகசின்னம் ஆகும்.
  - ஆதாரம் மகாவம்சம்.
- இந்தியாவில் தேவாரகாலம் என அழைக்கப்பட்ட காலப் பகுதியில் இலங்கையில் இசைபாடும் அடியார்கள் இருந்தனர் என்பதற்கு சம்பந்தர் பாடிய கோணமலைப் பதிகம் ஆதாரமாகும்.
- இலங்கைக்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்புகள் காரணமாக இலங்கையில் இசை வளர்ச்சி யுற்றமை.
- கோட்டை இராசதானிக் காலத்தில் இந்துக் கோயில்களில் அதிகாலையில் தேவார ஒலியும், பல்வகை வாத்தியங் களின் ஓசையும் கேட்டதாக அக்காலத்தில் எழுந்த சிங்கள சந்தேச தூதுப் பிரபந்தங்கள் குறிப்பிட்டுள்ளமை.
- கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டு கொண்டிருந்த போது புராண படனங்கள் இசைக்கப்பட்டமை.
- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதிகளில் தத்தம் மதத்தைப் பரப்ப நாடகப் பாடல்களைத் தெரிவுசெய்தமை.

இவை இசையோடு பாடத்தக்க ஓசை நயமுடையவை. அக்காலத்தில் பறாளை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்கள் தோன்றியமை.

- நாட்டுக்கூத்துகள் இசை வளர்ச்சியில் பங்களிப்புச் செய்தமை. இன்று நவீனப்படுத்தப்பட்டுள்ள போதும் பாரம்பரியம் போணப்படுகின்றமை.
- தமிழில் கீர்த்தனைகள் இயற்றப்பட்டன.
  ஆதாரம் - லோரன்ஸ் புலவர் பாடிய கிறிஸ்தவ கீதங்கள்
- இணுவிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மேல் பாடப்பட்ட பஞ்சவண்ணத்தூதுப் பிரபந்தம் இப்போதும் அக்கோயிலில் பாடப்படுகின்றமை.
- இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வாணிபம் செய்ய வந்த வைசியரினால் யாழ்ப்பாணத்தில் பெருங்கோயில்கள் கட்டப்பட்டமை. இக்கோயில்களில் வாத்தியம் இசைக்க இசை வேளாளர் அமர்த்தப்பட்டமை. இதனால் உயர் பாரம்பரிய இசைமரபு வளர்ந்தமை.
- விபுலானந்த அடிகளால் யாழ்நூல் எழுதப்பட்டு வெளியிடப்பட்டமை.
- பண்ணிசை வளர்ச்சி கண்டமை
- 1931இல் வட இலங்கை சங்கீத சபை தோற்றுவிக்கப்பட்டு இசை வளர்ச்சியில் ஒரு திருப்பம் ஏற்பட்டமை.
- இலங்கையில் தனிப்பட்ட முறையில் வளர்ந்து வந்த இசை பாடசாலைப் பாடவிதானத்தில் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- பாடசாலைக் கலைத்திட்டத்தில் சங்கீத பாடத்திற்கான கலைத்திட்டங்களை தயாரிப்பதிலும், ஆசிரியர் கைந்நூல், மேலதிக வாசிப்பு நூல், அறிவுரைப்பு வழிகாட்டி போன்றவற்றைத் தயாரித்து வெளியிடுவதிலும் தேசிய கல்வி நிறுவக அழகியற் பிரிவின் பங்கு.
- பாடசாலைகளில் மட்டுமன்றி பல்கலைக்கழகம் வரை இசைப்பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற வாய்ப்பு ஏற்பட்டமை.
- இசையானது சிறப்பு நெறியாகவும், பொதுப் பாடமாகவும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் கற்பிக்கப்பட்டு ஆசிரியர் பயிற்சியளிக்கப்படுகின்றமை.
- இசைக்கு அருந்தொண்டாற்றும் பற்பல மன்றங்கள் வளர்ந்துள்ளமை.
- வளர்ச்சியுற்று வந்துள்ள மெல்லிசையின் தனித்துவப் பண்பு
- கிராமப் புறங்களில் பாரம்பரிய நாட்டாரிசை வளம் பெற்றமை.
- வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவை இசை நிகழ்ச்சிகளையும் கட்டுரைகளையும், விமர்சனங்களையும் ஒலி/ஒளி பரப்பியும், பிரசுரித்தும் இசை வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றமை.
- இயலிசை வாரிதி N. வீரமணி ஐயருடைய பங்களிப்பு இலங்கை இசைவளர்ச்சியில் அளப்பரியது. ஆதாரம்: நாட்டிய நாடகங்கள், கீர்த்தனைகள், பதங்கள், 72 மேள இராகங்களிலும் கீர்த்தனைகள் இயற்றியமை.

- இசைக்கலையில் அரங்கேற்றம் செய்வது உயர் நாகரீகம் எனக் கருதப்படுகின்றமை.
- இலங்கை இசை வித்துவான்கள் உலகின் பல பாகங்களுக்குச் சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்துகின்றமை.
- இசை தொடர்பான நூல்கள் வெளியிடப்படுகின்றமை

**(45 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- இலங்கைக் கோயில்களில் திருமுறை ஓதும் மரபு எப்போது ஆரம்பித்தது என்பதைக் குறிப்பிடுவர்.
- இலங்கையில் இசை வேளாளர் மரபு தோன்றியதன் பின்னணியை விளக்குவர்.
- சிறு தெய்வங்களை மையமாகவும் கிராமிய நடைமுறைகளைப் பிரதிபலிப்பதுமான நாட்டாரிசை இலங்கையில் தனித்துவமான உப பாரம்பரிய இசை என்பதை ஏற்றுக் கொள்வர்.
- இலங்கையின் இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களின் பணியை மதிப்பிடுவர்.
- இலங்கை இசை வளர்ச்சிக்கு தொண்டாற்றும் நிறுவனங்கள், சபாக்களைப் பட்டியற்படுத்துவர்.
- இலங்கையின் இசை வளர்ச்சி பற்றிய ஓர் ஆய்வை மேற்கொள்ளும் ஆர்வத்தை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 6.1.2.3

- மாணவர்களை குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும், பின்னிணைப்பையும் வழங்குக.

### குழு 1

''இலங்கையின் இசைப்பாரம்பரியம் தொன்று தொட்டு வந்ததொன்றாகும்.'' இக்கூற்றினை ஆதாரங்களுடன் நிறுவுக.

### குழு 2

இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இசையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான கலாசாரப் பின்னணியை ஆராய்க.

### குழு 3

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இசை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னணி பற்றித் தொகுத்துக் கூறுக.

# இலங்கையின் இசை வளர்ச்சி

இலங்கைத் தமிழ் மக்களின் இசையை உயர் பாரம்பரிய இசை, உப பாரம்பரிய இசை என இரண்டாக வகுக்கலாம். பெருங்கோயில்களையும் வசதி படைத்தோரையும் சார்ந்து உயர் பாரம்பரிய இசை வளர்ச்சியுற்றது. சிறு கோயில்களையும் கிராம மக்களையும் சார்ந்து உப பாரம்பரிய இசை வளர்ச்சியுற்றது. இக்கோயில்கள் சார்ந்த இசை தவிர, வாழ்க்கை நிகழ்ச்சிகள், தொழில்கள் சம்பந்தமான இசை வடிவங்களும் இங்குண்டு. இவ்விசை மரபுகள் அனைத்தும் இணைந்ததே இலங்கைத் தமிழ் மக்களின் இசைப் பாரம்பரியமாகும்.

இராவணன் காலத்திலிருந்தே இலங்கையில் கர்நாடக இசைமரபு இருந்ததென்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் உள்ளன. அவர் சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்தமை இதற்கொரு எடுத்துக்காட்டாகும். சீதையைத் தேடி இலங்கை வந்த அனுமான், இராவணனது மாளிகை எங்கும் இசை ஒலித்துக் கொண்டிருந்ததாக இராமாயணம் குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் ஆண்களை விடப் பெண்களே இசைக் கலையில் மேம்பட்டவர்களாக இருந்தார்கள் என இராமாயணம் மூலம் அறியலாம்.

மணிமேகலை என்ற காவியத்தில் ஆபுத்திரன் என்பவன் வியாபாரம் செய்ய இலங்கையின் வட பாகத்தில் இருக்கும் மணிபல்லவம் என்றழைக்கப்படும் நயினாதீவை அடைந்தான் என்றும், அப்பகுதியை அரசாண்ட அரசனால் ஆபுத்திரனுக்கு அளிக்கப்பட்ட விருந்தின்போது நாக கன்னிகையின் நடனம் ஆடப்பட்டதாகவும், கல்லினால் செய்யப்பட்ட ஒரு துளை வாத்தியம் வாசிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் காலத்தில் மகுடி பயன்படுத்தப்பட்ட தாகக் கூறப்படுகிறது. இவர்கள் கையாண்ட வாத்தியக்கருவி நாகசின்னம் என அழைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது.

இந்தியாவில் தேவாரகாலம் என அழைக்கப்பட்ட காலப்பகுதியில் (கி.பி. 7ஆம், 8ஆம் நூற்றாண்டு) இலங்கையிலும் இசைபாடும் அடியார்கள் இருந்தனர் என்பதற்கு சம்பந்தர் பாடிய கோணமலைப்பதிகம் ஆதாரமாக உள்ளது. பண்ணோடு பாடப்பட்ட தேவாரப் பண்ணிசையே பிற்காலத்தில் கர்நாடக இசை வளர்ச்சிக்கு அத்திவாரமாக விளங்கியதெனலாம்.

இலங்கை சோழராட்சியின் கீழ் இருந்த போது இராஜராஜ சோழனால் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு வகுக்கப்பட்ட திருமுறைகளை ஆலயங்களில் ஓதும் பாரம்பரியம் ஆரம்பமாயிற்று. இலங்கையிலும் சோழரால் கட்டப்பட்ட கோயில்களில் அம்மரபு இருந்திருக்கலாம் எனக் கூறுவதற்கிடமுண்டு.

கோட்டை இராசதானிக் காலத்தில் இந்துக்கோவில்களில் அதிகாலையில் தேவார ஒலியும், பல்வகை வாத்தியங்களின் ஓசையும் கேட்டதாக அக்காலத்தில் எழுந்த சிங்கள சந்தேச தூதுப் பிரபந்தங்கள் சில குறிப்பிடுகின்றன.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் உருவானபோது ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டு கொண்டிருந்த போது புராண படனங்கள் இசைக்கப்பட்டன என்பதற்கு ஆதாரங்களுள்ளன.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தம் காலப்பகுதியில் தத்தம் மதத்தைப் பரப்ப நாடகப் பாடல்களைத் தெரிவு செய்தனர். இவை இசையோடு பாடத்தக்க ஓசை நயமுடையவை. அக்காலத்தில் சைவசமயம் குன்றாதிருக்க பறாளை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்கள் இயற்றப்பட்டன.

போர்த்துக்கீசர் கத்தோலிக்க மதத்தையும், ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தையும் பரப்பினர். இதை நோக்காகக் கொண்டு இசையோடு பாடக்கூடிய ஞானப்பள்ளு, சந்தியோகுமையோர் அம்மானை என்பவை போர்த்துக்கீசர் காலத்திலும், மருதப்பக் குறவஞ்சி, திருச் செல்வர் அம்மானை என்பவை ஒல்லாந்தர் காலத்திலும் இயற்றப்பட்டன.

இவை போன்று கலவளையந்தாதி, மறசையந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு என்பனவும், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் என்பனவும் இயற்றப்பட்டன. மேலும் கிழக்கிலங்கையில் முக்கிய கோயில்களுள் ஒன்றான வெருகல் சித்திரவேலாயுத ஸ்வாமி கோயில் பற்றியும் பாடல்கள் இயற்றப்பட்டன. பள்ளுப் பிரபந்தம் பற்றி க.செ. நடராஜா தமது ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற நூலிலே ஈழத்து பள்ளுகளில் விருத்தம், வெண்பா, கலிப்பா, சிந்து, தரு ஆகிய பாடல் வகைகள் கலந்து வருவதாகவும், இவற்றுள் சிந்து, தரு இரண்டும் இசைப்பாட்டுக்கள் எனவும், சோழப் பேரரசு காலத்தின் பின் இவை பொது மக்கள் இலக்கியங்களில் பெரிதும் பயன்படுத்தப்பட்ட பாடல் வகைகளாகும் என்னும் கருத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் வருகையின் பின்னர் நாட்டார் இசை மரபிலும் புது உத்திகள் தோன்றின. பரிகாசப்பாடல், பைலாப்பாடல் வகைகள் பிரபல்யம் அடைந்தன. இக்காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடையே காத்தான் கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து, காமன்கூத்து, வடபாங்கு நாடகம், தென்பாங்கு நாடகம், அண்ணாவி மரபு நாடகம் எனப் பலவகையான கூத்து வகைகள் வழக்கத்தில் இருந்தன. இவற்றுள் அண்ணாவி மரபு நாடகம் விலாச இசை மரபு சார்ந்தது. இது கர்நாடக இசை சார்ந்த ஒரு புதிய மரபினை ஆரம்பித்து வைத்தது. இக்காலத்தில் இரவிரவாக நீண்ட மணித்தியாலங்களாக ஆடப்பட்ட கூத்துமரபினை தற்காலத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் 3 மணித்தியாலங்களாக அதாவது குறுகிய நேரத்தில்

நாட்டுக்கூத்திசையினை மேடையேற்றும் வகையில் நவீனமயமாக்கினார். இக்கலாசாரப் பின்னணியில் பேராசிரியர் சி. மௌனகுருவும் அவரது வழிவந்தோரும் நாட்டுக்கூத்து இசையினூடாக, சமூக, விஞ்ஞான மாற்றக் கருத்துக்களை வெளிப்படுத்தி நாட்டுக்கூத்து இசையிலே புதிய கலாசார மரபினை வளர்த்து வருகின்றனர்.

15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் நாயக்கர் ஆட்சியில் தெலுங்கு இசை வளர்ச்சியுற்றபோது, இலங்கையிலும் அவ்விசை பரவியது. 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வையா பாடலின் பிரகாரம் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகர மன்னர் காலத்திலேயே 'கணிகையர்கள் நட்டுவ வாத்தியக்காரர்' ஆகிய ''பண்கூட்டச் சாதியெல்லாம் வடபாகம் பயிலச் செய்தான்." என்று கூறப்பட்டுள்ளது.

18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் அருணாசலக் கவிராயர் இராம நாடகக் கீர்த்தனங்களை இயற்றினார். இலங்கையிலும் தமிழ்க் கீர்த்தனங்கள், பதங்கள் இயற்றப்பட்டன. இந்நூற்றாண்டில் வாழ்ந்த லோறன்ஸ் புலவர் மக்கள் பாடுவதற்காக கிறிஸ்தவ கீதங்களையும் மக்கள் நடிப்பதற்காக கிறிஸ்தவ நாடகங்களையும் எழுதினார். கத்தோலிக்கப் புலவர்களுள் முக்கியமான மற்றொருவர் பூலோகசிங்க முதலியாராவார். நாவலர் பெருமானாரும் சில கீர்த்தனங்கள் பாடி தமிழிசை இயக்கத்திற்கு வித்திட்டார்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டிற்கும் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்கும் இடையே இலங்கையில் பள்ளுப் பிரபந்தத்துடன் ஊஞ்சல், காவியம், புராணம் போன்றவைகளும் இயற்றப்பட்டுள்ளன. இப்போது நமக்குக் கிடைத்தற்கரியனவாயுள்ள ஊஞ்சல், பதிகம் ஆகியவற்றுள் கணபதி ஐயரால் இயற்றப்பட்ட வட்டுக்கோட்டை பிட்டியம்பதிப் பத்திரகாளி அம்மை ஊஞ்சலும், சிவகாமியம்மை பதிகமும் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு முற்பட்டவையாகும். வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சியும் கணபதி ஐயர் இயற்றியுள்ளார் எனக் கூறப்படுகிறது. ஆனால் இந்நூல் இன்று கிடைத்திலது.

பஞ்சவண்ணத்தாது இணுவில் சின்னத்தம்பிப் புலவரால் இணுவிலில் எழுந்தருளியுள்ள கைலாயநாதன் மீது பாடப்பட்ட தூதாகும். இன்னும் விழாக்காலங்களில் இப்பாடல் பாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வாணிபத்தால் வளம் சேர்க்க வந்த வைசியர் (செட்டி வேளாளர்) குலத்தோரினால் யாழ்ப்பாணத்தில் பெரும் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களில் மங்கள வாத்தியங்களை இசைக்க இசை வேளாளர் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டு வண்ணார்பண்ணை சிவன் கோயில் சுற்றுப் புறங்களிலே குடியேற்றப்பட்டனர். இவர்கள் தவில், நாதஸ்வரம் வாசிப்பதில் விற்பன்னராக விளங்கினர். இவர்களே இன்றைய உயர் பாரம்பரிய இசையின் முன்னோடிகளாவர்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக்கிலங்கையில் தோன்றிய விபுலானந்த அடிகள் இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தலைவராக இருந்தபோது அங்கு இசைப் பேராசிரியரான க. பொன்னையாபிள்ளை அவர்களோடு கலந்து இசைத்தமிழ் ஆராய்ந்ததன் பலனாக யாழ்நூல் என்ற பெருநூலை எழுதி வெளியிட்டார். தமிழில் சிலப்பதிகாரம் வகித்த இடத்தை இசையில் இந்நூல் வகுத்தது. யாழ்நூலானது பாவிரவியல், யாழ் முகப்பியல், இசை நரம்பியல், பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழியியல் என்னும் 7 இயல்களின் கீழ் கோவைப்படுத்தப்பட்டுள்ளது. யாழ் நூலைத் தொடர்ந்து ஈழத்தில் பல இசை, இலக்கண நூல்களும், பிறவும் அறிஞர்களால் எழுதப்பட்டன.

கர்நாடக இசையோடு பண்ணிசையும் இலங்கையில் வளர்ச்சி கண்டது. பண்ணிசை வளர்ச்சிக்கு பணியாற்றியவர்களள் குப்பிளான் செல்லத்துரை, திருமுறை இசைவாணர் கொக்குவில் மு. குமாரசிங்கம், பண்ணிசை வள்ளல் தாவடியூர் செ. இராசையா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சங்கீத கதாப்பிரசங்கத்தை இலங்கையில் உச்சநிலைக்குக் கொண்டு வந்ததோடு கடல் கடந்த புகழையும் அடைந்தவர் நல்லைக் குருமாரின் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார். இவர் தவிர அமரர் சிவஅன்பு, பண்டிதர் வடிவேலு போன்றோரும் கதாப்பிரசங்கத்தின் வளர்ச்சியில் பங்கேற்றவர்களாவர்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த கலாசார நிலையமொன்றில் பிரபல தென்னிந்தியப் பாடகர்கள் வருகை தந்து பாடிச் செல்வது வழக்கமாயிருந்தது. எனினும் ஆங்கிலமோகம், மேலைத்தேய பண்பாட்டு மோகம் ஆகியவை முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலகட்டத்தில் கர்நாடக இசையானது மத்திய வகுப்பினரிடையேயோ அல்லது பாடசாலைக் கலைத்திட்டத்திலோ குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறாது சாதாரண மக்களாலேதான் ஆதரிக்கப்பட்டு வந்தது. எனினும் 1931ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை தோற்றுவிக்கப்பட்டு இசை வளர்ச்சியில் ஒரு திருப்பம் ஏற்பட வழிவகுத்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரே பாடசாலைக் கலைத்திட்டத்தில் இசை ஓர் பாடமாகச் சேர்க்கப்பட்டது. அதிலும் குறிப்பாக 1978ஆம் ஆண்டில் அழகியற் கல்வியில் சங்கீதம் ஒரு காட்டாய பாடமாகச் சேர்க்கப்பட்டது.

பாடசாலைக் கலைத்திட்டத்தில் சங்கீத பாடத்திற்கமைவாக கலைத்திட்டங்களைத் தயாரிப்பதிலும், ஆசிரியர் கைந்நூல், மேலதிக வாசிப்பு நூல், அறிவுரைப்பு வழிகாட்டி போன்றவற்றைத் தயாரித்து வெளியிடுவதிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் அழகியற் பிரிவு பெரும் பங்காற்றிவருகிறது.

தற்போது இலங்கையில் இசைக்கலையானது பாடசாலைக்களில் மட்டுமன்றி, பல்கலைக்கழகத்திலும் சிறப்புப் பட்டப்படிப்பிற்குரிய உயர் அந்தஸ்தினைப் பெற்றுள்ளது. யாழ் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் சங்கீத டிப்ளோமா, இசைக்கலைமானி போன்ற கற்கை நெறிகள் நடைபெறுகின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள மட்டக்களப்பு விபுலானந்த இசை, நடனக் கல்லூரியிலும் இசைக் கற்கை நெறிகள் நடைபெறுகின்றன. அவ்வாறே இசையானது சிறப்பு நெறியாகவும், பொதுப் பாடமாகவும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் கற்பிக்கப்பட்டு, ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது.

வட இலங்கை சங்கீத சபையோடு யாழ் ரசிக ரஞ்சன சபா, அகில இலங்கை இசை ஆசிரிய சங்கம், இசைப் பேரவை, இசைக்கலைஞர் சம்மேளனம், சங்கீத வித்வ சபை, அண்ணாமலை தமிழிசை மன்றம், அளவெட்டி இசைக் கலைமன்றம், முத்தமிழ் மன்றம், இலங்கை சங்கீத சபை, யாழ் இளங்கலைஞர் மன்றம், திருகோணமலை தட்சணகான சபா, மட்டக்களப்பு சங்கீத சபை, கண்டி நுண்கலை மன்றம், கொழும்பு சைவ மங்கையர் கழக இசைப்பிரிவு போன்றவையும் இலங்கையின் இசை வளர்ச்சியில் பங்குவகிக்கின்றனர். இவ்வாறான சபாக்களும், மன்றங்களும் இசை வகுப்புகள், இசைப் பரீட்சைகள், இசைப்போட்டிகள், இசை விழாக்கள் முதலியவற்றை நடத்தி இசை வளர்ச்சிக்கு உதவி வருகின்றன.

20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் மெல்லிசையும் வளர்ச்சியுற்றது. ஈழத்துப் பாடல்கள் என்ற நிகழ்ச்சியை வானொலியில் இடம்பெறச் செய்து ஈழத்து மெல்லிசை வளர்க்கப்பட்டதெனலாம். துள்ளல் இசையோடு ஈழத்துப் பாடல்கள் மக்கள் எல்லோராலும் விரும்பப்பட்டது. ஈழத்து மெல்லிசைப் பாடல்களில் அடங்கிய பல ஒலிநாடாக்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மெல்லிசைப்பாடல்களின் வளர்ச்சியில் விவிதகான விநோதன் எஸ்.கே. பரராஜசிங்கம், இசையமைப்பாளர் ஆர். முத்துஸ்வாமி, எம்.ஏ. குலசீலநாதன் போன்றோர் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்கள் தவிர பல இசைக் கலைஞர்கள் மெல்லிசைப்பாடல்களை இயற்றியும், பாடியும் இசை வளர்ச்சியில் பங்கேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெருங் கோயில்களையும், தனவந்தர்களையும் சுற்றி உயர் பாரம்பரிய இசை உருவாக, சிறு கோயில்களையும், கிராமப்புறங்களையும் மையமாக வைத்து இன்னோர் இசை மரபு இங்கு வளர்ந்து வந்துள்ளது. இம்மரபு இன்னும் யாழ்ப்பாணத்தின் வெளியேயுள்ள மரபாகவும் யாழ்ப்பாணத்தின் கிராமப்புறங்களில் காணப்படுவதாயும் இருந்து வருகிறது. சிறு தெய்வக் கோயில்களில் நடைபெறும் சடங்குகளில் இடம்பெறும் உருவேற்றம், காளியம், தாலாட்டு என்பன கிராமிய இசை மரபாகும். இம்மரபு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும்.

காவடி, மழைக்காவியம், ஒப்பாரி, அரிவுவெட்டுப்பாடல், நெற் குற்றும் பாடல், கப்பற் பாடல், உடுக்கு, பறைமேளம் என்பன சிறு பாரம் பரியத்தைப் பிரதிபலிப்பவை. நாதஸ்வரம், திருப்பள்ளி எழுச்சி, தேவாரம், திருவூஞ்சல் என்பன பெரும் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பவை. கும்மி, தாளக்காவடி, முதலியன சிறு பாரம்பரியம், பெரும் பாரம்பரியத்துடன் இணைந்துள்ளமையைக் காட்டுவன.

இலங்கைத் தமிழ் மக்களிடையே காணப்படும் இசையின் போக்குகளை வண்ணத்திற் கொன்று, வகைக்கொன்றாக அறிமுகம் செய்யும் விதத்தில் இசைத்தட்டு ஒன்றைத் தொகுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்டது. இம்முயற்சியை ஆரம்பித்தவர், அக்காலத்தில் வானொலி இசைக்கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றிய திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசுவாமி அவர்களாவார். இந்த இசைத்தட்டிற்கு இசை வழங்கியவர் திரு. எம். கண்னன் ஆவார். இவ்விசைத்தட்டிலே வேண்டுதலும் வழிபாடும், தொழிற்பாடல்கள், வாழ்க்கைவட்டம், பாரம்பரிய நாடக அரங்கம், வாத்தியங்கள், நடனப்பாடல்கள் என்னும் தலைப்புகளில் கீழ் 29 பாடல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெகுசனத் தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவையும் இசை நிகழ்ச்சிகளையும், கட்டுரைகளையும், விமர்சனங்களையும் ஒலி/ஒளி பரப்பியும், பிரசுரித்தும் இசை வளர்ச்சியில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

உயர் பாரம்பரிய இசையைச் சாராத உப பாரம்பரிய இசையிலேயே இலங்கைத் தமிழ் இசையும் தமக்கென சில தனித்துவங்களை உருவாக்கியது. இவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது தவில் வாத்தியமாகும். தவில் இலங்கைத் தமிழருக்குரிய சிறந்த வாத்தியமாகத் தென்னிந்தியாவிலும் கணிக்கப்படுகிறது. இவ்விடயத்தில் இலங்கையின் தவில் மேதை தட்சணாமூர்த்தியின் பங்களிப்பினை அறிந்து கொள்வது பொருத்தமாகும்.

பிற்காலத்தில் சமூகத்தின் பல தரத்தினரும் தென்னிந்தியா சென்று சங்கீதம் பயின்று வந்தமையால் இங்கு இசைக்கச்சேரி செய்யும் முறை உருவாகியது. இவ்வழியில் கர்நாடக இசையே இலங்கைத் தமிழரின் உயர் பாரம்பரிய இசை எனக் கருதப்படு கின்றது. இந்தியா திருச்சி வானொலியில் கச்சேரி செய்த முதல் இலங்கையர் என்ற பெருமை பெற்றவர் அமரர் திரு. என். சண்முகரத்தினம் அவர்களாவார். இவர் தவிர சிறந்த சாகித்திய கர்த்தாவான இணுவில் என் வீரமணி ஐயர் அவர்கள் இசைத்மிழிற்கு புகழ்பரப்பிய ஒருவராகத் திகழ்கின்றார். இலங்கையிலுள்ள புகழ்பெற்ற தலங்களில் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் பேரில் குறவஞ்சி, உலா, பள்ளு, ஊஞ்சல், தோத்திரப் பாமாலை போன்றவற்றையும் இதிகாசங்களை மையமாகக் கொண்ட

நாட்டிய நாடகங்களையும் இயற்றியுள்ளார். கர்நாடக சங்கீத சம்பிரதாயத்தில் வழங்கும் 72 மேளகர்த்தாக்களிலும் உருப்படிகளையாத்துள்ளார். மேலும் 108 தாளங்களுக்கும் பொருத்தமான சங்கீத சாகித்தியங்களையும் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய ''கற்பகவல்லி நின் பொற்பதங்கள்" என்று தொடங்கும் பாடல் திரு. டி.எம். சௌந்தர ராஜனால் பாடப்பட்டு இசைதட்டாகிய பெருமை பெற்றது. இதே போன்று சீர்காழி கோவிந்தராஜன் பாடிய ''உன்னை நான் காண்பதெப்போ" என்னும் இவரது பாடலும் இசைத்தட்டில் வெளியாகியுள்ளது. இவரது இசைப்பணி காரணமாக இவர் பல பட்டங்கள் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் தவிர கலாசூரி டி.வி. பிச்சயைப்பா, சங்கீதபூஷணம் என். ராஜ், அளவையூர் என்.கே. பத்மநாதன், முழக்கம் முருகப்பா, புத்துவாட்டி சோமு, இசைப்புலவர் என். சண்முகரத்தினம், ஜி. சண்முகானந்தன், கலாசூரி கே.கே. அச்சுதன், ஆர். சின்னராசா, பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, மாவிட்டபுரம் உருத்திராபதி, இராஜராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், வண்ணை காமாட்சி சுந்தரம் போன்றோரின் பங்களிப்பு போற்றுதற்குரியது.

மேலும் இசைக்கலையை அனைவரும் கற்று அரங்கேற்றம் செய்வது உயர் நாகரீகம் என்றும் கருதுமளவிற்கு இசைக்கலை நம்நாட்டு மக்களிடையே பிரபல்ய மடைந்துள்ளது. இசையைத் தொழிலாகக் கொண்டவர் பலர் எம்மிடையே உள்ளனர். சகல வைபவங்களிலும் இசை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மேலும் நம்நாட்டுக் கலைஞர்கள் பலர் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இசைப்பணியாற்றி இசைக்கச்சேரிகள் செய்யுமளவிற்கு இலங்கை இசைவளர்ச்சி கண்டுள்ளது.

# பகுதி III
# கணிப்பீடும் மதிப்பீடும்

### 11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சி களை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்ப தற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும்

செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்துகொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)

- சமயோசிதப் பேச்சு (Impromptu Speeches)
- நடிபங்கு (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற் பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத் தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

- மாணவர் கற்றலில் உயர் அடைவைப்பெற வேண்டுமாயின் தொடர்ச்சியான கணிப்பீட்டிற்கு உட்பட வேண்டியது அவசியமாகும்.
- மாணவர் கற்றல் அடைவு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போதும், பாட அலகின் முடிவிலும், மாத முடிவிலும், தவணைமுடிவிலும், ஆண்டு இறுதியிலும் கணிப்பீடும் மதிப்பீடும் செய்யப்படும்.
- கர்நாடகசங்கீத கணிப்பீட்டில் அறிமுறை, செய்ம்முறை ஆகிய இரண்டும் இடம்பெற வேண்டும்.
- இப்புதிய பாடத்திட்டத்தில் கற்றல் செயற்பாடுகள் தனியாள் நிலையிலும் குழுநிலையிலும் இடம்பெறுவதால் இவ்விரு நிலைகளிலும் மாணவர் கணிப்பிடப்படல் வேண்டும்.
- இரசித்தல், ஆக்கத்திறன் என்பவை தொடர்பான கணிப்பீட்டிற்கு வகுப்பறையில் கூடிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவற்றை அவதானிப்பதன் மூலம் மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- மாணவர்களின் அறிதல் ஆட்சித்திறன், மனவெழுச்சிப் பண்புகள், உளவியக்கத் திறன்கள், கற்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்ப வற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு அவர்களின் பலம், பலவீனம் என்ப வற்றை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக முன்னர் கூறப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 11.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

## கருவி - 01

1. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : முதலாம் தவணை

2. **உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 3.2

3. **கருவிக்குரிய பாடப்பகுதிகள்** : தானவர்ணம்
   அன்னமே - ஆரபி அல்லது
   வனஜாஷி - கல்யாணி

4. **கருவியின் தன்மை** : செய்ம்முறைச் சோதனை

5. **கருவியின் நோக்கம்** :
   - தானவர்ணம் அப்பியாசகானத்திற்கும், சபாகானத்திற்கும் ஏற்ற பொதுவான உருப்படி வகை என்பதனைக் குறிப்பிடுவார்.
   - வர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, முக்தாயி ஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்கள் காணப் படுகின்றமையைக் குறிப்பிடுவார்.
   - தான வர்ணத்தை மனனம் செய்து இராக, தாளத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில் பாடுவார்.

6. **கருவியியையப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்**

   **ஆசிரியருக்கு** :
   - மாணவர் தனித்தனியாக இராக, தாளத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
   - பாடும்போது மதிப்பீட்டிற்குரிய நியதி களுக்கமைய கணிப்பீடு செய்க.

**மாணவர்களுக்கு** : • தானவர்ணத்தை இராக, தாளத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில் பாடிப் பயிற்சி செய்க.

• சரியான உச்சரிப்புடன் வர்ணத்தை மனனம் செய்க.

• வர்ணத்தை இராக, தாளத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில்ப் பாடுக.

**7. புள்ளி வழங்கும் நியதி** : • ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார்.

• தாளத்துடன் பாடுவார்.

• 1ஆம், 2ஆம் காலங்களில் பாடுவார்.

• இராக, பாவத்தோடு பாடுவார்.

• மனனம் செய்து சரியாக ஒப்புவிப்பார்.

**8. புள்ளித்திட்டம்**
**(ஒவ்வொரு நியதிக்கும்)** : மிக நன்று - 04 புள்ளிகள்
நன்று - 03 புள்ளிகள்
சாதாரணம் - 02 புள்ளிகள்
விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

**கருவி - 02**

1. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : இரண்டாம் தவணை

2. **உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 5.1

3. **கருவிக்குரிய பாடப்பகுதிகள்** : முத்துஸ்வாமிதீஷிதர்

4. **கருவியின் தன்மை** : பேச்சு

5. **கருவியின் நோக்கம்** :
   - முத்துஸ்வாமி தீஷிதரின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுவார்.
   - இவரின் இசைத் தொண்டினைக் குறிப்பிடுவார்.

6. **கருவியியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- கணிப்பீட்டுக்கருவி பற்றி அறிமுகம் செய்க.
- கணிப்பீட்டு நியதிகள் பற்றி மாணவருக்கு விளக்கமளிக்க.
- குறிப்பிட்ட நேரத்திற்கமைவாகப் பேச்சு ஒன்றினை தயார்செய்து மனனம் செய்யும்படி வலியுறுத்துக.
- மாணவர் பேச்சு நிகழ்த்தும் போது நியதிகளுக்கமைய கணிப்பீடு செய்க.

**மாணவர்களுக்கு** :
- முத்துஸ்வாமி தீஷிதரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத்தொண்டினை யும் விளக்கும் வகையில் பேச்சு ஒன்றினைத் தயார் செய்க.
- நேரத்தைக் கவனத்திற் கொள்க.
- அதனைச் சரியான உச்சரிப்புடன் மனனம் செய்க.
- பேச்சினை நிகழ்த்திக் காட்டுக.

**7. புள்ளி வழங்கும் நியதி**

: • தலைப்பு விளக்கம்

• விடய உள்ளடக்கம்

• பேச்சாற்றலும், மனனமும்

• உச்சரிப்புத்தெளிவு

• நேரம் பேணல்

**8. புள்ளித்திட்டம்**
**(ஒவ்வொரு நியதிக்கும்)**

: மிக நன்று - 04 புள்ளிகள்
நன்று - 03 புள்ளிகள்
சாதாரணம் - 02 புள்ளிகள்
விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

**கருவி - 03**

1. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : மூன்றாம் தவணை

2. **உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 6.1

3. **கருவிக்குரிய பாடப்பகுதிகள்** : இலங்கையின் இசை வளர்ச்சி

4. **கருவியின் தன்மை** : வெளிக்களப்புப் புத்தகம்

5. **கருவியின் நோக்கம்** :
   - இலங்கையில் இசையின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுவார்.
   - இசை வளர்ச்சிக்கு தொண்டாற்றிய வர்கள், நிறுவனங்கள், சபாக்கள் பற்றிக் கூறுவார்.
   - இலங்கையின் இசை வளர்ச்சி என்ற தலைப்பில் வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரிப்பார்.

6. **கருவியியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்**

   **ஆசிரியருக்கு** :
   - வெளிக்களப் புத்தகத்தின் அமைப்பு பற்றி விளக்குக.
     ***உதாரணம்:***
     - புத்தக அமைப்பு
     - அட்டைப் படத்தினை தயார் செய்தல்
     - உள்ளடக்கம்
     - முகவுரை
     - நன்றியுரை
   - இலங்கையின் இசை வளர்ச்சி என்ற தலைப்பிற்கேற்ப தகவல்களைச் சேகரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குக.
   - ஒவ்வொரு மாணவரும் தனித்தனி யாகச் செயற்பட வேண்டும் என்பதனைக் கூறுக.
   - வெளிக்களப் புத்தகம் தயாரிப்பதற் கான கால எல்லையைக் குறிப்பிட்டுக் கூறுக.

**மாணவர்களுக்கு**

: • இலங்கையின் இசை வளர்ச்சி என்ற தலைப்பிற்கேற்ப, எவ்வாறு தகவல் களைகச் சேகரிக்க வேண்டும் என்பது பற்றிய ஆலோசனைகளை ஆசிரியரிடம் கேட்டறிக.

• வெளிக்களப்புத்தகத்தின் அமைப்பு பற்றியும், கால எல்லை பற்றியும் ஆசிரியரிடம் கேட்டறிக.

• ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே செயற்பாட்டில் ஈடுபடுக.

• ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக செயற்பாட்டில் ஈடுபடுக.

• இலங்கை இசை வளர்ச்சி என்ற தலைப்பில் வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரித்து, குறித்த கால எல்லைக்குள் சமர்ப்பிக்க.

**7. புள்ளி வழங்கும் நியதி**

: • தலைப்பிற்கேற்ப பொருத்தமான தகவல்களைச் சேகரிப்பார்.

• ஆர்வத்துடன் விடயங்களைத் தேடிக் கொள்வார்.

• நேர்த்தியாகப் புத்தகத்தை ஆக்குவார்.

• தகவல்களில் நம்பகத்தன்மையைப் பேணுவார்.

• குறித்த காலத்தில் சமர்ப்பிப்பார்.

**8. புள்ளித்திட்டம்**
**(ஒவ்வொரு நியதிக்கும்)**

: மிக நன்று - 04 புள்ளிகள்
நன்று - 03 புள்ளிகள்
சாதாரணம் - 02 புள்ளிகள்
விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

කර්ණාටක සංගීතය 11 - (දෙ)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010 / T / 11 / TIM / 2500